உ
திருச்சிற்றம்பலம்
ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

துறைசையாதீன வித்துவான்
சித்தாந்த பண்டிதபூஷணம்
**சிவ ஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை**
அவர்கள் இயற்றிய

# சிவபரத்துவ நிச்சயம்

உரை விளக்கம்
வித்துவான். ச. இரத்நவேலன், சங்கரன்கோவில்

[சிவஞான பூஜா மலர் - துந்துபி ஆண்டு - (1982)

பிரசுரம்: ஆங்கீரஸ **S. வேங்கடேச சர்மா**, மேலமாம்பலம், சென்னை - 600 033]

# சிவபரத்துவ நிச்சயம்

## விநாயகர் வணக்கம்.

**மன்னுசிவன் மெய்ப்புகழை வந்தமட்டில் யான்பாடற்**
**கென்னுடைய பேராசை யீர்த்ததெனை - யன்னதனால்**
**அந்திமுக வுன்பாதநா னஞ்சலித்துச் சில்பாடற்**
**கொத்துரைப்பே னெற்கருணீ கூட்டு.**

(பொழிப்புரை):- நிலைபெற்ற சிவபிரானது பொருள் நிறைந்து கீர்த்தியை எனக்குப் பாடத்தெரிந்த வரையில் பாடுவதற்கு என்னுடைய பெரிய ஆசை என்னை இழுத்தது. அதனால், விநாயகக் கடவுளே! தேவரீர் திருவடிகளை அடியேன் வணங்கிச் சில பாடல்திரட்டு இயற்றுவேன். தேவரீர் அடியேனுக்கு அருள் கூட்டுவீராக.

இந்நூல் இனிது முடிதற்பொருட்டுச் செய்யப்படும் விநாயக வணக்கம் இந்நேரிசை வெண்பா.

## ஆசிரிய வணக்கம்.

**விளங்கொளி வெள்ளி மலைமிசை யுமைதன்**
**னிடமுற வீற்றிருந் துயிர்க்குக்**
**களங்கம தொழித்துப் பரகதி யருளுங்**
**கண்ணுதற் பரமனே பரமென்**
**றுளங்கொள நாயேற் கொளிருநான் மறையி**
**னுறுதியை யுணர்த்தி வாழ்வளித்த**
**வளங்கெழு நெல்லைச் சிதம்பர ராம**
**லிங்கரின் மலரடி சரணே.**

(பொழிப்புரை):- 'ஸ்ரீகயிலையில் ஸ்ரீஉமாதேவியாரொடு எழுந்தருளி உயிர்க்கூட்டத்திற்கு சகசமாக உள்ள ஆணவமலக் குற்றத்தை நீக்கித் திருவடியின்பமாகிய வீடுபேற்றை நல்கும் ஸ்ரீசிவபிரானே பரம்பொருள்' என்று கூறி அடியேனது உள்ளங்கொள்ளுமாறு ருக், யஜுர், ஸாம, அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள் கூறும் சத்தியார்த்தத்தை உணர்த்தி வாழ்வளித்த வளம்நிறைந்த திருநெல்வேலிச் சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள் மலர்போன்ற பாதங்களே அடியேனது அடைக்கலத் தானமாம்.

இந்நூலை ஆக்கியோர் தமக்குச் சைவசித்தாந்தங் கற்பித்த ஆசிரியரை இச்செய்யுளால் வணங்குகிறார். சிவஸ்ரீ வி. சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்கள் இரண்டு வியாழ வட்டங்கள் நெல்லை ம.தி.தா-ஹிந்து கலாசாலையில் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய பின்னர் துறைசையாதீன வித்துவானாய்த் தமது பரிபூரண காலம் வரை சிவப்பணி செய்தார்கள். சுருதி சூக்தி மாலை போன்ற பல நூல்களைப் பதிப்பித்த இவர்கள் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழியிலும் வல்லுநர்.

## நூல்

### வியட்டியாகிய அகர உகர மகரம் முறையே பிரம விஷ்ணு ருத்திரர்க்கு இருப்பிடம். அம்மூன்றின் சமட்டியாகிய பிரணவம் சிவபிரானுக்கு இருப்பிடம்.

**இரணிய கருப்ப னவ்வில் இலக்குமி கணவ னுவ்வி**
**லுரமிகு சூல மேந்தும் உருத்திரன் மவ்வி லாவர்**
**பரசிவ பிரான்சம் வர்த்த காக்கினி பயில்பே ராகப்**
**பிரணவ சமட்டி யென்னும் பீடமீ திருப்ப னன்றே.** **(1)**

(அரும் பதவுரை) இரணிய கருப்பன் - பிரமன்; இரணிய கருப்பனும் இலக்குமி கணவனும் உருத்திரனும் என உம்மை விரித்து ஆவரென்பதற்குப் பன்மை வினைமுதல் காண்க. ஆவர் - இருப்பர்; தோன்றுவரெனினுமாம். பயில் பேர் ஆக - தனக்கு வழங்கப்படும் பெயராகக் கொண்டு; பிரணவ சமட்டி - சமஷ்டிப் பிரணவம்; பீடமிது - ஆசனத்தில்.

(பொழிப்புரை):- இரணியகருப்பன் என்னும் பிரமதேவன் அகரத்திலும் இலக்குமி கணவனாகிய திருமால் உகரத்திலும், வலிமைமிக்க சூலப்படை ஏந்திய உருத்திரமூர்த்தி மகரத்திலும் இருப்பர். சிவபிரான் 'சம்வர்த்தகாக்கினி' என்பதைத் தமக்கு வழங்கப்படும் பெயராகக் கொண்டு சமஷ்டிப் பிரணவமாகிய ஆசனத்தில் எழுந்தருளியிருப்பர்.

'அகார:.....ப்ரஹ்மா.......உகார: ......விஷ்ணு ..........மகார: ........ருத்ரா.....ஓங்கார:........ஸம்வர்தகோக்நி' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'பூர்வா மாத்ரா.....ப்ரஹ்மா.....த்விதீயா..... விஷ்ணு:....த்ருதீய .....ருத்ரா......சதுர்த்யா..... ஸம்வர்தகோக்நி....' என்ற நரஸிம்ஹ பூர்வதாபிநியுபநிஷத்தும், 'அகாரேஸம்ஸ்திதோ ப்ரஹ்மா உகாரே விஷ்ணுராஸ்தித: மகாரே ஸம்ஸதிதோ ருத்ராஸ் ததோஸ்யாந்த: பராத்பர:' என்ற பிரஹ்ம வித்யோபநிஷத்தும், 'அகாரம் ப்ரஹ்மாணம்....உகாரம் விஷ்ணும் ...... மகாரம் ருத்ரம் .....ஓங்காரம் ஸர்வேச்வரம்'

என்ற நரஸிம்ஹோத்தரதாபிநி யுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்களாம். ஸமவர்த்தாக்கினி பதமும் ஸர்வேச்வர பதமும் பரியாயங்களாய் வந்திருத்தல் காண்க. அவ்வீசுவரபதம் சிவபிரானுக்கே யுரியது.

அகர உகர மகரங்களாலாகியது ஓம், அகர உகர மகரங்கள் வியஷ்டிப்ரணவம், ஓம் சமஷ்டிப்ரணவமாம், அகர உகர மகரம் முறையே பிரம விஷ்ணு ருத்திரர்க்கு இருப்பிடம் அம்மூன்றின் சமஷ்டியாகிய பிரணவம் சிவபிரானுக்கு இருப்பிடமாம் என்பன இச்செய்யுளால் பெறப்பட்டன. இனிவரும் செய்யுள்கள் பெரும்பாலும் முதல் நான்காம் சீர்கள் விளச்சீரும் எஞ்சியன மாச்சீருமாய் அமைந்த அறுசீர் விருத்தங்கள்.

## பிரணவத்தின் அர்த்த மாத்திரையிற் சிவலோக மிருக்குமென்பதால் அவ்வர்த்த மாத்ரா தெய்வம் சிவ பிரானே யென்பது.

**அவ்வதி லிருக்கும் பூமி யந்தர மிருக்கு முவ்வில்**
**மவ்வதி லிருக்குஞ் சொர்க்கம் வாக்கொடு மனமுஞ் செல்லா**
**திவ்விய வுமைவாழ் பாகச் சிவபிரான் சோம லோக**
**மெவ்வமி லருத்தந் தன்னி லிருக்குமென் றுரைக்கும் வேதம். (2)**

(அரும் பதவுரை) அந்தரம் - அந்தரிக்ஷம்; உமைவாழ்பா கச்சிவபிரான் என்றது சோமன் என்றதை விளக்கியபடி; சோமலோகம் - சிவலோகம்; எவ்வம் - கேடு; அருத்த தன்னில் - அருத்த மாத்திரையில்

(பொழிப்புரை):- அகரம், உகரம், மகரமாகிய அக்ஷரங்களில் முறையே பூமி, அந்தரிக்ஷம் எனப்படும் அந்தரஉலகம், சொர்க்கம் என்பன இருக்கும். ஆனால் வாக்கும் மனமும் செல்லாத உமாநாயகனது உலகமாகிய சிவலோகம் கேடில்லாத பிரணவ அர்த்த மாத்திரத்தில் இருக்கும் என்று வேதம் சொல்லும்.

'கேவல மகாரோகார மகாரார்த்த மாத்ர ஸஹிதம் ப்ரணவமூஹ்ய' என்ற ராம ரஹஸ்யோபநிஷத்தும், 'அகாரோகார மகாரார்த மாத்ராத்மிக' என்ற வராகோபநிஷத்தும் 'அர்த்த மாத்ரா ஸமாயுக்த: ப்ரண்வோ மோக்ஷதாயக:', ப்ருதிவி ...அகோரே...அந்தரிக்ஷம்...உகாரே....த்யௌ:.....மகாரே.....பஞ்சதைவதம் ஓங்காரம்' என்ற தியாநபிந்துபநிஷத்தும் 'ப்ருதிவ்யகார ....அந்தரிக்ஷம் ஸ உகார:....த்யௌ:ஸ மகார:....ஸோமலோக ஓங்கார:' என்ற நரஸிம்ஹபூர்வ உத்தரதாபிநியுப்நிஷத்துகளும் அதர்வசிகோபநிஷத்தும், 'அரைமாத்திரையிலடங்கும்மடொ' என்ற தேவாரமும் 'மஹேசாநமவாங் மநஸகோசரம்' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

பிரணவத்தின் அர்த்த மாத்திரையில் சிவலோகமிருக்குமென்பதால் அவ்வர்த்தமாத்ரா தெய்வம் சிவபிரானே என்பது இச்செய்யுளால் நிறுவப்பட்டது.

பிரணவத்தைக் கொண்டு இவ்விருசெய்யுள்களால் பரத்துவ நிச்சயம் செய்த ஆசிரியர் தியானமுறை கொண்டு அடுத்துவரும் இரு செய்யுள்களால் பரத்துவ நிச்சயம் செய்கிறார்.

## மற்றத் தேவர்கள் வைத்துத் தியானிக்குந் தானங்களுக் கெல்லாம் உயர்ந்தது துவாதசாந்த ஸ்தானம். அங்குவைத்துத் தியானிக்கப் படுபவர் சிவபிரானென்பது.

**ஈரிரு முகவ னாபி யிடத்தரி யிதயந் தன்னி**
**லோரிரு புருவ மையத் துருத்திரன் துவாத சாந்தச்**
**சீரிய தான மீது சிவபிரா னிவர்க டம்மை**
**நேரிய யோகி யென்று நிறுத்துவன் தியானத் தாலே.** **(3)**

(அரும் பதவுரை) ஈர் - இரு; முகவன் - பிரமன்; நாபி - கொப்பூழ்; ஓர் - சிறந்த; மையத்து - நடுவில்; என்றும் - எப்போதும்; நிறுத்துவன் - வைத்து ஏத்துவான்.

(பொழிப்புரை):- வேதாகமப் பயிற்சியும், அநுபவமுடைய தேசிகனிடத்து உபதேசமும் பெற்ற நேரிய யோகி பிரம்மதேவனை நாபியிலும், விஷ்ணுமூர்த்தியை இதயத்திலும், உருத்திரமூர்த்தியைச் சிறந்த புருவ நடுவிலும், ஸ்ரீ சிவபிரானை சிறப்பான இடமாகிய துவாதசாந்தத்திலும் தியானத்தாலே வைத்து வணங்குவன்.

'த்வாதசாந்தபதம் ஸ்தாநமிதி' என்ற தக்ஷிணாமூர்த்தி உபநிஷத்தும், 'சீர்ஷோபரி த்வாதசாங்குல ஸ மீக்ஷிதுரம் ருதத்வம் பவதி' என்ற அத்வய தாரகோபநிஷத்தும், 'ப்ரஹமரந்த்ரே மஹாஸ்தாநே வர்ததே ஸததம்சிவா | சித்சக்தி:' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ப்ரஹ்மானம் நாபௌ .... விஷ்ணும் ஹ்ருதயே ....ருத்ரம் ப்ரூமத்யே .....சர்வேச்வரம் த்வாதசாந்தே' என்ற நரஸிம்ஹோத்தரதாபிநிபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

மற்ற தேவர்களை வைத்துத் தியானிக்கும் தானங்களுக்கெல்லாம் உயர்ந்தது துவாதசாந்த ஸ்தானம். அங்கு வைத்துத் தியானிக்கப்படுபவர் சிவபிரான் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## இன்னொரு வகைத் தியான முறையில் உச்சஸ்தானமா மிருப்பது நெற்றி. அதில் வைத்துத் தியானிக்கப் படுவருஞ் சிவபிரானென்பது.

**அயனெனு மவனை நெஞ்சி லரிதனைக் கண்டந் தன்னி**
**லுயவினை யுயிர்கட் கோட்டு முருத்திர தேவை நாவிற்**
**செயமெலா மன்பர்க் காக்குஞ் சிவபிரான் றன்னை நெற்றி**
**நயமிகு மிடத்தி னாட்டி நாளுநற் றியானஞ் செய்யே.** **(4)**

(அரும் பதவுரை) உயவினை - துன்பத்தை; நயம் - நன்மை; நாளும் - தினந்தோறும்.

(பொழிப்புரை): - 'பிரம்மதேவனை நெஞ்சிலும், விஷ்ணுமூர்த்தியைக் கண்டத்திலும், உயிர்களுக்குத் துன்பத்தை ஓட்டும் உருத்திரமூர்த்தியை நாவிலும், தம்மை வழிபடும் அன்பர்களுக்கு வெற்றித்திருவை உண்டாக்கும் ஸ்ரீ சிவபிரானை நன்மைமிகும் புருவநடுவாம் நெற்றி இடத்திலும் பொருந்தச் செய்து நாள்தோறும் தியானம் செய்க' என்பது வேதம் இடும் கட்டளையாகும்.

'பிரஹ்மனோ ஹ்ருதய ஸ்தாநம் கண்டே விஷ்ணு: ஸமாச்ரித: தாலுமத்யே ஸ்திதோ ருத்ரோ லலாடஸ்தோ மஹேச்வர:' என்ற பிரமவித்யோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

இன்னொரு வகைத் தியான முறையில் உச்சஸ்தானமாயிருப்பது நெற்றி அதில் வைத்துத் தியானிக்கப் படுபவருஞ் சிவபிரானே என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது தியான ஸ்தானபேதம் அதிகாரிபேதம் பற்றிக் கூறப்பட்டமையால் முரணாகாதென்பதை உணமையறிவார் கண்டு கொள்க.

அடுத்து வரும் இரு செய்யுட்களால் வர்ணபேதத்துள் வைத்துப் பரத்துவ நிச்சயம் செய்கிறார்.

## ஒவ்வொரு தேவரும் ஒவ்வொரு வண்ணராயிருக்கச் சிவபிரான் மாத்திரம் சர்வ வர்ணங்களையுந் தம்பாற் கொண்டவரென்பது.

**மஞ்சளி னிறவ னாகி மாமறைக் கிழவன் வாழ்வான்**
**அஞ்சன வண்ண னாவா னரவமீ துறங்குந் தேவன்**
**விஞ்சிய வெள்ளைத் தேவாய் விளங்குவ னரனால் வேதச்**
**செஞ்சொலு முரையு மான சிவபிரான் சருவ வண்ணன்.** **(5)**

(அரும் பதவுரை) நிறவன் - நிறத்தையுடையவன்; மாமறைக்கிழவன் - பிரமன்; அஞ்சனம் - மை; அரவமீது - உறங்கும் தேவன் - விஷ்ணு; விஞ்சிய - மிகுந்த; அரன் - உருத்திரன்; உரை - பொருள்.

(பொழிப்புரை):- மாமறைக் கிழவனாம் பிரம்மதேவன் மஞ்சள் நிறத்தையுடையவனாகி வாழ்வான்; ஆதிசேடன் மீது உறங்கும் அரிமைநிறமாகிய கரியவனாகி வாழ்வான்; மிகுந்த வெள்ளை நிறத்தவனாய் விளங்கி உருத்திரமூர்த்தி வாழ்வான். ஆனால், வேதத்தின் சொல்லும் பொருளுமாய சிவபிரான் சர்வ வண்ணங்களும் உடையவன்.

பீதா ....ப்ரஹ்மதைவத்யா .....கிருஷ்ணா விஷ்ணு தைவத்யா ....சுக்லாருத்ரா தைவத்யா .... ஸர்வ வர்ணா புருஷதைவத்யா' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'மற்றுமற்றும் பல்பல வண்ணத்தராய்' என்ற தேவாரமும், 'ருத்ரோர்த்தஅக்ஷர: ஸ உமா' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'ஸர்வநாதமய: சிவ:' என்ற தேஜோபிந்துபநிஷத்தும், 'ஸர்வாக்ஷரமய:' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். புருஷபதம் சிவபிரானுக்கே உரிய பெயர்.

ஒவ்வொரு தேவரும் ஒவ்வொரு வண்ணராயிருக்கச் சிவபிரான் மாத்திரம் சர்வ வர்ணங்களையும் தம்பாற் கொண்டவரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## தம்பாற் சர்வ வர்ணங்களையுங் கொண்டதுபோல் ஒருவர்ணத்தையுங் கொள்ளாமல் பைடிகம்போல விளங்குபவரும் சிவபிரானே யென்பது.

**மருமலி மலரோன் செய்யன் மங்குலி னிறவன் மாலோன்**
**உருமலி கபில வண்ண முருத்திர மூர்த்திக் குண்டால்**
**கருமலி யுயிர்கட் கெல்லாங் களைகணாய்த் தானோர் போதுஞ்**
**செருமல முறாத செல்வச் சிவபிரான் படிக வண்ணன். (6)**

(அரும் பதவுரை) மருமலி மலரோன் - பிரமன்; மங்குல் - இருள்; உருமலி - அழகு நிறைந்து; கருமலி - கருப்பவாசங்களை அளவு கடந்து அடைகிற; களைகண் - ஆதரவு; செருமலம் - போர் செய்கிற மும்மலம்; படிகம் - பளிங்கு, இச்செய்யுளில் மற்றொரு வகை வர்ண வரிசை யுண்மை காண்க.

(பொழிப்புரை):- தாமரை மலர் வாழ் பிரம்மன் சிவப்பு நிறத்தினன்; திருமால் இருள்புரை மேனியன். உருத்திரமூர்த்தி அழகு நிறைந்து கபிலவர்ணன். ஆனால், கருப்ப வாசங்களை அளவு கடந்து அடைகின்ற உயிர்க்கூட்டங்களுக்கு ஆதரவானவனும், தான் மட்டும் மும்மலத் தொடக்கிலாத செல்வனுமாகிய சிவபிரான் பளிங்கு நிறத்தினன்.

“பிரஹ்ம தேவத்யா ரக்தா வர்ணேந .... விஷ்ணு தேவத்யா கிருஷ்ணா வர்ணேந ... ஈசாந தேவத்யா கபிலா வர்ணேந ... ஸர்வ தேவத்யாவ்யக்திபூதா ஸ்வம்விசரதி சுத்தஸ்படிக ஸந்நிபா வர்ணேந’ என்ற அதர்வசிரோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

தம்பால் சர்வவர்ணங்களையும் கொண்டது போல் ஒரு வர்ணத்தையுங் கொள்ளாமல் ஸ்படிகம் போல விளங்குபவரும் சிவபிரானேயென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## ஸர்வ லோகாதீதமாய்ப் பாழத்திஸ்தானமாய் விளங்குவது சிவலோக மென்பது.

**இந்திர னுலகின் மேலே யிருந்திடும் பிரம லோகம்**
**செந்திரு கணவ னாடத் திசைமுக னுலகின் மேலாம்**
**உந்தொளி யுலகஞ் சேரு முருத்திரம் கதன்மே லந்நாட்**
**டந்தம தாகு முத்தி யருள்சிவ பிராற்கு நாடே.** **(7)**

(அரும் பதவுரை) செந்திரு கணவன் - விஷ்ணு; உந்து ஒளி - வீசுகின்ற ஒளியையுடைய; அந்தமது - முடிவில்; ஆகும் - இருக்கும்; சிவபிராற்கு நாடு - சிவலோகம். முத்தி அருள் என்பது சிவபிரானுக்கு அடை. முத்தியருள் சிவபிராற்கு நாடு அந்நாட்டந்தமது ஆகும் என்க.

(பொழிப்புரை):- இந்திரன் உலகுக்கு மேலேயுள்ளது பிரமலோகம். மகாவிஷ்ணு மூர்த்தியின் உலகு பிரம்மலோகத்தின் மேலுள்ளது. பிரகாசம் மிக்க உருத்திரர் உலகம் விஷ்ணு உலகத்தின் மேலுள்ளது. முத்தியை அருள் சிவபிரானிற்குரியது அவ்வுலகங்கள் யாவற்றிற்கும் முடிவில் உள்ளது. அதுவே சிவலோகம்.

‘ஷஷ்ட்யா மிந்த்ரஸ்ய ஸாயுஜ்யம் ஸப்தம்யாம் வைஷ்ணவம் பதம் அஷ்டம்யாம் வ்ரஜதே ருத்ரம் ...... த்வாதச்யாம் ப்ரஹ்ம சாச்வதம் ... சிவம்...’ என்ற நாதபிந்தூபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம். பிரமனுலகம் ஏழிலடங்குவதையும் விஷ்ணு பதத்தின் கீழிருப்பதையும் யூகித்தறிக. ஏனைய உலகங்களின் வரிசையையும் அவ்வுபநிஷத்தில் காணலாம்.

ஸர்வ லோகாதீதமாய்ப் பரமுத்தி ஸ்தானமாய் விளங்குவது சிவலோகமென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## மற்ற மூன்றவத்தைகளுக்கு அதீதமாய துரியத்துக்குத் தெய்வம் சிவபிரானென்பது.

**மலரவ னனவில் வாழ்வன் மாலவன் கனவி லேய்வன்**
**உலவறு சுழுத்தி சேர்வ னுருத்திர னெங்கு மென்றும்**
**திலமுறு நெய்போ னிற்குஞ் சிவபிரான் றுரியந் தன்னில்**
**நிலவுவ னிதனை வேத நெறியின ரறிவ ரன்றே.** **(8)**

(அரும் பதவுரை) ஏய்வன் - பொருந்துவான்; உலவு அறு - கெடுத லற்ற; எங்கும் - சித்தசித்துப் பிரபஞ்ச முழுவதிலும்; என்றும் - எக்காலத்திலும்; திலம் - எள்; நிலவுவன் - விளங்குவான்.

(பொழிப்புரை): - நனவு (ஜாக்கிரம்), கனவு (ஸ்வப்பனம்) உறக்கம் (சுஷுப்தி) என்னும் மூன்றவத்தைகளை முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் பொருந்துவர். சித்து அசித்துப் பிரபஞ்ச முழுவதிலும், எக்காலத்திலும் எள்ளில் நிறைந்து நெய்போல் ஔபச்சிலேடிக வியாபியாய் நிற்கும் சிவபிரான் மூன்றவத்தைகளுக்கும் அதீதமாய் துரியம் என்னும் அவத்தையில் விளங்குவான். இவ்வுண்மையினை வேத நூல்களை முறையாகக் கற்றவர்கள் அறிவர்.

'ஜாகரிதே ப்ரஹ்மா ஸ்வப்நே விஷ்ணு; ஸுஷுப்தௌருத்ரஸ்துரீய மக்ஷரம்' என்ற பிரமோபநிஷத்தும் பரப்மோபநிஷத்தும் .....' என்ற பஞ்சப்பிரமோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். அக்ஷரபதமும் ஈசாந பதமும் பரியாயங்கள்.

மற்ற மூன்றவத்தைகளுக்கு அதீதமாய துரியத்துக்குத் தெய்வம் சிவபிரான் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## வேதம் நாலாவது வஸ்துவைச் சிவநாமத்தாலேயே பிரஸ்தாபிக்குமென்பது.

**நான்மறை சதுர்த்தந் தன்னை நலம்பெற வுரைக்கும் போது**
**மான்மல ருறைவோ னாதி வானவர் பெயர்க ளன்றிப்**
**பான்மதி மிலைச்சுஞ் சென்னிப் பரமனுக் குரிய நாமந்**
**தான்மிக வழங்க லாலே தற்புர னவனே யன்றோ.** **(9)**

(அரும் பதவுரை) சதுர்த்தந்தன்னை - திரிமூர்த்திகளுக்கும் மேலாகிய நாலாவது பொருளை; நலம் பெற - தெளிவு உண்டாகும்படி; மால் - விஷ்ணு; மலர் உறையோன் - பிரமன்; பெயர்களன்றி - பெயர்களைப் பிரஸ்தாபியாமல்; பால்மதி மிலைச்சுஞ் சென்னிப் பரமனுக்கு உரிய - சிவபிரானுக்குச் சொந்தமான; நாமம் தான்

ஏ - பெயர்களையே; வழங்கலால் - பிரஸ்தாபித்தலால்; தற்பரன் - முழு முதற் கடவுள்.

(பொழிப்புரை): - வேதநூல் திருமூர்த்திகளுக்கும் மேலாகிய நாலாவது பொருளை அறிவோர் உள்ளத்தில் தெளிவு உண்டாகும்படி சொல்லும்பொழுது பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களின் பெயரைப் பிரஸ்தாபியாமல் மூன்றாம் பிறையணிந்த ஸ்ரீ சிவபிரானுக்குச் சொந்தமான பெயர்களையே மிகுதியும் எடுத்துப் பிரஸ்தாபிப்பதால் முழுமுதற் கடவுள் அவனேயல்லவா?

'சிவம்...சதுர்த்தம்' என்ற மாண்டூக்யோபநிஷத்தும், நரஸிம்ஹ பூர்வ உத்தரதாபிநியுபநிஷத்துக்களும், நாரத பரிவ்ராஜகோபநிஷத்தும், ராமோத்தரதாபிநியுபநிஷத்தும், 'சதுர்த்தம்....சிவம்' என்ற பஸ்ம ஜாபாலோபநிஷத்தும், இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

வேதம் நாலாவது வஸ்துவைச் சிவநாமத்தாலேயே பிரஸ்தாபிக்குமென்பதை இச்செய்யுள் நிறுவியது.

## வணங்குகிறவர் திரிமூர்த்திகளும் வணங்கப் படுகிறவர் சிவபிரானுமாவாரென்பது.

**சேவிய னாவ னென்று முபாசியன் றியேயன் என்றுந்**
**தேவிக மறைக ளெல்லாஞ் சிவபிரான் றன்னைப் போற்றிச்**
**சேவக ராவ ரென்று முபாசகர் தியாத மாரிங்**
**காவரே யென்றுங் கூறி யகற்றிடு மூவர் தம்மை. (10)**

(அரும் பதவுரை) சேவியன் - சேவிக்கப்படுகிறவன்; உபாசியன் - உபாசிக்கப்படுகிறவன்; தியேயன் - தியானிக்கப்படுகிறவன்; தேவிக - தெய்வீக; சேவகர் - சேவிக்கிறவர்; உபாசகர் - உபாசிக்கிறவர்; தியாதாமார் - தியானிக்கிறவர்; அகற்றிடும் - ஒதுக்கும்; மூவர் தம்மை - பிரம விஷ்ணு ருத்ரரை.

(பொழிப்புரை): - சேவிக்கப்படுகிறவன் (சேவியன்), உபாசிக்கப்படுகின்றவன் (உபாசியன்) தியானிக்கப்படுகின்றவன் (தியேயன்) என்று சிவபிரானானரைத் தெய்வீக உபநிடதங்கள் போற்றிச் துதித்துச் சொல்லும். ஆனால் சேவிக்கிறவர் (சேவகர்), உபாசிக்கிறவர் (உபாசகர்), தியானிக்கிறவர் (தியாதாமார்) எனக்கூறிப் பிரம விஷ்ணு உருத்திரர்களை அவ்வுபநிடதங்கள் ஒதுக்கும். இதனாலும் சிவபிரான் உயர்ச்சி புலப்படும்.

'ப்ரஹ்ம விஷ்ணுவாதிபி: ஸேவ்யம் .....ஈசாநம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், சிவம் .... ஸர்வேச்வரம் ஸர்வ தேவைருபாஸ்யம்' என்ற மஹோபநிஷத்தும், 'ஸதாசிவம் ப்ரஹ்மாதி வந்திதம்' என்ற நரஸிம்ஹ

பூர்வதாபிரியுபநிஷத்தும், 'ஸர்வ தேவைருபாஸ்யம்,' 'ஸர்வஸ்ய சரணம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ப்ரஹ்ம விஷ்ணு புரந்தராத் யமரவா ஸேவிதம்' 'மாமேவோபாஸிதவ்யம்'. 'ஏகாமா சாஸ்யம்.....சிவன்' என்ற பஸ்ம ஜாபாலோபநிஷத்தும், 'சிவ ஏகோத்யேய:' 'த்யாயீதேசாநம்' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'ஏகோ ருத்ரோ த்யேய:', 'சிவ ஏவ ஸதா த்யேய:' என்ற சரபோபநிஷத்தும், 'நாராயண பரோத்யாதா' என்ற நாராயணோபநிஷத்தும், 'த்யாதா ருத்ர:' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'ராம ஏவ பரம் தப:' என்ற ராம ரஹஸ்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

வணங்குகிறவர் திருமூர்த்திகளும் வணங்கப்படுகிறவர் சிவபிரானுமாவா ரென்பதைத் தெரிவித்துப் பரத்துவ நிச்சயம் செய்தது இச்செய்யுள்.

## சைவசமயத்து முழுமுதற் கடவுள் நாலாவது வஸ்துவாகிய சிவபிரானே யென்பது.

**சுந்தர சதுர்த்த னென்றுந் துகளறு துரிய னென்றுஞ்**
**சிந்தனை மறைக ணான்குஞ் செய்சிவ பிரானே மாயா**
**மந்திர மாமிப் பாரில் வழங்கிடு மதங்கட் கெல்லா**
**முந்திய சைவ மார்க்க முழுமுதற் கடவுள் காணே.** **(11)**

(அரும் பதவுரை) துகள் அறு - குற்றமற்ற; மறைகள் நான்குஞ் சிந்தனை செய் சிவபிரானே என்க. செய் என்பதன் வினைமுதல் மறைகள் நான்கும் என்பது. சிந்தனை செய் - சிந்திக்கிற; மாயா மந்திரம் ஆம் - மாயா காரிய வீடாகிய; இப்பாரில் - இவ்வுலகில்; வழங்கிரு - காணப்படுகிற.

(பொழிப்புரை): - மாயாகாரிய வீடாகிய இவ்வுலகில் காணப்படுகிற மதங்களுக்கெல்லாம் முந்தியது சைவ மார்க்கமே. அச்சைவ சமய முழுமுதற் கடவுள் அழகிய சதுர்த்தப் பொருள் எனவும், குற்றமற்ற துரியவஸ்து எனவும் மறைகள் நான்குஞ் சொல்லீர் சிந்தனை செய்யும் சிவபிரானேயாவார். இவ்வுண்மையைத் தெளியக் கண்டு கொள்க.

'மூவரும் முப்பத்து மூவரு மற்றொழிந்த தேவருங்காணாச் சிவபெருமான்' என்ற திருவாசகம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

சைவ சமயத்து முழுமுதற் கடவுள் நாலாவது வஸ்துவாகிய சிவபிரான் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

இதுவரை வந்து நாலு தெய்வப் பிரஸ்தாபம். இனி வருவது ஐந்து தெய்வப் பிரஸ்தாபம். சதுர்த்த தெய்வம் இவ்வரிசையிற் சேராது.

## பிரமனாதி ஐந்து மூர்த்திகளுட் சதாசிவனே பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்வரென்பது.

**ஆக்குவ னயன்மா லாக்கி யளிப்பனா லாக்கிக் காத்துப்**
**போக்குவ னரன்மா கேசப் புங்கவ னாக்கிக் காத்துப்**
**போக்கியே மறைப்ப னெண்ணில் புகழ்ச்சதா சிவன்றான் செய்வ**
**னாக்குதல் அளித்தல் போக்கல் மறைத்தனல் லருள்க எம்மா.** (12)

(அரும் பதவுரை) மாகேசப் புங்கவன் - மகேச்சுரன்; எண் இல் - அளவில்லாத.

(பொழிப்புரை): - பிரமதேவன் உலகைப் படைத்தல் மட்டும் செய்வான்; திருமால் படைத்தலொடு காத்தலும் செய்வன்; உருத்திரன் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் செய்வான்; மகேச்சுர மூர்த்தி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் ஆகிய நான்கு தொழில்கள் செய்ய வல்லவன்; அளவில்லாத புகழுடைய சதாசிவ மூர்த்தியோ படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் செய்வான்.

'பஞ்சக்ருத்ய நியந்தாரம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார திரோதாநுக்ரஹாதி ஸர்வசக்தி....' என்ற ஸீதோபநிஷத்தும், 'பஞ்சக்ருத்ய ஸம்பந்த....பசுபதி' என்ற ஜாபால்யுபநிஷத்தும் அயன் முதலிய மூவர்க்கும் முறையே படைப்பு முதலிய மூன்றனுள் ஓரோவொன்று சிறப்புத் தொழிலும், ஏனைய பொதுத் தொழிலுமாமெனவும்; மகேசன், சதாசிவன் இருவர்க்கும் முறையே மறைப்பும் அருளுஞ் சிறப்புத்தொழிலும் ஏனைய பொதுத்தொழிலுமாம்' என்ற ஸ்ரீசிவஞான மஹா பாஷ்யமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

பிரமனாதி ஐந்து மூர்த்திகளுள் சதாசிவனே பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்வரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## அடிமுதல் பிரதான உறுப்பாகிய சிரசிற்குரிய தெய்வம் சதாசிவனே யென்பது.

**அடிமுதல் முழங்கால் காறு மயனுள னதன்மேன் மாயன்**
**இடைவரை யுள்ளான் தாணு விருதயம் வரையி லாவன்**
**வடுவறு புருவத் தெல்லை மகேச்சுரன் வதிவான் மேலாந்**
**தடமுடி தனினன் குற்றான் சதாசிவ பரமன் றானே.** (13)

(அரும் பதவுரை) இடை - இடுப்பு; தாணு - உருத்திரன்; வடு அறு - குற்றமற்ற; வதிவான் - இருப்பான்; தடமுடிதனில் - விசாலமான சிரசில்.

(பொழிப்புரை): - மனுஷ்ய சரீரத்தில் அடிமுதல் முழங்கால்வரை பிரமன் உள்ளான்; முழங்கால் முதல் இடுப்பு வரை திருமால் வாழ்வான்; உருத்திரமூர்த்தி இடுப்பின் மேல் இதயம் வரை வாழ்வான்; இதயத்தின் மேல் குற்றமற்ற புருவ எல்லை வரை மகேச்சுரன் இருப்பான்; புருவ மத்தியிலிருந்து சிரசுவரை பரமனாகிய சதாசிவமூர்த்தி வீற்றிருந்தருளுவான்.

'பாதாதி ஜாநுர் பர்யந்தம்...சதுர்புஜாகாரம் சதுர்வக்த்ரம் ஹிரண்மயம் ......ஆஜாநோ: பாயுபர்யந்தம்.......நாராயணம் தேவம் .......ஆபாயோர் ஹ்ருதயாந்தம் ..... ருத்ரம் .....ஆஹ்ருதயாத் ப்ருவோர் மத்யம் ......ஈச்வரம் ஆப்ரூமத்யாத்து மூர்த்தாந்தம் ......ஸதாசிவம்' என்ற யோக தத்வோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

உடம்பிற் பிரதான உறுப்பாகிய சிரசிற்குரிய தெய்வம் சதாசிவனே என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## மற்றப் பூதங்களை யெல்லாம் வியாபித்துள்ள ஆகாச தெய்வம் சதாசிவனே யென்பது.

**மண்ணதி லயன்மா னீரில் வன்னியி லரன்கா லீசன்**
**தண்ணளி வடிவ மான சதாசிவன் விண்ணி லுள்ளார்**
**எண்ணிடு பூத மைந்து மேறலான் முறையா யாங்கே**
**நண்ணிடு மதிபர் தாமு நாசமி லதிக ரங்ஙன். (14)**

(அரும் பதவுரை) வன்னியில் - தீயில்; அரன் - உருத்திரன்; கால் - காற்றில்; அயனும் மாலும் அரனும் ஈசனும் சதாசிவனும் என உம்மை விரித்து உள்ளார் என்பதற்குப் பன்மை வினைமுதல் காண்க; ஏறலான் - வியாபித்தலான்; ஆங்கே - அப்பூதங்களில்; அப்பூதங்களின் வியாபக முறையில்.

(பொழிப்புரை): - அயனும் மாலும் அரனும் ஈசனும் சதாசிவனும் முறையே பிருதிவி, அப்பு, தேய், வாயு, ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களிலும் உள்ளார். எண்ணத்தக்க பூதங்களில் பிருதிவியினும் உள்ளார். எண்ணத்தக்க பூதங்களில் பிருதிவியினும் அப்புவும், அப்புவினும் தேயுவும், தேயுவினும் வாயுவும், வாயுவினும் ஆகாசமும் வியாபித்தலான் அப்பூதங்களில் இருக்கிற கடவுளர் தாமும் அப்பூதங்களின் வியாபக முறையில் அழியாத வியாபகர்.

'ஆகாசாத் வாயு: வாயோரக்தி: அக்நேராய: | அத்ப்ய: ப்ருதிவீ' என்ற தைத்ரியோபநிஷத்தும், பைங்களோபநிஷத்தும், 'ஆகாசாத் வாயுர் வாயோரக்திரக்நே ராபோத்ப்ய: ப்ருதிவீ' என்ற ஸுபாலோபநிஷத்தும், 'ஆகாசாத் வாயு: | வாயோரக்நி அக்நேராப" அத்ப்ய: ப்ருதிவீ | ஏதேஷாம் பஞ்ச பூதாநாம் பதய: பஞ்ச ஸதாசிவேச்வரருத்ர விஷ்ணு ப்ரஹ்மாண்ச்சேதி' என்ற

யோகசூடாமணியுபநிஷத்தும், 'ப்ருதிவீ .... சதுர்ப்புஜாகாரம் சதுர் வக்த்ரம் ஹிரண்மயம் .... ஆப: .... நாராயணம் தேவம் .... வஹ்தி .... ருத்ரம் ...... வாயு: ஈச்வரம் ....வ்யோம .... ஸதாசிவம்' என்ற யோகதத்வோபநிஷத்தும், ப்ரஹ்மாணம் ப்ருதிவீ பாகே விஷ்ணும் தோயாம்சகே ததா | அக்ந்யம்சேச மஹேசாந மீச்வரம் சாநிலாம்சகே | ஆகாசாம்சே மஹா ப்ராஜ்ஞ தாரயேத்து ஸதாசிவம்' என்ற ஸ்ரீ ஜாபால தர்சனோபநிஷத்தும், 'தரண்யௌ ப்ரஹ்மா தத்ராதி தேவதா ..... ஜலம் விஷ்ணுஸ்தஸ்யாதி தேவதா .... வஹ்நிருத்ரஸ்யாதி தேவதா வாயோர் பிம்பம்து ..... ஈச்வரோஸ்யாதி தேவதா ஆகாச மண்டலம் ..... தேவதாஸ்ய ஸதாசிவ:' என்ற யோக சிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

மற்றப் பூதங்களை எல்லாம் வியாபித்துள்ள ஆகாச தெய்வம் சதாசிவம் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## பஞ்ச பூதங்களையும் ஒருசேரச் சதாசிவோபாசனை யாற்றான் சமிக்க முடியுமென்பது.

**மண்டனை யயனால் வெல்க மாலினால் வெல்க மண்ணீர்**
**மண்புன லனலை வெல்க வயங்கர முதலோன் றன்னால்**
**மண்புன லனல்கா றன்னை மகேசனால் வெல்க வெல்க**
**மண்புன லனல்கால் வானை வண்சதா சிவனால் மாதோ.** (15)

(அரும் பதவுரை) மண்நீர் - பிருதிவியையும் அப்புவையும்; வயங்கு - பிரகாசிக்கிற; அரமுதலோன்றன்னால் - உருத்திரனால்.

(பொழிப்புரை): - பிருதிவி என்னும் பூதத்தை பிரமனை வழிபட்டு வெல்க; பிருதிவி, அப்பு என்னுமிரு பூதங்களையும் திருமாலை வழிபட்டு வெல்க; பிருதிவி, அப்பு, தேயு ஆகிய மூன்று பூதங்களையும் உருத்திர மூர்த்தியை வழிபட்டு வெல்க; பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களையும் மகேசனை வழிபாடு செய்து வெல்க; பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களையும் வலப்பநிறை சதாசிவ மூர்த்தியை வழிபட்டு வெல்க.

'த்யாயம்ச் சதுர் புஜாகாரம் சதுர்வக்த்ரம் ஹிரண்மயம் தாரயேத் பஞ்ச கடிகா: ப்ருதிவீ ஜயமாப்நுயாத் ... ஸ்மரத் நாராயணம் தேவம் தாரயேத் பஞ்சகடிகா - ததோ ஜலாத்பயம் நாஸ்தி ஜலே ம்ருத்யுர் ந வித்யதே | ருத்ரம் தருணா மித்ய ஸந்நிபம் தாரயேத் பஞ்சகடிகா வக்நி நாஸௌ ந தாஹ்யதே தாரயேத் தத்ர ஸர்வஜ்ஞமீச்வரம் விச்வதோமுகம் தாரயேத் பஞ்சகடிகா வாயுவத்வ்யோம பவேத் ஆகாசே வாயுமாரோப்ய ஹகாரோபரி சங்கரம் .... ஸதாசிவம் ..... யத்ரகுத்ரஸ்திதோவாபிஸுக மத்யந்த மச்நுதே' என்ற யோகதத்வோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்'

பஞ்ச பூதங்களையும் ஒரு சேர சதாசிவோபாசனையால் தான் வெல்ல முடியும் என்பதை இச்செய்யுள் நிச்சயித்தது.

## ஆறாதாரங்களுள் உச்சமான ஆஞ்ஞைத் தெய்வம் சதாசிவனென்பது.

**விதிபதி சுவாதிட் டானம் விட்டுணு மணிபூ ரத்தன்**
**உதிகதி ரொளியாஞ் சீவர்க் குருத்திர னனாக தத்தன்**
**வதிபதி விசுத்தி தன்னியன் மகேச்சுர னாஞ்ஞை யென்னும்**
**பதியதி லுறைவோ னன்னோர் பணிசதா சிவனே யாவன். (16)**

(அரும் பதவுரை) விதி - பிரமனுக்கு; பதி - இடம்; சீவர்க்கு உதி கதிர் ஒளி ஆம் - உயிர்களுக்கு அந்தகாரத்தை நீக்குவதிற் காலைக் கதிரவன் போலுள்ள; விசுத்திதன்னில் வதிபதி என்க; வதிபதி - இருக்கிற தலைவன்; அன்னோர் - முன் நால்வரும்; எனவே மகேச்சரனை முன்மூவரும், உருத்திரனை முன் இருவரும், விஷ்ணுவைப் பிரமனொருவனும் பணிவரென்பது சூசனை, ஆறாதாரங்களை யோககுண்டலியுபநிஷத்து 'மூலாதாரம் ஸ்வாதிஷ்டாநம் - - மணிபூரகம் - - அநாஹதம் விசுத்தம் ச ஆஜ்ஞா சக்ரம்' என்றும், ஹம்ஸோபநிஷத்து 'ஸ்வாதிஷ்டாநம் - - மணிபூரகம் - - அநாஹதம் விசுத்தௌ - - ஆஞ்ஞாம் - - ப்ரஹ்மாந்த்ரம் - -' என்றும் கணக்கிடும். இங்கு மூலாதாரமும் பிரமாந்திரமுந்தள்ளி அம்மூர்த்திகளின் தாரதம்மியங்காட்ட மற்றவைமட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(பொழிப்புரை): - ஆறாதாரங்களில் சுவாதிஷ்டானம் பிரமனுக்கு இடம்; மணிபூரகம் விஷ்ணுமூர்த்திக்கு இடம்,. உயிர்களுக்கு அந்தகாரத்தை நீக்குவதில் காலைக் கதிரவன் போன்ற உருத்திர மூர்த்திக்கு இடம் அநாஹதம், விசுத்தி என்னும் ஆதாரத்தில் இருக்கும் கடவுள் மஹேசன்; பிரம விஷ்ணு உருத்திர மஹேசர் வழிபடும் சதாசிவ மூர்த்தி ஆஞ்ஞை என்னும் ஆதாரமாகிய இடத்தில் வாழ்வோனாவான்.

எனவே மகேச்சுவரனை முன்மூவரும், உருத்திரனை முன் இருவரும், விஷ்ணுவைப் பிரமனொருவனும் பணிவரென்பது சூசனை.

ஆறாதாரங்களை யோககுண்டலியுபநிஷத்து 'மூலாதாரம் ஸ்வாதிஷ்டாநம் மணிபூரகம் அநாஹதம் விசுத்தம் ஆஜ்ஞா சக்ரம்' என்றும், ஹம்ஸோபநிஷத்து 'ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம் அநாஹதம் விசுத்தௌ ஆஜ்ஞாம் ப்ரஹ்மரந்த்ரம் ....' என்றும் கணக்கிடும், இங்கு மூலாதாரமும் பிரமரந்திரமும் தள்ளி அம்மூர்த்திகளின் தாரதம் மியங்காட்ட மற்றவைமட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆறாதாரங்களுள் உச்சமான ஆஞ்ஞைத் தெய்வம் சதாசிவம் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## மூன்று மூர்த்திக் கணக்கு வரும்போது அவர்களுக்கதீதனாகிய நாலாவது மூர்த்தியாஞ் சிவபிரானே ஐந்து மூர்த்திக் கணக்கு வரும்போது அவர்களுக்கதீதனாகிய ஆறாவது மூர்த்தியாயும் விளங்குவனென்பது.

**அயனென வரியே யென்ன வரனென மகேச னென்னச்**
**சயசதா சிவனே யென்னச் சாற்றுமல் வைவர் மேலாய்**
**மயலறு போதா நந்த மயசிவ னென்னு மாறஞ்**
**சுயவொளி யிறைவ னாகித் துலங்கலுந் துரியற் குண்டால். (17)**

(அரும் பதவுரை) துலங்கல் - விளங்குதல்.

(பொழிப்புரை): - துரியன் என்று பேசப்படும் சிவபிரான் அயன் அரி அரன் மகேசன் சதாசிவன் என்று சொல்லப்படும் ஐவர்க்கும் மேலாய் மயக்கம் அறுக்கும் "போதாநந்தமய சிவன்" என்னும் ஆறாவது மூர்த்தியாய் விளங்குவான்.

'ப்ரஹ்மானம் விஷ்ணும் மஹேசாந மீச்வரம் .... ஸதாசிவம் | அதவா தவ வக்ஷ்யாமி தாரணாம் முநிபுங்கவ | புருஷே ஸர்வ சாஸ்தாரம் போதாநந்தமய சிவன்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

மூன்றுமூர்த்திக் கணக்கு வரும்போது அவர்களுக்கதீதனாகிய நாலாவது மூர்த்தியாஞ் சிவபிரானே ஐந்து மூர்த்திக் கணக்கு வரும்போது அவர்களுக்கதீதனாகிய ஆறாவது மூர்த்தியாயும் விளங்குவனென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## திரிமூர்த்திகளுட் சேர்ந்த உருத்திரன் சைவசமயக் கடவுளல்ல ரென்பது.

**முத்தொழி லியற்றுந் தேவர் மூவருண் மூன்றாந் தேவே**
**சத்திய சைவ மார்க்கத் தனிமுத லென்பர் தேரார்**
**அத்தொழி லிறைவ ரெல்லா மஞ்சலி சிரமேற் கொண்டு**
**வித்தகச் சதுர்த்த னாறே வினைகளை யென்றுஞ் செய்வார். (18)**

(அரும் பதவுரை) முத்தொழில் இயற்றுந்தேவர் - பிரமவிஷ்ணுருத்ரர்; மூன்றாந் தேவு - உருத்திரன்; சைவமார்க்கத்தனிமுதல் - சைவசமயக்கடவுள்; தேரார் - அறியாதவர்; அத்தொழிலிறைவரெல்லாம் - அம்மூவரும்; அஞ்சலிசிரமேற்

கொண்டு - வணங்கி - வித்தக - ஞானமய; ஆறே - திருவுள்ளப்படி; வினைகளை - முத்தொழில்களையும்.

(பொழிப்புரை): - படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களை முறையே பிரம, விஷ்ணு, உருத்திரர் இயற்றுவர். அவருள் மூன்றாமவராய் விளங்கும் உருத்திர மூர்த்தியே உண்மை நிறைந்து சைவ சமயக் கடவுள் என அறியாதவர் கூறுவர். ஆனால் அம்மூவரும் நான்காமவராகிய ஞானமயரான சிவபிரானைச் சென்னியில் வைத்த கையினராய் வணங்கிக் கொண்டு அச்சிவபிரான் திருவுள்ளப்படி தத்தம் தொழில்களை எக்கால்த்தும் செய்வர்.

'நம்மவரவரே, மூவரென்றே யெம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல், தேவரென்றே யிறுமாந்தென்ன பாவநதிரிதவரே' என்ற திருவாசகம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

திரிமூர்த்திகளுட் சேர்ந்த உருத்திரன் சைவ சமய முழுமுதற் கடவுளல்லர் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## திரிமூர்த்திகளுஞ் சிவபிரானிடமே ஒடுங்கித் தோன்றுவரென்பது.

**அயனரி தன்னி லாவ னயன்றனி லரிதா னாவ**
**னயனரி யரனி லாவ ரரனரி யயரி லாவ**
**னியலிவை கற்ப பேத மீசுர மூர்த்தி தானே**
**யயனரி யரரைத் தன்பா லாக்கிமுன் னழிப்பான் பின்னர்.** **(19)**

(அரும் பதவுரை) ஆவன் - வெளிப்படுவான், ஒடுங்குவான்; இயல் இவை - இப்படி நிகழுகிற இவ்விரண்டும்; கற்பபேதம் - அவாந்தர கற்பங்களி லுண்டாகும் மாறுபாடுகள்; தன்பால் - தன்னிடத்திலிருந்து, தன்னிடத்தில்; ஆக்கி - வெளிப்படுத்தி; முன் - பிரதம சிருட்டியில்; அழிப்பான் - ஒடுக்குவான்; பின்னர் - சர்வ சங்காரத்தில்.

(பொழிப்புரை): - பிரமன் விஷ்ணுமூர்த்தியிடம் தோன்றுவான், ஒடுங்குவான்; பிரமனிடத்திருந்து விஷ்ணுமூர்த்தி தோன்றுவான்; பிரம விஷ்ணுக்கள் உருத்திரரிடம் தோன்றுவர், ஒடுங்குவர், உருத்திரர், விஷ்ணு ஆகிய இருவரும் பிரமனிடந்தோன்றுவர். இப்படி நிகழுகிற இவையிரண்டும் அவாந்தரக் கற்பங்களில் உண்டாகும் மாறுபாடுகள் உண்மையில் ஈசுரமூர்த்தியாம் சிவபிரான் பிரம் விஷ்ணு உருத்திரர்களை முதலில் தோற்றுவித்துச் சர்வசங்கார காலத்தில் ஒடுக்குவான்.

'ஏகோஹவை நாராயண ஆஸீந் நய்ரஹ்மா நேசாந:' என்ற மநோபநிஷத்தும், 'நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே நாராயணாத்ருத்ரோ ஜாயதே'. 'ருத்ரோ மகர்ஷி' | ஹிரண்யகர்பம் பச்யதி ஜாயமாநம்' என்ற நாராயணோபநிஷத்தும் 'லலாடாத

க்ரோதஜோ ருத்ரோஜாயதே' என்ற ஸுபாலோபநிஷத்தும் 'டமாபிவிஷ்ணோற் ஜநகம்' என்ற சரபோபநிஷத்தும், 'நாராயணாத்திரண்யகர்போ ஜ யதே' என்ற திரிபாத்விபூதி மஹாநாராயணோபநிஷத்தும், 'ப்ரஹ்மயோநிம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'ஈசம் புருஷம் ப்ரஹ்மயோநிம்' என்ற முண்டகோபநிஷத்தும், ருத்ரோ மகர்ஷி: | ஹிரண்யகர்பம் ஜநயாநம் ஸபூர்வம்', 'ருத்ரோ மஹர்ஷி: | ஹிரண்ய கர்பம் பச்யதி ஜாயமாநம்,' 'ப்ரஹ்மயோநிம் யோப்ரஹ்மானம் விததாதி பூர்வம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸர்வேச்வரம் சிவாச்யுதாம்போருஹ கார்ப பூருஹம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'சிவம் - ஹரிஹர ஹிரண்யகர்ப ஸ்ருஷ்டாரம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'த்ரயஸ்தை காரணாத்மநோ | ஜாதாஸ் ஸாக்ஷாத் மஹேச்வராதிக்யுபக்ரம்யஸ்பஷ்டமுக்தம் தபஸாதோஷயித்வாது பிதரம் பரமேச்வரம் | ப்ரஹ்ம நாராயணௌ பூர்வம் ருத்ரம் கல்பாந்தரே ஸ்ருஜத் | கல்பாந்தரே புநர்ப்ரஹ்மா ருத்ர விஷ்ணும் ஜகந்மய: விஷ்ணுச்ச பகவாந் தத்வத் ப்ரஹ்மாணமஸ்ருஜத் ப்ரபு: | நாராயணம் புநர்ப்ரஹ்மா ப்ரஹ்மாணம் ச புநர்பவ" | ஏவம் கல்பேஷு கல்பேஷு ப்ரஹ்ம விஷ்ணு மஹேச்வரா: | பரஸ்பரமாஜ்ஜாயந்தே பரஸ்பரஜயைக்ஷிண: | தத்தத் கல்பாந்த மதிச்ருத்ய மஹர்ஷிபி: | ப்ரபவ: கத்த்யதே தேஷாம் பரஸ்பர ஸமுத்பவா இதி' என்ற வாயுஸம்ஹிதையும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

திரிமூர்த்திகளும் சிவபிரானிடமே ஒடுங்கித் தோன்றுவரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## திரிமூர்த்திகளையும் சிவபிரான் எளிதிற் சங்கரிப்பவ ரென்பது.

**பார்தனை யாக்குந் தேவைப் பாற்கட லிறையைச் சூலஞ்**
**சேர்கர முதலை யீற்றிற் சிவபிரான் சங்க ரித்த**
**லார்கலி நீரை முற்று மாங்குறு வடவை யங்கி**
**யோர்கண மனதிற் சீறி யுண்பதற் கொப்பா மன்றே.** **(20)**

(அரும் பதவுரை) ஆர்கலி - கடல்; வடவை அங்கி - வடவாமுகாக்கினி.

(பொழிப்புரை): - பிரமம், விஷ்ணு, உருத்திரர்களைச் சிவபிரான் சங்கரித்தல் கடல்நீர் முழுவதையும் வடவாமுகாக்கினி ஒரு க்ஷணப்பொழுதில் கோபிட்துச் சீறிச் சுவசறச் செய்வதற்கொப்பாகும்.

'ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவாபூத ஜாதய: | நாசமேவாநுதவந்தி ஸலிலாநீவ பாடபம்' என்ற மஹோபநிஷத்து இச்செயுட்குப் பிரமாணம்.

திரிமூர்த்திகளையும் சிவபிரான் எளிதிற் சங்கரிப்பவரென்பது இச்செய்யுளால் நிச்சயிக்கப்பட்டது.

## மூன்று மூர்த்தியாகிய உருத்திரர் சிவபிரானை நோக்கித் தவஞ்செய்து அவரிடமிருந்து சிவநாம ரூபாதிகளைப் பெற்றாரென்பது.

**மேதகு மூன்றா மூர்த்தி விருப்புடன் சதுர்த்தன் றன்னைப்**
**பாதம திறைஞ்சி நோற்றுப் பரித்திடப் பெற்றா னன்னா**
**னோதரு முருவும் பேரு முயர்மறை யதனா லந்தப்**
**பேதரை யபேத மாக்கிப் பேசலு மாங்காங் குண்டால்.** **(21)**

(அரும் பதவுரை) மேதகு - மேன்மையான; பரித்திட - தாங்க; பேதரை - மூன்றாமூர்த்தியையுஞ் சதுர்த்த மூர்த்தியையும்; அபேதம் ஆக்கி - ஒருவராக்கி மூன்றா மூர்த்தியே பரமென்று; ஆங்காங்கு - ஒவ்வோரிடத்தில்; பின் சில செய்யுட்களில் மும்மூர்த்திப் பிரஸ்தாபமே வருகிறது; ஆங்கும் உருத்திரனுக்கே பரத்துவம் உளதாதல் காண்க.

(பொழிப்புரை): - மேன்மையான மூன்றாவது மூர்த்தியாகிய உருத்திரர் ஆர்வத்துடன் நான்காவது மூர்த்தியாகிய சிவபிரான் திருவடிப்போதினை வணங்கித் தவம் செய்து சிவபிரானுக்குரிய ஓதுதற்கரிய வடிவு, நாமம் முதலிய தாங்கப் பெற்றார். அதனால் நான்கு வேதங்களும் மூன்றாம் மூர்த்தியையும் நான்காவது மூர்த்தியையும் ஒருவராக்கி மூன்றாம் மூர்த்தியே பரமென்று ஒவ்வோரிடத்தில் பேசுத்தலுமுண்டு.

பின் சில செய்யுட்களில் மும்மூர்த்திப் பிரஸ்தாபமே வருகிறது. ஆங்கும் உருத்திரனுக்கே பரத்துவம் உளதாதல் கண்டு கொள்க.

'நச்சக்த்யாதிஷ்டிதச்சச்வத்தச்சிஹ்நை ரபி சிஹ்நித: | தந்நாமாதத்ரூபஸ் தத்கார்ய, கரணக்ஷம: | தத்துல்ய வ்யவஹாரச்ச ததாஜ்ஞா பரிபாலக:' என்ற வாயு ஸம்ஹிதை இச்செய்யுட்குப் பிரமாணம்.

மூன்றாம் மூர்த்தியாகிய உருத்திரர் சிவபிரானை நோக்கித் தவம் செய்து அவரிடமிருந்து சிவநாம ரூபாதிகளைப் பெற்றாரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## உருத்திரரே சர்வத்துக்குங் காரண சொரூபரென்பது.

**கண்ணுத லுருவ மாகிக் காரண மனைத்து மோங்கும்
கண்ணர விந்த மாவோன் காரிய மனைத்து மாவான்
மண்ணுறு கிரியை யெல்லா மலரவ னுருவா மென்னில்
எண்ணுவ ரரனைச் சர்வ காரண னென்று மேலோர்.** (22)

(அரும் பதவுரை) கண் அரவிந்தமாவோன் - விஷ்ணு; மண் - உலகத்தில்.

(பொழிப்புரை): - கண்ணுதற் கடவுள் உருவந்தாங்கிச் சர்வகாரணராவார்; திருமால் எல்லாக் காரிய வடிவும் ஆவார்; பிரமதேவர் உலகிற் பொருந்திய கிரியா வடிவினர். ஆதலால் சான்றோர் அரனாகிய சிவபிரானைச் சர்வ காரணர் என்று சொல்லுவர்.

'கார்யம் விஷ்ணு: க்ரியா ப்ரஹ்மா காரணம்து மஹேச்வர:' என்ற ருத்ர ஹ்ருதயோபநிஷத்தும்' 'ஸர்வேசம்....சிவம் காரணம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உருத்திரரே சர்வத்துக்குங் காரண சொரூபரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## மோக்ஷ நாடிக்குத் தெய்வம் உருத்திரனே யென்பது.

**நாடரு நாடி மூன்று ணாரண னிடையின் றெய்வம்
பீடுறு கமல வாசன் பிங்கலைத் தெய்வ மாவன்
வீடெனு மின்பைச் சீவர் மேவிட முதுகென் பூடே
யோடிடு சுழுனைத் தேவா யுறைபவன் சிவனே யாவான்.** (23)

(அரும் பதவுரை) நாடு அரு - ஆராய்தற்கரிய; பீடு - பெருமை; கமலவாசன் - பிரமன்; வீடெனும் இன்பை - முத்தியை; மேலிட - அடைய; என்பூடே - எலும்புக்கு நடுவில்.

(பொழிப்புரை): - ஆராய்தற்கரிய நாடிமூன்றில் இடைகலை நாடிக்குரியவர் நாராயணர். பிங்கலை நாடித்தெய்வம் பிரம்மதேவன்; மோக்ஷமென்னும் அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டை உயிர்கள் அடைய முதுகு எலும்புக்கு நடுவில் செல்லும் சுழு னை நாடித் தெய்வமாய் வாழ்பவன் சிவபிரானேயாவான்.

'இடாவாமே ஸ்திதா பாதே தக்ஷிணே பிங்களா ஸ்திதா || ஸுஷும்நா மத்ய தேசே' என்ற யோகசூடாமணி உபநிஷத்தும் 'ஸுஷும்நாது பரேலீநா விரஜா ப்ரஹ்ம ரூபிணி | இடாதிஷ்தடதி வாமேந பிங்களா தக்ஷிணே நசே' என்ற

க்ஷுரிகோபநிஷத்தும், 'ஸுஷும்நாயா: சிவோ தேவ இடாயா தேவதா ஹரி: பிங்களா விரிஞ்சி.' என்ற ஸ்ரீ ஜாபால தர்சனோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

மோக்ஷ நாடிக்குத் தெய்வம் உருத்திர னென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## யோகிகளுக்குச் சரீரத்தைத் தளர்த்த உதவும் ரேசக வாயுவின் தெய்வம் உருத்திரனே யென்பது.

**காலொரு மூன்றி னுள்ளே கண்ணுத லிரேசி யாவான்**
**மாலவ னாவன் கும்பி மலரவன் பூரத் தாவான்**
**சாலவி ரேச மொன்றே தளர்த்திடு முடலை யென்னின்**
**ஆலம துண்டோ னன்றி யருந்துணை யோகர்க் குண்டோ? (24)**

(அரும் பதவுரை) கால் - காற்று; இரேசி - இரேசகத் தெய்வம்; கும்பி - கும்பகத்தெய்வம்; பூரத்து ஆவான் - பூரகத்தின் தெய்வமாமிருப்பான்; சால - மிகவும்; ஆலமது உண்டோன் - சிவபிரான்.

(பொழிப்புரை): - இரேசகம், கும்பகம், பூரகம் எனப்படும் மூன்று காற்றினுள் கண்ணுதற் கடவுள் இரேசகத் தெய்வம். கும்பகத் தெய்வம் திருமால், பூரகத் தெய்வம் பிரம்மதேவன். இரேசகமொன்றே யோகிகளுக்கு உடலை மிகவும் தளர்த்தும் என்பது உண்மையாதாலால் சிவபிரானை அன்றி யோகிகளுக்குத் துணையாவார் எவருமிலர்.

'பிரஹ்மா பூரக இத்யுக்தோ விஷ்ணு: கும்பக உச்யதே । ரேசோ ருத்ரைதிப்ரோக்த: ப்ராணாயாம்ஸ்ய தேவதா' என்ற தியாநபிந்துபநிஷத்தும், 'தவமிக முயலும் போது தன்னுயிர்ப் புமிழ்வ தன்றிப், பவனெனு முணவுங் கொள்வான்' என்ற கோயிற் புராணமும், 'உணவு உடம்மை வாட்டுந் தவத்திற்கு விலக்கு' என்ற அதனுடைக் குறிப்பும், 'ஸதாசிவம் ….யோகித்யேயம்' என்ற நாரத பரிவ்ராஜகோபநிஷத்தும் 'விரூபாக்ஷம்….த்யாயேத் யோகீச்வரேச்வரம்' என்ற ஸ்ரீ ஜாபால தர்சனோபநிஷத்தும், 'ஜீவந்முக்த: சிவயோக நித்ராச' என்ற நிர்வாணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

யோகிகளுக்குச் சரீரத்தைத் தளர்த்த உதவும் ரேசக வாயுவின் தெய்வம் உருத்திரனே என்பது இச்செய்யுளால் நிச்சயிக்கப்பட்டது.

## உருத்திரனே பிராமண தெய்வமென்பது.

**பிறையணி பரமன்றானே பிராமன தெய்வ மாவான்**
**நிறைதிரு வுடைய வேந்தாய் நிலவுவன் சங்க மேந்தி**
**துறைவல வணிகன் தேவன் சூத்திரன் மகவா னென்னிற்**
**பிறையணி பரனை யன்றிப் பிராமணர் வணங்க லாமோ? (25)**

(அரும் பதவுரை) பிறையணி பரமன் - சிவபிரான்; திரு - செல்வம்; வேந்து க்ஷத்திரியன்; சங்கம் ஏந்தி - விஷ்ணு; துறை - வியாபார வித்தை; வணிகன் - வைசியன்; வேதன் - பிரமன்; மகவான் - இந்திரன்.

(பொழிப்புரை): - சிவபிரானே பிராமண தெய்வம்; திருமால் க்ஷத்ரிய தெய்வம், வைசிய தெய்வம் பிரமம் தேவன், இந்திரன் சூத்திர தெய்வம். உண்மை இவ்வாறிருக்க பிராமணர் சிவபிரானை விட்டு வேறொரு தெய்வத்தை வணங்கலாமோ? கூடாது.

'த்வம் தேவேஷு ப்ராஹ்மணோ அஸி அஹம் மநுஷ்யேஷு. ப்ராஹ்மணோவை ப்ராஹ்மணமுபதாவத்யுபத்வ தாவாமி' என்ற ஸாமவேத சதபத ப்ராஹமணமும், 'விப்ரா விப்ரஸ்ய' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ப்ரஹ்மணோதிபதி சிவோம்' என்ற நாராயணோபநிஷத்தும், 'விப்ராணாம் தைவம் சம்பு, க்ஷத்ரியாணாம்து மாதவ: | வைச்யாநாந்து பவேத் ப்ரஹ்மா சூத்ராணாம்தேவேந்த்ர:' என்ற மநுஸ்மிருதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உருத்திரனே பிராமண தெய்வம் என்பது இச்செய்யுளால் நிச்சயிக்கப்பட்டது.

## உருத்திரனே சர்வலோக பிதாவென்பது.

**ஒருதிரு மருவு மார்பற் குறுகுறி யோனி யாகும்**
**உருமிகு பீசந் தானே யுருத்திரன் குறியா மன்னோர்**
**இருவரு மருவிப் பாரை யீனுவ ரென்னி னந்தப்**
**பெருவிடை யுயர்போ னன்றிப் பிதாவெவ னுலகுக் கெல்லாம். (26)**

(அரும் பதவுரை) ஒரு திரு மருவு மார்பற்கு - விஷ்ணுவுக்கு; உறு - பொருந்திய; யோனி - பகம்; உரு - அழகு; பீசம் - லிங்கம்; மருவி - புணர்ந்து; ஈனுவர் - பெறுவர்; பெருவிடையுயர்ப்போன் - சிவபிரான்.

(பொழிப்புரை): - மஹாவிஷ்ணுமூர்த்திக்கு அடையாளம் பசம்; உருத்திரமூர்த்திக்கு லிங்கம்; அரிஅரர் மருவி இவ்வுலகைத் தருவர். அப்படியாயின் ரிஷபக் கொடியை உடையோனாகிய சிவபிரானே இவ்வுலகிற்குப் பிதா அல்லனோ? பிதாவை மறப்பது பேதைமை.

'ருத்ராத் ப்ரவர்ததே பீஜம் பீஜயோநிர் ஜநார்தந:' என்ற ருத்ர ஹ்ருதயோபநிஷத்தும், பிதரம் மஹேசம்' என்ற சரபோபநிஷத்தும், 'இதம் பித்ரே ருத்ரஸ்ய வர்த நம' என்ற ருக் மந்திரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உருத்திரனே சர்வலோகத்திற்கும் பிதா வென்பது இச்செய்யுளால் நிச்சயிக்கப்பட்டது.

## உருத்திரனே எல்லா வுலகிற்கும் ஆதிமூல மென்பது.

**உலகெனு மரத்தி னுச்சி யுலகினை யளந்தோ னாவன்**
**உலகெனு மரத்தின் மைய முந்தியிற் பிறந்தோ னாவன்**
**உலகெனு மரத்தின் வேர்க ளுருத்திர னாவ னென்னின்**
**உலகினை வாழ வைப்போ னுருத்திர னன்றி வேறார்?** **(27)**

(அரும் பதவுரை) உலகினை அளந்தோன் - விஷ்ணு; மையம் - அடிமரம்; உந்தியிற் பிறந்தோன் - பிரமன்.

(பொழிப்புரை): - உலகமாகிய மரத்தின் உச்சி திருமால்; அம்மரத்தின் மையம் பிரம்மதேவன்; அம்மரத்தின் வேர்கள் உருத்திரமூர்த்தி என்பது வேத உண்மை. அப்படியாயின் உலகினை வாழவைப்போர் உருத்திர மூர்த்தியையன்றி வேறு யாருளார்? எவருமில்லை.

'அஸ்ய த்ரைலோக்ய வ்ருக்ஷஸ்ய பூமௌவிடப சாகிந: | அக்ரம் மத்யம் ததாமூலம் விஷ்ணு ப்ரஹ்மா மஹேச்வரா:' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

உருத்திரமூர்த்தியே எல்லாவுலகிற்கும் ஆதிமூலம் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## உருத்திரனே தர்ம சொருபி யென்பது.

**போதின னுருவ மாகிப் பொருந்துநான் மறையின் ஞானஞ்**
**சீதர னுருவ மாகித் திரிவித வுலகந் தங்கும்**
**தீதகல் தருமம் ஈசன் திவ்விய வுருவா மந்தப்**
**போதமு முலகுங் கொண்டு புரிவதத் தருமங் கண்டாய்.** **(28)**

(அரும் பதவுரை) போதினன் - பிரமன்; சீதரன் - விஷ்ணு; திரிவித - மூன்றுவகை; போதம் - ஞானம்; கொண்டு - சாதனமாகக்கொண்டு; புரிவது - செய்யத் தக்கது; அத்தருமம் - அச் சிவசொரூப தருமம்.

(பொழிப்புரை): - நான்கு வேதங்களின் ஞானம் பிரமன் வடிவாகிப் பொருந்தும்; மூவுலகும் விஷ்ணு மூர்த்தியின் வடிவமாகித் தங்கும் தீமையை அகலச் செய்யும் தரும் ஈசனது திவ்ய வடிவமாகும். அந்த நான்கு வேதங்களின் ஞானத்தையும் உலகையும் சாதனமாகக் கொண்டு செய்யத் தக்கது அச்சிவசொரூப தருமமாகும்.

'தர்மோருத்ரோ ஜகத் விஷ்ணு: ஸர்வஜ்ஞாநம் பிதா மஹ: என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

உருத்திரனே தர்மசொரூபி என்பது இச்செய்யுளால் நிச்சயிக்கப்பட்டது.

## உருத்திரனே பரமாத்மா வென்பது.

**சங்கரன் பரம வான்மாச் சார்ங்கம் தேந்தி யான்மாப்**
**பங்கயன் அந்த ரான்மா வெனமறை பகர்வ தோரார்**
**இங்கொரு பரமான் மாவா யின்னொரு தேவை யேத்திச்**
**சங்கரன் றனக்குத் தோடஞ் சாற்றிவெந் நரகி லாழ்வார்.** **(29)**

(அரும் பதவுரை) சார்ங்கம தேந்தி - விஷ்ணு; பங்கயன் - பிரமன்; பகர்வது - சொல்வதை; ஓரார் - உணராதவர்; இன்னொரு தேவை - வேறெதேனும் ஒரு தெய்வத்தை; தோடம் - நிந்தை; சாற்றி - கூறி; வெம் - கொடிய; ஆழ்வார் - அழுந்துவார்.

(பொழிப்புரை): - 'சங்கரன் பரமாத்மா; விஷ்ணுமூர்த்தி ஆத்மா: பிரமதேவன் அந்தராத்மா' - என வேதங் கூறுவதை ஆராயாதவராய்ச் சிலர் இங்கே இன்னுமொரு பரமாத்மாவாய் வேறேதேனும் ஒருதெய்வத்தை வணங்கிச் சங்கரர்க்கு நிந்தை கூறிக் கொடிய நரகில் விழுந்து அழுந்துவர்.

'ஆத்மாநம் பரமாத்மாந மந்தராத்மாந மேவச | ஜ்ஞாத்வாத்ரிவித மாத்மாநம் பரமாத்மாந மாச்ரயேத் | அந்தராத்மா பவேத் ப்ரஹ்மா பரமாத்மா மஹேச்வர: | ஸர்வேஷா மேவ பூதாநாம் விஷ்ணு ராத்மா ஸநாதந:' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'யாஸ்ய ப்ரதாமாரேகா ஸ்வாத்மா ப்ரஜாபதிர் தேவோ தேவதேதி | யாஸ்யாத்விதீயாரேகா அந்தராதமா விஷ்ணுர் தேவோதேவதேதி | யாஸ்ய த்ரிதீயாரேகா பரமாத்மா மஹாதேவோ தேவ தேதி' என்ற ஜாபால்யுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். ஆத்ம நிலையும் அந்தராத்ம நிலையும் பிரம விஷ்ணுக்களுக்கிடையில் மாறிக் கொள்வதையும் பரமாத்ம நிலைமாத்திரம் சிவபிரானை விட்டு விலகாமையையும் அவ்வுபநிஷத்துக்களிற் காண்க.

உருத்திரனே பரமாத்மா என்பது இச்செய்யுளால் நிச்சயிக்கப்பட்டது.

## உருத்திரனே ஒப்புயர்வந்த பரம்பொருளென்பது.

**அப்பணி வேணித் தேவுக் கரியினைப் பிரமன் றன்னை**
**யொப்புட னுயர்ச்சி சொல்லேல் உம்பரிற் பிரமன் மேலோன்**
**திப்பிய விதியின் மேலோன் திருமகள் கணவ னம்மாற்**
**கொப்புட னுயர்ச்சி யில்லாத வுருத்திரன் மேலோன் றானே.** (30)

(அரும் பதவுரை) அப்பணி வேணித் தேவுக்கு - சிவபிரானுக்கு; உம்பரின் - தேவர்களைவிட; திப்பிய - திவ்விய; விதியின் - பிரமனைவிட.

(பொழிப்புரை): - ஸ்ரீ சிவபிரானுக்கு இணையாகவோ அதிகமாகவோ விஷ்ணு மூர்த்தியையோ அன்றிப் பிரமதேவர் முதலிய எவரையுமோ கூறவேண்டா. தேவர்களில் பிரம்மதேவன் மேலானவன். அப்பிரமற்கு மேலானவன் திருமகள் கணவனாம் விஷ்ணுமூர்த்தி; உருத்திரமூர்த்தி அவ்விஷ்ணு மூர்த்திக்கு மேலோன். அவ்வுருத்திரற்கு ஓப்பாகவோ உயர்ச்சியாகவோ வேறோருவரில்லை.

'பராத் பரதரம் ப்ரஹ்மா தத்பராத் பரதோ ஹரி: । தத்பராத் பரதோ ஹீச: தஸ்மாத் துல்யோதிகோ நஹி' என்ற சரபோபநிஷத்தும் தமீச்வராணாம்பரமம் மஹேச்வரம் ந தத் ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே' என்ற சுவேதாசுவதர உபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உருத்திரனே பரம்பொருளென்பதை இச்செய்யுள் நிர்ணயஞ் செய்தது.

## உருத்திரனே மற்றிருவரையுஞ் சங்கரிப்பா னென்பது.

**மருத்திகழ் அலரோன் றன்னை வாலிய சோற தாக்கி**
**திருத்திகழ் உரவோன் றன்னைத் திப்பிய ரசமே யாக்கி**
**மிருத்துவை யூற வைத்த மெல்லிய காய்தா னாக்கி**
**உருத்திரன் உண்பா னெல்லா வுலகையு மொடுக்கு ஞான்றே.** (31)

(அரும் பதவுரை) மருத்திகழலரோன்றன்னை - பிரமனை; வாலிய - வெண்மையான; திருத்திகழுரவோன்றன்னை - விஷ்ணுவை; மிருத்துவை - எமனை; ஊறவைத்த மெல்லியகாய் - ஊறுகாய்; ஒடுக்கு ஞான்று - சங்கரிக்குங் காலத்தில்.

(பொழிப்புரை): - உருத்திரமூர்த்தி எல்லா உலகங்களையும் சங்கரிக்கும் பொழுது பிரமதேவரை வெண்மையான சோறாக்கி, விஷ்ணுமூர்த்தியை இனிய ரசமாக்கி, யமனை ஊறுகாயாக்கி உண்பார். அப்படியாயின் உருத்திரமூர்த்தியினும் வலிய தேவர் வேறொருவர் உளரோ? இல்லை.

'யஸ்ய ப்ரஹ்மாச க்ஷத்ரஞ் சோபபவத் வோதந: ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம் என்ற கடோபநிஷத்தும், 'த்ரயம்பகே காநுஷ்டுபேந । ம்ருத்யுஞ்ஜயம் தர்சயதி' என்ற

திரிபுரதாபிநியுபநிஷத்தும், 'ப்ரஹ்மாந்நந்து ரஸோஹரிஸ்து பகவாந் போக்தா மஹேச:' என்ற ஸித்தாந்த ஸாராவளியும், 'அந்நம் ப்ரஹ்மா ரஸோ விஷ்ணுர்போக்தாச் சைவ மஹேச்வர:' என்ற மந்திரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

ரசங்கலந்த சோற்றுக்கு ஊறுகாய் தொட்டுக்கொள்ளும் வழக்கம் செங்கற்பட்டு மாவட்டத்தில் இப்போதும் உண்டு.

உருத்திரனே பிரமம் விஷ்ணு முதலிய யாவரையும் சங்கரிப்பான் என்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## உருத்திரனே பரதசாத்திரத்தாலும் பரமென வந்திக்கப்பட்டானென்பது.

**தாமரைத் தவிசற் காகுந் தாமரை மலரின் சின்னந்**
**தாமரைக் கண்ணற் காகுஞ் சங்கெனுங் கருவிச் சின்னந்**
**தாமரைக் கையன் சின்னந் தலைமிசைக் கரங்கள் கூப்ப**
**லாமெனிற் பரத நாலு மரன்பரத் தைய முண்டோ.** **(32)**

(அரும் பதவுரை) தாமரைத் தவிசன் - பிரமன்; தாமரைக் கண்ணன் - விஷ்ணு; தாமரைக் கையன் - உருத்திரன்; பரத நூலும் ஆகும் ஆகும் ஆ(கு)ம் எனில் என்க.

## உருத்திரனை நாராயணன் மீறமாட்டா னென்பது

**அக்கினி தன்னைக் கண்டா லப்புருக் குலைந்து போகு**
**முக்கிர நெருப்பைத் தன்னு ளுருத்திர னடக்கி நிற்பான்**
**சக்கர பாணி நொய்ய சலந்தனில் மிதப்ப னென்னி**
**னக்கன தாணை மீற நாரணன் வல்லான் கொல்லோ.** **(33)**

(அரும் பதவுரை) அப்பு - ஜலம்; உருக்குலைந்து போகும் - சுவறும்; நக்கனது - சிவபிரானுடைய.

'ஆபஸ் தேஜஹி ப்ரலீயந்தே' என்ற சுபாலோப நிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## தியானம் தியாதா தியேயர் இவரென்பது

**சீதரன் றியான மாவன் சிவபிரான் றியேய னாவ**
**னோதவிர் தியாதா வாவ னுருத்திர னென்று சீவர்**
**தீதகன் றுய்யு மாறு சிவபிரான் மலர்மென் றானை**
**யாதரம் பெருக வேத்தி யதருவ சிகையோய்ந் தன்றே.** **(34)**

(அரும் பதவுரை) ஓது சொல்லப்பட்ட; அவிர் - சிறப்புடைய; அகன்று - நீக்கி; ஆதரம் - அன்பு; ஓய்ந்தன்று - 'ஸமாப்தாதர்வசிகா' வென்று தன்னைத் தானே முடித்துக் கொண்டு முடிந்தது.

'த்யாநம் விஷ்ணு: - த்யாதா ருத்ர: - - த்யாயீ தேசாநம்' என்ற அதர்வசிகோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## இருதய குகையில் வசிப்பவர் சிவபிரானே யென்பது.

**தகைபெறு பரம வான்மாச் சந்தத முயிர்க ளுள்ளக்**
**குகைதொறு மிருப்பன் கௌரி கொழுநனே யன்னோ னாவ**
**னகைமல ருறைவோன் மூன்றா நாதன்மா லாதி மற்றை**
**வகைபடு தேவரெல்லா மற்றவன் விபூதி யாவர்.** **(35)**

(அரும் பதவுரை) சாந்தம் - எப்போதும்; விபூதி - அதிஷ்டானங்கள்.

'மத்ய ஆத்ம நிதிஷ்டதி | ஈசாந:' என்ற கடோபநிஷத்தும், 'ப்ராணேஷ ஹ்ருத் யந்தர் ஜ்யோதி: புருஷள:' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும், 'ப்ரமாத்மாவயவஸ் தித: | ஸ ப்ரஹ்மா ஸசிவ: ஸேந்த்ர:' என்ற நாராயணோபநிஷத்தும், 'உமாஸஹாயம் - ஸப்ரஹ்ம ஸசிவ: - ஸ - விஷ்ணு:' என்ற கைவல்யோபநிஷத்தும், 'த்வம் ப்ரஹ்மா த்வம் விஷ்ணு: த்வம் ருத்ர:' என்ற கணபதியுபநிஷத்தும், 'யோஸௌ தேவோ பகவாந் ஸர்வைச்வர்ய ஸம்பந்ந: ஸர்வவ்யாபீ ஸர்வ பூதாநாம் ஹ்ருதயே ஸாந்நி விஷ்டோ மாயாவி மாயா க்ரீடதி ஸ ப்ரஹ்மா ஸ விஷ்ணு: ஸ ருத்ர: ஸ இந்த்ர: ஸ ஸர்வே தேவா:' என்ற சாண்டில்யோப நிஷத்தும், 'த்ருதீயம் பாபாதம் ஜாநீயாத் ஸ ப்ரஹ்மா ஸ சிவ: ஸ ஹரி:' என்ற நரஸிம்ஹ பூர்வ தாபிநியுபநிஷத்தும், அவிசேஷேண ஸர்வம் துய: பச்யதி சிதந்வயாத் | ஸ ஏவ ஸாக்ஷாத் விஜ்ஞாநீ ஸ சிவ: ஸ ஹரிரர் விதி: என்ற வராஹோப நிஷத்தும், த்வம் ப்ரஹ்மா த்வம் ச வை விஷ்ணு: த்வம் ருத்ரஸ் த்வம் ருத்ரஸ் த்வம் விஷ்ணு:' என்ற பிராணக்கினிஹோத்ரோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே சர்வகாரண காரணனென்பது.

**காரணந் தனக்கொன் றில்லாக் காரண முலகுக் காரென்**
**றாரணம் வினவிச் சத்தே யாத்துமா பிரம மென்றக்**
**காரணந் தனையுந் கூறுங் கபாலியே யதுவா மென்ற**
**வாரண விசேடத் தச்சா மானிய மமையு மன்றே.** **(36)**

(அரும் பதவுரை) ஆரணம் - வேதம், சத்து ஆத்துமா பிரமம் என்று அக்காரணந்தனையும் என்றதை சத்தென்றும் ஆத்துமவென்றும் பிரமமென்றும் எனத் தனித்தனி கூட்டி அக்காரணந்தனை என நிறுத்துக. அது ஆம் - அக்காரணம் ஆகும்; விசேடத்து - விசேஷவாக்கியங்களுக் கேற்பவே; அச்சாமானியம் - அந்தச் சாமானிய வாக்கியங்கள்; அவை சத்து காரண மென்றலும் ஆத்துமா காரணமென்றலும் பிரமம் காரணமென்றலும் ஆக். அமையும் - பொருள் கொள்ளப்பட்டு அடங்கும்.

'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்தர: - நகாரணம்', 'காரணம் - சம்பு:' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'விஷ்ணுச் சதுர்வக்த்ர: சம்புச்ச காரணா திபா:' என்ற பைங்களோபநிஷத்தை வியாபித்த 'ஸசாரணம் காரணா திபாதிப என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'உமார்த தேகம் வாதம் ஸர்வகாரண காரணம்' என்ற யோகதத்வோபநிஷத்தும், 'சம்போர் மஹா தேவம் --- ஸர்வகாரணகாரணம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ய: காரணாநி நிகிலாநி;, 'கிம் காரணம் ப்ரஹ்ம' என்ற சுவேதா சுவதரோப நிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். ஜாபால்யுநிஷத் முதலியவற்றிலும் அத்தகைய வினாப்பார்க்கலாம்.

## பாஞ்சராத்திரத் திரிமூர்த்திகள் வேறு வேதத்திரிமூர்த்திகள் வேறு என்பதும் சிவபிரான் வேதத்திரிமூர்த்திகளுக்கு மேற்பட்டவர் என்பதும்.

**சங்கரு டணபி ரத்தி யுமவனி ருத்தர் தாமே**
**மிங்கொரு மூவர் மாலோ னிவர்க்கிறை யென்னு மானூல்**
**பங்கய னரன்மா லென்னும் பரர்களுக் கதீதன் கௌரி**
**பங்கின னெனுநால் வேத பாகிய மாமந் நூலே.** **(37)**

(அரும் பதவுரை) இவர்க்கு - இம்மூவருக்கும்; இறை - அதீதன்; மால்நூல் - பாஞ்சராத்தி புகமம்; பார் - தேவர்; அதீதன் - கடந்தவன்; எனும் - என்கிற; வேத பாகியம் - வேதத்துக்குப்புறம்; அந்நூல் - அப்பாஞ்சராத்திராகமம்; பிரம ருத்ர இந்திர ரென்பவர் நாலாமிரப்பிரபந்தமூவர்.

'ரோஹிணீ தநயோ விச்வ அகாராக்ஷர ஸம்பவ: - ப்ரத்யும்ந உகாரக்ஷர ஸம்பவ: - அநிருத்தோஸெள மகாராக்ஷா ஸம்பவ:' | அர்த்த மாத்ராத்மக: க்ருஷ்ணோ யஸ்மிந் விச்வம் ப்ரதிஷ்டிதம்' என்ற கோபாலோத் தாதாபிநியுநிஷத்தும், 'ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதம் - சிவம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'சிவம் - ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீ நாமேக: என்ற மண்டலப்ரம்மணோபநிஷத்தும், 'நமே ப்ரஹ்ம நமே விஷ்ணுர் நமே ருத்ரோ -', 'ப்ரஹ்ம விஷ்ண் வீச', 'ந ப்ரஹ்மா ந ஹரி: சிவ:' என்ற தேஜோ பிந்தூப நிஷத்தும், 'ப்ரஹ்மா நாராயண:' | சிவச்ச நாராயண: சக்ரச்ச நாராயண:', 'த்வமேவ ப்ரஹ்மேந்த்ர புரந்தர - ' என்ற த்ரிபாத் விபூதி மஹாநாராயணோபநிஷத்தும், 'ப்ரஹ்மேந்த்ர ருத்ராதி', என்ற தேஜோபிந்துபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சங்காரக் கடவுளே சிருட்டி திதிகளுக்குங் கர்த்தாவென்பது.

**அழிதொழி லுஞற்றுந் தேவ னலதெவ னாதி தேவன்**
**பழிதவி ரவனே மாலைப் பதுமனை மீளத் தந்து**
**பொழிலினை யாள வல்ல புருடனா மாத லாலே**
**தொழிலவை மூன்று மந்தச் சுதந்தரன் றானே செய்வான். (38)**

(அரும் பதவுரை) அழிதொழில் உஞற்றுந்தேவன் - சங்காரக்கடவுள்; ஆதி தேவன் - முதற்கடவுள்; பழிதவிர் - பொல்லாங்கு தவிர்ந்த; அவனே - அச்சங்காரக்கடவுளே, பதுமனை - பிரமனை; தந்து - சிருட்டித்து; பொழிலினை - உலகத்தை; தொழிலவை மூன்றும் - ஸ்ருஷ்டிஸ்திதி சங்காரங்களாகிய அம்முத்தொழில்களையுமே; அந்தச் சுதந்தரன்றானே - அந்தச் சங்காரக்கடவுளாகிய சிவபிரானே.

'யோவிஸ் புலிங்கேந லலாடஜேந ஸர்வம் ஜகத் பஸ்மஸாத்ஸம் கரோதி புநச்ச ஸ்ருஷ்ட்வா புநரப்ய ரக்ஷதேவம் ஸ்வந்தந்த்ரம் ப்ரகடீகரோதி', 'மஹேசோ பகவா நாதி தேவ:', 'சங்கரோ பகவா நாத்யோ ராக்ஷ கைலா: ப்ரஜா:, 'பரமேச்வரோ ஸெள யஸ்யாங்கஜோ ஹம் ஹரிந்த்ர முக்யா', 'ஹரிம் ஹரந்தம் பாதாப்யாம்' என்ற சரபோபநிஷத்தும்,' 'ஹரிம் ஹரந்த மநுயந்தி தேவா விச்வஸ்யேசாநம் வ்ருஷபம் மதீநாம்' என்ற நாராயனோப நிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## திரிமூர்த்திகளும் உயிர்கள் யென்பது

**மூவரு முயிர்க ளென்று முதல்வனுக் குடல்க ளென்றும்**
**யாவரு மறியச் சொல்லு மெழின்மறை சிலவ ரந்த**
**மூவரு மபேத மென்று மூன்றதி கார மென்று**
**மூவமி சங்க ளென்று முரணுரைத் தழிவ ரந்தோ. (39)**

(அரும் பதவுரை) சிலவர் - சிலமனிதர்; முரண் - விபரீதம்.

'ஜீவ இதி ப்ரஹ்ம விஷ்ண் வீசா நேந்த்ராதீநாம் நாமரூபத்வாராஸ் தூலோஹ மிதி மித்யாஸ வஸாஜ்ஜீவ:' என்ற நிராலம்போபநிஷத்தும் 'தஸ்யப்ரோக்தா அக்ரயாஸ் தநவோ ப்ரஹ்மா ருத்ரோ விஷ்ணுரிதி' 'ப்ரஹ்மா ருத்ரோ விஷ்ணு ... ப்ரஸ்யாம்ருதஸ்ய சரீரஸ்ய' என்ற மைத்ராயண்யுபநிஷத்தும், 'அரியுரு வியல்பான்' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே பிரம மென்பது

**பிரமவு பநிட மெல்லாம் பிரமனை யரியை நீக்கிப்**
**பிரமமென் றரனைப் போற்றும் பேரருட் குமர வேள்சுப்**
**பிரமணி யப்பேர் கொண்டான் பிராமிநல் லுமைக்குப் பேராம்**
**பிரமமென் றரனை யன்றிப் பேசிடே லாத லாலே.** **(40)**

(அரும் பதவுரை) பேசிடேல் - பிறதெய்வங்களைச் சொல்லாதே.

'நிர்விகல்பமநந்தம் - பரமம்சிவம்' என்ற பிரமபிந்தூபநிஷத்தும்' 'துரீய மக்ஷரம் - ஈச்வாச்ச' என்ற பிரமோபநிஷத்தும், 'தீபாகாரம் மஹாதேவம் - ஜபேத்' என்ற பிரமவித்யோப நிஷத்தும், 'சிவ: பசு பதி: ஸாக்ஷீ ஸர்வஸ்ய ஸர்வதா' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும், 'துரீய மக்ஷரம் சிந்மயம்' என்ற பரப்ரஹ்மோப நிஷத்தும், 'தஸ்மை நமோ மஹா தேவாய மஹா ருத்ராய ப்ரோவாச தஸ்மை பகவாந்மகேச:' 'துரீயம் ப்ரஹ்ம ஸம்ஜிதம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ப்ராஹ்மீ மாஹேச்வரீச் சைவ' என்ற நிகண்டும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இதுவுமது.

**உட்டெளி வுடையோ னொப்பி லுருத்திரா ராத னைக்கு**
**விட்டுணு பாகா யோட்ட விரையுமோங் காரத் தேரில்**
**மட்டறு மன்பா லூர்ந்து மக்கலப் பிரம லோகங்**
**கிட்டுக வெனலின் வேதங் கிளரதிற் பிரமம் யாரே.** **(41)**

(அரும் பதவுரை) உள் தெளிவு - உள்ளத்தில் அறிவு விளக்கம்; பாகு - சாரதி; விரையும் - வேகமாய்ச் செல்லுகிற; மட்டு அறும் - அளவு கடந்த; ஊர்ந்து - ஏறிச்சென்று; கிட்டுக - அடைவாயாக; கிளர் அதில் - ஒளியுள்ள அந்தச் சுருதியிற் சொல்லப்பட்ட.

'ஓங்கார ரதமாருஹ்ப விஷ்ணும் க்ருத்வாத ஸாரதிம் | ப்ரஹ்ம லோக பதாந் லேஷீ ருத்ராராதந தத்பர:' என்ற அம்ருதநாதோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## இதுவுமது.

**பொங்கர வணிந்த பெம்மான் புண்ணிய முகங்க ளைந்தி**
**னிங்கித மனுக்க டம்மை யேவருஞ் செபித்து வாழ**
**மங்கல பிரம மென்று மறையெடுத் துரைக்கு மென்னிற்**
**பங்குமை யம்மைக் கீந்த பரமனிற் பிரம முண்டோ.** (42)

(அரும் பதவுரை) பொங்கு அரவு அணிந்த பெம்மான் - சிவபிரான்; இங்கித மனுக்கள் தம்மை - இனிய மந்திரங்கள்; எடுத்து - விவரித்து.

'ஸத்யோ ஜாதாதி பஞ்ச ப்ரஹ்ம மந்த்ரை:' என்ற காலாக் நிருத்ரோப நிஷத்தும் ஜாபால்யுபநிஷத்தும், 'ஸத்யோ ஜாதம் ப்ரபத்யாமி ஸத்யோ ஜாதாயவை நமோ நம: - வாமதேவாய நமோ ஜ்யேஷ்டாய நம: - அகோரேப்யோத நமஸ்தே - தத்புருஷாய - ப்ரசோதயாத் || ஈசாந - ஸதாசிவோம்' என்ற நாராயணோபநிஷத்தும், 'பஞ்சப்ரஹ்ம மந்த்ரை:' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'தத்புருஷேசாநாகோரஸத்யோ ஜாதவாம தேவேப்யோ நம:' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## மோக்ஷயாத்திரை செய்யுஞ் சர்வான்மாக்களுக்கும் லக்ஷயம் சிவபிரானே யென்பது.

**பிரணவ மென்னும் வில்லைப் பிடித்துய ரான்மாத் தன்னைச்**
**சரமென வைத்து வாங்கிச் சங்கர னடிக ளான**
**வரமுறு மிலக்கிற் பாய்ச்ச வல்லவன் றானே முத்தி**
**புரமதை யடைவா னென்று பொதுமறை சொல்லு மன்றே.** (43)

(அரும் பதவுரை) சரம் - அம்பு; வாங்கி - வளைத்து; வரம் - மேன்மை; இலக்கில் - லக்ஷிபத்தில்; பாய்ச்ச - போய்த் தங்கும்படி செலுத்த; முத்தி புரமதை - மோக்ஷ லோகத்தை.

'ப்ரணவோ தநுச் சரோஹ் யாத்மா ப்ரஹ்மதல் லக்ஷ்ய முச்யதே' என்ற முண்டகோபநிஷத்தும். தியாநபிந்தூபநிஷத்தும், 'தநுஸ்தாரம் சரோஹ்யாத்மா ப்ரஹ்மதல் லக்ஷ்ய முச்யதே:' 'சிவ லக்ஷ்யம் ந ஸம்சய:' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'அந்தர் லக்ஷ்யம் - - உமாஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்த மந்தர் லக்ஷ்யம்', 'ஸர்வேசம் - - சிவம் - - ஏகலக்ஷ்யம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும், 'பஹூநி புண்யாநி க்ருதாநியேந தேநைவ லக்ஷ்ய: பரமேச்வர:' என்ற சரபோபநிஷத்தும், 'துரீயாதீதம் பரம் ப்ரஹ்ம ப்ரஹ்ம ரந்தரேது லக்ஷ்யேத்' என்ற திரிசிசிப்ராஹ்மணோபநிஷத்தும், 'ஏத்தவத்தோர்க்கு

மிலக்காய் நின்ற எம்பெருமான்', 'மல்லை ஞாலத்து வாழுமுயர்க்கெலா - மெல்லையான பிரானார்' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே ஏகமும் அத்விதீயமுமானவரென்பது.

**உயர்வுட னொப்ப தின்றி யுள்ளதே யேக மாகு**
**முயிரினொ டுடன்வே றொன்றா யுறுவதத் துவித மாகு**
**முயரிய பிரம்ப பேர்க்கு முருத்திரப் பெயர்க்குந் தானே**
**நயமுற வவற்றைக் கூட்டு நான்மறை யடைக ளாக்கி.** (44)

(அரும் பதவுரை) நயம் உற - ஏவகாரம் பொருந்த.

'போகுமாமழை' என்ற சிந்தாமணிச் செய்யுளில் வரும் 'ஏகம்' என்ற பதத்திற்குத் 'தனக்கு நிகரில்லாத' என்ற நச்சினார்க்கினியருரையும், 'இவ்வத்துவிதம் - கலப்பும் உடனாதலும் வேறாதலுமாகிய மூன்றுந் தன் கட்டோன்ற நிற்றல்பற்றி அம்மூன்றற்கும் பொதுவாகக் கூறப்படும்' என்ற சிவஞான மஹாபாஷ்யமும், 'ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம' என்ற பைங்க ளோபநிஷத்தும், சகாஹஸ்யோபநிஷத்தும், திரிபாத்விபூதிமஹாநாராயணோப நிஷத்தும், 'ஏக ஏவ ருத்ரோ நத்விதீயாயதஸ்து' என்ற சுவேதா சுவத்ரோபநிஷத்தும், 'ஏகோ நாராயணோ நத்விதீயோஸ்தி' என்ற திரிபாத் விபூதி மஹா நாராயணோப நிஷத்தும், 'ஏகமத்வைதம்' என்ற பஸ்ம ஜாபாலோப நிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## நாராயணனைப் பிரமமென்பதற்குக் காரண மீதுவென்பது.

**செருவல மாலோன் றன்னுட் சிவனைவைத் தேத்த லானும்**
**பொருவறு மனைவி யாயப் பூரணற் குறுத லானும்**
**பெருகிடு பகுதி உண்டம் பிரானென நடரத்த லானுந்**
**திருமறை பிரம மென்று சிலவிடத் துபச ரிக்கும்.** (45)

(அரும் பதவுரை) தன்னுள் - தன் இருதயத்தில்; பகுதியண்டம் - பிரகிருதி புவனம் வரை; பிரானென - தலைவனாமிருந்து; நடாத்தலானும் - ஆளுதலானும்,

'நாராயண: ஸ்தித: - - பத்மகோசப்ரதீகாசம் ஹ்ருதயம் சாப்யதோ முகம் - தஸ்ய மத்யே மஹா நக்கிர் விச்வார்ச்சிர் விச்வதோமுக: - - தஸ்ய: சிகாயமத்யே பரமாத்மா வ்யவஸ்தித:' என்ற நாராயணோபநிஷத்தும், 'நாராயணப்பிரகரண்த்திற் கூறப்பட்ட விருதயம் பிறரைச் சார்தற்கியை பின்மையின் அஃது அவனுடையதென்றால் பொருந்துமென்க' என்ற சதுர்வேத தாற்பரிய சங்கிரமும், 'அரியலாற் றேவி மில்லை யையனை யாறனார்க்கே' என்ற தேவாரமும், 'பிரகிருதிமாயைகாறும் வியாபித்து நிற்கும் பிரதிட்டாகலைக்கு மாயோன் அதிதெய்வம்' என்ற சிவஞான மஹாபாஷ்யமும், 'நாராயண பரம் ப்ரஹ்ம' என்ற

நாராயணோப நிஷத்தும், 'நாராயணம் பரம் ப்ரஹ்ம' என்ற திரிபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## பல பொருள்களைப் பிரமமென்பதற்குக் காரணமிதுவென்பது.

**நாரண னளின னாத ஞாயிறு கரணம் பூத**
**மாருமி ருடல்காலன்ன மறிவிவை பிரம மென்றே**
**யாரண முரைக்கும் வெவ்வே றவையெலாஞ் சோபா னங்க**
**டாரணி சைவஞ் சார்ந்து சங்கர னருளிற் கூட. (46)**

(அரும் பதவுரை) நளினன் - பிரமன்; நாதம் - சப்தம்; ஞாயிறு - ஆதித்தன்; கால் - பிராணன்; அறிவு - ஞானம்; ஆரணம் - வேதம்; சோபானங்கள் - படிக் கிரமங்கள்; தாரணி - உலகத்தோர்; அருளிற் கூட - அருளுக்குப் பாத்திரமாகும்படி.

'நாராயணம் பரம் ப்ரஹ்ம; என்ற நாராயணோபநிஷத்தும், 'பசுவாந் ப்ரஹ்மா ஸர்வலோக பிதாமஹ:' என்ற மஹோபநிஷத்தும், 'அக்ஷாம் பரமோ நாத: சப்தப்ரஹ்மேதி கத்யதே' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ஆதித்ய - - த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி' என்ற ஸார்யோப நிஷத்தும், 'அயமாத்மா ப்ரஹ்ம;, 'அந்நம் ப்ரஹ்ம' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், 'நமஸ்தே வாயோ த்வமேவ ப்ரத்யக்ஷம் ப்ரஹ்மாஸி', 'அந்நம் ப்ரஹ்ம' 'ப்ராணோ ப்ரஹ்ம', 'விஜ்ஞாநம் ப்ரஹ்ம' என்ற தைத்திரீயோப நிஷத்தும், 'ஓம் ப்ரஹ்ஞாநம் ப்ரஹ்ம' என்ற சுகரஹஸ்யோபநிஷத்த்ம், 'ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம' என்ற அம்ருதநாதோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## பிரமமுதலிய பெயர்கள் சிவபிரானுக்கே உண்மை வாசகமாமென்பது.

**போற்றுரை மிகுதி யானும் பொருளதி னிறைத லானுந்**
**தூற்றுரை யிலாமை யானுந் துகளிலொப் புரைக ளெல்லாந்**
**தேற்றம துரைத்த லானுஞ் சிவபிராற் களவில் வேதஞ்**
**சாற்றிய பிரம மாதி தனிப்பெய ரனைத்து மெய்யே. (47)**

(அரும் பதவுரை) போற்றுரை - புகழ்மொழி; பொருள் - உண்மை; தூற்றுரை - நிந்தை; துகள் இல் - குற்றமில்லாத; ஒப்புரைகள் - தெய்வங்களை வரிசைப்படுத்தி ஒத்திட்டுப் புகழும் வாக்கியங்கள்; 'பராத் பரதரோ ப்ரஹ்மா - -' என்பது போலும். தேற்றம் - உயர்வு; நிச்சயம்.

'காரெழில் புரையுமேனிக் கண்ணனை யென்னைப் பின்னை - யாரையும் புகழும் வேத மான்றனைத் துதித்ததேபோ - லோருரை விளம்பிற்றுண்டோ

வுரைத்தது முகமனென்றே - பேருலகறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே', என்ற கந்தபுராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## பிரணவ மந்திரம் சிவசம்பந்தமுடையதென்பது.

**பிரணவ முமையாந் தாய்க்குப் பெரும்பெய ராகிச் சாரு**
**மரவணி யமல னீன்ற வைங்கர னவன்பின் வந்த**
**சரவண னிவர்க்குச் சாருந் தண்ணருண் முகங்க ளாகிச்**
**சிரவண மறையு மஃதைச் செப்பிடுஞ் சைவ மென்றே.** **(48)**

(அரும் பதவுரை) பெரும்பெயர் - உயர்ந்த பெயர்; சாரும் - பொருந்தும்; ஐங்கரன் - விநாயகர்; சரவணன் - சுப்பிரமணியர்; தண் - குளிர்ந்த; சிரவண மறை - கேட்கத்தகுந்த வேதம்; அஃதை - அப்பிரணவத்தை.

'உமாம் ஹைமவதீம்' என்ற கேநோபநிஷத்தும், 'ஓமெனப்படுங் குடிலையே யொப்பிலா முருகன் மாமுகத்துளொன்றும்' என்ற கந்தபுராணமும், 'ஓங்கார ஸ்வரூபிணம் மஹாதேவம்' என்ற பஸ்மஜாபலோப நிஷத்தும், 'சிவோமே அஸ்து ஸதாசிவோம்' என்ற நாராயணோப நிஷத்தும், 'ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம் ஸுப்ரஹ்மண்யோம்' என்ற தைத்திரீய ஆரண்யகமும், 'ஓம் ப்ரணவா நந தேவாய நம:' என்ற விநாயக மந்திரமும், 'த்யாயே தோங்கார மீச்வரம்', 'ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹமத்யேயம் ஸர்வமுமுக்ஷாபி' என்ற தியாகபிந்தூபநிஷத்தும், 'உமாக்யா ப்ரணவாத்மிகா' என்ற சம்பவ காண்டமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## ஹரி: ஓம் என்பது உமையொரு பாகனைச் சுட்டுமென்பது.

**தூயவ ரரியோ மென்று தொடங்குவர் வேதந் தன்னை**
**யேமிதை யறியாய் கொல்லோ வென்றிடி னியம்பக் கேணீ**
**தாயரி பதத்துக் கர்த்தந் தந்தையா மோமுக் கர்த்தம்**
**வேயுறு தோளி பங்கன் மேலதா மாத லாலே.** **(49)**

(அரும் பதவுரை) ஏ - நகையாடும் இடைச்சொல்; வேயுறுதோளிபங்கன் - அம்மையப்பன்; அது வேயுறுதோளிபங்கன் மேல் ஆம் என்க; அது - அந்த ஹரி; ஓம் என்பது.

'அவரரியோமென்றாதி யறைகுவ துணர்வீரென்றா - ரிவாஃதம்மையப்ப ரியற்றிரு நாமமென்றார்' என்ற குமரகுருபர சுவாமிகள் சரிதம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## காயத்திரி மந்திரத்தால் வந்திக்கப்படுந் தெய்வம் சிவபிரானே யென்பது.

**உவமனில் பருக்கச் சொல்லை யுரூடியாய் வைத்து வேதஞ்**
**சிவபிரான் றானே காயத் திரிப்பொரு ளென்று செப்புங்**
**குவலயந் தன்னில் வேதக் கொலை ஞரவ் வுரூடிப் பேரை**
**யவமுறும் யோக மாக்கி யரிமுதற் பிறர்மேல் வைப்பார். (50)**

(அரும் பதவுரை) பருக்கச் சொல்லஓ - 'பர்க:' என்ற பதத்தை; உரூடி - இடுகுறி, காரண இடுகுறியுமாம்; குவலயந்தன்னில் - உலகில்; வேதக்கொலைஞர் - வேதத்துக்கு விபரீதார்த்தஞ் செய்து வேதபுருஷனை மனம் நோவச் செய்பவர்; அவன் உறும் - பலவற்றினும் போய்ப்பற்றி விபசரிக்கிற; யோகம் - காரணப்பெயர்.

'தத்ஸவிதுர்வரேணயம் பர்கோ தேவஸ்ய தீமஹி । தியோயோந: ப்ரசோதயாத்' என்ற நாராயணோபநிஷத்தும், 'பர்கோக்யோ - - பர்ந இதி ருத்ரோ ப்ரஹ்ம வாதிநோத' என்று மைத்ராயண்யுபநிஷத்தும், 'பர: சிவ: - - பர்க உச்யதே' என்று திரிபுராதாபிநியுபநிஷத்தும் அம்மந்திரத்துக்கு உரை கூறியதும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## ஆதித்ய ஹ்ருதயத்திலிருப்பவர் சிவபிரானே என்பது.

**பொன்னிற வுருவத் தெய்வம் பொருந்தின தெல்லி லென்று**
**மன்னதொ ருருவத் தெய்வ மற்புதச் சிவனே யென்றுஞ்**
**சொன்னது வேத மென்னிற் சூரிய வுலகந் தன்னுண்**
**மன்னிய வாதித் தன்பால் வதிபவன் சிவனே யன்றோ. (51)**

(அரும் பதவுரை) எல்லில் - சூரியனிடத்தில்; அன்ன - அப்படிப்பட்ட; அற்புதம் - அதிசயகுணங்கள்; மன்னிய - பொருந்திய; ஆதித்தன் என்பது சூரிய மண்டலத்தின் அதிதேவதைக்குப் பெயர்; வதிபவன் - இருப்பவன்.

'யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' என்ற சாந்தோக்யோப நிஷத்தும் நாராயணோப நிஷத்தும் மைத்ராயண்யுபநிஷத்தும், 'ஸுர்யோந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:' என்ற நரஸிம்ஹ பூர்வதாபியியுபநிஷத்தும், 'ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய - - அம்பிகாபதய - - பசுபதயே நமோ நம:' என்ற நாராயணோபநிஷத்தும், 'ஹிரண்யவர்ணம் ஹிரண்யரூபம் - - விரூபாக்ஷம்' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே பசுவனென்பது

**ஈசுரன் சிவன்சர் வஞ்ஞு னுக்கிர னிகல்செய் காம**
**நாசனென் பெயர்க டாமு நல்லிருக் குரையுங் காண்போர்**
**தேசமர் பகவ நாமஞ் சிவபிரான் றனக்கே யுண்மை**
**வாசகம் வேறு தேவர்க் குபசார வசன மென்பர்.** (52)

(அரும் பதவுரை) இருக்குரை - ருக்வேத வாக்கியம்; தேசுஅமர் - ஒளி பொருந்திய.

'ஐச்வர்யஸ்ய ஸம்கரஸ்ய வீர்யஸ்ய யசஸ்சிய: | ஜ்ஞாந வைராக்ய யோச் சேவ ஷண்ணம் பக இதீரணா' என்ற விஷ்ணுபுராணமும், 'ஐசுவரியம் வீரியம் புகழ் திருஞானம் வைராக்கியம் என்னு மாறும் பகமெனப்படுதலின், இவை சிவபிரானுக்கே யுண்மையின் அவரே பசுனெனப்படுவர். அற்றேல், இவை யாறுஞ் சிவபிரானுக்கு உள்ளனவென்பதற்குப் பிரமாணமென்னையெனின்; - அவருக்கு ஐசுவரிய முண்மைக்கு ஈசுரபதச் சுருதியும், வீரிய முண்மைக்கு உக்கிரபதச் சுருதியும், புகழுண்மைக்குச் சிவபதச் சுருதியும், திருவுண்மைக்கு இருக்குவேதமும், ஞானமுண்மைக்குச் சர்வஞ்ஞு சுருதியும், வைராக்கிய முண்மைக்குக் காமரிபுபதச் சுருதியும் பிரமாணமாமென்க' என்ற சதுர்வேத தாற்பரிய சங்கிரகமும், 'தவச்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ரயத்தே ஜநிமசாருசித்ரம்', 'ச்ரேஷ்டோ ஜாதஸ்ய ருத்ர ச்ரியா சிதவஸ்த மஸ்தவஸாம் வஜ்ர பாஹோ' என்ற ருக் வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இதுவுமது.

**பதவுரை தொடங்க லுண்டாற் பகவனே மீச னென்று**
**விதமுறு வேதந் தன்னில் விளங்கிடும் பகேச நாமம்**
**பதமய வுமைக்குப் பேராம் பகவதி யாத லாலே**
**நிதநித மினிக்கு முக்க னிமலனே பகவன் காணே.** (53)

(அரும் பதவுரை) நிகண்டு; விதம் உறு - நான்கு வசைகளையுடைய; நிதநிதம் - எப்போதும்.

'பகவனே மீசன் மாயோன் - -' என்ற நிகண்டும், 'பகேசம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'பக: சக்திர் பகவாந் காம ஈச உமாதா தாராவிஹஸௌபகாநாம்' என்ற திரிபுரோப நிஷத்தும், 'அக்ஷர: ஸோமா' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'எப்போது மினியபிரான்' என்ற பெரிய புராணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரான் சந்நிதானத்தில் யாருஞ் சாமியாதலில்லை யென்பது.

**அம்புலி தேச னாவ னாதவ னொளியைப் பெற்றுச்**
**சம்புவி னருளைப் பெற்றுச் சாமிமா லாவ னந்த**
**வம்புலி தேச னாத லாதவன் முன்ன மில்லை**
**சம்புமு னந்த மாலோன் சாமிதா னாத லின்றே. (54)**

(அரும் பதவுரை) தேசன் - ஒளியுடையவன்; ஆதவன் - சூரியன்; சம்புவின் - சிவபிரானுடைய; மால் - விஷ்ணு; நாராயணனைச் சொன்னது இங்கு உபலக்கணம்.

## ஜகத் விஷ்ணுமய மென்பதும் சிவபிரான் ஜகத்கர்த்தா வென்பதும்.

**மாலொரு விசுவ மாவன் மற்றதைத் தாண்டு சீரான்**
**மேல்பிற ரில்லா வீசன் விச்சுவ வதிக னாவன்**
**மாலொரு பகுதி மாயை மகத்தென விருப்பன் பொல்லா**
**மால்செயு மதையாள் சீரான் மகேச்சுர னாவன் சம்பு. (55)**

(அரும் பதவுரை) மால் - விஷ்ணு; சீரால் - தன்மையால்; பகுதி, மாயை, மகத் - பிருகிருதி; பொல்லாமால் - பொல்லாத மயக்கத்தை; அதை - அந்தப் பிரகிருதியை.

'விச்வம் நாராயணம் -', 'விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:', 'விச்வம் நாராயணம் ஹரிம்', 'தஸ்யப்ரகிருதி லீநஸ்ய ய: பர மஹேச்வர:' என்ற நாராயணோப நிஷத்தும், 'விச்வாதிகோருத்ரோ மஹர்ஷி:' 'மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாமிநந்து மஹேச்வரம்', 'புருஷம் மஹாந்தம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'விச்வம் நாராயணம் ஹரிம்,' 'மஹாந்தம் - - சிவம்' என்ற மஹோபநிஷத்தும், 'விச்வாதிகோருத்ரோ மஹர்ஷி:' என்ற பஸ்ம ஜாபாலோபநிஷத்தும், 'மஹேச்வர இதி' | யஸ்மாந் மஹத ஈச:' 'மஹத ஈசதே தஸ்மாதுச்யதே மஹேச்வர இதி', என்ற சாண்டில்யோபநிஷத்தும் 'ஸ்வ மாயாவைபவாந்ஸர்வாந்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே அமிர்தவாசகத்துக்குரிய தெய்வமென்பது.

**அமிருத நாமன் பொன்னி னழகிய வண்ண னாவ**
**னிமுருத மடியார் வாழ வாளுவ னீசா னன்றா**
**னமிருத னாமச் செப்பா மருஞ்சத ருத்தி ரீய**
**மமிருத னரனே யென்ப தம்மறை மொழியாற் றேற்றம். (56)**

(அரும் பதவுரை) நாமன் - பெயரையுடையவன்; அமிருதன் நாமச் செப்பு - அமிருதனுடைய பெயர்கள் வைக்கப்பட்ட சிமிழ்.

'அம்ருதோ ஹிரண்மய:' என்ற தைத்திரீயோபநிஷத்தும், 'உதாம் ருதத்வஸ்யேசாந:' என்ற சுவேதசுவதரோபநிஷத்தும், 'தேநாம்ருதத் வஸ்யேசாநம்' என்ற கௌஷீதகிப்ராஹ்மணோபநிஷத்தும், 'சதருத்ரியே ணேத்யேதாயேவஹவா அம்ருதஸ்ய நாமாநி' என்ற ஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே துன்பத்தை நீக்குபவரும் இன்பத்தை ஆக்குபவருமாவரென்பது.

**துன்பினை நீக்க வல்லா னென்பது தோன்ற நிற்கு**
**மொன்பது வடிவன் கொண்ட வுருத்திர நற்பே ரன்னோன்**
**றன்பெய ராய சம்பு சங்கா சிவநற் சொற்க**
**ளின்பினை யாக்க வல்லா னென்பது தோன்ற நிற்கும்.** (57)

(அரும் பதவுரை) ஒன்பது வடிவன் - சிவபிரான்; அவ்வடிவங்கள் பிரமன் விட்டுணு உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன் அபரவிந்து அபரநாதம் பரவிந்து பரநாதம் என்பன. கடைசி நான்கை விந்து நாதம் சத்தி சிவம் என்றலுமுண்டு.

'குறைவிலாமங்கல குணத்த னாதலி - னிறைமலமனாதிபி னீங்கி நிற்றலினறைகுவர் சிவனென வஹிவின் மேலவர்', 'இன்பஞ் செய்தலிற் சங்கரனெம்பிரானின்ப மாக்கலிற் சம்பு விடும்பை - யென்ப தோட்டு மியல்பி னுருத்திரன்' என்ற காஞ்சிப்புராணமும், 'இன்னலங் கடலுட் பட்டோர் யாரையு மெடுக்கு நீரா - லுன்னரும் பரம மூர்த்தி யுருத்திர னெனும்பேர் பெற்றான்' என்ற கந்தபுராணமும். 'ஸர்வ நந்தமய: சிவ:' என்ற தேஜோபிந்துபநிஷத்தும், 'சிவ ஏகோத்மேய: சிவம்கர:' என்ற அதர்வசிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## புலையன் சிவநாமத்தைச் சொன்னாலும் அவனை மதிக்கவேண்டுமென்பது.

**பசியற வாவைத் தின்னும் பறையனே யெனினு மோர்காற்**
**கசிவொடு சிவனே யென்று கழறிடி னவன்பா லண்மிப்**
**புசியுறை பேசு மைந்தா வெனமறை புகற லாலே**
**வசிபுரி சிவப்பேர் மாண்பை மதீயுளாய் கண்டு வாறே.** (58)

(அரும் பதவுரை) ஆவை - பசுவை; ஓர்கால் - ஒருதரம்; கசிவொடு - அன்புடன்; கழறிடின் - சொன்னால்; அண்மி - சென்று; புசி - உண்; உறை - உடன்வசி; புகறலாலே - சொல்கிறபடியால்; வசிபுரி - எல்லாவற்றையுந் தன் வசப் படுத்துகிற.

'அபிவாயச் சண்டானைச் சிவ இதிவாசம் வதேச்தேந ஸஹஸம் வதேத் தேந ஸஹஸம் வஸேத்தேந ஸஹபுஞ்ஜீத' என்ற முண்டகோபநிஷத்தும், 'ஸர்வஸ்யவசீ ஸர்வஸ்யேசாந:' என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும், 'எகோவசீ' என்ற கடோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானா லன்றி முத்தி சித்தியா தென்பது.

**உருவமில் விசும்பைத் தோல்போ லுரித்துடுத் திசவல் லானே**
**சருவசம் பன்ன னான சம்புவின் ஞான மின்றிப்**
**பருவரல் சாய்ந்து முத்தி பற்றுவா னென்னும் வேத**
**மொருவரும் பவரே கொள்ளா ருமாதவன் றலைமை தன்னை. (59)**

(அரும் பதவுரை) உருவம் இல் - அருவமான; விசும்பை - ஆகாயத்தை; சருவ சம்பந்தன் - எல்லாச் செல்வங்களையுமுடையவன்; சம்புவின்ஞானம் - சிவபிரானை அறியும் ஞானம்; பருவரல் - துன்பம்; சாய்ந்து - நீங்கி; பற்றுவான் - அடைவான்; ஒருவரும் பலர் - நீங்கமாட்டாத பாவங்களை யுடையவர்.

'யதாச்ரம் வதாகாசம் வேஷ்ட மிஷ்யந்தி மாநவர்: | ததாசிவ மலிஜ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸர்வைச் வர்ய ஸம்பந்ந: - - சம்பு' என்ற அதர்வசிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானுக்குப் பசுபதி நாமமும் விஷ்ணுவுக்குக் கோபாலநாமமும் வந்தவாறிது வென்பது.

**பசுவென லுற்ற தான்மாப் பாசமுற் றுழன்ற வாற்றாற்**
**பசுபதி யெனலை யுற்றான் பரசிவன் பதியா யந்தப்**
**பசுவினை யாண்ட சீராற் பாரிடை மிடையிற் றோன்றிப்**
**பசுநிரை மேய்த்தே மால்கோ பாலனென் றிடலை யுற்றான். (60)**

(அரும் பதவுரை) உழன்ற ஆற்றால் - வருந்துதலினால்; பாரிடை - உலகில்; இடையில் - இடைக்குலத்தில்; பசுநிரை - பசுமந்தைகளை.

'பாசம் பரம பந்தநம்' என்ற மஹோபநிஷத்தும், 'பாசபந்தஸ் ததா ஜீவ:', என்ற ஸ்கந்தோபநிஷத்தும், 'ஸம்ஸாரீஜீவ: ஸ ஏவ பசு: - - ஸர்வேச்வர ஈச: பசுபதி:' என்ற ஜாபால்யுபநிஷத்தும், 'ஜீவாத்மரூபம் ஜ்யோதிரூப மணுமாத்ரம் வந்ததே' என்ற த்யாநபிந்தூபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே உத்தகோத்தம புருஷனென்பது.

**ஆரிய மறைசொல் காயத் திரிகளீ ராறு லைந்தாஞ்**
**சீரிய சைவ மாங்கே திகழ்ந்திடும் புருட நாம**
**மோரி புருடர்க் குள்ளே யுத்தம னென்போர்க் கந்நூல்**
**பூரண சிவனை யுத்த மோத்தம புருட னென்னும்.** (61)

(அரும் பதவுரை) ஈராறுள் - பன்னிரண்டனுள்; ஐந்து சீரிய சைவம் ஆம் என்ல. சைவம் - சிவசம்பந்த முடையவை; ஆங்கே - அவ்வைந்தனுள்ளும், ஏர் - அழகு; பூரண - வியாபக.

சிவசம்பந்த முடையனவாய்ப் புருஷநாமம் வந்த ஐந்து காயத்திரிகள் 'புருஷ்ஸ்ய விதமஹே ஸஹஸ்ராக்ஷஸ்ய மஹாதேவாய தீமஹி தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்', 'தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹி தந்நோ ருத்ர: ப்ரசோதயாத்', 'தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி தந்நோ தந்தி ப்ரசோதயாத்', 'தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி' | தந்நோ நந்தி: ப்ரசோதயாத்' 'தத்புருஷாய வித்மஹே மஹாஸேநாய தீமஹி' | தந்ந: ஷண்முக: ப்ரசோதயாத்' | என்பன. இவையும் மற்ற ஏழு காயத்திரிகளும் நாராயணோபநிஷத்தில் உள. அவ்வுபநிஷத்தும், 'ஊர்த்வபூர்ணமத: பூர்ணம் மத்ய பூர்ணம் சிவாத்மகம்' என்ற முக்திகோபநிஷத்தும், 'ஸர்வவர்ணா புருஷதைவத்யா' என்ற அதர்வசிகோபநிஷத்தும், 'புருஷம் நிர்குணம் ஸாங்க்யம் அதர்வசிரோவிது' என்ற மந்திரிகோபநிஷத்தும், 'ஹிரண்மய" புருஷ ஏக ஹம்ஸ"' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், 'புருஷோத்தமோத்தமம் - ஸர்வேச்வரம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## விஷ்ணு பெண்ணும் சிவபிரானுக்கு மனைவியும் ஆவரென்பது.

**சென்னிக னொருநான் குள்ள தேவனைப் பெறவு மாழி**
**மின்னமு தமரர் தங்கட் கீயவந் தாருக் காட்டின்**
**மன்னிய முனிவர் தம்மை மயக்கவு மால்பெண் ணானா**
**னன்னனை யரன்சூ லேற்ற வையனை யவன்பெற் றாளே.** (62)

(அரும் பதவுரை) சென்னிகளொருநான்குள்ள தேவனை - பிரமனை; தாருக் காட்டில் - தாருகாவனத்தில்; மன்னிய - இருந்த; அன்னனை - அவ்விஷ்ணு மங்கையை; சூல் ஏற்ற - கருப்பம் உண்டாக்க; ஐயனை - ஹரிஹரபுத்திரனை.

(பொழிப்புரை) நான்கு முகங்களுடைய பிரமதேவனைப் பெறுதற் பொருட்டும், திருப்பாற்கடலில் தோன்றிய இனிய அமுதத்தை அமரர்கள் மட்டுமே உண்ணுதற்குக் கொடுத்தற் பொருட்டும், தாருகாவனத்தில் தங்கியிருந்த ரிஷிகள்

மனத்தில் மயக்கத்தை ஏற்படுத்தற் பொருட்டும் மஹாவிஷ்ணு மூர்த்தி மங்கைப் பருவ மோகினியானார். அவ்விஷ்ணு மங்கையைச் சேர்ந்து சிவபிரான் கருப்பம் உண்டாக்க ஐயனார் என்னும் மஹாசாஸ்தாவை அம்மோகினி பெற்றாள்.

'மாயோன் மகடூஉ வாகிய காலைத் தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்' என்ற சுலோக பஞ்சகமும், 'பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்து' என்ற நாலாயிரப் பிரபந்தமும், 'முன்னை வேதன் முடிந்தனன் போதலு முன்னோ டேவந் துவப்பொடு கூடினோம் பின்ன ரிந்தப் பிரமனையுந்தியா - லன்னை யாகியளித்தனை யல்லையோ' என்ற கந்தபுராணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

விஷ்ணு பெண்ணும் சிவபிரானுக்கு மனைவியும் ஆவரென்பது இச்செய்யுளில் தெரிக்கப்பட்டது.

## பஞ்சாக்ஷரமே தாரக மந்திரமென்பது.

**வாரண வாசி தன்னின் மாரண மாவோர் காதிற்**
**றாரக முபதே சிக்குஞ் சம்புவே மறைமி லிஃதைச்**
**சீரண வெழுத்தைந் தென்று செப்பின னறிந்தோர் வேறு**
**தாரக மஞ்க்க டம்மைத் தள்ளுவர் முகம னென்றே.** **(63)**

(அரும் பதவுரை) வாரணவாசி தன்னில் காசியில்; மாரணமாவோர் - சாகிறவர்களுடைய; தாரகம் - தாரகமந்திரம்; சீர் அணவு - சிறப்புப் பொருந்திய எழுத்து ஐந்து - வியஷ்டிப் பிரணவமாகிய பஞ்சாக்ஷரம்; அறிந்தோர் - அவ்வுண்மையைத் தெரிந்தவர்கள்; மனு - மந்திரம்; வேறு தாரகமாவன நாரயணநாமமும் ராமநாமமுமாம்; ஓங்காரதாரகம் பஞ்சாக்ஷரத்தின் சமஷ்டியேயாகலின் வேறெனப்பட்டது.

(பொழிப்புரை) ஸ்ரீ காசியில் மரணமடைவோர் காதில் சிவபிரான் தாரக மந்திரத்தை உபதேசித்தருளுவான், அத்தாரக மந்திரமாவது சிறப்புப் பொருந்திய வியஷ்டிப் பிரணவ ஸ்ரீ பஞ்சாக்ஷரம் எனச்சிவபிரானே வேதத்தில் எடுத்தோதியுள்ளான். அப்படியிருக்க நாராயண, ராம நாமங்கள் தாரக மந்திரமெனக் கூறுவார் கூற்று உபசாரமே. எனவே அறிந்தோர் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே தாரகமாகக் கொண்டு பிறநாமங்கள் தாரகம் எனப்பேசப்படுவது முகமனே என்று அறிந்து அவற்றை நீக்குவர்.

'நமோ நாராயணாயேதி தாரகம்' (இது யாக்ஞ்வல்கிய வாக்கியம்) என்ற தாரஸாரோபநிஷத்தும், 'யத்ரருட்ராபிவாகாச்யாம் மரணேஸ மஹேச்வர: | ஜந்தோர் தக்ஷிணே கர்ணேது மத்தாரம் ஸமுபாதிசேத்' (இது ராமவாக்யம்) என்ற

முக்திகோபநிஷத்தும், 'தாரகம் சைவம் மநூபதி சாமிதத்ரைவ முக்த்யர்த்த முபநிச்யதே । சைவோயம் மந்த்ர: பஞ்சாக்ஷர: । பரமோ மந்த்ரஸ்தாரகோயம் பஞ்சாக்ஷர:' (இது சிவ வாக்கியம்). 'தாரகம் சைவம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஸ்ரீ ராமஸ்யமதும் காச்யாம் ஜஜாபவ்ருஷபத்வஜ:', 'யத் தாரகம் ப்ரஹ்ம' என்ற ராமோத்தர தாபிநியுபநிசத்தும், 'ப்ரணவஸ் தாரக' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

பஞ்சாக்ஷரமே தாரகமந்திரமென இச்செய்யுள் நிலையிட்டது.

## சிவபிரானைச் சிலவேதங்கள் சொல்லித் துதிக்கு முகத்தால் அவர் பெருமைகள் மேலும் இவையென்பது.

**மறையினை யளிப்பான் றானு மறைநெறி புரப்பான் றானு**
**மறையொரு வடிவன் றானு மறைப்பொரு ளாவான் றானு**
**மறையள வடங்கான் றானு மாலவன் பிரமன் யார்க்கு**
**மறையுப தேசன் றானு மதிமுடிப் பரனே யாவான்.** **(64)**

(அரும் பதவுரை) அளிப்பான் - தருபவன்; புரப்பான் - ரக்ஷிப்பவன்; மறையளவு - சுருதிப் பிரமாணம்; மதிமுடிப்பரன் - சிவபிரான்.

(பொழிப்புரை) சந்திரனைத் திருமுடியில் தரித்த சிவபிரானே வேதங்களைத் தருபவன்; வேதநெறியை ரக்ஷிப்பவன்; வேதவடிவினன்; வேதப்பொருள்; வேதப் பிரமாணத்தினும் அடங்காதவன்; பிரம்ம விஷ்ணுக்களுக்கு வேதத்தை உபதேசிப்பவன்.

'வேத சாஸ்திர புராணம் ச கார்யம் காரணமீச்வர:' என்ற தேஜோபிந்துபநிஷத்தும், 'வேதைரநேகைரஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத் வேத விதேய சாஹம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" 'தத்வேத குஹ்யோபநிஷத்ஸு கூடம்' 'வேதாந்தே பரமம் குஹ்யம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ச்ம்போர் மஹாதேவம் ஜகத்குரும்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ஸர்வ வேதாந்த த்ருப்தோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'திவ்யஜ்ஞாநோபதேஷ்டாரம் தேசிகம் பரமேச்வரம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'மஹாதேவம் ஜகத்குரும்' என்ற கர்போபநிஷத்தும், 'தக்ஷிணாமுகமாச்ரித்ய ஜ்ஞாநமுத்ராம் ப்ரகல்பயேத்' என்ற பிரமவித்யோபஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இதுவுமது

**அக்கர மாவோய் நீயே யகரநீ யசர நீயே**
**தக்கணா மூர்த்தி நீநாற் பொருள்களுந் தருவாய் நீயே**
**பக்குவ ருன்னை யன்றிப் பரமென வொட்டாய் நீயே**
**முக்குண ரகித னீயெம் முக்கணா வனைத்து நீயே.** (65)

(அரும் பதவுரை) நாற்பொருள்கள் அறம் பொருள் இன்பம் வீடு. பக்குவர் - ஞானிகள்; அன்றி - அல்லாமல் வேறு தெய்வங்களில் எதையும்; பரம் என - பரதெய்வமென்று சொல்லுதற்கு; ஒட்டாய் - இடங்கொடுக்கமாட்டாய்; அனைத்தும் - எல்லாம்.

(பொழிப்புரை) எங்கள் தெய்வமாகிய முக்கட் பரம் பொருளே! நீயே அக்ஷரங்கள் ஆவாய், அகரமும் நீயே, சரம் அசரமும் நீயே, ஞானப்பொருளுணர்த்தும் தக்ஷிணாமூர்த்தி நீயே, அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் நாற்பொருளுந் தருபவன் நீயே, ஞானிகள் உன்னையல்லாமல் பிற தெய்வங்களில் எதனையும் பரதெய்வமென்று சொல்லுதற்கு நீ இடங்கொடுக்கமாட்டாய், சத்துவம் - ராஜஸம் - தாமஸம் என்ற முக்குணம் நீங்கியவன் நீயே, பிரபுவே! நீயே எல்லாம் ஆவாய்.

'ஸதாசிவோக்ஷரம்' என்ற திரிபுரதாபிநியுபநிஷத்தும், 'சிவமக்ஷரம்', 'அஹமேவ ஸர்வம் | மயிஸர்வம் ப்ரதிஷ்டிதம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'அக்ஷரம் ஹர:', 'ருத்ர யத்தே தக்ஷிணமுகம் தேநமாம் பாஹிநித்யம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்த்ம், 'அஜரம் சிவம்' என்ற மஹோபநிஷத்தும், 'தக்ஷிணாமுகமாச்ரித்ய ஜ்ஞாநமுத்ராம் ப்ரகல்பயேத்' என்ற பிரமவித்யோபநிஷத்தும், 'தர்மார்த்த காம மோக்ஷம் சவிந்ததி', 'த்வம் குணத்ரயாதீத' என்ற கணபதியுபநிஷத்தும், 'சிவ: ஸர்வம் சிவாதந்யந்நகிம்சந:' என்ற வராகோபநிஷத்தும், 'குணத்ரயமதீதம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'குணாதீதம் என்ற நாதபிந்துபநிஷத்தும், 'த்ரிகுணரஹிதம்' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'அகரமுதலானை', 'எல்லாமாமெம்பெருமான்' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். 'இச்செய்யுளும் மேலதன் கருத்தை வெளிப்படுத்தியது.

## இதுவுமது

**அஞ்செனு மறிவுக் கெட்டா னஞ்செனும் பூத மேலா**
**னஞ்செனு மவத்தை யில்லாத னஞ்செனுங் கோசந் தோயா**
**னஞ்செனு மியாகர்க் கின்ப னஞ்செனுந் தேவர் தேவ**
**னஞ்செனு மெழுத்தா யுள்ளா னடியருக் கெளிய வீசன்.** (66)

(அரும் பதவுரை) அஞ்செனும் அறிவு - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம்; அஞ்செனும் பூதம் - பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம்; அஞ்செனும் அவத்தை - சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம்; அஞ்செனும் கோசம் - அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆநந்தமயம்; தோயான் - அகப்படான்; அஞ்செனும் யாகம் - கருமம் தவம் செபம் தியானம் ஞானம்; யாகர்க்கு - யாகம் செய்ப்வருக்கு; அஞ்செனும் தேவர் - பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேசுரன் சதாசிவன்; அஞ்செனும் எழுத்து - நமசிவய.

(பொழிப்புரை) அடியவர்க்கு எளிமையாய்த் தோன்றி அருள் புரியும் சிவபிரான், சுவை - ஒளி - ஊறு - ஓசை - நாற்றம் என்னும் ஐம்புலத்திற்கும் எட்டாதவன்; பிருதிவி - அப்பு - தேயு - வாயு - ஆகாசம் என்னும் ஐம்பூதங்களுக்கும் மேலானவன்; உயிர்க்குரிய ஜாக்கிரம் - ஸ்வப்பனம் - சுழுத்தி - துரியம் - துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளுமில்லாதவன்; அன்னமயகோசம் - பிராணமய கோசம் - மனோமய கோசம் - விஞ்ஞானமய கோசம் - ஆநந்தமய கோசம் என்னும் ஐந்து கோசங்களிலும் அகப்படாதவன்; கருமயாகம், தபயாகம், ஜெபயாகம், தியானயாகம், ஞானயாகம் என்னும் ஐந்து யாகஞ்செய்பவருக்கும் இன்பந்தருபவன்; பிரமன் - விஷ்ணு - உருத்திரன்; மகேசுரன் - சதாசிவன் என்னும் ஐந்து தேவர்களுக்குத்தலைவன்; ந-ம-சி-வ-ய என்னும் ஐந்தெழுத்தாக உள்ளவன்.

'சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்த வர்ஜித' என்ற ஆத்மோபநிஷத்தும், 'ஸர்வேந்த்ரிய விவர்ஜிதம்', 'ஸர்வபூதகுஹாசய:' என்ற சுவேதாசுவதரோப நிஷத்தும், 'ஸர்வேந்த்ரிய விவர்ஜித:' என்ற பிரமவித்யோபநிஷத்தும், 'அதீந்த்ரியம்' என், நாத பிந்துபநிஷத்தும், 'ஸர்வபூதாதி வாஸ:' என்ற கோபாலோத்தாதாபிநியுபநிஷத்தும், 'பஞ்சாவஸ்த: ஜாக்ர ஸ்வப்த ஸுஷுப்தி துரிய துரீயாதீதா:' என்ற மண்டலப் பிராமணோபநிஷத்தும், 'ஐவேள்வியான அருமறை நான்கும்… பயின்ற படிறர்' என்ற தேவாரமும், 'பஞ்சப்ரஹ்ம புருஷான்' என்ற சாந்தோக்யோபநிஷத்தும் 'பஞ்சப்ரஹ்மாத்மகம்' என்ற பஞ்சபிரமோபநிஷத்தும், 'பஞ்ச ப்ரஹ்ம மயரூபம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'பஞ்சாக்ஷரமயம் சம்பும்' என்ற பஞ்சபிரமோபநிஷத்தும், 'ஸர்வதாஸூலபோஸ்ம்யஹம்' என்ற மைத்ரேயோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். இச்செய்யுளும் மேலதன் கருத்தை வெளிப்படுத்தியது.

## இதுவுமது

**எங்கணுஞ் சிரங்க ளுள்ளா னெங்கணும் வதன முள்ளா**
**னெங்கணு நயன முள்ளா னெங்கணுங் கிரீவ முள்ளா**
**னெங்கணுங் கரங்க ளுள்ளா னெங்கணும் பதங்க ளுளா**
**னெங்கணு நியம மாகி யிலங்கர னெல்லா முள்ளான். (67)**

(அரும் பதவுரை) ஈற்றடி 'எங்கணும்' என்பதை 'எல்லாம்' என்பதன் முன்னுங் கூட்டுக. எல்லாம் - மற்றையவயங்களெல்லாமும்.

(பொழிப்புரை) அரன் எல்லாவிடங்களிலுந் திருமுடியை உடையான்; எல்லா இடங்களிலும் திருமுகங்கள் உடையான்; எல்லா இடங்களிலும் திருக்கண்கள் உடையான்; எல்லா இடங்களிலுந் திருக்கழுத்துடையான்; எல்லா இடங்களிலுந் திருக்கைகள் உடையான்; எல்லா இடங்களிலுந் திருவடிகள் உடையான்; விளங்கித்தோன்றும் அப்பிரபு மற்றை அவயவங்கள் எல்லாமும் எல்லா இடங்களிலும் நியமமாகி உடையவன்.

'ஸர்வாநந சிரோ க்ரீவ; ஸர்வத: பாணிபாதம் தத்ஸர்வ தோக்ஷி சிரோமுகம் | ஸர்வத: ச்ருதிமல்லோகே ஸர்வமாவ்ருத்யதிஷ்டதி ||' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், விச்வதச்சக்ஷுருத விச்வதோமுகோ விச்வதோ ஹஸ்த உதவிச்வதஸ்பாத்' என்ற நாராயணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். இச்செய்யுளும் மேலதன் கருத்தை வெளிப்படுத்தியது.

## இதுவுமது

**ஆயிரங் தலைக ளுள்ளான் ஆயிர முகங்க ளுள்ளா**
**னாயிரங் கண்களுள்ளா னாயிரங் கண்ட முள்ளா**
**னாயிரங் கைக ளுள்ளா னாயிர மலர்த்தா ளுள்ளா**
**னாயிரம் பெயர்க் ளுள்ளா னாருயிர்க் குயிரா மீசன். (68)**

(அரும் பதவுரை) கண்டம் - கழுத்து; தாள் - பாதம்; ஆர் - அருமையாகிய.

(பொழிப்புரை) அரிய உயிர்களுக்கெல்லாம் உயிராய் விளங்கும் சிவபிரான் ஆயிரம் தலைகள், முகங்கள், கண்கள், திருக்கழுத்துகள், கைகள், திருவடிகள், பெயர்கள் உடையவன்.

'ஸஹஸ்ராக்ஷம் ஸஹஸ்ரசீர்ஷம் ஸஹஸ்ர சரணம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸஹஸ்ர சீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் | ஸஹ்ஸ்ர பாஹு:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இச்செய்யுளும் மேலதன் கருத்தை விளக்கியது.

## இதுவுமது

**ஆதியொ டந்த மாவா னகிலமும் வசியஞ் செய்வா**
**னோதரு சித்தி யெட்டு முதவுவன் சருவன் ஞான**
**ஞாதுரு ஞேய மாவா னற்பவன் றேவ தேவன்**
**சோதனை யெதற்கு மெட்டா னென்பவர் துயரம் போமே.** (69)

(அரும் பதவுரை) அகிலமும் - எல்லாவற்றையும், வசியஞ் செய்வான் - வசப்படுத்துவான்; ஒதரு - சொல்லுதற்கரிய; உதவுவன் - கொடுப்பான்.

(பொழிப்புரை) நல்ல பவன் என்னுந் திருநாமமுடைய தேவதேவனாகிய சிவபிரான் தொடக்கத்தையும் முடிவையும் செய், பவன்; எல்லாவற்றையும் வசியப்படுத்துபவன்; சொல்லுதற்கரிய எட்டு சித்திகளையும் கொடுப்பவன்; சர்வன்; காண்பான் - காட்சி - காணப்படும் பொருள் ஆகிய மூன்றுமாபவன்; எவ்வகைச் சோதனைகளுக்கும் அகப்படாதவன் என்னும் அவனது மெய்மைத் தன்மையை அறிபவர் துன்பங்கள் போய்விடும்.

'ஸதாசிவ ஆதிபூத:' என்ற திரிபுராதாபிநியுபநிஷத்தும், 'வசீஸ்ர்வஸ்ய லோகஸ்ய ஸ்தாவரஸ்ய சரஸ்யச' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'அணிமாதிகமைச்வர்யமசிராத் தஸ்ய ஜாயதே' என்ற யோகசிகோபநிஷத்தும், 'தஸ்மாதணி, மாதி ஸித்திபவத்' என்ற அத்வயதாரகோபநிஷத்தும், 'அணிமாத்யஷ்டைச்வர்யாசாஹித்த ஸங்கல்போபந்த:' என்ற நிராலம்போபநிஷத்தும், 'பவாய நம: பவலிங்காய நம: | சர்வாய நம: சர்வலிங்காய நம:' என்ற நாராயணோபநிஷத்தும், 'ஓமித்யேவ யதுத்பூதம் ஜ்ஞாநம் ஜ்ஞேயாத்மகம் சிவம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'ஜ்ஞாத்ரு ஜ்ஞாந ஜஞேயாநாமாவிர்பாவதிரோபாவ....' என்ற ஸர்வஸாரோபநிஷத்தும், 'ஜ்ஞாத்ரு ஜ்ஞாந ஜ்ஞேய' என்ற முத்கலோபநிஷத்தும், 'தேவாதிதேவ....உமாரமண....' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'நஷோகமாப்நோதி' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். இச்செய்யுளும் மேலதன் கருத்தை வெளிப்படுத்தியது.

## இதுவுமது

**ஏதுவே திருட்டாந் தங்க ளெனுமிவை கடந்த தெய்வம்**
**பேதியா வுள்ளந் தோறும் பெருவிர லளவாந் தெய்வம்**
**நீதியா நிமலத் தெய்வம் நிட்கள சகளத் தெய்வ**
**மாதரா ளிடத்துத் தெய்வம் மறைநடுத் தீபத் தெய்வம். (70)**

(அரும் பதவுரை) பேதியா - வேறுபடாத; நீதியாந் தெய்வம் நிமலமாந் தெய்வம் என்க. மாதராள் - உமாதேவியாரை; இடத்து - இடப்பாகத்திற் கொண்ட.

(பொழிப்புரை) சிவபிரான் ஹேதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் சோதிக்க முடியாதவன்; வேறுபடாதவர் உள்ளத்தோறும் அங்குஷ்ட (பெருவிரல்) மாத்திரையில் எழுந்தருளியிருப்பவன்; நீதியானவன்; இயல்பாகவே பாசங்களின் நீங்கினவன்; அருவன் - உருவன்; உமாதேவியை இடப்பாகத்துக் கொண்டவன்; வேத நடுவில் நின்று ஒளிரும் விளக்குப் போல்பவன்.

'ஹேது த்ருஷ்டாந்த வர்ஜிதம் .... பரமம் சிவம்' என்ற பிரமபிந்துபநிஷத்தும், 'ஹேதுத்ருஷ்டாந்த வர்ஜிதம்' என்ற திரிபுராதாபநியுபநிஷத்தும், 'உமாஸஹாயம் .... அங்குஷ்டமாத்ர:' என்ற மண்டலப்பிராமணோபநிஷத்தும், 'அங்குஷ்டமாத்ரம்....ஈச்வரம்' என்ற தியாநபிந்துபநிஷத்தும், 'அங்குஷ்டமாத்ர, புருஷோங்குஷ்டம் ச ஸமாச்ரித: | ஈச:' என்ற நாராயணோபநிஷத்தும், 'அங்குஷ்டமாத்ர: புருஷோந்தராத்மா ஸதாஜநாநாம் ஹ்ருத்யே ஸந்நிவிஷ்ட:' 'அங்குஷ்ட மாத்ரோ ரவிதுல்யரூப:' என்ற சிவேதாசுவதரோபநிஷத்தும், 'ப்ரஹ்ம அங்குஷ்டாப்யாம் நம:' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'நீதி பலவுந்தன்ன துருவாம்' என்ற தேவாரமும், 'க்ருஷ்ணபிங்களோமமேச்வர இஷ்டே | ததி தமஸ்ய ஸகள நிஷ்களம் ரூபம்' | என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'மூன்று வேதங்களின் நடுவிலுள்ளது யஜுர்வேதம், அதன் ஏழு காண்டங்களின் நடுவிலுள்ளது நான்காவது காண்டம். அக்காண்டத்தினடுவிலுள்ளது ஐந்தாவது பிரச்னமாகிய ஸ்ரீருத்ரம், அதனடுவிலுள்ளது 'நமச்சோமாயா' என்னும் அநுவாகம், அதனடுவிலுள்ளது 'நமச்சிவாய' எனும் வாக்யம், அதனடுவிலுள்ளது "சிவ" எனும் பதியினது திருநாமம் என அறிக' என்ற வேதத்தைக் குறித்த வியாசமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இச்செய்யுளும் மேலதன் கருத்தை வலியுறுத்தியது.

## இதுவுமது

**அரிதினு மரிதாந் தெய்வ மணுவினு மணுவாந் தெய்வம்**
**பெரிதினும் பெரிதாந் தெய்வம் பிரியருக் கெளிதாந் தெய்வம்**
**கரியுரி போர்க்குந் தெய்வங் கடவுள ரெலாமாந் தெய்வ**
**மெரியொரு மூன்றாந் தெய்வம் யாமெலா மகிழுந்தெய்வம். (71)**

(அரும் பதவுரை) பிரியருக்கு - அன்பருக்கு; கரியுரி - யானைத்தோல்; எரி - அக்கினி.

(பொழிப்புரை) சிவபிரான் அரியவற்றுக்கெல்லாம் அரியன்; அணுவையும் மலைபோல் பெரிதாக்கும் நுண்ணியன்; மிகப் பெரியதையும் தன்னை நோக்க அணுவை விடச் சிறியதாக்கும் பெரியன்; ஆயினும் தன் அடியார்க்கு எளிதில் தோன்றி அருள்பவன்; யானைத்தோலைப் போர்த்தவன்; எவ்வகைப்பட்ட கடவுளருமாகும் வல்லமையுடையான்; முத்தீயானவன்; எம்மை ஒத்தவரெல்லாம் மகிழ்ந்து போற்றி வணங்குத் தெய்வமாவன்.

'அரியானை', 'மதயானையுரிபோர்த்து', 'முத்தீயானவன்' என்ற தேவாரமும், 'அணோரணீயாந் மஹதோர் மஹீயாத் .... ஈசம்', என்ற நாராயணோபநிஷத்தும், 'அணோரணீயாந் மஹதோ மஹீயாநாத்மாஸ்ய ஜந்தோர் நிஹிதோகுஹாயாம் தமக்ரதும் பச்யதி வீதசோகோ தாது: ப்ரஸாதாந்மஹிமாந மீசம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் சரபோபநிஷத்தும், 'அணோரணீயாத் மஹதோமஹீயாநாத்மா குஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ: | தமக்ரதும் பச்யதி வீதசோகோ தாது: ப்ரஸாதாந் மஹிமாநமீசம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸர்வதேவமயம் சிவம்' என்ற தியானபிந்துபநிஷத்தும், 'ஸர்வதேவமய சிவ:', என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'ஸர்வதேவமயம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இச்செய்யுளும் மேலதன் கருத்தை வலியுறுத்தியது.

## இதுவுமது

**சருவஞன் சருவ சாக்கி சருவவி யாபி சத்த**
**னிருமல னசலன் வீர னிராமயன் காலா தீத**
**னுருமிகு கனக ரேத னூர்த்துவ விரேதன் சுத்தன்**
**பொருவில னிருவி காரி புராதன னாவன் சம்பு.** (72)

(அரும் பதவுரை) உருமிகு - அழகுமிகுந்த; பொருவிலன் - சமமில்லாதவன்.

(பொழிப்புரை) சிவபிரான் சர்வக்ஞன்; சர்வசாட்சி; சர்வ வியாபி; சத்தியையுடைய சத்தன்; மலமற்றவன்; அசையாதவன்; வீரன்; நிராமயன்; முக்காலங்களையும் கடந்தவன்; அழகு மிகுந்த பொன்ரேதஸும், ஊர்த்துவ ரேதஸும் உடையவன்; சுத்தமானவன்; ஒப்பில்லாதவன்; விகாரமில்லாதவன்; பழையோன், சம்பு என்னும் பெயரினன்.

'ஸர்வஜ்ஞ: - - பசுபதி' என்ற ஜாபால்யுபநிஷத்தும், 'ஸர்வஜ்ஞ .... சிவம்' என்ற நாஸிம்ஹபூர்வதாபநியுபநிஷத்தும், 'சிந்மாத்ரஜ்யோதிரஸ்ம்யஹம்' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'ஸர்வஜ்னா .... உமாரமண' என்ற சுகரஹஸ்யோபநிஷத்தும், 'யத்கேவலம் ஜ்ஞாநகம்யம் ... சிவம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'ஸர்வசாக்ஷீ மஹேச:' என்ற சரபோபநிஷத்தும், 'ஸர்வசாக்ஷிணம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'பசுபதி: ஸாக்ஷீ ஸர்வஸ்ய ஸர்வதா' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும், 'ஸமஸ்த ஸாக்ஷீம் தமஸ: பரஸ்தாத்', 'ஸமஸ்தஸாக்ஷீம்', 'ஸாக்ஷீ .... சதாசிவ:' என்ற கைவல்யோபநிஷத்தும், ஸாக்ஷீ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'புத்தி ஸாக்ஷிணம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ஸர்வவ்யாபீ ஸ பகவாந் ... சிவ:' 'ஸர்வ வ்யாபீ ஸர்வபூதாந்தராத்மா' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'விபுமீச்வரம்' என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், 'ஸர்வ வ்யாபி' என்ற அதர்வசிரோபநிஷத்தும், 'ஸத் .... லக்ஷண உமாரமண' என்ற சுஹரஹஸ்யோபநிஷத்தும், 'நிர்மலம் சிவம்' என்ற நாதபுந்தூபநிஷத்தும், 'அசலம்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்தும், 'வீராஸநாரூடம் ... சிவம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'த்வம் காலத்ரயாநீத:' என்ற கணபதியுபநிஷத்தும், 'திருகாலாதீதம்' என்ற நரஸிம்ஹபூர்வதாபநியுபநிஷத்தும், 'காலத்ரய விமுக்தோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'ஹிரண்ய ரேதா' 'ஊர்த்வரேதம்' என்று முறையே கூறும் ஏகாக்ஷரோபநிஷத்தும் பஸ்மஜாபாலோபநிஷத்தும், நரஸிம்ஹபூர்வதாப நியுபநிஷத்தும் ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், 'விசுத்தம்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'சுத்தம்' என்ற நாதபிந்தூபநிஷத்தும், 'அநூபமம்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்தும் நாதபிந்தூபநிஷத்தும், 'நிர்விகாரஸ்ததாசிவ:' என்ற திரிசிகிப்ராஹ்மணோபநிஷத்தும், 'புராதநோஹம்' என்ற கைவல்யோபநிஷத்தும்,

'புராணம் ... ஸர்வேச்வரம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'புராணம் ... ஸநாதநம் ஸர்வேச்வரம்' என்ற மஹோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இச்செய்யுளும் மேலதன் கருத்தை வலியுறுத்தியது.

## இதுவுமது

**சத்திய ஞானா னந்த தத்துவா தீத வேக**
**வத்துவி தீய மூல வப்பிர மேய வங்கம்**
**நித்திய விரூப வக்க நிரஞ்சன வியோம ரூப**
**முத்தனு வதீத முத்த முழுவது முனையன் றின்றே.** **(73)**

(அரும் பதவுரை) முழுவதும் - சர்வப்பிரபஞ்சங்களும்; உனையன்றி இன்று - உன்னையல்லாமல் நிலைபெறா.

(பொழிப்புரை) சிவபிரானே! நீயே சத்யம், ஞானம், ஆனந்தம். நீயே தத்துவாதீதன், ஏகன், அத்துவிதீயன், மூலாதாரன், அப்பிரமேயன். நீயே நித்யன், விரூபாக்ஷன், நிரஞ்சனன் (மலம் நீங்கியவன்), வியோமரூபன். ஸதூல சூக்ஷ்ம காரண சரீரங்களைக் கடந்தவனும் நீயே. அநாதி முத்தனும் நீயே. சர்வ பிரபஞ்சங்களும் உன்னையல்லாமல் நிலை பெறா.

'ஸத்யமீசாநம் ஜ்ஞாநமநந்தம்,' 'ஸச்சிதாநந்தம்' என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், 'ஸத்யம் விஜ்ஞாநம் அந்தம் ப்ரஹ்ம' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'தத்வாதீதம் மஹாதேவ....' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ஸர்வதத்வைர் விசுத்தம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஏகமத்வைதம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'யதேகத்விதீயம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'ஏகமேவாத்விதீயம்' என்ற தேஜோபுந்தூபநிஷத்தும், 'ஏக ஏவ சிவ:' என்ற சரபோபநிஷத்தும், 'மூலாதாரஸ்திதோஸி' என்ற கணபதியுபநிஷத்துன், 'அப்ரமேயம் .... சிவம்' என்ற பிரமபிந்தூபநிஷத்தும் மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும் 'நித்யம்' என்ற கணபத்யுபநிஷத்தும், ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும் ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'சிவோ நித்ய:' என்ற சரபோபநிஷத்தும், 'ஸ்திரேபிரங்கை: புருரூப உக்ர:' என்ற ருக்வேதமும், 'சிவ: புருஷாஈசாநோ நித்யமாத்மேதிகத்யதே' என்ற மஹோபநிஷத்தும் 'விருபாக்ஷம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்தும், 'நிரஞ்ஜநம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் சாண்டில்யோபநிஷத்தும் யோகசிகோபநிஷத்தும், 'ஆகாசமய விக்ரஹம்', 'ஆகாசாத்மகம்' என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், 'ஆகாசசரீரம் ப்ரஹ்ம' என்ற தைத்ரீயோபநிஷத்தும், 'தேஹத்ரயம்ஸ்தூல ஸூக்ஷ்மகாரணாதி விதுர்புதா' என்ற வராஹோபநிஷத்தும், 'த்வம் தேஹத்ரயாதீத:'

என்ற கணபதியுபநிஷத்தும், 'ஸர்வஸ்யேசாந:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இச்செய்யுளும் மேலதன் கருத்தை விளக்கியது.

## இதுவுமது

**கலாமய பாவா பாவ கரநிரா லம்ப கஞ்ச**
**பொலாவிய லொன்று மில்லாய் பொருணிறை புகழே**
**சிலாலிபி யெனவென் னெஞ்சிற் றீட்டிவை யுனக்கே முன்னூ**
**லெலாமுரை சிவப்பேர் தன்னை மீசுர சுவய மாதோ.** **(74)**

(அரும் பதவுரை) பொலாஇயல் - கெட்டதன்மை' சிலாலிபி - கல்லிற் செதுக்கிய எழுத்து; தீட்டிவை - எழுதிவை; முன்னூல் - வேதம்.

(பொழிப்புரை) வேதங்களெல்லாம் மங்களத் தன்மையன் என்னும் பொருள்தரும் சிவன் என்ற பெயரையும், இயல்பாகவே எல்லாச் செல்வங்களுடையவன் என்றும் உரைக்கின்றனவே. நிவிர்த்தி முதல் ஐந்து கலைமயமாயுள்ளவனே, பாவ, பாவகரனே, நிராலம்ப, ஹம்ஸனே, கெட்ட தன்மை ஒன்ருமில்லாதவனே, பொருள் சேர் புகழுடையோனே, மேற்கண்ட வேதவுண்மைகளை கல்மேல் எழுத்துப்போல் என் நெஞ்சில் தீட்டி வைத்தருள்.

'பஞ்சகலாமயம்,; 'சகலகலாவ்யாபிநீம்' என்ற திரிபுராதாபநியுபநிஷத்தும், 'பாவா பாவகரம் சிவம்' என்ற சுவேஹ்டாசுவதரோபநிஷத்தும், 'பாவாபாவவிஹீநோஸ்மி' என்ற மைத்ரேரோபநிஷத்தும், 'பாவாபாவாதீத்வந்த்வாதீத:' 'சிவம் … நிராலம்பம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும், 'ஹம்ஸ ஏவ பரோருத்ரோ,' 'ஹம்ஸ ஏவ மஹேச்வர:' என்ற பிரஹ்மவித்யோபநிஷத்தும், 'ஹிரண்மய: புருஷ ஏக ஹம்ஸ:' என்ற பிருஹதாரண்யகோபநிஷத்தும், 'எங்குமெங்கன்பிரானார் புகழல நிகழ்பழியிலரே,' 'ஈனமிலாப் புகழண்ணல்' என்ற தேவாரமும், 'சிவநாமாந்யதிசமுச்சரந்தம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஸ்வயமீச்வர:' என்ற நரஸிம்ஹோத்தரதாபநியுபநிஷத்தும், 'செல்லாத செல்வமுடையாய்,' 'சென்றடையாத திருவிடியானை' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். பாவா பாவகரனே என்பதற்கு இல்பொருளாயும் உள்பொருளாயுமுள்ளானே என்றுரைத்தலும் அமையும். இச்செய்யுளும் மேலதன் கருத்தை வெளிப்படுத்தியது.

## இதுவுமது

**அந்தரி யாமி சிந்தைக் கரியவ னசன்சர் வாங்க**
**சுந்தரன் றீபா காரன் சுசூக்கும னிருவி கற்பன்**
**சந்ததங் குணமெட் டுள்ளான் சருவவித் தைக்கு மீசன்**
**வந்தித னகண்டன் றுக்க வகையுயிர்க் கொழிக்கும் வள்ளல். (75)**

(அரும் பதவுரை) சந்ததம் - எப்போதும்

(பொழிப்புரை) துக்க வகைகளையெல்லாம் உயிர்களுக்கு ஒழிக்கும் வள்ளல் சிவபிரானே. அப்பிரானே உயிர்களை உள்ளிருந்து செலுத்தும் அந்தர்யாமி, உயிர்களின் சிந்தனைக் கெட்டாத அரியன்; பிறவாதவன்; எல்லா உறுப்புக்களாலும் அழகன்; பேரொளியினன்; சுசூக்குமன்; பெயர், குலம், முதலிய விகற்பமில்லாதவன், எப்போதும் எண்குணம் உடையவன்; எல்லா வித்தைகளுக்கு ஈசன்; யாவர் வணக்கத்துக்குமுரியவன்; கண்டிக்கப்படாதவன்.

'புருஷா: அந்தராத்மா,' 'ஸூக்ஷ்மாதி ஸூக்ஷ்மம்,' 'அஜம்,' 'அஜாம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'அசிந்த்யம்,' 'அஜம்,' 'ஸர்வாங்க ஸுந்தரம்' என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும், 'தீபாகாரம் மஹாதேவம்' என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும், 'ஸுஸூக்ஷ்மம்' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'நிர்விகல்பம் .... சிவம்,' என்ற ப்ரஹ்மபிந்தூபநிஷத்தும், ஏஷ ஆத்மாஅபஹதபாப்மா விஜரோவிம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோபிபாஸஸ் ஸத்யகாமஸத்ய ஸங்கல்ப:' என்ற சாந்தோக்யோபநிஷத்தும், 'ஈசாந: ஸர்வவித்யாநாம்' என்ற நாராயணோபநிஷத்தும், 'தாபத்ரயஸமுத்பூத ஜந்ம ம்ருத்யுஜராதிபி: நாநாவிதாநி துக்காநி ஜஹார பரமேச்வர:, 'நிர்விகல்பம்' என்ற சரபோபநிஷத்தும், 'அசிந்த்யம் ... சிவம்' 'ஈசாந: ஸர்வவித்யாநாம்' என்ற நரஸிம்ஹபூர்வதாபநியுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். இச்செய்யுளும் மேலதன் கருத்தை விளக்கியது.

## இதுவுமது

**சவுமிய பிரபு சாச்சு விதபர மேட்டி சாந்த**
**வவியய விசோக தீர்த்த வநாமய வநந்த ரூப**
**கவியவி யத்த யார்க்குங் கருத்தவென் றெவனை வேதம்**
**புவிதனி லழைக்கு மெல்லாப் பொருளுமாஞ்சிவனை விட்டே. (76)**

(பொழிப்புரை) ஸ்ரீ சிவபிரானை வேதம் ஸௌம்யன், பிரபு, சாச்விதன், பரமேஷ்டி, சாந்தன், அவ்யயன், சோகமற்றவன், தீர்த்தன், அநாமயன், அநந்தரூபன், கவி, அவ்யத்தன், எல்லார்க்கும் கர்த்தா என்று அழைக்கும். எல்லாப் பொருளுமாகும் சிவபிரானை விட்டு வேறு எவரையும் வேதம் அவ்வாறு அழைப்பதில்லை.

‘ஸௌம்யம்’ என்ற தேவ்யுபநிஷத்தும், ‘ஈச: ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு:’ என்ற நாராயணோபநிஷத்தும், ‘சிவ: ப்ரபு:’ என்ற வராஹோபநிஷத்தும், ‘ஸர்வஸ்ய ப்ரபும்’ என்ற சுவேதாச்வதரோபநிஷத்தும், ‘ப்ரபும்’ என்ற சரபோபநிஷத்தும், ‘சாச்வதம் சிவம்’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், மஹோபநிஷத்தும், ‘ப்ரமேஷ்டிந: பரமேஷ்டி’ என்ற ப்ருஹதாரண்யகோபநிஷத்தும், ‘ததவ்யயம்’ என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், ‘சிவம் ….. அவ்யயம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், ‘விசோகம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘அநாமயம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், ‘அநந்தரூபம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘சிவம் சாந்தம்’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், ‘சாந்தம்’ என்ற பஞ்சப்ரஹ்மோபநிஷத்தும், ‘கவீம்’ என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், மஹோபநிஷத்தும், ‘அவ்யக்தம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘கர்த்தாரமீசம்’ என்ற முண்டகோபநிஷத்தும், ‘ஸர்வஸ்யாதிபதி:’ என்ற ப்ருஹதாரணியகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இச்செய்யுளும் மேலதன் கருத்தை விளக்கியது.

## இதுவுமது

**ஆதியு முடிவு மில்லா னன்னையும் பிதாவு மில்லான்**
**பேதமொ டபேத மில்லான் பெண்ணொடா ணலிக ளில்லான்**
**சாதலு முதிப்பு மில்லான் சத்தசத்த திலன்பே ரில்லான்**
**பாதிமி லுமைவா ழீசன் பந்தமும் வீடு மில்லான்.** **(77)**

(பொழிப்புரை) தமது திருமேனியில் பாதிப்பாகம் உமைக்களித்த சிவபிரான் ஆதி அந்தமில்லாதான்; தாயுமிலி தந்தையிலி; பேதம் - அபேதம் - பேதாபேதமில்லாதான்; பெண் ஆண் அலியல்லன்; பிறவாதவன் இறவாதவன்; சத்து அசத்தில்லான்; தனக்கெனப் பெயரில்லாதவன்; மலம் காரணமாக வரும் பந்தமோ, அம்மலவிடுதி காரணமாக வரும் வீடுபேறோ அடைதல் இல்லாதவன்.

‘அநாத்யநந்தம்’, ‘அநாத்யந்தம்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், ‘அநாத்யந்தம்’ என்று சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘ஆதி மத்தியாந்த வர்ஜிதம்’ என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும், ‘ஆதிமத்யாந்த விஹீதம்’ என்ற கைவல்யோபநிஷத்தும், ‘நசாஸ்யகச்சிஜ்ஜநிதா’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘ஏக ஸங்க்யா விஹீநோஸ்மி த்விஸங்க்யாநஹம் நச’ என்ற மைத்திரேயோபநிஷத்தும், ‘நைவ ஸ்த்ரீநபுமாநேஷ நசைவாயந் நபும்ஸக;’ என்ற சுவேதாகவதரோபநிஷத்தும், ‘ஸதஸத்பேத விஹீநோஸ்மீ’ என்ற மைத்ரேயோபநிஷத்தும், ‘ஸதஸத்விஹீநம்’ என்ற மைவல்யோபநிஷத்தும், ‘ஸதஸத்வரேண்யம்’ என்ற முண்டகோபநிஷத்தும், ‘பந்தமோக்ஷரதிவிஹீநோஸ்மி’

என்ற மைத்திரேயோபநிஷத்தும், 'நிராக்ய:' என்ற சரபோபநிஷத்தும், 'சிவம் .... அநாமகம்' என்ற மஹோபநிஷத்தும், இச்செய்யுட்குப் பிரமாணங்கள். இச்செய்யுளும் மேலதன் கருத்தைத் தழுவியது.

## சிவபிரானே யாருமில்லாத காலத்திலு மிருப்பவரென்பது.

**ஏவரு மிறைஞ்சு ஞாயி றில்லையா யிரவு மின்றா**
**யாவது மசத்துஞ் சத்து மில்லையா மாதி நாளிற்**
**கேவல மாகி யுள்ளான் கேடிலாச் சிவனே யென்றான்**
**மூவரு மறிவார் கொல்லோ முக்கணன் றினிமை யம்மா. (78)**

(அரும் பதவுரை) ஏவரும் - எவரும்; இறைஞ்சும் - வணங்குகின்ற; அசத்தும் சத்தும் யாவதும் என்க. யாவதும் - எதுவும்; ஆதிநாள் - சிருஷ்டிக்குமுன்; கேவலம் - தனி; என்றால் - என்று வேதஞ்சொல்லுமாமின்; மூவரும் - பிரமனும் விட்டுணுவும் உருத்திரனும்.

(பொழிப்புரை) பல மதத்தவரும் வணங்குகின்ற சூரியனில்லையெனில் இரவும் இல்லையாய் விடும். அசத்தும் சத்தும் என யாவதும் இல்லையாம் என்று கூறும் சிருஷ்டிக் முன் தனிமையாகி நிலைபெறுபவன் அழிவிலாச் சிவபெருமான் ஒருவரே. அப்படியானால் பிரமவிட்டுணு உருத்திரர் ஆகிய முத்தேவரும் முக்கண்ணராகிய சிவபிரான் தனிமையை அறிவரோ? மாட்டார்.

'பலர்புகழ் ஞாயிறு' என்ற திருமுருகாற்றுப்படையும், 'யதாதமஸ் தந்நதிவா நராத்ரிர் நஸந்நசாஸச்சிவ ஏவகேவல' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'யத்கேவலம் .... சிவம்' என்ற சாண்டில்யோபநிஷத்தும், 'கேவல: சிவ:' என்ற ஸகந்தோபநிஷத்தும், 'சிவம்யாதிது கேவலம்' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும், 'கேவல: சிவ, ' கேவலோஸ்ம்யஹம்' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'ஸர்வம், ப்ரஹ்மைவ கேவலம்' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், 'ப்ரஹ்ம கேவலம்,' 'ப்ரஹ்மைவ கேவலம்' என்ற ஆத்மோபநிஷத்தும், திருக்குறள் 352 ஆம் குறளுக்குப் பரிமேலழகர் தந்த 'வீடாவது நிரதிசய வின்பமென்பதூஉம், அதற்கு நிமித்த காரணம் கேவலப் பொருளென்பதூஉம் கூறப்பட்டன' என்ற உரைப்பகுதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரானே யாருமில்லாத காலத்திலுமிருப்பவரென்பதைத் தெரித்துணர்த்தியது இச்செய்யுள்.

## சிவபிரான் கிருத்தியங்கள் செய்யுஞ் சதுரப்பாடு இதுவென்பது.

**செய்கலன் கரத்தா லொன்றுஞ் செய்குவன் கருத்தா லெல்லாஞ்**
**செய்கலன் றானே யொன்றுஞ் செய்குவன் உமையா லெல்லாஞ்**
**செய்கலன் றனக்கென் றொன்றுஞ் செய்குவ னுயிர்க்கே யெல்லாஞ்**
**செய்கலன் வீணே யொன்றுஞ் சிவபிரான் சதுர்தா னென்னே. (79)**

(அரும் பதவுரை) கரம் - கை; கரணங்களுக்கு உபலக்கணம்; கருத்து - சங்கற்பம்; சதுர் - சாமர்த்தியம்.

(பொழிப்புரை) சிவபிரான் கைமுதலிய கரணங்களின்றிச் சங்கல்ப மாத்திரையில் சிருஷ்டிப்பான்; ஒன்றனையும் தானே சிருஷ்டியாது தன் சக்தியாகிய உமையைக் கொண்டு சிருஷ்டிப்பான்; சிருஷ்டி முதலிய எத்தொழிலும் தன் பொருட்டின்றி உயிர்களின் பொருட்டுச் செய்வான்; எச்செயலும் விணாகச் செய்வான். அப்பெருமானின் சாமர்த்தியந்தான் என்னே!

'அபாணிபாதோ ஜவநோக்ரஹிதா பச்யத்யசக்ஷுஸ் ஸச்ருணோத்ய கர்ண:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'இறைவன் சத்தி .... சங்கற்ப மாத்திரையானே எல்லாத் தொழிலுஞ் செய்யும்,' 'முதல்வன் ஐந்தொழில் செய்தல் தன் பொருட்டோ? பிறர் பொருட்டோ? வீணோ? தன்பொருட்டெனின் .... வரம்பிலின்பமுடைய முதல்வனுக்கு இச்செங்கையான் வரக்கடவதோர் பயனில்லை .... வீணெனின் .... பித்தர் செய்யுந் தொழிலோடொக்கும் ... உயிர்கள் பொருட்டே முதல்வன் ஐந்தொழில் செய்வன்' என்ற சிவஞான பாஷ்யமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். சிவபிரானே கிருத்தியங்கள் செய்யுஞ் சதுரப்பாடு இது என்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## சிவபிரானே அஷ்டமூர்த்தி யென்பது.

**மண்ணொரு பவனீர் சர்வ னுருத்திரன் வன்னி தன்னிற்**
**கண்ணிய பீமன் காற்றிற் ககனமீ தொளிர்மா தேவன்**
**றண்ணில வதனிற் சோம னுக்கிரன் றகிக்கு மெல்லிற்**
**பண்ணம ருமையாள் பாகன் பசுபதி யுயிரி லாவன். (80)**

(அரும் பதவுரை) வன்னிதன்னில் - தீமில்; ககனமீது - வானில்.

(பொழிப்புரை) பண்ணமர்ந்த பேச்சுடைய உமையாள் பாகனாகிய சிவபிரான் பிருதிவியில் பவனாகவும், அப்புவில் சர்வனாயும், தேயுவில் உருத்திரனாயும், வாயுவில் பீமனாயும், ஆகாசத்தில் மஹாதேவனாயும், சந்திரனில் சோமனாயும், சூரியனில் உக்கிரனாயும், உயிரில் பசுபதியாயும் பெயர் பெற்று எழுந்தருளி அருள் செய்வான்.

'ப்ருதிவ்யோ பவ ஆபச் சர்வ அக்நேருத்ரோ வாயுர் பீமஆகாசஸ்ய மஹாதேவ ஸூர்யஸ்யோக்ர: சந்த்ரஸ்ய ஸோம: ஆத்மாந: பசுபதி:' என்ற சுருதியும், 'அஷ்ட மூர்த்தி:' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் ப்ருஹஜ்ஜாபாலோப நிஷத்தும், 'அஷ்டமூர்த்யை' என்ற தாத்தாத்ரேயோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். சிவபிரானே அஷ்டமூர்த்தி என்பது இதனால் தெரிக்கப்பட்டது.

## சிவபிரானே சர்வதத்வாத்த னென்பது.

**முப்பது மாறு மாய தத்துவ முடிவினின்ற**
**திப்பிய பினாகி தானே தீதறு முத்திக் கீசன்**
**முப்பதி னாறு போய தத்துவ முடிவி னின்ற**
**குப்பதி யதனுக் கீசன் கொஞ்சமு மாகா னம்மா. (81)**

(அரும் பதவுரை) முப்பதும் ஆறும் தத்துவம் - முப்பத்தாறு தத்துவங்கள்; பினாகி - சிவபிரான்; தீது அறு அழிவில்லாத; முத்திக்கு ஈசன் - முத்தியை யருளுங் கடவுள்; முப்பதின் ஆறு போய - இருபத்துநான்கு; கு பதி - பூமியின் கொழுநனாகிய விஷ்ணு; அதனுக்கு - அந்த முத்தியை யருளுதற்கு; கொஞ்சம் கிஞ்சித் என்ற வடசொல்லின் திரிபு.

முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நின்ற திவ்யனாகிய பினாகம் என்னும் வில்லேந்திய சிவபிரானே அழிவில்லாத முத்தியருளுங் கடவுள். இருபத்து நான்காம் தத்துவ முடிவிலுள்ள மஹாவிஷ்ணுமூர்த்தி அம்முத்திப்பேற்றை அளிக்கும் ஆற்றல் சிறிதுமில்லான்.

கு - பூமி; பதி - கணவன்; பூமிதேவியின் கணவன் மஹாவிஷ்ணு.

'ஷட்த்ரிம்சத் தத்வாதீத' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், 'ப்ருதிவ்யாதி சிவாந்தம்' என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும், 'சதுர்விம்சதி தத்வாநி கேசிதிச்சந்திவாதிந: | கேசித் ஷட்த்ரிம்சத் தத்வாநி ஷண்ணவதீ நிச,' 'ஆஹத்ய தத்வ ஜாதாநாம் ஷட்த்ரிம்சத் முநயோவிது:' என்ற வராஹோபநிஷத்தும், 'இருபத்து நான்கு தத்துவங்களைக் காட்டிலும் பிரஸித்தமான இருபத்தைந்தாமவரும்.... பரமாத்மாவுமான அந்த வாஸுதேவர்' என்ற பாரதம், சாந்திபர்வம் 347-ஆம் அத்தியாயமும், 'பொங்கைம்' புலனும் பொறியைந்தும் கருமேந்திரிய மைம்பூதம் - இங்கிவ்வுயுரேய்பிரகிருதி மானாங்கார மனங்களே' என்ற நாலாயிரப்பிரபந்தமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரானே சர்வதத்வாதீதனென்பது இச்செய்யுளால் விளக்கப்பட்டது.

## உபக்கிரம உபசங்கார மத்யே பராமரிசைகளால் நூற்றெட்டு உபநிடதங்களிலுஞ் சிவபிரானே சொல்லப்படுகிறாரென்பது.

**முன்னதி லீசச் சொல்லை முடிவதிற் சிவச்சொ றன்னைச்**
**சொன்னது மன்றி யந்தச் சொற்பொரு டன்னை மத்தி**
**தன்னினு மேத்திற் றுண்மை சாருப நிடநூற் றெட்டு**
**மென்னினொ ரையந் தானு மீசுடன் முதன்மைக் குண்டோ.** (82)

(அரும் பதவுரை) முன்னதில் - உபக்கிரமத்தில்; முடிவதில் - உபசங்காரத்தில்; உபக்கிரமோப ஸம்ஹார மத்யே பராமரிசையென்பது பொருள்கோள் முறைக்கு ஒரு நியாயம்; ஐயம் - சந்தேகம்; முதன்மைக்கு - பரத்துவத்துக்கு.

(பொழிப்புரை) நூற்றெட்டு உபநிடதங்களில் முதலாவதாகிய ஈசாவாஸ்யோபநிஷத் 'ஈசன்' என்ற சொல்லில் தொடங்கியும் நூற்றெட்டாவதாகிய முக்திகோபநிஷத் 'சிவம்' என்ற சொல்லில் முடிந்தும், மத்தியிலுள்ள ராமரஹஸ்யோபநிஷத் அந்தச் சொற்களின பொருளை விரித்துக் கூறி வணங்கின வென்றால் உண்மை உபநிடதங்கள் உபக்கிரம உபசம்ஹார மத்யே பராமரிசை என்னும் நியாயவாயிலாய் சிவபிரானே முதல்வன் என்பதை நிலையிட்டுள்ளன என்பதில் சந்தேகம் கொள்ளலாமா?

'ஓம் ஈசாவாஸ்யமிதம் ஸர்வம்' என்ற ஈசாவாஸ்யோபநிஷத்தும், 'ஊர்த்வ பூர்ண மத: பூர்ணம் மத்யபூர்ணம் சிவாத்மகம்' என்ற முக்திகோபநிஷத்தும், 'ராமம் த்ரிணேத்ரம்ஸோமார்த்ததாரிணம் சூலிநம் பரம்' என்ற ராமரஹஸ்யோபநிஷத்தும், 'ப்ரபஞ்சோபசமம் சாந்தம் சிவமத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே' என்ற ராமோத்தரதாபநியுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உபக்கிரம உபசம்ஹார மத்யே பராமரிசகிகளால் நூற்றெட்டு உபநிடதங்களிலும் சிவபிரானே சொல்லப்படுகிறரென்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## சிவபிரானைப் பொது நீக்கித் தியானிக்க வேண்டுமென்று வேதத்துச்சி சொல்லுகிறதென்பது.

**அதருவ மிறுதி வேத மதருவ சிகைதா னந்த**
**வதருவ முடிவா யோங்கு மழிவிலா வின்பஞ் சீவர்க்**
**குதவிடு சிவனே தேய னொதுக்குக பிறரை யென்ற**
**திதமுற விளம்ப லாலே யேத்துவ தெவனை வேதம். (83)**

(அரும் பதவுரை) உதவிடு - கொடுக்கிற; என்று அது இதம் கூற விளம்பலால் எனப்பிரிக்க. அது - அந்த அதருவசிகோபநிஷத்து; இதம் - நன்மை; விளம்பலால் - சொல்லுகிறபடியால்; ஏந்துவது - சிரமேற் கொள்ளுவது.

(பொழிப்புரை) அதர்வவேதத்து முடிவாய் ஓங்கும் அதர்வசிகோபநிஷத்து முடிவில் 'அழிவற்ற ஓங்குமின்பம் உயிர்களுக்குக் கொடுக்கிறவன் சிவனே. அந்நியமான மற்றைத் தேவரை விட்டு விட்டுச் சிவனொருவனையே தியானிக்க' என்று ஆணையிட்டு நன்மை சொல்லுகிறபடியால் வேதம் சிரமேற் கொள்வது சிவனை யன்றி வேறு எவனை என்க.

'சிவ ஏகோ த்யேய: சிவம்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய' என்ற அதர்வசிகோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

சிவபிரானைப் பொது நீக்கித் தியானிக்க வேண்டுமென்று வேதத்துச்சி சொல்லுகின்றதென்பது இச்செய்யுளால் புலனாம்.

## யார் எத்தேவரை வணங்கினாலும் அத்தேவர் அவ்வணக்கத்தைச் சிவபிரானுக்கே அர்ப்பணஞ் செய்துவிடுவரென்பது.

**அச்சுதன் பிரம னாதி யந்நிய தேவர் தம்மை**
**மிச்சகம் வாழ்வோர் பூசை மியற்றிடி னதனை யன்பு**
**மச்சமுங் கொண்டத் தேவ ரரனடிக் குய்ப்பா ரீது**
**பொச்சமில் சுருதி கைகள் பொருந்திடா னவன்றான் காணே. (84)**

(அரும் பதவுரை) உதவிடு - கொடுக்கிற; என்று அது இதம் கூற விளம்பலால் எனப்பிரிக்க. அது - அந்த அதருவசிகோபநிஷத்து; இதழ் - நன்மை; விளம்பலால் - சொல்லுகிறபடியால்; ஏந்துவது - சிரமேற் கொள்ளுவது.

(பொழிப்புரை) இவ்வுலகத்தில் வாழ்வோர் பிரமம் விஷ்ணுவாதி தேவர்களைப் பூஜை செய்வாராயின், அப்பூஜையை அத்தேவர்கள் அன்பும் பயமும் கொண்டு சிவபிரான் திருவடியில் சமர்ப்பிப்பர். இவ்வுண்மை குற்றமில்லாத சுருதிகள் கூறுவன. சிவபிரானோ கைகுவித்துப் பிறரைக் கும்பிடாத இயல்பினன்.

‘ஸ்தோமம் வோ கத்ய ருத்ராயசிக்வஸே । க்ஷயத்வீராய நமஸாதிதிஷ்டந । ஏபிச் சிவஸ்வவாம் ஏவயாபி: । திவஸ்ஸிஷக்திமருதோ நிகாமாபி:’ என்ற ருக்வேதமும், ‘ஆகாசாத்பதிதம்தோயம் யதாகச்சதிசாகரம் ஸர்வதேவ நமஸ்கார: சங்கரம் ப்ரதிகச்சதி’ என்ற ஸ்மிருதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

யார் எத்தேவரை வணங்கினாலும் அத்தேவர் அவ்வணக்கத்தைச் சிவபிரானுக்கு அர்ப்பணஞ்செய்து விடுவரென்பது இச்செய்யுள் கூறுவது.

## சிவபிரானை வணங்காதவரில்லை; சிவபிரான் யாரையும் வணங்கிலரென்பது.

**விண்ணவ ரியோகர் சித்தர் விஞ்சையர் முனிவர் யாழோர்**
**மண்ணவ ருரகர் மாப்புள் மரமுத லனைவோ ருள்ளும்**
**கண்ணியே னெற்றித் தேவைக் கைதொழார் யாரே யந்தப்**
**பண்ணவ னேனோர் தம்மைப் பணிந்தது யாண்டு மின்றே.** (85)

(அரும் பதவுரை) விண்ணவர் - தேவர்; விஞ்சையர் - வித்த்யாதரர்; யாழோர் - கந்தர்வர்; மண்ணவர் - மனிதர்; உரகர் - நாகலோகவாசிகள்; மா - மிருகங்கள்; புள் - பறவைகள்; கண் இயல் நெற்றித்தேவை - சிவபிரானை; யாரே ஒருவருமில்லையென்றபடி; அந்தப்பண்ணவன் - அந்தச் சிவபிரான்; ஏனோர் தம்மை - பிறரை; யாண்டும் - எக்காலத்திலும் எவ்விடத்திலும்; இன்று - இல்லை.

(பொழிப்புரை) தேவர்கள், யோகிகள், சித்தர்கள், வித்தியாதரர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், மனிதர்கள், நாகர்கள், மிருகங்கள், பறவைகள், மரமாதி தாவரங்கள், முதலிய அனைவரிலும் கண்ணுதற் கடவுளைத் தொழாதார் யார்? அந்தச் சிவபிரான் ஏனோரில் எவரையும் எப்பொழுதும் எங்கும் பணிந்ததில்லை.

இச்செய்யுட்குப் பிரமாணங்கள் விரியுமாதலின் எடுத்தெழுதப்படவில்லை. பஸ்மஜாபாலோபநிஷத்து - பாரதம் - சிவரகசியம் முதலியவற்றுட் காண்க. “இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்’ என்ற சுந்தரர் தேவாரமும் பிரமாணமாகும்.

சிவபிரானை வணங்காதவரில்லை; சிவபிரான் யாரையும் வணங்கியதில்லையென்பது இச்செய்யுளால் புலப்படுத்தப்பட்டது.

## முக்குண சம்பந்தமான மாயாசரீரம் சிவபிரானுக்கில்லை யென்பது.

**அயனுட லிராச மாகு மரியுட றமச மாகு**
**முயரிய சத்து வத்தி லுருத்திரற் குடல முண்டா**
**லியலொரு தயவின் மூல மெனுஞ்சிவ பிரானம் மாயா**
**மயகுண தேகந் தாங்கான் மன்னுவன் றிரமா ரங்கம். (86)**

(அரும் பதவுரை) ஒரு ஒப்பந்த; மன்னுவன் - உடையவனா யிருப்பன்; சத்துவம் இராசதம் தாமதம் இம்மூன்று சரீரங்களும் மாயா காரியமாகலின் அழியும், சிவபிரான் கொள்ளும் அங்கம் ஸ்திரமானது. ஆகலின் அது அம்முக்குணமயமன்று.

(பொழிப்புரை) பிரம்மதேவன் உடல் இராசச குணமயமானது; மஹாவிஷ்ணுவின் உடல் தாமஸகுணமயமானது; உருத்திரமூர்த்தியின் திருமேனி உயர்ந்த சத்துவகுணமயமானது; ஒப்பற்ற இரக்கமே மூலமாய்க் கொள்ளும் சிவபிரான் திருமேனி மேலே கூறிய முக்குணமாயாசரீரங்கள் போல்வதன்று, சிவபிரான் கொள்ளும் அங்கம் ஸ்திரமானது. மாயாகாரியம் அழியும்; ஸ்திரம் அழியாது.

'ஸத்வோத்ரிக்தவ்யக்தாக்யாவரண சக்திராஸீத் । தத்ப்ரதி பிம்பம் யத்தத்தீச்வர சைதந்ய மாஸீத்....ஈசாதிஷ்டிதாவாசக்திதோ ரஜோத்ரிக்தா மஹதாக்யா விக்ஷேப சக்தி ராஸீத் । தத் ப்ரதி பிம்பிதம் । யத்தத்திரண்யகர்ப சைதந்ய மாஸித்.... ஹிரண்ய கர்பாதிஷ்டித விக்ஷேபசக்தி தஸ்த மோத்ரிக்தாஹங்காராபிதாஸ்தூல சக்திராஸீத் । தத்ப்ரதி பிம்பிதம் யத்தத் விராட்சைதந்ய மாஸித் । ஸததபிமாநி ஸ்பஷ்டவபுஸ்ஸர்வஸ்தூல பாலகோ விஷ்ணு" ப்ரதாந புருஷோபவதி' என்ற பைங்களோபநிஷத்தும், 'ஸாத்விகீருத்ரே பக்தோப்ரஹ்மணீ ராஜஸீ । தாமஸீ தைத்ய பக்ஷேஷுமாயாத்ரேதாஹ்யதாஹ்ருதா,' 'கோபரூபோஹரி:, 'ஸாக்ஷாந் மாயாவிக்ரஹ தாரண' என்ற கிருஷ்ணோபநிஷத்த்ம், 'ஓம் தமஸே நம: ஓம்ரஜஸே நம: ஓம் ஸத்வாய நம:' என்ற அக்ஷோபநிஷத்தும், 'மாயோபாதிகோ நாராயண ஆஸீத்' என்ற திரிபாத்விபூதிமஹாநாராயணோபநிஷத்தும், 'அஸத்வமரஜஸ்கமதம்ஸ்கமமாயமபயம்' என்ற நரஸிம்ஹோத்தரதா பநியுபநிஷத்தும், 'ஸ்திரைரங்கை:' என்ற நரஸிம்ஹபூர்வதாபநியுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

முக்குண சம்பந்தமான மாயாசரீரம் சிவபிரானுக்கில்லை என்பது இச்செய்யுளால் நிறுவப்பட்டது.

## சிவபிரான் திருமேனிக்கு நரைதிரை யாதிகளில்லை யென்பது.

**கண்ணனாய் விண்டு மேனிக் கருமயிர் பிறந்த தன்னா**
**னண்ணனாய் வெள்ளை ரோம மவதரித் திட்ட தென்னிற்**
**றிண்ணமாஞ் சாவு மூப்புத் திரைநரை யம்மாற் கோர்முக்**
**கண்ணுளான் றனுவி லன்ன கரிசுகள் கேட்ட துண்டோ.** (87)

(அரும் பதவுரை) விண்டு - விட்டுணு; அன்னான் - அக்கண்ணனுடைய; அண்ணன் - தமையன்; அவன் பலராமன்; அம்மாற்குத் திரை நரை மூப்பு சாவு திண்ணம் ஆம் என்க; திண்ணம் - சத்தியமாய்; ஆம் - உண்டு; தனுவில் - சரீரத்தில்; அன்னகரிசுகள் - அந்த நரைமயிர் முதலிய குற்றங்கள்.

(பொழிப்புரை) மஹாவிஷ்ணுவின் தலையிலிருந்த கருரோமம் கண்ணானாய் அவதரித்தது; வெள்ளைரோமம் அக்கண்ணனது தமையனாகிய பலராமனாய் அவதரித்தது என்று சரித்திரம் கூறினால் அத்திருமாலுக்கு நரை திரை மூப்புச் சாவு உண்டென்பது தெரிகிறது. முக்கட்பெருமான் திருமேனியில் அந்த நரைமயிர் முதலிய குற்றங்கள் எச்சரித்திரத்திலேனும் யாரேனும் கூறியதாகக் கேட்டதுண்டா? இல்லையே.

'திருமாலானவர் ஒன்று வெண்மையும் மற்றொன்று கருமையுமாகிய இரண்டு கேசங்களைத்தலையிலிருந்தெடுத்தார். அந்த இரண்டு கேசங்களும் தேவகி ரோகிணி யென்னும் இரண்டு யாதவகுலத்து ஸ்திரீகளின் கர்ப்பங்களில் பிரவேசித்தன. அந்தத் திருமாலினுடைய அவ்விரண்டு கேசங்களில் வெண்மையாயிருந்தவொன்று பலராமானாகப் பிறந்தது. இரண்டாவது கறுத்த நிறமாகச் சொல்லப்பட்ட கேசம் கேசவனாகப் பிறந்தது' என்ற பாரதம் ஆதி 214 ஆவது அத்தியாயமும்' 'ஸ்ரீ ஹரியானவர் தம்முடைய அங்கத்திலிருந்து வெளுத்ததும் கறுத்துமான இரண்டு மயிர்களை எடுத்து எறிந்தார்' என்ற பாரதம் சாந்தி பருவம் 206-ஆவது அத்தியாயமும், 'ஆரணங் கலைகட் கெட்டா தகன்றபூ ரணனா மாதிநாரணன் சிரத்தி லார்ந்த நளிரு ரோமத்தி னொன்று - வாரணந்தன்னிற் போட மால்கலை யாகப் பார்மேற் - காரண னவதரித்தான் கண்ணனாய் விண்ணோர் போற்ற' எனற கூரேச விஜயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரான் திருமேனிக்கு நரை திரையாதிகளில்லையென்பது இச்செய்யுளால் நிறுவப்பட்டது.

## சிவபிரான் உமாசகாயத்வாதி திருமேனிகளை மாயையிலன்றி அருளாகிய தமது சத்தியில் எடுப்பாரென்பது.

**திரிகுண சொரூப மாயை சீவருக் குடல்க ளாகி**
**மருவலு மவைகள் பின்னர் மறைதலு முண்டு தூய**
**திரிவித மான சத்தி சிவபிராற் கியல்பா மன்னோ**
**னுருபல வதனிற் கொள்வ னுமையொரு பாக மாதி. (88)**

(அரும் பதவுரை) திருகுண சொரூப - சத்வ ரஜஸ் தமோகுண மயமாகிய; மருவலும் - பொருந்துதலும்; அவைகள் - அவ்வுடல்கள்; திரிவிதமான; இச்சா கிரியா ஞானமயமான; அன்னோன் - அச்சிவபிரான்; உருபல - பலதிருமேனிகளை; அதனில் - அச் சத்தியில்; கொள்வன் - எடுப்பான். அன்னோன் அதனில் உமையொருபாகமாதி பலவுருக்கொள்வன் என்க. ஆதியென்பதால் நீலகண்டம் சந்திரசேகரம் முதலியனவுங் கொள்ளப்படும்.

(பொழிப்புரை) உயிர்களுக்கு சத்வ ராஜஸ தாமஸ குணமாயாகாரிய உடல்கள் பொருந்துதலும் பின்னர் அவ்வுடல்கள் மறைதலும் உண்டு. ஆனால் சிவபிரானுக்கு இச்சை ஞானம் கிரியை என மூவகைச் சக்திகள் இயற்கையாய் உள்ளன. அச்சத்தியே திருமேனியாகக் கொண்டு உமையொருபாகன், நீலகண்டன், சந்திரசேகரன் முதலிய வெவ்வேறு வடிவு சிவபிரான் கொள்வான்.

'உமார்த க்ருத சேகரம் .... நிர்குணம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'உமாஸஹாயம் .... தமஸ: பரஸ்தாத்' என்ற கைவல்யோபநிஷத்தும், 'ஸ்வாபாவிகீஜ்ஞாந பலக்ரியா ச' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'நிர்குணம் ஸத்ய சித்கநம்' என்ற கடருத்ரோபநிஷத்தும், 'சைதன்ய ரூபிணீம்' என்ற திரிபுராதாபிநியுபநிஷத்தும், 'அகண்டாநந்தமயம் விக்ரஹம்' 'நித்ய சிந்மாத்ர ரூபோஸ்மி' என்ற மைத்ரேயோபநிஷத்தும், 'கிம்சித்கூ஌பிதரூபா ஸா சிச் சக்திச் சிந்மயாச்ணவே' என்ற மஹோபநிஷத்தும், 'சிவா | சிச்சக்தி' என்ற யோகசிகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரான் உமாசகாயத்வாதி திருமேனிகளை மாயையிலன்றி அருளாகிய தமது சத்தியில் எடுப்பாரென்பது இச்செய்யுளில் கூறப்பட்டது.

## சிவமூர்த்தங்கலைச் சகுணமென்பதற்கும் நிர்க்குணமென்பதற்குத் தாற்பரியம் இது வென்பது.

**எங்களை யாள நாலா மிறைகொளு முருக்கு ளெல்லா**
**மங்கல சத்தி தன்பால் வரலினாஞ் சகுணந் தானும்**
**பங்கம துறுத்து மாயைப் பட்டிடா வாத லாலே**
**மங்கலி லறிஞர் சொல்வர் மன்னுநிர்க் குணமே யென்று.** **(89)**

(அரும் பதவுரை) ஆள - ஆட்கொள்ள; நாலாம் இறை - சிவபிரான்; கொள்ளும் - எடுக்கிற; உருக்கள் - திருமேனிகள்; சத்திதன்பால் - அருளாகிய குணத்திலிருந்து; வரலின் - உண்டாகிறபடியால்; சகுணமும் ஆம் என்க; மாயைப்பட்டிடா - மாயையின் குணத்திலிருந்து உண்டாகா; உருக்களெல்லாம் என்பது அதற்கு எழுவாய்; மன்னு - விளங்குகிற.

(பொழிப்புரை) என்களை அடிமை கொள்ள சதுர்த்தப் பொருளாகிய சிவபிரான் எடுக்கிற திருமேனிகள் அவனது அருளாகிய குணத்திலிருந்து உண்டாகிறபடியால் குணத்தோடு கூடியதும் ஆகும். ஆனால் மாயையின் குணத்திலிருந்து உண்டாகா. எனவே நிறைந்து நல்லறிஞர் எம்பிரானை நிர்க்குணன் என்று கூறினார்.

'கேவலோ நிர்குணச்ச', 'ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக ஸுநிர்மலாமிமாம் ப்ராப்திமீசாநோஜ்யோதிரவ்ய:' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'ஸகுண நிர்குண ஸ்வரூபம் ப்ரஹ்ம', 'ஸகுண நிர்குண ஸ்வரூபோபவதி' என்ற திரிபாத் விபூதி மஹாநாராயணோபநிஷத்தும், 'புருஷம் நிர்குணம்' என்ற மந்த்ரிகோபநிஷத்தும், 'நிர்குண: கேவலோஸ்ம்யஹம்' என்ற மைத்திரேயோபநிஷத்தும், 'நிர்குணம் ஸத்ய சித்கநம்' என்ற வராஹோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவமூர்த்தங்களைச் சகுணமென்பதற்கும் நிர்க்குணமென்பதற்கும் தாற்பரியம் இதுவென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## உருத்திரன் சத்துவகுணமூர்த்தி, விஷ்ணு தாமதகுணமூர்த்தியென்பது.

**பின்னறு முடிவு காறும் பிஞ்ஞகன் றன்னை யேத்தித்**
**தன்னரு ளுயிர்க்கு வைப்பாற் சத்துவன் மூன்றா மூர்த்தி**
**பன்னக சயனத் தாலும் புத்தனாய்ப் பவித்த லாலும்**
**மின்னனா ராசை யாலும் விட்டுணு தமசி யாவான். (90)**

(அரும் பதவுரை) பின்உறு - கடைசியில் நடக்கும்; முடிவு காறும் - சங்காரம் வரை; வைப்பால் - வைத்தலால்; மூன்றாம் மூர்த்தி - உருத்திரன்; பிரமனும் விஷ்ணுவும் ஸ்ருஷ்டி ஸ்திதிகளைச் சதா செய்துகொண்டிருக்கிற பிரவர்த்தகர்களாகலின் சிவோபாசனையாதி நலன்களைச் செய்யப்போதிய அவகாசமில்லாதவர்கள்; உருத்திரன் சங்காரம் வரை ஒரு பிரவிருத்தியுமில்லாதவன்; ஆகலின் அவனே அந்நலன்களைச் செய்யமுடியும்; பன்னகம் - பாம்பு; பலித்தல் - பிறத்தல்; மின்னனார் - பெண்கள்மேல் வைத்த; ஆசை - மோகம்.

(பொழிப்புரை) சிருஷ்டி, திதி, சம்ஹாரங்களில் இறுதியில் நடக்கும் சங்காரத் தொழிலைச் செய்யும் மூன்றாம் மூர்த்தியாகிய ருத்திரமூர்த்தி சிவபிரானை எக்காலத்தும் வணங்கி அப்பிரான் திருவருளைத் தன்னுயிர்க்குள் வைத்தலால் சத்துவமூர்த்தியாவான், பிரமனும், விஷ்ணுவும், சிருஷ்டி திதிகளைச் சதா செய்துகொண்டிருக்கிற பிரவர்த்தகர்களாகலின் சிவோபாசனையாதி நலன்களைச் செய்யப் போதிய அவகாசமில்லாதவர்கள். உருத்திரன் சங்காரத் தொழில் செய்யும் வரை வேறு ஒரு பிரவிருத்தியுமில்லாதவனாதலின் அவனே சிவோபாசனையாதி நலன்களைச் செய்ய முடியும். அது பற்றியும் அவன் சத்துவமூர்த்தியாதலறிக. அன்றியும் விஷ்ணுமூர்த்தி பாம்பின் மேல் படுத்துக் கிடத்தலாலும், பிறக்கும்போதே தாயைக் கொல்லும் புத்தனாய்ப் பிறத்தலானும், மின்னலையொத்த பெண்டிர் மேல் ஆசை கொள்ளலானும் தாமஸ குணமுடையவன் என்க.

'ஆஸ்திகத்வம் ... ஸாத்விகஸ்ய விசேஷத:' 'நித்ரா .... மோஹ ... மைதுநம் ... தாமஸஸ்ய ... ப்ரஹ்ம வாதிபி:' ஸத்யஜ்ஞாநம் ஸாத்விகம் ... திமிராந்தம் தாமஸமிதி' என்ற சாரீரகோபநிஷத்தும், 'கலியுகத்தின் ஆதியில் ... புத்தனாகி ஜனங்களை மோகிக்கச் செய்வேன்' (இது விஷ்ணு வாக்கியம்) என்ற பாரதம் சாந்தி பருவ 348 ஆவது அத்தியாயமும், 'கள்ள வேடத்தைக் கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும் கலந்தசுரரை உள்ளம் பேதஞ் செய்திட்டுயிருண்டவாறும்' என்ற நாலாயிரப் பிரபந்தமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உருத்திரன் சத்துவகுணமூர்த்தி யென்பதும், விஷ்ணு தாமஸகுணமூர்த்தி யென்பதும் இச்செய்யுளால் தெரிக்கப்பட்டன.

## திதிக்குத் தாற்பரியம் இதுவென்பது.

**இருவினை யின்பத் துன்பத் திடைவிழுந் திளைக்கு மாறு**
**பெருகிய வுயிர்க டம்மைப் பிணித்துல கதனில் வைக்குந்**
**திருமக னளிப்பிற் கேற்றஞ் செப்புவர் கொல்லோ வீச்**
**னருளொரு சங்கா ரத்தி னரும்பொரு ளறிந்த நல்லோர்.** **(91)**

(அரும் பதவுரை) பிணித்து - பந்தப்படுத்தி; திருமகன் - விஷ்ணுவின்; அளிப்பை - திதித்தொழிலை; பயப்பாடு பற்றித் திதி தாமதமென்பது கருத்து.

(பொழிப்புரை) சிவபிரான் திருவருள் மயமான சங்கார கிருத்தியத்தின் அரிய பொருள் நுட்பம் அறிந்த நல்லோர், நல்வினை தீவினை ஆகிய இரண்டன் துன்பக் கடலில்விழுந்து இளைத்துப் போகுமாறு பெருகிய உயிர்க்கூட்டங்களைப் பந்தப்படுத்தி உலகில் வைக்கும் மஹாவிஷ்ணுவின் திதித் தொழிலுக்கு ஏற்றம் கூறுவரோ? மாட்டார்.

'நுகரச் செய்கை காப்பது' என்ற சிவஞான சித்தியார் இச்செய்யுட்குப் பிரமாணம்.

திதிக்குத் தாற்பரியம் இதுவென்பது இச்செய்யுளால் காட்டப்பட்டது.

## சங்காரத்துக்குத் தாற்பரியம் இதுவென்பது

**காரண மதனில் மீளக் காரிய வுலகை வாங்கித்**
**தாரண மீசன் செய்வன் சங்கார மதுவே சீவர்**
**மாரண முற்று மீள வருமிளைப் பொழிக்க வந்தப்**
**பூரண னியற்று மஃதைப் புல்லரே கோற லென்பர்.** **(92)**

(அரும் பதவுரை) வாங்கி - ஒடுக்கி; தாரணம் செய்வன் - வைப்பான்; ஒடுக்கி வைப்பான் - ஒடுக்குவான்; ஆகவே வாங்கித்தாரணம் செய்வன் என்பது ஒரு சொல் நீர்மைத்து என்க; மாரணம் உற்று - இறந்து; மீளவரும் - திரும்பப்பபிறக்கிற; இளைப்பு - சோர்வு; அஃதை - அச்சங்காரத்தை; புல்லர் - அற்பர்; கோறல் - கொலை; என்பர் - என்று பழிப்பார்; பயப்பாடுபற்றிச் சங்காரம் சாத்துவிக மென்பது கருத்து.

(பொழிப்புரை) ஈசன் இக்காரியப்பிரபஞ்சத்தை அதன் முதற்காரணத்தில் (மாயையில்) ஒடுக்கி வைப்பான். அதுவே சங்காரம் என்னும் தொழிற்குப் பொருள். இறந்து மீளப்பிறக்கிற உயிர்கள். அப்படிப் பன்னெடுங் காலம் துன்புற்றுச்

சோர்வடைதலால் அச்சோர்வு நீக்கப் பூரணப் பொருளாம் சிவபிரான் இயற்றும் சங்காரத் தொழிலை, அற்பர்களே கொலைத்தொழில் என்பர்.

பயன் நோக்கிச் சங்காரத் தொழிலைச் சத்துவம் என்பர் பெரியோர்.

'அழிப்பிளைப்பாற்றல்' என்ற சிவஞான சித்தியார் இச்செய்யுட்குப் பிரமாணம்.

சங்காரத்துக்குத் தாற்பரியம் இதுவென்பது இச்செய்யுளால் விளக்கப்பட்டது.

## திதியும் சங்காரமும் இன்னின்ன பார்வையிற் சத்துவமா மென்பது.

**உலகினை யளித்த லென்னு முலகுணி செயலைப் பாரின்**
**சலனவாழ் வுவந்த நொய்யர் சத்துவ குணத்த தென்ப**
**ருலகினை யழித்த லென்னு முருத்திரன் செயலைப் பாரின்**
**சலனவாழ் வுவர்த்த தீரர் சத்துவ குணத்த தென்பர்.** **(93)**

(அரும் பதவுரை) வாங்கி - ஒடுக்கி; தாரணம் செய்வன் - வைப்பான்; ஒடுக்கி வைப்பான் - ஒடுக்குவான்; ஆகவே வாங்கித்தாரணம் செய்வன் என்பது ஒரு சொல் நீர்மைத்து என்க; மாரணம் உற்று - இறந்து; மீளவரும் - திரும்பப்பிறக்கிற; இளைப்பு - சோர்வு; அஃதை - அச்சங்காரத்தை; புல்லர் - அற்பர்; கோறல் - கொலை; என்பர் - என்று பழிப்பார்; பயப்பாடுபற்றிச் சங்காரம் சாத்துவிக மென்பது கருத்து.

(பொழிப்புரை) உலகை உண்ட மஹாவிஷ்ணுவினது உலகைக்காப்பாற்றுதல் என்னும் திதித்தொழிலைத் துக்க வாழ்க்கையை விரும்பிய எளியவர் மட்டுமே சத்துவகுணம் என்பர். உலகைச் சங்காரம் செய்யும் உருத்திரமூர்த்தியின் தொழிலை உலகத் துக்க வாழ்வை வெறுத்த வலியவர் சத்துவ குணமெனப் போற்றுவர்.

கருத்தா, பயப்பாடு, மதிப்பவன் என்னும் மூன்றாலும் சங்காரம் சாத்துவிகமும் திதிதாமதமுமாகிச் சொரூபத்தில் மாத்திரம் மாறிக் கொள்ளும். அதுபற்றி ஆவதொன்றுமில்லையென விடுக்க.

திதியும் சங்காரமும் இன்னின்ன பார்வையில் சத்துவமாம் என்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## உருத்திரன் தாமதவினை செய்யக் காரணம் இது வென்பது.

**சத்துவ குணத்தன் செய்யிற் றாமச வினைநன் றாகஞ்
சத்துவ வினையி லேவத் தமகுண னல்ல னாவன்
சத்துவ குணத்துச் சம்பு தாமத குணத்து மாலச்
சத்துவ வினையி லேவித் தமவினை செய்வான் றானே.** **(94)**

(அரும் பதவுரை) நன்று ஆகும் - கர்த்தாவின் சாத்வித ஞான சாமர்த்தியத்தால் நலன் தருவதாகும்; ஏவ - நியமித்தால்; தமகுணன் நல்லன் ஆவன் - தாமஸி தன்னை நியமித்தவனின் அதிகாரத்துக்கு அஞ்சி அத்தொழிலைச் செய்து தன் சொரூபம் மறையப்பெற்று உத்யோக சொரூபத்தால் நல்லவன் போலாதல் கூடும்; ஏவி - நியமித்து; தாமஸி தாமஸத் தொழிலைச் செய்ய நேர்ந்தால் அது பெருங்கொடுமையாய் முடியும்; உருத்திரன் பரமசாத்துவிகி; ஆகலின் அவன் சங்காரத்தைத் தன்பாலே வைத்துக் கொள்வன் என்க.

(பொழிப்புரை) இயல்பாகவே சத்துவ குணமுடையான் தாமஸ வினை செய்தால் கர்த்தாவின் சாத்விக ஞான சாமர்த்தியத்தால் நலன் தருவதாகும். இயல்பாகவே தாமஸ குணமுடையான் சத்துவ குணத்தொழிலில் நியமிக்கப்பட்டால் தாமஸி தன்னை நியமித்தனவின் அதிகாரத்துக்கு அஞ்சி அத்தொழிலைச் செய்து தன் சொரூபம் மறையப் பெற்று உத்தியோக சொரூபத்தால் நல்லவன் போலாதல் கூடும். சத்துவ குணமுடைய சம்புமூர்த்தி தாமஸகுணத்துத் திருமாலைச் சத்துவகுணத் தொழிலில் ஏவி, தாமஸ குணத்தொழிலைத் தான் செய்தருளுவான்.

தாமஸி தாமஸத் தொழிலைச் செய்ய நேர்ந்தால் அது பெருங்கொடுமையாய் முடியும்; உருத்திரன் பரம ஸாத்துவிகி; ஆதலின் அவன் சங்காரத்தைத் தன்பாலே வைத்துக் கொள்வன் என்க.

இன்றும் பாண்டிய நாட்டில் களவு செய்வார் வகையிலுள்ளான் ஒருவனைத் தேர்ந்து காவல் செய்பவனாகத் தொழில் நிலையங்களில் அமைத்துக் கொள்ளும் வழக்கம் உள்ளது.

'ஸ்ருஷ்டி ஸ்திதி லயஸ்யச காரணத்வமே நசிச்சக்த்யாரஜ: ஸத்வ தமோகுணை:' என்ற ராமபூர்வதாபிநியுபநிஷத்தும், 'தமோ மாயாத்மகோ ருதா: ஸாத்விக மாயாத்மகோ விஷ்ணு ராஜஸ மாயாத்மகோ ப்ரஹ்மா' என்ற பாசுபதப்ரஹ்மோபநிஷத்தும், 'ராஜஸோ … ப்ரஹ்மா … ஸாத்விக: … விஷ்ணு … தாமாஸ: … ருத்ரச்சேதிததோச்யதே' என்ற யோகசூடாமணியுபநிஷத்தும், 'ஸத்வரஜஸ் தமாம்ஸி' என்ற தேவ்யுபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

உருத்திரமூர்த்தி தாமதவினை செய்யக் காரணம் இதுவென்பது இச்செய்யுளால் நாட்டப்பட்டது.

## சங்காரமே கடவுளுண்மையைக் காட்டவல்லதென்பது.

**சிட்டியி லுளது பன்மை திதியினு மதுவா மானா**
**லட்டபி னதுதான் போக வட்டவ னொரு னிற்பான்**
**கட்டற ஞான மீயுங் கபாலியே முதல்வ னென்னப்**
**பட்டன னடலாற் றானே படைப்பளிப் பயன்மாற் கென்னாம்.** (95)

(அரும் பதவுரை) சிட்டி - சிருட்டி; பன்மை - பலதேவர்களின் தொகுதி; அது ஆம் - அப்பன்மை உளதாகும்; அட்டபின் - சங்கரித்த பிறகு; அனைத்தும் - அப்பன்மை முழுவதும்; போக - ஒடுங்க்லான்; அட்டவன் - சங்காரி; நிற்பன் - மீதமிருப்பன்; கட்டு - பந்தம்; அற - நீங்க; அடவால் - சங்காரத் தொழிலால்; என் ஆம் - என்ன பயனைத் தருவதாகும்; சிருஷ்டியிலும் ஸ்திமிலும் பிரமன் அரியென்னுமிவர்களோடு வேறுதேவர்களுமிருப்பார்களாதால் தத்தங் கர்த்தாக்களை முதல்வரெனக் காட்டும் வன்மை அத்தொழில்கட் கில்லை; சங்காரமொன்றே எல்லாத்தேவர்களையும் நாசம்பண்ணித் தன் கர்த்தாவை மீதம் வைப்பதால் அதற்கே அக்கர்த்தாவை முதல்வனெனக் காட்டும் வன்மை யுண்டு.

(பொழிப்புரை) சிருஷ்டியிலும் ஸ்திதியிலும் பிரம விஷ்ணுக்கள் என்னுமிவர்களோடு வேறு தேவர்களுமிருப்பார்கள். ஆதலால் தத்தங் கர்த்தாக்களை முதல்வரெனக் காட்டும் வன்மை அத்தொழில்களுக்கில்லை; சங்காரமொன்றே எல்லாத் தேவர்களையும் நாசம் பண்ணித் தன் கர்த்தாவை மீதம் வைப்பதால் அதற்கே அக்கர்த்தாவை முதல்வனெனக் காட்டும் வன்மையுண்டு.

'நஸ்ய ப்ரக்ருதி லீநஸ்ய ய: பர: ஸ மஹேச்வர:' என்ற நாராயணோபநிஷத்தும், சுகரஹஸ்யோபநிஷத்தும், 'அந்தமாதி' என்ற சிவஞானபோதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சங்காரமே கடவுளுண்மையைக் காட்ட வல்லதென்பதை இச்செய்யுள் நிறுவியது.

## சர்வகிருத்தியங்களும் அநுக்கிரகார்த்தமே யென்பது.

**திதியினு ளடங்கு மேனைச் சிருட்டியு மொடுக்கந் தானுந்**
**திதிபுரி விண்டு தானே தேவெனிற் செப்பக் கேணீ**
**திதியொடு பிறவு மெல்லாந் திகழனுக் கிரகத் தாமத்**
**திதிமுத லதனா லாவன் திகழ்சகா சிவனி லம்மா.** (96)

(அரும் பதவுரை) ஆம் - அடங்கும்; அத்திதிமுதல் - அவ்விஷ்ணு; அதனால் அப்படியடங்குவதால்; ஆவன் - அடங்குவன்.

(பொழிப்புரை) "திதித் தொழிலில் ஏனைச் சிருஷ்டியும் சங்காரமும் அடங்கும். அதனால் அத்திதிக் கடவுளாகிய மஹாவிஷ்ணு முதற் கடவுளாவான்" என்று கூறுவாயாயின்யாம் கூறுவதை அமைந்து கேட்பாயாக. தொழில்கள் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து. அவற்றுள் நிறைவானது அநுக்கிரகமே. அவ்வநுக்கிரகம் செய்பவன் சதாசிவக் கடவுள். ஏனை நான்கையும் அநுக்கிரகம் அடக்கி நிற்கும். எனவே சதாசிவக் கடவுளிடத்து திதி கர்த்தாவாகிய மஹாவிஷ்ணுவும் அடங்குவார்.

சர்வ கிருத்தியங்களும் அநுக்கிரகார்த்தமே யென்பது இச்செய்யுளால் புலப்படுத்தப்பட்டது.

## தெய்வகுணமாகாதன இவையென்பதும் அவை விஷ்ணுவிடமே காணப்படுமென்பதும்.

**வஞ்சக முறுதல் சாமம் வணங்குத லழுகை மோகந்**
**துஞ்சறு படைகட் காசை சொன்னசொற் புரட்ட றோல்வி**
**யஞ்சிட லதர்மப் போரி லன்பரைச் செலுத்த லாதி**
**நஞ்சிவ தேவற் கில்லை நாரண வுமிருக் குண்டால்.** (97)

(அரும் பதவுரை) வஞ்சகம் உறுதல் - பிறர் செய்யும் மாயைமிலகப்பட்டு வருந்துதல்; மோகம் - அறிவிழத்தல்; துஞ்சு அறு - கெடுதலில்லாத; படை கட்கு - ஆயுதங்களுக்கு; தோல்வி - தோற்றல்; அஞ்சிடல் - நடுங்கல்; ஆதி - முதலியவை; நாராயணனை உயிரென்னவே அவனிற்கீழிட்ட பிரமன் இந்திரன் முதலிய எல்லாத்தேவர்களையுமே உயிர்க்ளென்று சொன்னதாயிற்று.

(பொழிப்புரை) பிறர்செய்யும் மாயையில் அகப்பட்டு வருந்துதல், பெண்டிர் மேல் காமங் கொள்ளல், தன்னியன் மேலோரை வணங்குதல், உறவினர் கொண்ட துயரம் கண்டு அழுதல், கெடுதலில்லாத ஆயுதங்கள் பெற ஆசைப்படுதல், சொன்ன சொல்லைப் புரட்டிப் பேசுதல், தோல்விக்குப் பயப்படுதல் அதர்ம யுத்தம்

செய்யத் தம் அன்பர்களையே தூண்டுதல் முதலியன நாராயணனாகிய உயிருக்குண்டு; ஆனால் எங்கள் சிவபிரானாகிய தேவதேவ தேவனுக்கில்லை.

'மாயமான் றன்னைப் பொய்ம்மா னெனவறியா தரக்கன் மாயையி லகப்பட்டு' என்ற சிவஞான சித்தியாரும், 'மாயனவ்வேடங் கொண்டேவன் சலந்தரன் கிழத்தியூய நலங்கவர்ந்தான்' என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவும், 'ஜநார்த்தனர் ..... எல்லா முனிவர்களையும் வணங்கிப் பூஜித்து' என்ற பாரதம் உத்தியோக பர்வம் 83 ஆவது அத்தியாயமும், 'பலராமரும் ஜனார்த்தனரும் .... பாண்டு புத்திரர்களைப் பார்த்தும் .... திரௌபதியைப் பார்த்தும் மிக்க துயரமுற்றவர்களாகத் துன்பக் குரல்களை வெளியிட்டுக் கொண்டு அழுதார்கள்' என்ற பாரதம் வனபர்வம் 110-ஆவது அத்தியாயமும், 'நானும் மோகத்தை அடைந்தவனாகித் தேர்த் தட்டில் உட்கார்ந்தேன்' (நானும் - கிருஷ்ணனும்) என்ற ஷை 21-வது அத்தியாயமும், விஷ்ணு சக்கரம் பெற ஆசைப் பட்டதும், கிருஷ்ணன் பாரத யுத்தத்தில் படைக்கலங்களைத் தொடுவதில்லை என்ற பிரதிக்ஞை செய்திருந்தும் சில சமயங்களில் குபிதராகி அவற்றை ஏந்தி யுத்தத்திற்குப் புறப்பட்டதும், கிருஷ்ணன் வாணனிடம் பலமுறை தோற்றதும், துருவாசருக்குப் பயந்து அவருடைய எச்சிற் பாயஸத்தைத் தன் உடம்பெங்கும் அக்கிருஷ்ணன் தடவிக்கொண்டதும், ராமன் மறைந்திருந்து வாலியைக் கொன்றதும், கிருஷ்ணன் தருமனைப் பொய் சொல்லித்துப் துரோணருயிரை வாங்கு வித்ததும், 'ஸர்வேதேவா பசுதாமவாபு: ஸ்வயம் தஸ்மாத் பசுபதிர்பபூவ' 'ஹேயாந் விஷ்ண்வாதிகாந்ஸூரந்' என்ற சரபோபநிஷத்தும், 'விஷ்ண்வாதி ஸூரைரஜஸ்ரம்' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

தெய்வ குணமாகாதன் இவை என்பதும் அவை விஷ்ணுவிடமே காணப்படுமென்பதும் இச்செய்யுளால் தெரிவிக்கப்பட்டன.

## சிவபிரானொருவரே பிறவாதவ ரென்பது.

**ஒள்ளலர் மிசையோன் விண்டுவுருத்திரன் மகவா னென் போர்**
**கள்ளவிந் திரியத் தோடுங் கலகவைம் பூதத் தோடுந்**
**தள்ளரும் பிறப்பைக் கொள்வர் சம்புவே பிறவி தன்னைக்**
**கொள்ளலன் விளையாட் டானுங் குணமுளாய் மறையிற் காணே.** **(98)**

(அரும் பதவுரை) ஒள் அலர் மிசையோன் - பிரமன்.

(பொழிப்புரை) நற்குணமுடையவனே! பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், இந்திரன் என்போர் கள்ளஞ் செய்யும் இந்திரியங்களோடும், கலகம் செய்யும் ஐம்பூதங்களோடும் நீக்க முடியாத பிறப்பை மேற்கொள்வர். எங்கள் சம்புமூர்த்தி

விளையாட்டிற்காவாவது பிறப்பை மேற்கொள்ள மாட்டான். இவ்வுண்மையை இருக்கு முதலிய வேதங்களிற் கண்டுகொள்.

‘ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதர் நகாரணம்’ என்ற அதர்வசிகோபநிஷத்தும், ‘ப்ரஹ்மா விஷ்ணுச்ச ருத்ரச்ச ஸர்வேவா பூதஜாதய:’ என்ற மஹோபநிஷத்தும், ‘ஸர்வேசம் அஜம் சிவம்’ என்ற மண்டலப்ராஹ்மணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரான் ஒருவரே பிறவாதவர் என்பது இச்செய்யுளால் நிறுவப்பட்டது.

## சிவபிரானே உயிர்களுக்குப் பிறப்பிறப்புத் துன்பத்தை நீக்குவாரென்பது.

**மடநலார் வயிற்றில் வாரா மரித்திடா வியல்பு வாய்ந்த**
**கடவுளான் சிவனே யாவன் கருணையா லவனே சீவர்க்**
**கடவலான் பிறப்பைச் சாவை யச்சுதன் வல்ல னாமின்**
**முடமுளான் றன்னைத் தூக்கி முடவனு நடக்க வல்லான்.** **(99)**

(அரும் பதவுரை) மடநலார் வயிற்றில் வாரா - பிறவாத; மரித்திடா - இறவாத; அடவலான் - ஒழிக்கவல்லான்.

(பொழிப்புரை) இளமை பொருந்திய பெண்கள் வயிற்றில் பிறத்தலும் பின்னர் இறத்தலுமில்லாத இயல்போடு கூடிய கடவுள் எங்கள் சிவபிரானே யாவன். அவனே கருணை மிகுதியால் உயிர்க் கூட்டத்திற்குப் பிறப்பு இறப்பை ஒழுக்கவல்லான். அச்சுதன் அப்பிறப்பு இறப்பை உயிர்களுக்கு ஒழிக்க வல்லனாயின் இருகாலுங் கையுமில்லாத முடவனொருவன் அப்படிப்பட்ட பிறிதொரு முடவனைத் தூக்கி நடக்க வல்லவனாவான்.

‘அஜாத இத்யேவம் கச்சித் பீரு: ப்ரதி பத்யதே । ருத்ரயத்தே தக்ஷிணம் முகம் தேநமாம் பாஹி நித்யம்’ என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், ‘உடைந்த மரக்கலம் பிறிதொரு மரக்கலத்தை கரையடைவிக்க மாட்டாது; அது போலப் பிறந்திறந்துழலுந் தேவர் அவ்வாறுழலு மெம்மனோர்க்குச் சரணாக மாட்டார்’ என்ற சதுர்வேத தாற்பரிய சங்கிரகமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரானே உயிர்களுக்குப் பிறப்பிறப்புத் துன்பத்தை நீக்குவாரென்பது இச்செய்யுளால் தெரித்துரைக்கப்பட்டது.

## விஷ்ணு வீழ்ந்த தேவகி கோசலை முதலியோரின் கருவினுள்ளேயே சகலவுயிர்களும் விழாமையால் கருப்பத்துள் விழுந்தவுயிர்களைக் கடவுளுங் கருப்பத்துள் விழுந்தே யெடுப்பரென்றல் பொருந்தா தென்பது.

**கூவிலி லாழுஞ் சேயைக் குதித்தெடுத் தாளுந் தாய்போற்**
**பாவம துடையார் வீழ்சூற் படுகுழி தனின்மால் வீழ்ந்தப்**
**பரவரை யெடுப்ப னென்றாய் பண்டவன் வீழ்ந்து நொந்த**
**தேவகி கருவுட் டானோ செறிவன வுயிர்க் ளெல்லாம்.** **(100)**

(அரும் பதவுரை) கூவலில் கிணற்றில்; ஆழும் - விழுந்த; சேயை - குழந்தையை; பண்டு - முன்காலத்தில்; அவன் - அம்மாலோன்; தேவகி - கண்ணந்தாய்; இங்கு உபலக்கணம்; செறிவன - புகுந்து அழுந்துவன.

(பொழிப்புரை) "கிணற்றில் விழுந்த குழந்தையை அக்கிணற்றில் குதித்தெடுத்து ஆளுந் தாய்போல் எங்கள் விஷ்ணு மூர்த்தியும் பாவமுடையார் வீழும் பிறவிப் படுகுழியில் விழுந்து அப்பாவிகளைக் கருணையால் எடுத்தாள்வான். அதனையும் குற்றம் என்பையோ" என்று கூறுவையாயின், அறியாது கூறினாய், முன்னர்க் கிருஷ்ணனாய்ப் பிறந்த பொழுது தேவகி வயிற்றில் தங்கினானே, அவ்வயிற்றில் தான் சகல உயிர்க் கூட்டமும் புகுந்து தங்கினவோ?

விஷ்ணு விழுந்த தேவகி, கோசலை முதலியோரின் கருவில் சகலவுயிர்களும் விழாமையால் கருப்பத்துள் வீழ்ந்த உயிர்களைக் கடவுளுங் கருப்பத்தில் விழுந்தே எடுப்பரென்றல் பொருந்தாதென்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## பிறப்பனவெல்லாம் உயிர்களே யென்பது.

**எவனுரு நான்கு தோற்றத் தெழுவகைப் பிறப்பின் பாலா**
**மவலவெண் பத்து நானூ றாயிர யோனி புக்குப்**
**பவமுறு முயிரே யன்னோன் பகர்பரப் பிரம மல்லன்**
**சிவனல தாரே யாண்டுச் செறிந்துருச் சமைத லேயார்.** **(101)**

(அரும் பதவுரை) உரு சரீரம்; நான்கு தோற்றம் - கருப்பை முட்டை விதை வேர்வை; எழுவகைப் பிறப்பின் பாலாம் - ஊர்வன மனிதர் நீர்வாழ்வன விலங்கு பறவை தேவர் தாவரம் என்பவற்றைச் சேர்ந்த; அவலம் - துன்பம்; பவமுறும் - பிறக்கும்; எவனுருப் பவமுறும் அன்னோன் உயிரே, பரப்பிரமம் அல்லன் என்க. அன்னோன் - அந்தச் சரீரத்தையுடையவன்; பகர் - வேதத்திற் சொல்லப்பட்ட; ஆண்டு

- அந்தயோனிகளில் செறிந்து - புகுந்து; உருச் சமைதல் - சரீரம் உண்டாவதை; ஏயார் - பொருந்தார்.

(பொழிப்புரை) எவன் கருப்பை - முட்டை - விதை - வேர்வை என நால்வகைத் தோற்றத்துள்ளும், ஊர்வன - மனிதர் - நீர் வாழ்வன - விலங்கு - பறவை - தேவர் - தாவரம் என்னும் ஏழு வகைப் பிறப்பினுள்ளும் சேர்ந்து எண்பத்து நான்கு லட்சம் யோனியினுள்ளும் புகுந்து, துன்பந்தரும் சரீரப் பிறப்பை அடைவானோ அவன் உயிரே. அப்படிப்பட்டவன் வேதத்திற் சொல்லப்பட்ட பரப்பிரமப் பொருளாகான். சிவபிரான் அன்றி வேறு எவன் அந்த யோனிகளில் புகுந்து சரீரம் பொருந்தாதான்? சிவனே பிறப்பில்லாப் பரப்பிரமம்.

'அண்டஜம் ஸ்வேதஜ முத்பிஜ்ஜம் ஜராயுஜம் யத் கிம் சைதத் ப்ராணி ஸ்தாவர ஜங்கமம் மஜீஜநத்' என்ற பஹ்வ்ருகோபநிஷத்தும், 'உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம் நிரைசேரப் படைத்து' என்ற தேவாரமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

பிறப்பன எல்லாம் உயிர்களே யென்பது இச்செய்யுளால் தெரித்துணர்த்தப்பட்டது.

## கடவுள் கருவுள் உருவங்கொள்ளாமையால் அவருடைய வியாபகத்துவங் கெடாதென்பது.

**கருவினு ளுருவங் கொள்ளான் கடவுளென் றுரைக்கி னன்னான்**
**சருவவி யாபி யாதல் சரதமன் றென்றா யாருங்**
**கருவினு ளில்லை யென்னார் கடவுளை கருவுட் கொள்ளுஞ்**
**சருவவி யாபி தேகஞ் சமைவதெவ் வண்ண மாங்கே.** **(102)**

(அரும் பதவுரை) சரதம் அன்று - உண்மையாகாது; சமைவது - உண்டாவது; எவ்வண்ணம் - எப்படி; ஆங்கே - அக்கருவுள்.

(பொழிப்புரை) 'கருப்பையின் உருவங் கொள்ளாதவன் கடவுளாகான் ஏனெனில் அங்குச் செல்லாதவனாகலின் கருப்பையில் இல்லாமை அவனுக்கு ஏற்பட்டு அவன் சர்வவியாபி என்பது இல்லையாய் விடும். சர்வவியாபகம் எவனுக்கு இல்லையோ அவன் கடவுளில்லை. சிவனுமத் தன்மையால் கடவுள் ஆக மாட்டான்' என்று கூறுவாயாயின் கடவுள் கருப்பையில் இல்லை என்று சொன்னது யார்? யாருமில்லை. அதுநிற்க, கருவில் உட்புகுந்து தனக்கிடமாக்கிக் கொள்ளும் நீ கூறும் சர்வ வியாபியாகிய கடவுளது தேகம் அக்கருவுள் உண்டாவது எப்படி?

கடவுள் கருவுள் உருவங் கொள்ளாமையால் அவருடைய வியாபத்வம் கெடாதென்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## கடவுள் பிறந்தாலவரோடு உயிரிடை வேற்றுமை காணமுடியாதென்பது.

**கருவதி லுயிரே சேருங் காரணங் கரும மாகு**
**மொருசில ரதனிற் றேவு முறுமது சுயேச்சை யென்ப**
**ருருவொடு பிறந்த பின்ன ருயிரது தேவிஃதென்றவ்**
**விருவரி னியல்பை வெவே றெப்படி யறிதல் கூடும்.** **(103)**

(அரும் பதவுரை) தேவும் - கடவுளும்; உறும் - பொருந்தும்; உருவொடு பிறந்த பின்னர் - கருவிலிருந்து சரீரத்தோடு வெளிப்பட்ட பிறகு; இருவரின் உயிர் கடவுள் என்னும் இருபொருள்கனினுடைய; எப்படி அறிதல் கூடும் - ஒருபடியாலும் அறியமுடியாதது என்றபடி.

(பொழிப்புரை) தாயின் கருவில் உயிரே சேரும். காரணம் அவ்வுயிர் முன் ஈட்டிய புண்ணிய பாவ வினைகளே யாகும். ஒரு சிலர் 'கடவுளும் கருவுள் சேருவர். அஃது அவர்க்குச் சுயேச்சை, வினை காரணமன்று' என்பர். உயிர்களும், கடவுளும் கருவிலிருந்து சரீரத்தோடு வெளிப்பட்ட பிறகு இது உயிர் இது கடவுள் என அவ்விரு பொருள்களின் இயல்பை வேறு வேறாக அறிதல் எப்படி முடியும்? ஒரு படியாலும் அறிய முடியாது என்றபடி.

'இருவினை யின்பத் துன்பத் திவ்வுயிர் பிறந்திறந்து வருவது போவதாகும்' என்ற சிவஞான சித்தியாரும், 'நால்வகை யோனியுள் ஒரு யோனி வாய்ப்பட்டு பிறப்பன யாவை அவையெல்லாம் சீவவர்க்கம். அவ்வாறு பிறந்தலில்லது யாது அது பதிபொரு னென்னு மிதுவொன்றே ஏனைச் செயல் களான் வேற்றுமையறிய வாராத அவ்விரண்டற்குந் தம்முன் வேற்றுமையறிய நிற்பதாகலின்...' என்ற சிவஞான சித்தியார்க்கு ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் அருளிய பொழிப்புரையும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

கடவுள் பிறந்தால் அவரோடு உயிரிடை வேற்றுமை காண முடியாதென்பது இச்செய்யுளால் காட்டப்பட்டது.

## அற்புதங்கள் செய்வதனாலேயே ஒருவர் கடவுளென்று சொல்லப் படமாட்டாரென்பது.

**உற்பவ மெடுத்த தேவ னோங்குதன் பரத்து வத்தை**
**யற்புத வினைக ளாற்றி யனைவர்க்குந் தெரிப்பா னென்பாய்**
**பற்பல வினைக ளந்தப் படிபல முனிவர் செய்வார்**
**தற்பர னிவனென் றன்னோர் தமையெவண் பிரித்துக் காண்பாய். (104)**

(அரும் பதவுரை) அன்னோர் தமை - அந்தத் தேவனையும் அந்த முனிவர்களையும், எவண் - எப்படி?

(பொழிப்புரை) 'உயிர், கடவுள் ஆகிய இருவரும் சரீரத்தோடு வெளிப்பட்ட பின் அவர்களியல்பை ஒரு படியாலும் அறியமுடியாது என்ற கூற்று முற்றிலும் பொருந்தாது. பிறப்பெடுத்த கடவுள் பல அற்புதச் செயல்கள் செய்து தன் பரத்துவத்தை உயிர்களுக்குத் தெரிவிப்பார்' என்று நீ கூறுவையாயின் அகத்தியர் முதலிய முனிவர் பலர் கடலைக் குடித்தல் முதலிய பல அற்புதவினைகள் செய்தமை நூல்களுள் பேசப்படுகின்றன. முனிவர், கடவுள் ஆகிய அவ்விருவருள் கடவுளைப் பிரித்தறிவது எப்படி?

அற்புதங்கள் செய்வதனாலேயே ஒருவர் கடவுளென்று சொல்லப்படமாட்டாரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## அயோனிசங்களாகிய சிலவுயிர்களின் அடிமைத்திறத்தால் அவற்றைக் கடவுளின் வேறெனப் பிரிக்கலாமென்பது.

**எருக்கணி மீசன் போல விவ்விடைச் சீவர் சில்லோர்**
**கருக்குழி புகாமல் வந்தார் காட்டவர் பேத மென்னிற்**
**றிருக்கிள ரவன்பா லன்பார் சீவருட் சிலர்க்கே யுண்டவ்**
**வுருக்கொள லவன்முனன்னோ ரொடுங்கலாற் பேதங் காணே. (105)**

(அரும் பதவுரை) இவ்விடை - இவ்வுலகில்; அவர் பேதம் - அப்படிக் கருக்குழி புகாமல் வந்த சீவர்க்கும் கடவுளுக்கும் உள்ள பேதத்தை; திருக்கிளர் அவன்பால் - அந்தச் சிவபிரானிடத்து; அன்பு ஆர் - பக்தி பொருந்திய; அவன் முன் - அந்தச் சிவபிரானுடைய சந்நிதானத்தில்; அன்னோர் - கருக்குழி புகாமல் வந்த அச்சீவர்; ஒடுங்கலால் - தம்வலிகுன்றலால்; நரஸிம்மமூர்த்தி அயோனிஜர்; ஆயினும் அவர்வலி சரபமூர்த்திமுன் குன்றியது; சரபமூர்த்தியாய் வந்தவர் சிவபிரான்.

(பொழிப்புரை) "எருக்கம்பூச் சூடும் சிவபெருமான் போலலே சில உயிர்களும் கருப்பையில் புகாமல் இவ்வுலகில் வந்தார்கள். அப்படிக் கருக்குழி புகாமல் வந்த சீவர்க்கும் கடவுளுக்கும் உள்ள பேதத்தைக் காட்ட உன்னால் இயலுமோ?" என்று கேட்பையாயின் அந்தச் சிவபிரானிடத்துப் பக்தி பொருந்திய உய்ரிகளில் சிலர்க்கே அவ்வாறு கருவுள் புகாது உருக்கொள்ளும் வல்லமையுண்டு. சிவ சீவ பேதத்தை, அந்தச் சிவபிரானுடைய சந்நிதானத்தில் கருக்குழி புகாமல் வந்த அச்சீவர் தம் வலிகுன்றி ஒடுங்கி நிற்றலால் கண்டு கொள்ளலாம்.

நரஸிம்ஹமூர்த்தி அயோனிஜர்; ஆயினும் அவர் வலி சரபமூர்த்தியின் முன் குன்றியது. சரபமூர்த்தியாய் வந்தவர் சிவபெருமான்.

அயோனிசங்களாகிய சிலவுயிர்களின் அடிமைத் திறத்தால் அவற்றைக் கடவுளின் வேறெனப் பிர்க்கலாமென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## திருமேனிட் தாங்கி வந்த கடவுளிடம் நிந்தைபோல் தோன்றும் லீலைகளும் அவரின் பிறவாமை யொன்றானேயே மதிப்படையும் என்பது.

**யோனியி லுதித்த பின்மா லுஞற்றிடு செயக ளுள்ளே**
**யீனமி தி஼தா மென்று மேற்றமி தி஼தா மென்று**
**மானவ னவற்றை யெல்லாம் வகுக்குமா றுளதோ நேரே**
**யீனர னுறலி னன்னோ னிலீலைகட் கிகழ்ச்சி யின்றே.** (106)

(அரும் பதவுரை) மால் உதித்தபின் உஞற்றிடு என்க; உதித்த பின் - பிறந்ததிலிருந்து; உஞற்றீரு - செய்த; இது இ஼து ஈனம் ஆம் இது இ஼து ஏற்றம் ஆம் என்க, இது இ஼து - இன்னஇன்னசெயல்; ஈனம் - மனிதத்தன்மை; ஏற்றம் - தெய்வத்தன்மை; மானவன் - மனிதன்; அவற்றையெல்லாம் - அம்மால் செத்ததுவரைச் செய்த எல்லாச் செயல்களையும் ஒன்றும் விடாமல்; வகுக்கும் ஆறு உளதோ - பிரித்துக் காணும் வழி உண்டோ? நேரே - கருப்பவாச மின்றி; ஈன் - இவ்வுலகில்; உறவின் - திருமேனிதாங்கி வெளிப்படுவதால்; அன்னோன் - அவ்வரனுடைய; இலீலைகட்கு - மனிதர் செயல்போற் றோன்றுஞ் செயல்களுக்கு; இகழ்ச்சி - நிந்தை; இன்று - இல்லை.

(பொழிப்புரை) நால்வகை யோனியுள் ஒருயோனி வாய்ப்பட்டுத் திருமால் பிறந்தது முதல் செத்தது வரை எல்லாச் செயல்களையும் ஒன்றும் விடாமல் இது இது மாந்தர் முதலிய உயிர்ச்செயல், இது இது தெய்வசெயல் என ஒரு மனிதன் பிரித்துக் காணும் வழியுண்டா? ஆனால் நால்வகை யோனியுள் ஒரு யோனி வாய்ப்பட்டுப் பிறந்திறவாது இவ்வுலகில் நேரே திருமேனி தாங்கி

வெளிப்படும் அரனது மனிதர் போல தோன்றும் திருவிளையாடல்களுக்கு நிந்தை எக்காலத்தும் இல்லை என்றுணர்க என்பதால்.

ஈன்+அரன்+உறலின் எனப்பிர்க்க. ஈன் - இவ்வுலகில், உறலின் - திருமேனி தாங்கி வெளிப்படுவதால்.

இச்செய்யுளால் திருமேனி தாங்கி வந்த சிவபிரானிடம் நிந்தை போல் தோன்றும் லீலைகளும் அவரின் பிறவாமை ஒன்றானேயே மதிப்படையும் என்பது கூறப்பட்டது.

## காரண காரியக் கிரமங்களை யறியாதவரே கடவுளுக்குப் பிறப்புண்டென்பாரென்பது.

**காரண வீசன் யாண்டுங் கருப்புகா மேன்மை தன்னைக்**
**காரண மின்றி யாருங் கருவினுட் புகுவா ரென்றுங்**
**காரண மவாவே யாகக் கடவுளங் குறுவா னென்றுங்**
**காரண வழுக்கள் கூறுங் கற்றிலா ரறிவார் கொல்லோ.** **(107)**

(அரும் பதவுரை) அவா - இச்சை; வழுக்கள் - பிழைகள்; கற்றிலார் - படியாதவர்; காரணமின்றி யாருங் கருவினுட் புகுவார் (Birth is accidental) என்பர் நாஸ்திகராதியோர்; விஷ்ணு இச்சைவத்தாற் பிறபாரென்பார் வைஷ்ணவராதியோர்.

(பொழிப்புரை) காரணமின்றியே யாருங் கருவினுள் புகுவர் (Birth is accidental) என்னும் நாத்திகராதியோர் கூற்றும், இச்சை வசத்தால் கடவுள் கருவுட்பட்டுப் பிறத்தலுங்கூடும் என்னும் வைஷ்ணவராதியோர் கூற்றும் காரண வழுக்கள் கூறும் கல்லாதவர் கூற்றெனத் தள்ளுக. அப்படியாதலின், மடவோர் நிமித்த காரணானாகிய சிவபரம்பொருள் எக்காலத்தும் கருவுள் படான் என்னும் மேலாம் பொருண்மைக் கூற்றை உள்ளங் கொள்ளுவரோ? மாட்டாரென்க.

காரண காரியக் கிரமங்களை அறியாதவரே கடவுளுக்குப் பிறப்புண்டென்பா ரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## சிவபிரான் சாகாதவ ரென்பது.

**சூக்கும வுடம்பின் பாலாய்த் தோன்றுமித் தூல தேகஞ்**
**சூக்கும வுடம்பை விட்டித் தூலநீங் கிடலே சாவாஞ்**
**சூக்கும வுடம்பு மாயை யாதலாற் சோமன் றோயான்**
**சூக்கும தூல மாமத் துவயமு மதனாற் சாகான்.** **(108)**

(அரும் பதவுரை) சூக்கும வுடம்பும் மாயை - சூக்கும சரீரமுந்தூல சரீரம்போல மாயாகாரியம்; சோமன் அத்துவயமும் தோயான் என்க. சோமன் - சிவபிரான்; தோயான் - மேற்கொள்ளமாட்டான்' அத்துவயமும் அவ்விரண்டையும்; அதனால் - அப்படித்தோயாமையாலே.

(பொழிப்புரை) சூக்கும உடம்பினின்றும் கண்ணுக்குத் தெரியும் இத்தூல உடம்பு தோன்றும். சூக்கும உடம்பு இத்தூல உடம்பை விட்டுப் பிரிதலே சாவு என்று உலகில் கூறப்படும். சூக்கும தூல உடம்புகள் இரண்டும் மாயாகாரியங்கள் ஆதலால் அவ்விரண்டு உடம்புகளையும் சிவபிரான் பொருந்த மாட்டான். அப்படிப் பொருந்தான் ஆதலினாலேயே சாவும் அப்பிரானைப் பொருந்தாது.

சிவபிரான் சாகாதவர் என்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## விஷ்ணு பிறந்தது அவரிச்சையாலென்பதற்குப் பொருளிதுவென்பது.

**தீவினை தனக்குத் தந்த சென்மமெப் பயனு மின்றிப்**
**போவது விரும்பா விண்டு புராரிபாற் பணிந்து தன்ம**
**தாவன முலகிற் செய்யுஞ் சதுரினை வேட்டா னம்மால்**
**மேவிடு பிறப்பின் வித்தா விளம்பவாப் பொருடா னஃதே.** **(109)**

(அரும் பதவுரை) தன்மதாவனம் - தர்மஸம்ஸ்தாபனம்; சதுரினை - வன்மையை; வேட்டான் - வேண்டி நின்றான்; மேவிடு - கொண்ட; வித்து ஆ - காரணமாக; விளம்பு - சொல்லப்படுகிற; அவா - இச்சைக்கு; பொருள் - அருத்தம்; அஃதே - அவ்வேண்டி நின்றதே.

(பொழிப்புரை) பிருகு மஹரிஷியின் மனைவியைக் கொன்ற தீவினையால் ஏற்பட்ட சாபப்பயனாகிய பிறப்புக்கள் பயனுடையனவாக வேண்டுமென்று மஹாவிஷ்ணு விரும்பித் தர்ம ஸம்ஸதாபனம் செய்யும் பிறவிகள் எடுக்கும் வன்மையை விரும்பித் தவம் செய்து சிவபிரானிடம் வேண்டி நின்றார். அத்திருமால் கொண்ட பிறப்புக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்ற சுவேச்சைக்கு அர்த்தம் அவ்வேண்டி நின்றதேயாம்.

'நாராயணஸ்ய ஸ்வேச்சாநு சாரேணோந்மேஷோ ஜாயதே' 'நாராயணஸ்யேச்சாவ சாந்திமேஷோ ஜாயதே' என்ற திரிபாத் விபூதி மஹாநாராயணோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

விஷ்ணு பிறந்தது அவரிச்சையாலென்பதற்குப் பொருளிதுவென்பது இச்செய்யுளால் காட்டப்பட்டது.

## தசாவதாரங்களுட் சில தண்டிக்கப்பட்டபடியால் அப்பத்தவதாரங்களும் பிறவும் கர்மவசமேயாமென்பது.

**மாமியி னுயிரை வாங்கி மாமனாற் சபிக்கப் பட்டுப்**
**பூவிமா லுதித்த போது புராரிகைப் பட்டு நைந்தான்**
**வாமன மச்சங் கூர்மம் வராகமா மடங்கல் தன்னில்**
**காமமோ வதனா லந்தக் கார்வணற் கவதா ரங்கன்.** **(110)**

(அரும் பதவுரை) மாமி - பிருகுமகரிஷியின் மனைவி, கியாதி யென்ற பெயருடையவன், ஒரு சமயம் இலக்குமி அவள் வயிற்றிற் பிறந்தாள்; மாமன் - பிருகு மகரிஷி; மடங்கல் - நரசிங்கம்; தன்னில் என்பதைத் தனித்தனிக் கூட்டுக; காமமோ - இச்சையோ; கார்வணற்கு - விஷ்ணுவுக்கு.

(பொழிப்புரை) பிருகு மஹரிஷியின் மனைவி கியாதியின் உயிரை வாங்கித் தமது மாமனாகிய பிருகு மஹரிஷியால் சபிக்கப்பட்டுத் திருமால் பூமியில் உதித்த அவதாரங்களாகிய பத்தில் வாமன, மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம அவதாரங்கள் சிவபிரான் கைப்பட்டு நைந்தன. இப்படித் தண்டிக்கப்பட்ட அவதாரங்களும் விஷ்ணுமூர்த்தியின் இச்சை வயத்தனவோ? இல்லையென்க.

காஞ்சிப்புராணம் அரிசாப பயந்தீர்த்த தானப்படலத்தில் 5, 6, 7, 8 ஆவது செய்யுட்களும், 'யோ மத்ஸ்ய கூர்மாதி வராஹ ஸிம்ஹாந் விஷ்ணும் க்ரமந்தம் வாமந மாதி விஷ்ணும் விவிக்லபம் பீட்யமாநம் ... தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

தசாவதாரங்களுட் சில தண்டிக்கப்பட்டபடியால் அப்பத்தவதாரங்களும் பிறவும் கர்மவசமேயாம் என்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## கடவுளுக்குக் கர்ப்பவாசம் வீண்காலப்போக்கென்பது.

**வெப்புறு கருப்பை தன்னுள் விட்டுணு கிடந்த காலை**
**யப்பனே யனையே தானே யயலவர் தாமே கண்ட**
**தெப்பய னெடுமால் கர்ப்பத் திழிந்திட விச்சை யென்றா**
**யிப்படி விருதா வேலை யியற்றிடா னெங்க வீசன்.** **(111)**

(அரும் பதவுரை) அனை - தாய்; தான் - கருப்பத்துட்கிடந்தமால்; அமலவர் - பிறர்; இழிந்திடல் - பிரவேசித்தல்; விருதா - வீண்.

(பொழிப்புரை) வெம்மை பொருந்திய கருப்பையில் விஷ்ணு மூர்த்தி கிடந்த பொழுது அப்பன், அம்மை, கருப்பத்துட்கிடந்த மால் மற்றும் அயலவர் கண்ட பயன் என்ன? துன்பமேயல்லவா? திருமால் கர்ப்பத்தில் பிரவேசித்தல் இச்சையென்று பேசப்பட்டால், அப்படிப்பட்ட விருதா வேலையை எங்கள் ஈசன் எக்காலமும் செய்திடான்.

'பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்டவப்பாங்கினால்' என்ற நாலாயிரப் பிரபந்தமும், 'பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல், மக்கட் பதடி எனல்' என்ற திருக்குறளும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

கடவுளாயின் அவர்க்குக் கர்ப்பவாசம் வீண்காலப் போக்கென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## விஷ்ணுவின் அவதார சரீரங்கள் பெற்றோரின் சுக்கில சோணித பரிணாமங்களே யாமென்பது.

**கருவுட லனைத்தும் பெற்றோர்க கழிமல பரிணா மங்கள்**
**மருவலி னுடல்மா லாங்கே மற்றது மலமா மன்னோற்**
**குருபிறி தாமங் கென்னி னொழிகுவர் தூணாய்ப் பெற்றோர்க**
**தருநிழ லுறலாஞ் சேயாய்த் தமர்க்குமா லீசன் போல. (112)**

(அரும் பதவுரை) கரு உடல் - கருப்பத்திலுண்டாகிற சரீரம்; கழி - விடுகிற; மலபரிணாமங்கள் - சுக்கிலசோணிதங்களாகிய அசுத்தி பதார்த்தங்களின் காரியங்கள்; மால் ஆங்கே உடல் மருவலின் என்க, மருவலின் - அடைவதால்; ஆங்கே - அக்கருப்பத்துள்; அதும் - அம்மாலினுடம்பும்; அன்னோற்கு - அம்மாலுக்கு; உரு - உடம்பு; பிறிது ஆம் - அம்மலபரிணாமங்களல்லாமல் அப்பிராகிருதமாகும்; அங்கு - அக் கருப்பத்துள்; பெற்றோர்க தூணாய் ஒழிகுவர் என்க. பெற்றோர்க - தந்தைதாயர்; தூணாய் ஒழிகுவர் - நரசிம்மம் வந்ததூண் நரசிம்மத்துக்குத் தந்தையுந் தாயுமாகாதவாறு ராமன் முதலியோருக்குத் தசரதன் கோசலை யாதியோருந் தந்தை தாயராகமாட்டார்; ஈசன்போல் மால்தமர்க்கு தருநிழ சேய் ஆய் உறலாம் என்க; ஈசன் - சிவபிரான்; மால் - விஷ்ணு; தமர்க்கு - தம் அன்பர்பொருட்டு; தரு - மரம்; சேய் - குழந்தை; ஆய் - வடிவெடுத்து; அன்பர் - கண்காணக் குழந்தையாய் மரநிழல் குளக்கரை புஷ்பமத்தி முதலிய இடங்களிற் கிடத்தல்.

(பொழிப்புரை) கருப்பத்தில் உண்டாகின்ற சரீரங்கள் தாய் தந்தையர் கழிக்கின்ற சுக்கில சோணிதங்களாகிய அசுத்தி பதார்த்தங்களின் காரியங்களே.

திருமாலும் அக்கருப்பத்துள் சென்று உடல் பொருந்துதலினால் அவ்வுடல் திருமாலுக்கும் அம்மலபரிணாமங்களல்லாமல் அப்பிராகிருதமாகாது. ஆகுமெனின் நரசிம்மம் வந்த தூண் அந்நரசிம்மத்துக்குத் தந்தையும் தாயுமாகாதவாறு இராமன் கிருஷ்ணன் முதலியோருக்குத் தசரதன், கோசலை முதலியோர் தந்தை தாயாராக மாட்டார். அன்றியும் திருமால் சுயேச்சை வசத்தால் பிறப்பெடுத்தாராயின் ஈசன் போலத் தம் அன்பர் கண்காண மரநிழல், குளக்கரை, புஷ்பமத்தி முதலிய இடங்களிற் குழந்தையாய்க் கிடக்கலாமே.

'ஜாதம் ம்ருதமிதம் தேஹம் மாதா பித்ரு மலாத்மகம்', 'மாத்ரு ஸூதக ஸம்பந்தம் ஸூதகே ஸஹஜாயதே । ம்ருத ஸூதகஜம் தேஹம் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நாநம் விதீயதே' என்ற மைத்ரேயோபநிஷத் இச்செய்யுட்குப் பிரமாணம்.

விஷ்ணுவின் அவதார சரீரங்கள் பெற்றோரின் சுக்கில சோணித பரிணாமங்களே யாமென்பது இச்செய்யுளால் நிறுத்தப்பட்டது.

## அப்பிராகிருத சரீரம் நிழல்செய்யா தென்பது.

**தருநிழ லாதி தன்னிற் சங்கர னருளாற் சேயி**
**னுருவது கொண்ட சீரை யுணர்குவ தெவ்வா றென்னிற்**
**கருவரு முடல்போ லன்றிக் காண்டகு மச்சேய் மேனி**
**யிருளுரு நிழலைச் செய்யா வியல்பினா லறிய லாமால்.** **(113)**

(அரும் பதவுரை) கருவரு - கருவிலிருந்து வருகிற; காண்டகு - காணத்தக்க.

(பொழிப்புரை) மரநிழல், குளக்கரை, புஷ்பமத்தி முதலிய இடங்களில் சிவபிரான் திருவருளால் குழந்தை உரு வெளிப்படுவது அப்பிராகிருதம்; ஏனையன மாயாகாரியம் என்னும் உண்மையை உணர்வது எவ்வாறு என்றால் கருவிலிருந்து வருகின்ற உடல் போலன்றிக் காணத்தக்க அக்குழந்தையின் திருமேனி இருளைத் தரும் நிழல் செய்யாது, அந்நிழல் செய்யாமை ஒன்றானே அத்திருமேனி அப்பிராகிருத சரீரம் என்று அறிந்து கொள்ளலாம்.

'சடைமுடியும் வெண்ணீறுந் தாழ்வடமு மரவுரி
முடையவளாய்த் தவம் புரிந்து முருநிழற்ற விலையென்பார்
கடைபயின்ற மடமுடையீர் கரிசுபடு மாயையினாம்
வடிவதுவோ வாநந்த வடிவன்றோ விதுவென்பார்'

என்ற காஞ்சிப் புராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

அப்பிராகிருத சரீரம் நிழல் செய்யாதென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## விஷ்ணு தந்தைகருவினுங் கிடந்தாரென்பது.

**தாய்தலை துணித்தான் சாம தக்கினி தந்தை சொல்லா**
**லேய்வறு மனையை விட்டா னிராகவன் றானு மஃதாற்**
**காய்வினை யவரைத் தந்தை கருவினும் புகுத்திற் றென்றஃ**
**தாய்பவ ரறிவார் யாரே யரற்குமக் குறையுண் டென்பார். (114)**

(அரும் பதவுரை) துணிந்தான் - வெட்டினான்; சாமதக்கினி - பரசுராமர்; தந்தைசொல்லால் - பிதுர்வாக்கிய பரிபாலனத்தால்; எய்வு அறு - நிகரற்ற; மனையை - வீட்டை; மனைவியை; இராகவன் - கோதண்டராமர்; அஃதால் - அவ்விதமான பிதுர்வாக்கிய பரிபாலனத்தால்; அவரை - அவ்விரண்டு ராமர்களையும்; அஃது - அச்சரிதங்களை; அக்குறை - அவ்வாறு தந்தை கருவினுட்டங்குதலாகிய இழிவு.

(பொழிப்புரை) தந்தை ஏவலுக்குக் கட்டுப்பட்டுப் பரசுராமன் தாயாகிய இரேணுகை தலையைத் துண்டித்தான் கோதண்ட ராமனும் அவ்வாறே நிகரற்ற மனையைப் - பேரழகுடைய சீதையைப் - பிரிந்தான். அவ்விதமான பிதுர்வாக்ய பரிபாலனத்தாலேயே அவ்விரண்டு ராமர்களையும் இருவினை காய்ந்தது என்பதும் அதுபற்றி அவ்விருவரும் தந்தை கருவினுள் தங்கும் தாழ்வுடையார் என்பது ஆய்பவரால் தெள்ளிதின் அறியப்படும். ஆனால் அப்படிப்பட்டதொரு தந்தை கருவுள் தங்கும் குறை, சிவபிராற்குண்டெனக் கூறுவார் யாரேனும் உளரோ? இல்லையென்க.

காஞ்சிப்புராணம் இரேணுகேசப்படலம் 9,11,13 ஆவது செய்யுட்களும், வீரராகவேசப்படலம் 7,8,9 ஆவது செய்யுட்களும் 'மணிவாயிடை முத்தந் தருதலு முன்றன் றாதையைப் போலும் வடிவுகண்டு கொண்டு உள்ளம் உள்வுளிர' என்ற நாலாயிரப் பிரபந்தமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

விஷ்ணு தந்தை கருவினுங் கிடந்தாரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## கடவுள் இச்சையாற் பிறந்தாராயின் தாய்க்குப் பிரசவம் சுகமாயிருத்தல் வேண்டும். உயிர்த்தாய்கட்கெல்லாஞ் சுகப்பிரசவங் கிடையாது. தேவகி கோசலை முதலியோர் உயிர்களே. அவர்கட்குப் பிரசவ வேதனையைத் தந்த விஷ்ணுவின் கர்ப்பவாசமும் கர்மவசமேயென்பது.

**சங்கட மின்றிச் சூலைத் தாங்கலு முயிர்த்த றனு**
**மிங்கெவ டனக்கு மாகா யிருவினை யுயிரே யன்னான்**
**மங்கல வுமைக்கெ லீலை யாமவை யவாவால் மாலோன்**
**தங்கிய தகட்டிற் பாரிற் சனித்தது துயர்தாய்க் கன்றோ. (115)**

(அரும் பதவுரை) சங்கடம் - வேதனை; சூல் - கருப்பம்; உமிர்த்தல் - பிரசவித்தல்; இங்கு - இவ்வுலகில்; எவள் தனக்கும் - எவளுக்கும்; ஆகா - முடியா; அன்னாள் - அவள்; அவை - தாங்கலும் உயிர்த்தலும்; அவை உமைக்கே லீலை ஆம் என்க. அவளொருத்தியே தெய்வத்தாயாகலான் என்பது. அகட்டில் - வயிற்றில்; பாரில் - பூமியில்; சனித்தது - பிறந்தது; துயர் - துன்பந்தருவது, மாலோன் அவாவால் அகட்டில் தங்கியது பாரிற் சனித்தது (ஆகியவை) தாய்க்குத் துயர் அன்றோ என்க.

(பொழிப்புரை) துன்பமின்றிக் கருவைத் தாங்கலும் அவ்வாறே துன்பமின்றி மகவைப் பெறுதலும் இவ்வுலகில் இருவினை வயப்பட்ட எப்பெண்ணுக்கும் ஆகா. ஆனால் அவ்விரண்டும் இல்லாமை மங்கல உமாதேவியாரிடத்து மாத்திரம் லீலா மாத்திரையால் உண்டென்க. அவளொருத்தியே தெய்வத்தாயாகலான். இச்சையால் திருமால் தங்கியது மாதா வயிற்றிலும் சனித்தது பூமியிலும் எனின் அவரை ஈன்ற தாய்க்குத் துயர் வரலாமா? வந்ததேயல்லவா?

கடவுள் இச்சையால் பிறந்தாராயின் தாய்க்குப் பிரசவம் சுகமாயிருத்தல் வேண்டும். உயிர்த்தாய்கட்கெல்லாம் சுகப்பிரசவம் கிடையாது. தேவகி, கோசலை, ரேணுகை முதலியோர் உயிர்களே அவர்கட்குப் பிரசவ வேதனையைத் தந்த விஷ்ணுவின் கர்ப்பவாசமும் கர்மவசமேயென்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## விஷ்ணு சாவாரென்பது.

**கோசலை யுதரம் பாய்ந்தோன் குத்திதொருநதியிற் செத்தான்**
**தேசறு கருவாய் வது தேவகி யுதரம் பாய்ந்தோன்**
**நீசன தம்பாற் செத்தா னீதியோ வவர்தே வென்ற**
**னாசமு முதிப்பு மில்லாத நம்பனை வணங்க னன்றே. (116)**

(அரும் பதவுரை) கோசலை உதரம் பாய்ந்தோன் - இராமர்; நதி - சரயூவென்னும் ஆறு; தேக ஆறு - பாய்ந்தோன் - கிருஷ்ணர்; நீசனது - ஜரனென்னும் பெயருள்ள வேடனுடைய; நம்பனை - சிவபிரானை.

(பொழிப்புரை) தசரதன் மனைவியர் மூவருள் மூத்த கோசலை வயிற்றில் தங்கிப் பிறந்த மஹாவிஷ்ணுவின் அவதாரமாகிய இராமன் ஸரயு நதியிற் குதித்து உயிர் துறந்தான். தேவகி வயிற்றில் பிறந்த பிறிதொரு அவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணன் ஜரன் என்னும் வனவேடனது அம்பால் உயிர் நீத்தான். அவ்விருவரையும் முதற்கடவுள் என்று கூறுவது பொருந்துமோ? பிறப்பு இறப்பு இல்லாத சிவபிரான் ஒருவனே முதற்கடவுளும் வணங்கத்தக்கவனுமாவான்.

'எந்தத் தீர்த்தத்தில் ராமர் தேகத்தைவிட்டு ... ஸ்வர்க்கத்தை அடைந்தாரோ (அந்த) ஸரயூநதி' என்ற பாரதத்து வனபர்வம் 323 ஆவது பக்கமும், 'தசரத புத்திரரான ஸ்ரீராமரும் மாண்டார்' 'அந்த ராகவரே மாண்டார்' என்ற பாரதத்து துரோணபர்வம் 59வது அத்தியாயமும், 'பிறகு பலராமர் கிருஷ்ணர் இருவர்களுடைய சரீரங்களையும் பார்த்து .... எரிக்கும்படி செய்தான்' என்ற பாரதத்து மௌஸலபர்வம் 8ஆவது அத்தியாயமும் 'ஸ்ரீ கிருஷ்ணர் பலராமருடன் சரீரத்தை விட்டு விட்டுப் பரமபதம் சென்றுவிட்டார்' என்ற ஷை. ஷை. 9ஆவது அத்தியாயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள். இதில் குறிப்பிடப்பட்ட பாரதம் ம. வீ. இராமானுஜாச்சாரியர் பதிப்பித்த வியாச பாரத மொழிபெயர்ப்பு.

இச்செய்யுளால் மஹாவிஷ்ணு சாவாரென்பது தெரிக்கப்பட்டது.

## கருப்பத்திலிருக்குங் குழவியுஞ் சிவபிரானை தியானித்தே பிறவியை நீக்கிக் கொள்ள விரும்பு மென்பது.

**பசுபதி நன்மா தேவன் உருத்திரன் பருக்க னாதி**
**சசிதரன் நாமஞ் செப்பித் தவிர்ப்பனென் பிறப்பை யென்று**
**சுசியறு கருவி னுள்ளுந் துணியுமே சீவ னென்னி**
**னுசிதம தாமோ வேறோ ருயிர்ப்பிறப் பறுப்ப ரென்றல். (117)**

(அரும் பதவுரை) ஆதி - முதலிய; சசிதரன் - சிவபிரானுடைய; உசிதமது ஆமோ - தகுமோ; ஏனோர் - மற்றைத் தேவர்கள்; உயிர்ப்பிறப்பு - உயிர்களின் பிறவித்துயரை.

(பொழிப்புரை) சுத்தம் நீங்கிய கருவுள் தங்கி வளரும் உயிர் 'பசுபதி, மஹாதேவன், உருத்திரன், பர்க்கன்' முதலிய திருநாமங்களால் சிவபிரான் ஒருவனையே தியானிக்கும். ஏனெனில் 'என் பிறப்பைத் தவிர்ப்பவன் சிவபிரானே' என்னுமுண்மையை அவ்வுயிர் உள்ளவாறு உணர்ந்ததாகலான் அவ்வாறு தியானிக்கும். இவ்வுண்மையை கர்ப்போபநிஷத் எடுத்த குரலில் முழங்கியிருப்ப ஏனைய தேவர்கள் உயிர்களது சனன மரண துக்கத்தை நீக்குவர் என்று பேசுவது தகுமா? தகாது என்க.

'யதியோந்யாம் ப்ரமுச்யேயம் ப்ரபத்யே பரமேச்வரம் பர்கம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும்' என்ற கர்போபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

கர்ப்பத்திலிருக்கும் குழவியுஞ் சிவபிரானைத் தியானித்தே பிறவியை நீக்கிக்கொள்ள விரும்புமென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## மாயையிலகப்பட்டு உழலுபவர் விஷ்ணுவாகலின் ஞானம் சிவோபாசனையாலேயே வாற்பால தென்பது.

**பொய்யுரு மனைவி தன்னைப் பொய்யுருப் பிதாவைச் சென்னி**
**வெய்யவ ரறுத்த போது வெங்களத் திராமன் கண்ண**
**வையகோ வென்று தேம்பி யழுதவர் மாயத் துற்றார்**
**துய்யதொ ரறிவு வேட்டோர் தொழுதிட சிவனாற் றாளே. (118)**

(அரும் பதவுரை) பொய்யுரு மனைவிதன்னை - மாயாசீதையை; பொய்யுருப் பிதாவை - மாயாவசுதேவனை; சென்னி - தலையில்; வெய்யவர் - இந்திரஜித்தும் சால்வராஜனும்; வெம்களத்து - போர்க்களத்தில்; அவர் - அவ்வெய்யவருடைய; மாயத்து உற்றார் - மாயையில் அகப்பட்டார்; துய்யதொரறிவு

- திவ்விய ஞானத்தை; வேட்டோர் - விரும்புபவர் (அதனைப் பெறுதற்கு); தொழுதிட - தொழுவாராக.

(பொழிப்புரை) மாயாசீதையை இந்திரஜித்தும், மாயாவசு தேவனைச் சால்வராஜனும் போர்க்களத்தில் கொன்ற பொழுது முறையே இராமனும் கிருஷ்ணனும் 'ஐயகோ' என அலறித் தேம்பித் தேம்பி அழுத செய்திகள் இராமாயண பாரதங்களுட் பேசப்படுகிறதே. அதுபற்றி இராமனும் கிருஷ்ணனும் இந்திரஜித், சால்வராஜனது மாயையில் அகப்பட்டுத் துயருற்றார் என்பது வெள்ளிடைமலையன்றோ? மாயையின் நீங்கிய திவ்விய ஞானத்தை விரும்பினார் மாயையுட்பட்ட இராம கிருஷ்ணர்களைவிட்டுச் சிவபிரான் திருவடித் தாமரைகளையே தொழுவாராக.

கம்பராமாயணம் மாயாசீதைப்படலமும், மஹாபாரதத்து வனபர்வம் 20, 21, 22ஆவது அத்தியாயங்களும், 'அதிமோஹகரீ மாயா மம விஷ்ணோச்ச ஸுவ்ரத | தஸ்ய பாதாம்புஜத்யாநாத் துஸ்தரா ஸுதராபவேத்' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

மாயையிலகப்பட்டு உழல்பவர் விஷ்ணுவாகலின் ஞானம் சிவோபாசனையாலேயே வரற்பாலதென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## இராமநாம சரித்திரம் இது வென்பது.

**தராதல மதிக்க வாழ்ந்த தசரதன் வசுதே வன்சீர்ப்**
**பிராமண சமதங் கிப்பேர்ப் பெரியனாஞ் சைவ மேலோ**
**ரராவுமா நாமத் தந்த மாகிய விராவை மாவை**
**விராவியே விராமா வென்றார் விளங்குதம் புதல்வர் தம்மை (119)**

(அரும் பதவுரை) தராதலம் - பூமி; சமசங்கிப்பேர்ப்பெரியன் - ஜமதக்கினி முனிவர்; அந்தம் - கடைசியெழுத்து; விராவி - சேர்த்து; என்றார் - என்று பெயரிட்டழைத்தனர்; அந்த ராமர்களே ரகுராமன்; பலராமன்; பரசுராமன் என்பவர்கள்.

(பொழிப்புரை) இப்பூவுலகத்தார் மதிக்க வாழ்ந்த தசரத சக்கரவர்த்தி, ஜமதக்நி முனிவர், வசுதேவன் ஆகிய மூவரும் சைவசமயம் பற்றி ஒழுகிய மேலோராவர். அதனால் தத்தம் புதல்வர்க்கு 'ஹரா, உமா' என்ற சிவசக்திகளின் திருநாமங்களது ஈற்றெழுத்தைச் சேர்த்து 'ராமா' எனக்கூட்டிப் பெயரிட்டழைத்தனர். அம்மூவரையும் உலகம் பிரித்தறிந்து கொள்ளவே ரகுராமன், பரசுராமன், பலராமன் என வழங்கா நிற்கும்.

'சிவோமா ராம மந்த்ரோயம் வஸ்வர்ணஸ்துவஸுப்ரத:' என்ற ராமரஹஸ்யோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

இச்செய்யுளால் இராமநாம சரித்திரம் இதுவென்பது தெரிக்கப்பட்டது.

## இதுவுமது

**கோசலை யீன்ற சேயே குவலயத் திராம னென்னி**
**னாசக லந்த நாம மவன்பினே பரவ வேண்டும்**
**தேசுறு பரசி ராமன் றிகழ்ந்தன னவற்கு முன்னே**
**பேசிடு மிராம நாமம் பிஞ்ஞகற் கென்று வேதம்.** (120)

(அரும் பதவுரை) ஆசு அகல் - குற்றமற்ற; அவன் பினே - அவன் பிறந்ததற்குப் பின்னுள்ள காலத்திலேயே; திகழ்ந்தனன் - இருந்தான்; அவற்கு முன்னே - அந்தக் கோசலை ராமன் பிறந்தற்கு முன்னுள்ள காலத்திலேயே; பிஞ்ஞகற்கு - சிவபிரானுக்கு.

(பொழிப்புரை) கோசலை பெற்ற தசரத புத்ர ராமனே இப்பூமியில் முதல் இராமனாவான் என்று கூறுவையாயின் அத்தசரத ராமனுக்கு முன்னே ராமநாமம் இருந்திருக்க நியாயமில்லை. தசரத ராமனுக்குப் பிற்பட்டோர் தான் அந்நாமம் தாங்குதல் ஏலும். ஆனால் அக்கோசலை ராமன் பிறப்பதற்கு முன்னமேயே சிவபிராற்கு அந்நாமம் வேதத்தில் படிக்கப்பட்டமையால் பரசுராமனுக்கும் பெயராக இடப்பட்டது. பரசுராமன் கோசலைராமனுக்கு முந்தியவன் என்னுமுண்மையைச் சிறுகாரும் அறிவர்.

ராமம் த்ரிநேத்ரம் ஸோமார்த தாரிணம் சூலிநம்பரம் ।
பஸ்மோத்தூளித ஸர்வாங்கம் கபர்திநமுபாஸ்மஹே ॥

என்ற ராமாஹஸ்யோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

இச்செய்யுளும் மேலதன் உண்மையை வலியுறுத்தியது.

## இராமர் சிவோபாசனை செய்தா ரென்பது.

**சீமதோ நீல கண்டன் சிறியனேற் கருண்மா தேவன்**
**தோமறு பிரபு வென்று துதித்தலோ டிராமே சத்தி**
**லோமொழி வாழ்வைப் பூசை யுஞற்றினன் சீதை நாத**
**னாமவி லவற்குச் சம்பு நற்குல தெய்வ மன்றோ.** (121)

(அரும் பதவுரை) தோம் அறு - குற்றமற்ற; இராமேசம் - இராமேசுவரம்; ஓம் மொழிவாழ்வை - சிவபிரானை; உஞற்றினன் - செய்தான்; நாம வில்லவற்கு; அந்த ராமருக்கு.

(பொழிப்புரை) 'ஸ்ரீமத் நீலகண்டன் சிறியனாகிய எனக்கு அருள் செய்த மஹாதேவன்; குற்றமற்ற பிரபு அவனே' என வான்மீகி இராமாயணத்தில் இராமனே கூறி வணங்குதலானும், ஓம் என்னும் தாரகமந்திரத்துக்கு வாழ்வளிக்கும் சிவபிரானை இராமேச்சுரத்தில் சிவலிங்கந் தாபித்து வழிபடுதலானும் அச்சீதாராமற்குக் குலதெய்வம் ஸ்ரீசிவபிரானே என்பது ஐயமின்றிப் புலனாகின்றது.

'ஸ்ரீமதோ நீலகண்டஸ்ய க்ருத்யம்ஹி துரதிக்ரமம்', 'அத்ரபூர்வம் மஹாதேவ: ப்ரஸாதமகரோத் ப்ரபு:', 'வரதாநம் தாச்ச பித்ரா மம ஸமாகஅ:' என்ற வன்மீக ராமாயணமும், 'பக்தயாநம்ரதநோ விஷ்ணு ப்ரஸாத மகரோத் விபு:' என்ற சரபோபநிஷத்தும், 'ப்ரஸாதாத்கதயேச்வர' என்ற யோகசிகோபநிஷத்தும், 'சிவபூஜாரதச்சைவ' என்ற ராம ஸகஸ்ரநாமும், 'தக்ஷ ஹஸ்த ஸதா பூஜ்ய சிவலிங்க நிவிஷ்டதீ:' என்ற அநந்த பற்பநாபஸ்வாமி அஷ்டோத்த்ரமும், தேவாரத்து திருவிராமேச்சுரப்பதிகமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இராமர் சிவோபாசனை செய்தாரென்பது இச் செய்யுளால் கூறப்பட்டது.

## விஷ்ணுவைப் பரம்பொருளென்று வேதவிரோதம் பேசிய வியாசர் தண்டிக்கப்பட்டாரென்பது.

**வாதரா யணனோர் காலை வன்கலிக் கஞ்சிக் காசி**
**போதரல் செய்து மாங்கே புத்திதான் கெட்டு மாலே**
**நாதனென் றாணை யிட்டா னந்தியாற் றூணு மானா**
**னேதம தரனைச் சொற்றா ரெங்கணுங் கலிக்குத் தப்பார்.** **(122)**

(அரும் பதவுரை) வாதராயணன் - வியாசன்; கலிக்கு - கலியுகம் பிறக்கப் போவதைக்கண்டு; போதரல் செய்தும் - போயும்; ஆங்கே - அக்காசியில்; என்று - என்று கூறி; ஆணைமிட்டான் - சாத்தியம் பண்ணினான்; தூணும் ஆனான் - தூணாகச் சபிக்கவும்பட்டான்; அரனை எதமது சொற்றார் என்க; சிவபிரானுக்கே யுரிய பரத்துவத்தை ஏனையோர்பாற் சார்த்துவது சிவபிரானைப் பழிப்பதேயாகும்; அரனை - சிவபிரானுக்கு; எதமது - பரத்துவஹானியாகிய குற்றத்தை; சொற்றார் - சொன்னவர்; கலிக்கு - கலிபீடைக்கு.

(பொழிப்புரை) வாதராயணன் என்னுமியற் பெயருடைய வியாசமுனிவர் கலியுகம் பிறக்கப் போவதைக் கண்டு பயப்பட்டுக் காசிக்குபோயும் அங்கே முனிவரர் ஐயத்தை நீக்க, நாராயணனே பரப்பிரமம்' என்று விச்வநாதர் சந்நிதியில் சாத்தியம் பண்ணினான். அதனால் திருநந்திதேவர் சாபத்துக்காளாகி தூணும் ஆனான். சிவபிரானுக்கே உரிய பரத்துவத்தை ஏனையோர்பாற் சார்த்துவது சிவபிரானைப் பழிப்பதேயாகும். சிவபிரானுக்குப் பரத்துவ ஹானியாகிய குற்றத்தைக் சொன்னவர் கலிபீடைக்கு தப்பமாட்டார் என்பதை இச்சரித்திரத்தால் அறியலாம்.

காஞ்சிப் புராணம் சார்ந்தாசயப்படலம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

விஷ்ணுவைப் பரம்பொருள் என்று வேதவிரோதம் பேசிய வியாசர் தண்டிக்கப்பட்டாரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## சிவபிரானுடைய அடிகளையும் முடியையும் அரியும் பிரமனும் தேடி அலுத்தனரென்பது.

**அடியினை யறியப் பன்றி யச்சுதக் கடவு ளானான்**
**முடியினை யறிய வன்ன முளரியோ னானா னானாற்**
**கடிவிரி கொன்றை வேணிக் கண்ணுதல் கீழு மேலும்**
**வடிவுறு நெருப்பா யண்ணா மலையென வளர்ந்தா னாங்கே.** (123)

(அரும் பதவுரை) முளரியோன் - பிரமன்; கடி - வாசனை; வடிவு - அழகு; அண்ணா - எட்டாத; ஆங்கே - அப்பிரமவிட்டுணுக்கள் சண்டையிட்ட விடத்தில்.

(பொழிப்புரை) ஒரு கல்பகாலத்தில் பிரம விஷ்ணுக்கள் தாமே முதல்வன் என முரணிச் சண்டையிட்ட சமயத்தில் வாசனை பொருந்திய கொன்றைப் பூச்சூடிய சடையானாகிய கண்ணுதற் பரம்பொருள் கீழும் மேலும் நெருப்பு வடிவான அண்ணாமலையாய் நிற்க, அதன் அடியைக் காண விஷ்ணுமூர்த்தி பன்றி வடிவாய்க் கீழ்நோக்கிச் சென்றும், அன்னவடிவாய்ப் பிரமதேவன் மேல் நோக்கிச் சென்றும், அடிமுடி காணார் ஆயினர்.

'ப்ரஹ்மாவை ஹம்ஸோ பூதவா, சிரோந்வேஷ்டவ்ய: ஸஹஸ்ரம் ஸமா ஆஸத் ப்ரஹ்மா ஆஹம் சிரோஜாநே த்வமேவ மாதாஸி, த்வமேவபிதாஸி, த்வமேவ ப்ராதாஸி த்வமேவத்ருஷ்டாஸி ச்ரோதாஸி, கர்த்தாஸி, காரயிதாஸி, ஜ்யேஷ்டோஸி, ச்ரேஷ்டோஸி, ய ஏவம்வேதா, சிவஸாயுஜ்யமாப் நோதி சிவஸாயுஜ்யமாப்நோதி', 'விஷ்ணுர்வை வராஹம்ரூபமாதாய, பூமிந்விதாரயந் ஸஹஸ்ரம்ஸமா ஆஸந், பாதாந் வேஷண பரேபூத்வா த்வமேவ மாதாஸி, த்வமேவ பிதாஸி, த்வமேவ ப்ராதாஸி, த்வமேவ ஜ்யேஷ்டோஸி, த்வமேவ ச்ரேஷ்டோஸி, யஏவம் மஹிமாநம் வேதா த்ருஷ்டாபவதி, விஜ்ஞாதாபவதி, கர்த்தாபவதி, காரயிதாபவதி, யஏவம் வேதா சிவஸாயுஜ்யமாப்நோதி சிவஸாயுஜ்யமாப்நோதி' என்ற ருக் வேதமும், 'யத்பாதாம்போருஹ த்வந்த்வம் ம்ருக்யதே விஷ்ணு நாஸஹ' என்ற சரபோபநிஷத்தும், 'ப்ரஹ்ம விஷ்ணு ரஜஸா பத்தவைரௌமத்யே தயோந் த்ருச்யதி ஜாதவேதா: ஸ்தாணு ருத்ரஸ்திஷ்டத் புவநஸ்யகோப்தா | த்ருஷ்ட்வாஸ்தாணுமுபாம்ய யுத்தம் ப்ரதஸ்ததுர்தூரமஸௌ தித்ருக்ஷு: | வராஹௌ விஷ்ணுர்ணிமமஜ்ஜபூமௌ ப்ரஹ்மோத்பபாத பூமேர் திவமாசுக்ருத்ர:' என்ற பாஸ்கர ஸம்ஹிதையும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

சிவபிரானுடைய அடிகளையும் முடியையும் அரியும் பிரமனும் தேடி அலுத்தனரென்பது இச்செய்யுளால் பெறப்படுகிறது.

## திருப்பதி முருகன் கோயிலென்பது.

**வேங்கட ராம னென்போன் வேங்கட மலையாய் நின்றோன்**
**வேங்கட சுப்ப னென்போன் வேங்கட மலைமே னின்றோன்**
**வேங்கட மலையாய் நின்று வேலனைச் சிரமேற் றாங்க**
**வேங்கட ராமன் செய்த விழுந்தவஞ் செப்பற் பாற்றே.** (124)

(அரும் பதவுரை) சுப்பன் - சுப்பிரமணியர்; விழுத்தவம் - சிறந்ததவம்.

(பொழிப்புரை) வேங்கடராமன் என்ற பெயர்க்குரிய விஷ்ணுமூர்த்தி வேங்கடமலை வடிவில் நின்றார். வேங்கடசுப்பிரமணியன் என்பார் அவ்வேங்கட மலைமேல் நின்றவர். வேங்கடமலை வடிவில் நின்ற சுப்பிரமணியக் கடவுளைத் தாங்கும் மேன்மையான தவத்தைச் செய்த மஹாவிஷ்ணு மூர்த்தியின் சிறப்பைச் சொல்லவும் முடியுமோ?

'சிலாதர முனிவருடைய திருக்குமாரராகிய நந்திபகவான் தன்னைச் சிவபெருமான் வாகனமாக்கிக் கொண்டது போல ஆசனமாகவும் கொண்டெழுந்தருளியிருத்தற்குச் சிந்தித்துத் தவங்கிடந்து ஸ்ரீசைலம் என்னும் மல்லிகார்ஜுன் பருவதமாகத் திருவுடுக்கொண்டு ஸ்ரீசிவபெருமானித் தம் முடிமீது தாங்கும் பேறெய்தினர். அவரைத் திரிபுரதகன காலத்தில் உபாசித்து அவருருப் பெற்றுச் சிவபெருமானைத் தாங்கினோமாகையால் அவருக்கும் தமக்கும் ஸம்பந்தமுடைமை காரணமாக அவர் பருப்பதமாய் நின்று சிவபெருமானைத் தாங்குவது போல நாமும் அவரைப் பருப்பத வடிவமாய் நின்று தாங்கவேண்டுமென்று விஷ்ணுவானவர் சிந்தித்துத் தவஞ்செய்கையில், சிவசூநுவாகிய குமாரக்கடவுள் தோன்றி அவருக்கு வேங்கடமென்னும் மலையுருவந்தந்து அம்மலையினுச்சியிற்றாமெழுந்தருளித் தம்மைத் தாங்குபடியான பெரும் பாக்கியத்தை அவருக்குப் பிரஸாதித்தனர் என்று திருவேங்கடமான்மியத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது' என்ற சிவாதிக்ய ரத்நாவளி இரண்டாம் பாகமும், தணிகைப் புராணத்து வீராட்டகாசப்படலமும் இச்செய்யுட்குப் பிரமாணம்.

திருப்பதி முருகன் கோயிலென்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## சிதம்பர நடராஜருடைய நடன வைபவத்தைக் கண்டு அவசமாகித் தலைகால் தெரியாமல் வீழ்ந்து கிடக்கின்றார் தில்லைக்கோவிந்த ரென்பது.

**சித்தசன் றன்னைச் செற்றோன் சிதம்பரந் தன்னிற் செய்த**
**வித்தக நிருத்தங் கண்டு மெய்ம்மறந் தவச மாகிப்**
**பத்துறழ் பன்னி ரண்டு பகலவ னடியில் வீழ்ந்த**
**சித்திர கூட மாயன் செப்பருங் கிடக்கை பாராய். (125)**

(அரும் பதவுரை) சித்தசன்றன்னைச் செற்றோன் - சிவபிரான்; வித்தக நிருத்தம் - ஞான நடனம்; மெய்ம்மறந்து - தன்னை மறந்து; அவசம் - பரவசம்; பத்துறழ் பன்னிடண்டு - நூற்றிருபது; பகல் - நாட்கள்; கிடக்கை - வீழ்ச்சி.

(பொழிப்புரை) மன்மதனைக் காய்ந்து கொன்ற சிவபிரான் சிதம்பரத் தலத்தில் ஸ்ரீநடராஜமூர்த்தியாய் எழுந்தருளி ஆனந்தத் தாண்டவம் செய்ய அதனைத் தரிசித்துப் பரவசமடைந்த விஷ்ணு, சித்திரகூடமாயன் - தில்லைக்கோவிந்தன் - எனப்பெயர்தாங்கி நூற்றிருபது நாட்கள் (நான்குமாதங்கள்) எழ மாட்டாதவராய் அவசமாய்க் கிடந்த சொல்லுதற்கரிய தோற்றத்தைக் காண்பீராக.

'சொல்லரிய பரவசமாய்த் திருமுன்னே வீழ்ந்திறைஞ்சித்
தொல்லைதனி லறிவிழந்து துணைவிழிகள் புனல்பெருகப்
பல்லுயிர்க்கு முயிராகும் பரமசிவ பூரணத்தி
னெல்லைதனிற் புக்கழுந்தி யெழுந்தில் னீரிருதிங்கள்'

என்ற கந்தபுராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

சிதம்பரம் நடராஜருடைய நடன வைபத்தைக் கண்டு அவசமாகித் தலைகால் தெரியாமல் வீழ்ந்து கிடக்கின்றார் தில்லைக்கோவிந்தர் என்று இச்செய்யுளால் கூறப்பட்டது.

## இப்போதிருக்குத் தில்லைக்கோவிந்தரின் கோயில் அவருடையதன்றென்பது.

**தில்லைக்கோ விந்தன் முன்னர்த் தில்லையில் முன்றில் வீழ்ந்தான்**
**தில்லைக்கோ விந்தன் பின்னர்த் தெருநடுக் கிடந்தா னிப்பாற்**
**தில்லைக்கோ விந்தன் சென்றான் திருப்பதி யென்னே மாயந்**
**தில்லைக்கோ விந்த னின்றெந் திருநடன் றளியுட் சேர்வே. (126)**

(அரும் பதவுரை) மாயம் - ஏமாற்றம்; நடந்தளியுள்சேர்வு - நடராஜருடைய கோயிலுக்குள் வந்திருத்தல்.

(பொழிப்புரை) தில்லைக்கோவிந்தன் முற்காலத்தில் ஸ்ரீநடராஜ பிரபுவினது நடன தரிசனத்தை விரும்பித் தில்லை அம்பலத்து முற்றத்தில் கிடந்தான். பின் ஒரு காலத்தில் அக்கோவிந்தன் நடுத்தெருவில் கிடந்தான். அதன் பின் ஒரு காலத்தில் அக்கோவிந்தன் தானே திருப்பதியில் சேர்க்கப்பட்டான். இன்றோ ஸ்ரீ நடராஜர் திருக்கோயிலுள் அக்கோவிந்தன் வந்திருத்தலமாயம் தானோ? அன்றிச் சைவர் ஏமாற்றம் தான் காரணமோ?

'வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றில் அம்மாயவனே' என்ற திருக்கோவையாரும், 'ஸ்ரீசிதம்பரத்திலுள்ள வைதிக சைவர்களால் நடுத்தெருவிற் கிடத்தப்பட்ட நாராயண விக்கிரத்தை,' 'நடுத்தெரு நாராயணன் எனும் சொல்லும் அத் காரணமாக வுண்டாயிற்று' என்ற சைவசமய சரபமும், 'அந்த விழவெல்லாம் தீரும்படி திருப்பதிக்கெழுந்தருளி ஸ்ரீ கோவிந்தராஜனை மூலபேரஸஹிதமாக திருப்பிரதிஷ்டையும் பண்ணி வைத்து' என்ற தென்கலைக் குருபரம்பரையும்,

'சென்றனன் றில்லைச் சித்திரகூடஞ் செறிந்தனன் செறிவதன் முன்னே, யன்றதிற் றிருக்கண் வளர்ந்தருண் மாயனனந்தனே முதல்வரோடு, மொன்றுமாங்கின்றி மறைந்தனன் மறைந்தாங் கோங்கு வேங்கடமென மறைகளென்று, நின்றேத்துந் திருப்பதி தனிலே யெழுந்தனன் யாவருமிறைஞ்ச' என்ற எம்பெருமானார் வைபவமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

இப்போதிருக்குந் தில்லைக்கோவிந்தன் கோயில் அவருடையதன்று என்பது இச்செய்யுளால் விளங்கும்.

## அவனன்றி யோரணுவு மசையா தென்பது.

**சங்கின னாதி வானோர் தாம்விடு படைக டம்மை**
**யங்கொரு துரும்பா லாற்ற லழிவுசெ யியக்கன் றன்னைச்**
**சங்கர னென்று தேர்ந்து தாழ்ந்தன ரென்னி னன்னோன்**
**மங்கலி லாண்மை தன்னை வரைசெய வல்லார் யாரே. (127)**

(அரும் பதவுரை) சங்கினன் - விஷ்ணு; படைகள் தம்மை - சக்கர முதலிய ஆயுதங்களை; இயக்கன்றன்னை - யக்ஷவடிவனை; தேர்ந்து - உமாதேவியார் சொன்னதால் தெரிந்து; தாழ்ந்தனர் - செருக்கு நீங்கினர்; அன்னோன் - அச்சங்கரனுடைய; வரை செய - அளவிட; விடு, செய் இறந்த காலவினைத் தொகைகள்.

(பொழிப்புரை) முன்னொரு காலத்தில் ஸ்ரீசிவபிரான் யக்ஷ வடிவங்கொண்டுவந்து, தேவர்கள் முன்னே துரும்பொன்றைப் போட்டு அதனை அடைக்குமாறு ஏவ, மஹாவிஷ்ணு முதலிய தேவர்கள் சுதர்சன் சக்கரமாதி தத்தம்

ஆயுதங்களால் சேதிக்க முற்பட்டு அத்துரும்பை அசைக்க இயலாதவர் ஆயினர். அப்டி ஒரு துரும்பால் தேவர்களாற்றலை அழிவுசெய் யக்ஷனை சங்கரன் என உமாதேவியாரால் அறிவுறுத்தப்பட்டுத் தெளிந்து தேவர்கள் தத்தம் செருக்கு நீங்கினார்கள். தாழ்வு சிறிதும் பெறாத அச்சங்கரனது வல்லாண்மை அளவிட யாரே வல்லார்கள்.

'கிமிதம் யக்ஷமிதி' என்று தொடங்கி 'பஹுசோபமாநாமுமாம் ஹைமவதீம் தம்ஹோவாச கிமே தத் யக்ஷ மிதி ஸா ப்ரஹ்மேதி ஹோவாச' என்றது வரையிலுள்ள கேநோபநிஷத் இச்செய்யுட்குப் பிரமாணம். இவ்வுபநிஷத்தில் மென்மை கூறப்பட்டவர் கூட்டத்தில் விஷ்ணுப் பிரஸ்தாபமில்லையென்பர் ஒரு சாரார். யக்ஷவடிவமாய் வந்தவர் சிவபிரான். அது உமாதேவியாராலேயே தெளிவிக்கப் பட்டது. படவே அக்கூட்டத்துள் விஷ்ணு அடங்கவில்லையென்பது யாங்ஙனம்? அது உய்த்துணர வைக்கப்பட்டது. ஆகலினன்றோ

மற்றைத் திசைக்கண் உறைவோரும் வன்மை முழுதுஞ் செலுத்தி வலியில்
ஒற்றைத் துரும்பை அசைவிக்கும் ஆற்றல் இலராய் உடைந்து விடலும்
செற்றத் தெழுந்த அயனார் தமது படையைச் செலுத்த அரியும்
அற்றப் படாத படைவீசி ஆர்ப்ப அவைகூர் மழுங்கி யனவே.'

என்றது "காஞ்சிப் புராணத்து" அமரேசப் படலம் செய்யுள் 12.

இவ்விடத்து ஷை புராணத்து ஷை படலத்தில் வரும் கீழ்க் கண்ட உமாதேவியார் வாக்காக வரும் செய்யுள்கள் சிந்திக்கத் தக்கன.

எவன்வாணி கேள்வன் முதலோர் பதங்கள் நிலைபேறு செய்யும் இறைவன்
எவன்எப் பொருட்டும் ஆதாரமாகி எவருந் தொழப் படுபவன்
எவன்முற் றுமாக்கி நிலைசெய்து போக்கிய அறிஞர்க் கினிக்கும் அமுதன்
அவன்என்று காண்மின் இமையீர் இயக்க வடிவாகி வந்த அழகன்.
எவனுக்கு முற்றும் வடிவங்க ளாகும் எவன் உண்மை யாரும் அறியார்
எவன்எங்கும் யாவும் அறிவுற்று நிற்பன் எவனால் நடக்கும் உலகம்
எவனைத்துதிக் கும்மறைஈறு முற்றும் எவன்அங் கவைக்கும் அரியான்
அவனென்று காண்மின் இமையீர் இயக்க வடிவாகி வந்த அழகன்.
எவன்நாமம் எண்ணின் எவன்தான் பழிச்சின் எவனைக் கருத்தின் நிறுவின்
எவன்அன்பர் சேவை புரியிற் பாவங்கள் இரிவுற்று முத்தி மருவும்
எவன்உண்மை இன்ப அறிவாகி நிற்பன் எவன்இந்து வேணி முடியான்
அவனென்று காண்மின் இமையீர் இயக்க வடிவாகி வந்த அழகன்.

இச்செய்யுளால் சிவனன்றி ஓரணுவும் அசையாதென்பது தெரித்து நிலைநாட்டப்பட்டது.

## விஷ்ணு யாகம், சிவபிரான் யாகதேவன் என்பது.

**சங்கர பரனை நீக்கிச் சக்கர பரனை வைத்துப்**
**பொங்கிய தக்கன் வேள்வி புரிந்தன னாங்கம் மாலை**
**வெங்கயி றதனால் யாத்தவ் வேள்வியை யழித்தான் வீரன்**
**சங்கர னியாக தேவன் சக்கிரி யாகந் தானே.** **(128)**

(அரும் பதவுரை) சங்கரபரன் - சிவபிரான்; சக்கரபரன் - விஷ்ணு; பொங்கிய - செருக்குற்ற; ஆங்கு - அவ்வியாகசாலயில்; வெம் கயிறதனால் நாகபாசத்தால்; யாத்து - கட்டியுருட்டி; வீரன் - வீரபத்திர மூர்த்தி; சக்கிரி - விஷ்ணு.

(பொழிப்புரை) சங்கரனாகிய பரம்பொருளை நீக்கி, சக்கரப் படையைத் தாங்கிய விஷ்ணுவை யாகத்தலைவனாகக் கொண்டு அதிகாரம் பொங்கிய தக்ஷன் வேள்வி செய்தான். அவ்வியாகசாலையில் யாகத்தலைவனாக இருந்த விஷ்ணுவை நாகபாசத்தில் கட்டியுருட்டி யாகத்தை அழித்தார் வீரபத்திரதேவர். எனவே யாகதேவனும் வன்மை விஷ்ணுமூர்த்திக்கில்லை. சங்கரன் ஒருவனே யகாதேவன்; யாக வடிவினன் விஷ்ணுமூர்த்தி என்பதன்றோ வேதம் கூறும் உண்மை.

'யோ தக்ஷயஜ்ஞே ஸுரஸங்காந் விஜித்ய விஷ்ணும் பபந்தோரசு பாசேந வீர: தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்தும், 'மேதபதிம் ருத்ரம்', 'ஆவோராஜாந மத்வரஸ்யருத்ரம் .... அயஸேக்ருணுத்வம்', 'த்ரிஸ்ஸப்தயத் குஹ்யா நித்வே ... நிஹிதா' 'ருத்ரம் யஜ்ஞா நாம ஸாததிஷ்ட மபஸாம்' என்ற ருக்வேதமும், 'ருத்ரோ யாகதேவ:' என்ற பாசுபத ப்ரஹ்மோபநிஷத்தும், 'யஜ்ஞோவை விஷ்ணு:' என்ற சுருதியும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

விஷ்ணு யாகம், சிவபிரான் யாகதேவன் என்பது இச்செய்யுளால் விளக்கப்பட்டது.

## சிவபிரானிருக்குஞ் சுடுகாடு இதுவென்பது.

**முன்னவ னழிக்கும் போது முகுந்தனைப் பிறரை நெற்றி**
**துன்னெரி விழியா னீற்றித் தூவிட மயான மாகு**
**மன்னதி லவனே யேக னாகியீற் றிருப்பா னப்போ**
**தின்னொரு தேவ னாங்கே யிருப்பதற் குளனோ செப்பாய்.** **(129)**

(அரும் பதவுரை) முன்னவன் - சிவபிரான்; அழிக்கும்போது - சங்கரிக்கும் போது; துன் எரி விழ் - இருக்கிற கண்ணின் தீ; நீற்றி - சுட்டுச்சாம்பராக்கி; தூவு இடம் - சிதறுகிற தனிமிடமே; அன்னதில் - அந்தமயானத்தில்; 'பெருங்கடன்மூடி' என்ற தேவாரம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

(பொழிப்புரை) மஹாசங்கார காலத்தில் சிவபிரான் சர்வ லோகத்தையும் அழிக்கும் பொழுது மஹாவிஷ்ணு முதலிய தேவர் யாவரையும் தமது நெற்றித் தனிவிழியால் சுட்டு எரித்துச் சாம்பராக்கிச் சிதறுகிற தனியிடமே மயானம் என்று சொல்லப்படும். அத்தனியிடத்தில் சிவபிரானே ஏகனாக வீற்றிருப்பான். அம்மயானத்தில் இன்னொரு தேவனாக இருப்பதற்கு யார்தான் உளர்? அதனைக்கூறு.

‘பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங்கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளதின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே’

என்ற அப்பர் சுவாமிகள் அருளிய தனித் திருவிருத்தம் (நாலாம் திருமுறை) இச்செய்யுட்குப் பிரமாணம்,

சிவபிரான் எழுந்தருளியிருக்கும் சுடுகாடு இதுவென்பது இச்செய்யுளால் தெரித்துணர்த்தப்பட்டது.

## சிவபிரான் மன்மதனை யெரித்தாரென்பது.

**வனிதைய ரின்பம் வேட்டு மாயவன் பிரம னாதி**
**யனைவரு மவர்தம் மாணைக் கடங்கிடச் செய்யும் வேளைத்**
**தனதொரு நுதற்கட் டீயாற் றகித்தவன் மலர்த்தா டன்னை**
**யனுதின நினைவார் தாமே யாழ்குறார் காம நோயில். (130)**

(அரும் பதவுரை) வேட்டு - விரும்பி; அவர்தம் - அவ்வனிதையரின்; வேளை - மன்மதனை; ஆழ்குறார் - வீழ்ந்தழுந்தமாட்டார்.

(பொழிப்புரை) மகளிர் இன்பத்தை விரும்பிய விஷ்ணு, பிரமன் முதலிய பெருந்தேவர்களையும் தனது ஆணைக்கு அடங்கிடச் செய்யும் மன்மதனைத் தனது நெற்றிக் கண்ணால் எரித்து அவனதாற்றல் அழித்து தனது ஒப்பற்ற தனித்தலைமையை நிறுத்திக் காட்டியவன் சிவபிரான். அச்சிவபிரானது தாமரை யன்ன பாதமலர்களை நாள்தோறும் நினைந்து வழிபாடு செய்பவரன்றோ காமநோயில் ஆழமாட்டார்.

“யோ.... பஸ்மீசகாரம் மந்மதம் .... தஸ்மை ருத்ராய நமோ அஸ்து’ என்ற சரபோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

ஸ்ரீ சிவபிரான் மன்மதனை எரித்த தனித்தீரர் என்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## சிவபிரான் ஆலாலத்தை யுண்டாரென்பது.

**கமலனும் புகைய மாலுங் கருகிடக் கடலில் வந்த**
**சமனிகர் விடத்தை யீசன் தன்மிடற் றடக்கி நூலை**
**விமலமென் பூமேன் மாதர் மிடற்றினிற் காத்தா னென்னி**
**னெமதிடர் களைய வல்லா னேவனவ் வீச னன்றி.** **(131)**

(அரும் பதவுரை) கமலன் - பிரமன்; வந்த விடத்தை என்க; விடத்தை - ஆலஹாலமென்னும் விஷத்தை; சமன் - எமன்; நூலை - தாலியை; விமலம் மெல் பூமெல் மாதர் - இலக்குமியும் சரஸ்வதியும்.

(பொழிப்புரை) பிரம்மதேவன் புகைநிறம் அடையவும், மஹா விஷ்ணு கருநிறம் அடையவும் செய்து பாற்கடலில் வெளிப்பட்ட ஆலால விஷத்தை வாயிலோ அன்றி வயிற்றிலோ வைத்திராது சிவபிரான் தனது திருக்கண்டத்தில் அடக்கியமை யால்லலவா வெண்டாமரை, செந்தாமரைகளில் வீற்றிருக்கும் சரஸ்வதி லக்ஷிமி ஆகிய தேவியர் கழுத்தில் தாலி தங்கியது. அப்படியாயின் எம்மனோர் துன்பத்தை ஈசனன்றி வேறு எவர் களைய வல்லவர்? எவருமிலர் என்க.

'பபேதோ ஹாலாஹலம் தஹந்தம் தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

ஸ்ரீ சிவபிரான் நீலகண்டனாகி அமரமாதர் கண்டத்து மங்கலநாண் காத்தாரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## சிவபிரான் திரிபுர தகனஞ் செய்தா ரென்பது.

**பசுபதி நாமே யென்று பண்ணவர் செருக்குக் கொண்டார்**
**பசுபதி யதனைத் தந்தாற் பாற்றுவ னெயில்க ளென்றான்**
**பசுபதி சுயநீ யென்றப் பரமனைப் பணிந்தா ரன்னோர்**
**பசுபதி விரைந்து சென்று பாற்றினா னெயில்கண் மூன்றும்.** **(132)**

(அரும் பதவுரை) பண்ணவர் - தேவர்; பாற்றுவன் - அழிப்பேன்; எயில்கள் - முப்புரங்களை; சுயம் - இயல்பாகவே; அன்னோர் - அத்தேவர்கள்.

(பொழிப்புரை) 'யாங்களே உயிர்க்கூட்டத்திற்குத் தலைவர்' என்று இறுமாந்திருந்த தேவர்கள் முப்புரத்தவர்களை வெல்ல மாட்டாராய்ச் சிவபிரானைச் சரணடைந்தனர். 'பசுபதி (உயிர்கட்குத் தலைவன்) என்ற பெயருண்மையை எனக்கு உண்டென நீவிர் சொன்னால் முப்புரங்களை அழிப்பேன்' என்று சிவபிரான் கூற 'இயல்பாகவே பசுபதி நீ ஒருவனே' என்று கூறித் தேவர்கள் சிவபிரானைப் பணிந்தனர். முப்புரத்தையும் நீறாக்கி உயிர்க்கூட்டத்தைக் காத்தான்.

'யோ லீலயைவத்ரிபுரம் ததாஹ விஷ்ணும் ஸல்யம் ஸோமாக்நிம்சபாணம் ... தஸ்மை ருத்ராய நமோ அஸ்து', 'ஸ்வயம் தஸ்மாத் பசுபதிர் பபூவ' என்ற சரபோபநிஷத்தும், 'ஸோப்ரவீத் வரம்வ்ருணா அஹமேவ பசூநாமதிபதிரஸாநி' என்ற எஜுர்வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

ஸ்ரீசிவபிரானே திரிபுரதகனஞ் செய்து பசுபதி நாமம் தமக்கேயுரியது என நாட்டினார் என்பது இச்செய்யுளால் தெரிவிக்கப்பட்டது.

## திரிபுர தகனசமயத்தில் சிவபிரான் கையில் விஷ்ணு அம்பானாரென்பது.

**திரிபுர மெரித்த ஞான்று சீதர னம்பாய் வாசம்**
**விரிமல ருறைவோன் பாகாய் வேறுளார் வெவ்வே றாகி**
**யெரிநிற மேனி யீச னேவலிற் கிடந்த செய்தி**
**தெரிதவ முடையோர் தேர்வர் சிவபிரான் றனது மேன்மை.** **(133)**

(அரும் பதவுரை) ஞான்று - காலத்தில்; வாசம் விரிமலர் உறைவோன் - பிரமன்; பாகு - சாரதி; வேறு உளார் - மற்றைத்தேவர்கள்; வெவ்வேறு - அத்தேரின் பல்வேறு உறுப்புக்கள்; தெரி - தெரிந்து கொள்ளவல்ல.

(பொழிப்புரை) திரிபுரம் எரித்த காலத்தில், சிவபிரான் பூமித்தேர் ஏறியபோது அத்தேரோட்டும் சாரதியாய்ப் பிரமம்தேவனும், விஷ்ணுமூர்த்தி அம்பாகவும், மற்றைய தேவர்கள் யாவரும் அத்தீமேனி வண்ணன் ஏவலுக்கு வேறுவேறு அங்கமாய்க் கிடக்க நிகழ்ந்ததை தவமுஜப் பெரியோரே அறிந்து சிவபிரான் மேன்மையை உணர்வார்.

மஹாபாரதம், கர்ணபருவத்து 26-வது அத்தியாத்தில் உள்ள விபரம் இச்செய்யுட்குப் பிரமாணம். திரிபுரதகன காலத்தில் விஷ்ணு சிவபிரான் கையில் அம்பானார் என்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## விஷ்ணு ரிஷபமாகிச் சிவபிரானைச் சுமந்தாரென்பது.

**அம்புரு வடைந்து மென்னே யடியனேன் றருக்கி நின்றேன்**
**வெம்பவ மகல வேண்டும் விமலனே யருளென் றன்று**
**சம்புவை யிரதத் தோடுந் தனிவிடை யாகி மாலோன்**
**கும்பிடு திறத்தா லேற்றான் குரவையிட் டார்த்தார் தேவர்.** **(134)**

(அரும் பதவுரை) தருக்கிநின்றேன் - அகங்கரித்தேன்; பவம் - பாவம்; அன்று - அத்திரிபுரதகனகாலத்தில்; இரதத்தோடு - தேரோடும்; விடை - ரிஷபம்; குரவையிட்டு - கூத்தாடி; ஆர்த்தார் - ஆர்ப்பரித்தார்.

(பொழிப்புரை) திரிபுர சம்ஹார காலத்தில் தேர் அச்சு முறிந்த பொழுது, 'அம்புருவம் அடைந்தும் அடியனேன் தருக்கி நின்றேன். எனது அக்கொடிய பாவம் நீங்க, எம்பிரானே திருவருள் செய்வாய்' என்று யாசித்து வணங்கிய மஹாவிஷ்ணுமூர்த்தி ரிஷப வடிவந்தாங்கித் தேரோடும் எம்பிரானாகிய சிவபிரானைத் தாங்கித் தொண்டு செய்ய அப்பிரான் அருள்புரிந்தான். அவ்வரிய நிகழ்ச்சியை நேரில் கண்ட தேவர்கள் கூத்தாடி மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தார்.

'மாயனு முப்புரங் கொன்ற வஞ்ஞான், றேறாயெமைத் தேரோடு தாங்கினன்' என்ற காஞ்சிப் புராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

விஷ்ணு ரிஷபமாகிச் சிவபிரானைச் சுமந்தார் என்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## விஷ்ணுவின் நரசிம்மாவதாரத்தைச் சிவபிரான் கொன்றா ரென்பது.

**மானுட மடங்க றன்னை வலிதபக் கொன்று தோலை**
**மேனியி லணிந்தான் வீர்ர் வீரனாஞ் சரப மூர்த்தி**
**யானெனு மகங்கா ரத்தை யெனதெனு மமகா ரத்தை**
**மானவ னறுக்க வேண்டின் வழுத்துக வவன்மென் றாளே.** (135)

(அரும் பதவுரை) மானுட மடங்கல்தன்னை - நரசிங்கத்தை; வலிதப - ஆற்றல் கெடும்படி; மானவன் - மனிதன்; அவன் - அச்சரபமூர்த்தியின்.

(பொழிப்புரை) ஹிரண்ய கசிபுடைக் கொன்று தருக்கி உலகைத் துன்புறுத்திய நரசிம்மத்தை அதன் வலிமை கெடக் கொன்று சிவபிரான் வீர்ர்வீரனாஞ் சரபமூர்த்தியாகி அதன் தோலைத் திருமேனியில் போர்த்துக் கொண்டான். எனவே யான் எனது என்னும் அகங்காரமமகாரத்தை எம்மனிதன் அறுக்க விரும்புகிறானோ அம்மனிதன் சரபமூர்த்தியின் மென்மையான திருவடித் தாமரைகளை வணங்குவானாக.

'யோகோரம் வேஷமாஸ்தாய சரபாக்யம் மஹேச்வர: | ந்ருஸிம்ஹம் லோக ஹந்தாரம் ஸம் ஜகாந மஹாபல: | ஹரிம் ஹாந்தம் பாதாப்யா மநுநாந்தி ஸுரேச்வரா: | மாவதீ: புருஷம் விஷ்ணும் விக்ரமஸ்வ மஹாநிசி |\ க்ருபயா பகவாந் விஷ்ணும் விததாரநகை கரை: சர்மாம்பரோ மஹாவீரோ வீர பத்ரோ பபூவஹ | ஸஏகோ ருத்ரோ த்யேய:' என்ற சரபோபநிஷத் இச்செய்யுட்குப் பிரமாணம்.

விஷ்ணுவின் நரசிம்மாவதாரத்தைச் சிவபிரான் கொன்றாரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## விஷ்ணு தம் கண்ணைப்பிடுங்கிப் பூவாவைத்துச் சிவார்ச்சனை செய்து சக்கரம் பெற்றாரென்பது.

**சங்கரன் மலர்த்தா டன்னிற் றமரை யெனத் தன் கண்ணைப்**
**பங்கமின் மால்சூன் றிட்டுப் பரசிவ வெனையா ளென்றான்**
**சங்கரன் கமலக் கண்ணா சக்கர மிந்தா வென்றான்**
**பங்கமின் மாலஃ தேற்றான் பணிந்திது சுருதி வாய்மை.** (136)

(அரும் பதவுரை) பங்கம் - குற்றம்; சூன்று - பிடுங்கி; இட்டு - தாமரைப் பூவாகக் கருதி அருச்சித்து; இந்தா - இதோ பெற்றுக்கொள்; ஏற்றான் பணிந்து - வணங்கிப் பெற்றுக்கொண்டான்; இது - இவ்வுண்மை.

(பொழிப்புரை) சங்கரனது திருவடித்தாமரை மலர்களைத் திருமால் நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூவால் அர்ச்சித்தார். அதற்குப் பதிலாகக் குற்றமற்ற சிவபூஜகராகிய திருமால் தமது ஒரு கண்ணைப் பெயர்த்துச் சிவபிரான் திருவடி மலரில் இட்டுப் 'பரசிவப் பிரபுவே, என்னை அடிமை கொள்' என்று வணங்கி இரத்தார். எங்கள் பிரானாகிய சங்கரன் 'தாமரைக் கண்ணனே! இதோ சுதரிசனச் சக்கரம், பெற்றுக்கொள்' என்று அருளிச் செய்தான். குற்றம் நீங்கிய திருமாலும் பணிந்து வணங்கி அதனை ஏற்றார். இவ்வுண்மை சுருதியில் கூறப்பட்டதாகும்.

'யோ வாம பாதார்ச்சித விஷ்ணு நேத்ரஸ் தஸ்மை ததௌ சக்ர மதீவ ஹ்ருஷ்ட: தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

விஷ்ணு தம்கண்ணைப் பிடுங்கிப் பூவாக வைத்துச் சிவார்ச்சனை செய்து சக்கரம் பெற்றாரென்பது இச்செய்யுளால் பெறப்பட்டது.

## சிவபிரான் கிருஷ்ணனுக்குப் பிள்ளைவரங் கொடுத்தாரென்பது.

**மதனுட றன்னை நீற்றி மலரவன் சிரத்தைக் கொய்த**
**சதுரனை யடியில் வீழ்ந்து தமியனேன் மனைவி சாம்ப**
**வதிமன மகிழப் பிள்ளை வரமெனக் கெந்தாய் தாவென்**
**றிதமுற வேத்தக் கண்ண னிறைவனு மவற்கஃ தீந்தான்.** (137)

(அரும் பதவுரை) நீற்றி - சாம்பராக்கி; சதுரன் - சிவபிரான்; சாம்பவதி - கிருஷ்ணனின் மனைவி பெயர்; இறைவன் - சிவபிரான்.

(பொழிப்புரை) மன்மதனை எரித்து மலரவனாம் பிரமனது ஒருதலையைக் கொய்த நாலாம் மூர்த்தியாகிய சிவபிரானது திருவடியில் விழுந்து வணங்கித் 'தமியேனது மனைவி சாம்பவதி மனம் மகிழப் பிள்ளைவரம், எந்தையே!

எனக்கு அருளிச் செய்யும்' என்று ஶ்ரீகிருஷ்ணன் பூசித்து ஏத்தி வேண்டச் சிவபிரானும் அதற்கிரங்கிப் புகழ்ச்சியின் அமைந்த மகப்பேறு உதவினான்.

மஹாபாரதம் அநுசாசனபருவம் 45, 46 ஆவது அத்தியாயங்கள் இச்செய்யுட்குப் பிரமாணம்.

சிவபிரான் கிருஷ்ணனுக்குப் பிள்ளைவரங் கொடுத்தாரென்பது இச்செய்யுளால் தெரிக்கப்பட்டது.

## அர்ச்சுனன் கிருஷ்ணனை விக்கிரகமாக வைத்துக் கொண்டு அதிற் சிவபூசை செய்தானென்பது.

**மன்னவ னென்று செய்வர் மதிப்பவ னடியர் தம்மைத்**
**தன்னமு மெண்ணார் யாருந் தாசனென் றவன்றன் வேந்தைத்**
**தென்னுறு கண்ணன் மேலே சிவபூசை பார்த்தன் செய்து**
**தன்னிய னானா னென்னிற் சாற்றுவாய் பரமா ரென்றே. (138)**

(அரும் பதவுரை) தன்னமும் - கொஞ்சமும்; தாசன் - அடியவன்; தென் - அழகு; பார்த்தன் - அருச்சுனன்; தன்னியன் - பாக்கியவான்.

(பொழிப்புரை) ஒருவேந்தன் தனதடிமையை மன்னவற்குச் சமமான மரியாதை செய்து மதிக்கலாம். அது பற்றி மன்னன் அடிமையாகான், அடிமை மன்னவன் ஆகான். இறைவனது அடிமையாகிய கண்ணபிரானையே சிவவிக்கிரகமாகப் பாவித்து அர்ச்சுனன் சிவபூஜை செய்து சிவபிரானை வழிபட்டான். அது பற்றிச் சிவபிரானும் கண்ணனும் சமமாவாரா? அவ்விடத்தில் நின்று பார்த்தன் பூஜையை ஏற்றருளிய பரமசிவனே பரம்பொருள் என்று தெள்ளறிஞர் நன்கறிவர்.

மஹாபாரதம் துரோணபருவம் 79, 80, 81 ஆவது அத்தியாயங்கள் இச்செய்யுட்குப் பிரமாணம்.

அர்ச்சுனன் கிருஷ்ணனை விக்கிரமாகப் பாவித்துக் கொண்டு அதிற் சிவபூசை செய்தாரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## கிருஷ்ணன் சிவோபாசனையால் வாணனை வென்றா னென்பது.

**வாணனார் தம்மோ டேற்று மாயனார் முன்னந் தோற்றார்**
**வாணனார் கரங்க டம்மை மாயனார் பின்னர்க் கொய்தார்**
**வாணனார் மனத்த ரான மகேசனார் தந்தே யன்றோ**
**வாணனார் பரங்கள் போக்கும் வலியினை மாயர் பெற்றார்.** **(139)**

(அரும் பதவுரை) ஏற்று - எதிர்த்துப் போர் செய்து; கரங்கள் தம்மை - கைகளை; கொய்தார் - வெட்டினார்; பரங்கள் - கைகளாகிய சுமைகளை; வலி - ஆற்றல்.

(பொழிப்புரை) சிவபக்தனாகிய வாணாசுரனை எதிர்த்துக் கிருஷ்ணன் பலமுறை முதலில் தோல்வியடைந்தான். பின்னர் உபமன்யு மகரிஷியிடம் சிவதீக்ஷை பெற்றுச் சிவனைப் பூஜித்து அவ்வரபலத்தால் வாணாசுரனைக் கிருஷ்ணன் எதிர்த்தான். அந்த யுத்தத்தில் வாணாசுரனது ஆயிரம் கரங்களில் இரண்டு நீங்கலாக ஏனையவற்றை வெட்டினான். வாணாசுரம் மனத்துறைந்த மகேசுரன் திருவருளாலல்லவா அவ்வாணாசுரனுக்குப் பாரமாயிருந்த கைகளை வெட்டும் வல்லமை பெற்றார் ஸ்ரீ கிருஷ்ணர்.

பகவான், "நாராயணரே! ... என் அனுக்கிரகத்தினாலே ஒருவனாவது உம்மை ...ஹிம்சிக்கமாட்டான். மேலும், யுத்தத்தை நீர் அடைவீராயின் என்னைக் காட்டிலும், மேற்பட்ட வராவீர்' என்று கூறினார்" என்ற மஹாபாரதம் துரோண பருவம் 202 ஆவது அத்தியாயம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

கிருஷ்ணன் சிவோபாசனையால் வாணனை வென்றாரென்பது இச்செய்யுளால் கூறப்பட்டது.

## சிவபிரான் கொடுத்த வரத்துக்கஞ்சியே பஸ்மாசுரவதத்தில் விஷ்ணு பெண்வடிவங் கொண்டாரென்பது.

**நீற்றன துடம்பை மாலோ னீற்றின் னென்றாய் வெள்ளை**
**யேற்றவ னந்த நீற்றற் கீந்துள வரத்துக் கம்மா**
**லாற்றவு மஞ்சி யன்றோ வாரணங் குருவங் கொண்டான்**
**போற்றுக் விளையார் டென்றப் புராரிமி னோட்டந் தன்னை.** **(140)**

(அரும் பதவுரை) நீற்றன் - பஸ்மாசுரன்; நீற்றினன் - எரித்தான்; வெள்ளை ஏற்றவன் - சிவபிரான்; வரமாவது யார் தலையில் அவ்வசுரன் கை வைத்தாலும் அவர் சாகவேண்டுமென்பது; ஆற்றவும் - மிகவும்; அணங்கு - மோகினி; போற்றுக - மதித்து உய்வாயாக; புராரி - சிவபிரான்.

(பொழிப்புரை) பஸ்மாசுரன் உடம்பை நீற்றிய செய்தியால் எமது திருமால் ஏற்றம் பெற்றிலரோ எனின், நன்று சொன்னாய், தம்மால் தீண்டப் பெற்றார் நீறாக வேண்டும் எனச் சிவபிரான்பால் பஸ்மாசுரன் பெற்ற வரத்திற்கு மிகவும் அஞ்சியேயன்றோ புருஷோத்தமனாகிய திருமால் மோகினிப் பெண் வடிவு கொண்டு அவன்முன்னுற்று வஞ்சனையால் அல்லவா பஸ்மாசுரனை நீற்றிக் கொன்றான்? சார்ங்கவில்லும் சக்கராயுதமும் இருக்கப் புருஷோத்தமனாகிய மஹாவிஷ்ணு மோகினியுருக் கொண்டு செய்த செயல் சால அழகியது. புராரியாகிய சிவபிரான் பஸ்மாசுரன் செயலுக்கு நகைத்து அவ்விடம் விட்டு நீங்கியது திருவிளையாடல் என்று போற்றி உய்வாயாக.

இச்செய்யுள் பிறர்கொள்கையை உடம்பட்டு மறுத்தது. சிவபிரான் கொடுத்த வரத்துக்கஞ்சியே பஸ்மாசுரவதத்தில் விஷ்ணு பெண் வடிவங்கொண்டாரென்பது நிலையிடப்பட்டது.

## அனுமானச் சிவாவதார மென்றல் அவைதிக மென்பது.

**பிறப்பில னென்றே மேலோர் பிஞ்ஞுக னடியை யேத்திச்**
**சிறப்பினை யடைந்தா ரென்று செப்பிடுஞ் சுருதி யந்த**
**வறப்பெரு நூற்கு மாறா யஞ்சனை கருவுட் பட்டுப்**
**புறப்பட லிலனோ வன்னோன் புகலெனப் பிதற்றி லாமோ. (141)**

(அரும் பதவுரை) சிறப்பினை - பிறவாமையை; அன்னோன் அஞ்சனை கருவுட் பட்டுப் புறப்படலிலனோ புகல் என அந்த அறப்பெருநூற்கு மாறாய்ப் பிதற்றி லாமோ என்க; அஞ்சனை கருவுட்பட்டுப் புறப்படல் - ஆஞ்சனேயனாய் வருதல்; அன்னோன் - அச்சிவபிரான்.

## இதுவுமது

**உருத்திர னருளினாலே யஞ்சனை யுதரந் தன்னின்**
**மருத்துவி னமிச மொன்று வந்ததிங் கனும னாகக்**
**கிருத்திம ரவனை மீன்ற கேசரி தனையச் சேயை**
**யுருத்திர னெனவத் தாயை யுமையெனப் பிதற்றி நைவார். (142)**

(அரும் பதவுரை) மருத்துவின் - வாயுலினுடைய; இங்கு - இவ்வுலகில்; கிருத்திமர் - பொய்யர்; அவனை - அவ்வனுமனை; கேசரி - அவன் பிதா; கேசரிதனை அச்சேயை - கேசரி யென்னுந் தந்தையையும் அனுமனாகிய அப்பிள்ளையும்; அத்தாயை - அந்த அஞ்சனை யென்பாளை; நைவார் - துன்புறுவார்; பூர்வபக்ஷிகள் ஒரு சமயம் பரமசிவன் கேசரியாகவும் பார்வதி அஞ்சனையாகவும் உருமாறி வந்து

புணர்ந்து அனுமானைப் பெற்றன ரென்பார்; மற்றொரு சமயம் அனுமனையே பரமசிவாவதாரமென்பார்.

'ருத்ரவீர்ய ஸமுத்பவாய', 'மாருதாத்மஜாய'. 'கேசரீஸுதாய' என்ற ஆஞ்சனேயாஷ்டோத்தரமும், 'பரமனும் பரிவிற்பார்த்துத் - தடமுலையுமைக்குக் காடி வாயுவின் றனயனென்றான்' என்ற கம்பராமாயணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## பார்வதி தேவியாரை இராவணன் இச்சித்தான், பஸ்மாசுரன் துரத்தினான் என்பனவாகிய கதைகளெல்லாம் பூர்வபட்சிகள் துவேஷத்தாற் செய்த கற்பனைகளேயென்பது.

**கவினுய ரிராமன் பெண்டைக் கண்ணனின் மனைவி மாரைப்**
**புலிதனி லயலார் கொண்டு போயின ரதற்கு நாணி**
**நவிலுவ ரொருபொய் கௌரி நாயகி தனக்குந் தீயோர்**
**தவிருவ துண்டோ வன்னோர் சம்புவி னுதற்கட் டிக்கே.** (143)

(அரும் பதவுரை) கவின் - அழகால்; நவிலுவர் - சொல்லுவர்; பொய் - கற்பனை; தவிருவது - விலகுவது; அன்னோர் - அத்தீயோர்.

## விட்டுணு யானைகாத்த சரிதத்தைவிடச் சிவபிரான் யானைகாத்த சரிதமே சிறந்தது. விட்டுணுகாத்த யானை விட்டுணுவைக் கருதிக்கொண்டே ஆதிமூலமென்றழைத்தது என்பது.

**வேழமொன் றானைக் காவில் விமலனை யேத்தி யன்னான்**
**தாழ்வகல் பதத்தைப் பெற்ற சரித்திர நுணுக்கங் கண்டோர்**
**வேழமின் னொன்று மாலை விளித்தவன் றுணையா லோர்கா**
**லாழ்புனல் முதலை வாய்விட் டகன்றதை மதிப்பார் கொல்லோ** (144)

(அரும் பதவுரை) ஆனைக்காவில் - திருவானைக்காவென்னுந் தலத்தில்; விளித்து - அழைத்து; ஆழ் - இறங்குவோர்யாரும் ஆழ்ந்து விடுகிற.

'பதகமுதலைவாய்ப் பட்ட களிறு - கதறிக் கைகூப்பி யென் கண்ணா கண்ணாவென்ன - வுதவப் புள்ளூர்ந்தங்குறு துயர் தீர்த்த - வதகன்', 'வேழம் - முதலைபற்ற மற்றது நின் சரணினைப்ப', 'யானை - கயம்புக்கஞ்சி - இடரடுக்க, ஆழியான் பாதம் பணிந்தன்றே - எய்திற்றுப் பண்டு' என்ற நாலாயிரம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சிவபிரான் கபாலமலை யணிவது தம் பரத்துவத்தை வெளிப்படுத்தற்காமென்பது.

**விதியரி விளிந்த வென்பை மேனியிற் றரித்துத் தானே**
**கதிபிற ரிலையென் றீசன் காட்டுவான் யார்க்கு மஃதை**
**மதியில ராகிச் சில்லோர் வைதுமால் பாஞ்ச சன்யம்**
**பதிதர வாய்வைத் தூதும் பண்பினை மதிப்பா ரந்தோ. (145)**

(அரும் பதவுரை) விதி - பிரமன்; விளிந்த - செத்த; என்பை - எலும்புகளை; கதி - புகலிடம்; அஃதை - அவ்வெலும்பாபரணத்தை; பதிகர - பதிய; பஞ்சசனனுடைய எலும்பாகிய பாஞ்சசன்யமென்னுஞ் சங்கை வாயில் வைக்கலாமோ வென்று கண்டித்தபடி.

## பிரமனுடைய சிரசைக்கிள்ளிய பாவம் சிவபிரானைப் பற்றா தென்பது.

**சிரமயற் கொழித்த பாவஞ் சிவற்கரி யொழித்தா னென்றாய்**
**சிரமயற் கேனம் மாயன் றிரும்பவுந் தந்தா னில்லை**
**சிரமயற் கொழித்தான் காரி சிவன்பழிக் கேது வென்னே**
**சிரமயற் கொழித்தா னென்றச் சிவனைநூல் முறையாற் போற்றும்.(146)**

(அரும் பதவுரை) காரி - பைரவமூர்த்தி; எது - காரணம்; என்னே? இல்லையென்றபடி; முறையால் - மகனாகிய பைரவமூர்த்தி அப்பனாகிய சிவபிரானின் வேறல்ல னென்ற முறைமைபற்றி.

'வருபடை வேகக் காற்றினன் முரிய விரைந்து செல் வயிரவப் புத்தேள் - திருமலர்க்குரிசில் பழித்திடு மஞ்சாஞ் சிரத்தினை யுகிரினாற் கொய்தான்' என்ற காஞ்சிப் புராணமும், 'யோ ப்ரஹமண: பஞ்சம வக்த்ர ஹந்தா தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' என்ற சரபோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே பெண்டிரின் பாதிவிரத்திய தருமத்துக்கு அரணாயிருப்பவரென்பது.

**தஞ்சம தென்று வந்த தாடகை மானங் காப்பான்**
**வஞ்சமி லீசன் சாய்ந்து மற்றவள் பூசை யேற்றான்**
**தஞ்சம தென்று வந்த சலந்தரன் மனைவி தன்னை**
**மஞ்சன வண்ணன் லஞ்சத் தணைந்துகற் பழித்து விட்டான். (147)**

(அரும் பதவுரை) தஞ்சமது - அடைக்கலம்; காப்பான் - காக்கும்பொருட்டு; சலந்தரன் மனைவி - அவள் பெயர் பிருந்தை யென்பது; அஞ்சன் வண்ணன் விஷ்ணு; வஞ்சத்து - கரவால்; அணைந்து - புணர்ந்து; கற்பு - பதிவிரதா தருமத்தை.

'தாடகை மானங்' காப்பான் றாழ்ந்துபூங் கச்சிட் டீர்க்கும் - பீடுறு கலயனன்பா னிமிர்ந்தவெம் பிரானூ ரீதால்' என்ற திருவிளையாடற் புராணமும், 'மாயனவேடங்கொண்டே வன்சலந்த ரன்க்ழத்தி - தூய நலங்கவர்ந்தான்' என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இராமரும் பாண்டவரும் பகைவரை அழித்தது சிவானுக்கிரகத்தாலேயாமென்பது.

**ஐயிரு தலையன் றன்னை யழித்தன னிராமன் பார்த்த**
**ரையிரு பதின்மர் தம்மை யழித்தன ரென்றா மீச**
**னையிரு சரண்புக் கன்றே யையிரு தலையன் றன்னை**
**யைமிரு பதின்மர் தம்மை யழித்தன ரந்த நல்லோர். (148)**

(அரும் பதவுரை) ஐயிருதலையன் - இராவணன்; பார்த்தர் - பாண்டவர்; ஐயிருபதின்மர்தம்மை - கௌரவர்களை; ஐ இரு சரண் புக்கு அன்றே - அழகிய இரண்டு திருவடிகளையும் புகலிடமாகக் கொண்டல்லவா? நல்லோர் - இராமனும் பாண்டவரும்.

இராவணவதம் சித்தியாகும்பொருட்டு ராமருக்கு அகஸ்தியர் ஆதித்ய ஹ்ருதயோபதேசஞ் செய்தாரென்ற வான்மீகமும், பாரதம் துரோணம் 203 ஆவது அத்தியாயமும், இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானே அடியார்க்குச் சிரஞ்சீவித்துவங் கொடுக்க வல்லவரென்பது.

**சற்பர சிவப்பேர் முன்னாந் தத்துவ ஞான மீந்த**
**தற்புறு மார்க்கண் டேயர்க் காயுனை யென்னும் வேதந்**
**தற்பம துடையோர் மாலே தந்தன வைர்க்கஃதென்றார்**
**விற்பன ரிகழ்வ ரென்ற வெட்கமே தவருக் கம்மா.** (149)

(அரும் பதவுரை) சத் பர - சத்தாயும் பரமாயுமுள்ள; சிவப்பேர் முன்னாந் ததத்துவ ஞானம் - சிவதத்வஞானம்; அற்பு உறு - அன்பு பொருந்திய; ஆயுளை - சிரஞ்சீவித்துவத்தை; தற்பம் - செருக்கு; அவர்க்கு - அம்மார்க்கண்டேயருக்கு; அஃது - அச்சிரஞ்சீவித்துவத்தை; விற்பனர் - அறிஞர்; அவருக்கு - அத்தற்பமதுடையோருக்கு.

'ப்ரஹமாவர்த்தே மஹாபாண்டீவடமூலே மஹா ஸத்ராய ஸமேதா மஹர்ஷயச் சௌநகாத யஸ்தெஹஸமித்ராணாயஸ்தத்வஜிஜ்ஞாஸவோ மார்க்கண்டேயம் சிரஜீவி நமுபஸமேத்ய ப்ப்ரச்சு: கேநத்வம் சிரஜீவ்யஸிகேந வாநந்த மநுபவஸூதி, பரமரஹஸ்ய சிவதத்வ ஜ்ஞாநம், ஸஹோவசயேந தக்ஷிணாமுகச் சிவோபரோ க்ஷீக்ருதோ பவதி தத்பரம் ரஹஸ்ய சிவதத்வ ஜ்ஞாநம், யஸ்ஸர்வோபரமேகாலே ஸர்வநாத்மந்யுமஸஹ்ம்ருத்ய ஸ்வாத்மாநந்த ஸுகமோததே ப்ரகாசதே வாஸதேவ:' என்ற தக்ஷிணாமூர்த்தியுபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சிவபிரான் எமனை யார்க்கும் அடங்காமலே கொன்றாரென்பது.

**அந்தக னுயிரை வாங்க வரற்குமால் பணித்தா னென்றா**
**யந்தக னயொத்தி ராம னாவியை யவண்போய்க் கொண்டா**
**னந்தக னடியைக் கும்பிட் டவன் முனவ் விராம னேய்வா**
**னந்தக னுயிரை வாங்க வரற்குமால் பணித்தல யாண்டே.** (149)

(அரும் பதவுரை) அந்கன் - எமன்; பணித்தான் - கட்டளை மிட்டான்; ஆவி - உயிர்; அவண் - அவ்வயோத்திக்கு; அவன்முன் - அந்த எமனுடைய சந்நிதியில்; ஏய்வான் - இருப்பான்; யாண்டு - எப்படி?

'தென்றிசைக் கடவுளுந் தேவனேவலா - லன்றுதன் னுருவொழித் தயோத்தி மாநகர்க் - குன்றுநின் றனையதோர் கோயில் வாயிலில் - ஒன்றிய முனிவரனுருவங் கொண்டுளான்' என்ற இராமாயணமும், 'தஸ்யாம் ராஜர்ஷய: புண்யஸ்ததா தேவர்ஷயாமலா: | யமம் வைவஸ்தம்தாதப்ரஹ்ருஷ்டா: பர்யுபாஸதே: | யயாதிர் நஹுஷ: பூரூர்மாந்தாதா ஸோமகோந்ருக: | ராமோ தாசரதிச்

சைவல்க்ஷ்மணச்சப்ரதர்தந:', என்ற பாரதம் ஸபா 8 ஆவது அத்தியாயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## மார்க்கண்டேயருக்குக் கிடைத்ததே உண்மையான சிரஞ்சீவித்துவம் மற்றவர்க்குக் கிடைத்தது அத்துணை யுண்மை யன்றென்பது.

**கற்றவ மதனாற் கூற்றி னல்லுயிர் கவர்ந்த பின்ன**
**ரிற்றிடா திருக்கும் வாழ்வை யேய்ந்தனர் மார்க்கண் டேயர்**
**மற்றவ ரெமனை வென்று வாய்ந்திலர் தீர்க்க வாழ்வை**
**யிற்றிடா திருப்ப ரன்னோ ரெமனுறுத் தணுகுங் காறும்.** (150)

(அரும் பதவுரை) கூற்றின் - எமனுடைய; இற்றிடாதிருக்கும் வாழ்வை - சிரஞ்சீவித்துவத்தை; ஏய்ந்தனர் - பொருந்தினார்; மற்றவர் - மாவலி ஹநுமான் விபீஷணன் முதலியோர்; வாய்ந்திலர் - கிடைக்கப்பெற்றிலர்; இற்றிடாதிருப்பர் - சிரஞ்சீவியாயிருப்பார்; அன்னோர் - அம்மாவலி முதலியோர்; உறுத்து - கோபித்து; அணுகுங்காறும் - உயிரை வாங்குவதற்கு அவர்களைச் சமீபிக்கும் வரை.

## சிவபிரான் யாசித்தது விளையாட்டு மாத்திரையே யென்பது.

**ஈசுரன் றருமம் வெள்ளி யிரணிய முறையே யாகு**
**மாசகல் பெயரே யூர்தி மந்திரந் தனசு மற்றை**
**நேசனல் லளகை வேந்த னித்தியற் கதனாற் கொள்வா**
**யாசகம் விளையாட் டென்றன் றேற்றதென் பலிபால்மாலே.** (151)

(அரும் பதவுரை) இரணியம் - பொன்; ஊர்தி - வாகனம்; மந்திரம் - கோயில்; தனுசு - வில்; அளகைவேந்தன் - குபேரன்; நித்தியற்கு - சிவபிரானுக்கு; அதனால் என்று கொள்வாய் என்க. வெள்ளி பொன் என்பன கைலையும் மேருவுமாம்; ஏற்றது - யாசித்தது; மால் யாசித்ததை மாத்திரம் எப்படி மதிக்கலாம் என்பது கருத்து, 'மாவலிபாற் காணிக்கிரந்தவன்' என்றது தேவாரம்.

## ஏக காலத்தில் பலபெண்டிர்பால் இன்பம் நுகரும் வன்மை கிருஷ்ணன் முதலியோர்க்குச் சிவாநுக்கிரகத்தாலேயே வந்ததென்பது.

**அன்புட னேக காலத் தாய்ச்சிய ரில்லந் தோறு**
**மின்பம் தவர்பா லார விருந்தனன் கண்ண னென்றாய்**
**தன்பெரு மனைவி மார்பாற் றனிநல மவ்வா றார்ந்து**
**பொன்புரை மகாரும் பெற்றான் புரவலன் வீர சித்தே.** (152)

(அரும் பதவுரை) ஆய்ச்சியர் - கோபிகைகள்; அவ்வாறு - அப்படி ஏககாலத்தில் எல்லாமனைவியரிடத்திலும்; ஆர்ந்து - நுகர்ந்து; மகாரும் - புத்திரரும்; புரவலன் - அரசன்; வீரசித்து அவ்வரசன் பெயர்; அவன் சிறந்த சிவபகதன்.

'மங்கை மிங்கிலர் தன்மையை யென்னென்று புகல்வேன் மணம் புணர்ந்தவர் நூற்றுவ ரிலக்கா மடவார் - அங்கணொய் வொரு வர்க்கொரு தலைவரா யவர்களணைகடோறும் புக்கணைந்தன் ரின்பங்க ளளித்தார் - நங்கைமார் முற்று மென்னுட னென்னுட னிருந்தார் நயந்திலாருனை யென்றுரை நவின்றனர் மகிழ்வார் - அங்க யற்கணா ருடனிவர் புணர்ந்திடுங் கலவி யனந்த வானந்த மாமவை யறைந்திடற் கரிதே' என்ற சிவரகசியம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் காட்டிய விசுவரூபம் சிவபிரானுடையதேயாமென்பது.

**புண்ணிய வீர வாகுப் புவியுருப் போன்று கண்ணன்**
**விண்ணுற வெடுத்து நின்ற வியனுருத் தானுஞ் சைவ**
**மொண்ணுத விடமார் தேவே யுத்தமன் புருட னன்ய**
**னண்ணுதி யவன்பா லென்றா னாரணன் பார்த்தன் றன்னை.** (153)

(அரும் பதவுரை) வீரபாகுப் புலியுரு - வீரபாகு தேவரெடுத்த விசுவரூபம்; விண்ணுற எடுத்து நின்று வியனுருத்தானும் - விசுவரூபமும்; சைவம் - சிவபிரனுடையதே; ஒன்றுதல் இடம் ஆர் தேவே - சிவபிரானே; நண்ணுதி - சரணமடைவாயாக; என்றான் - என்று உபதேசித்தான்; நாரணன் - கிருஷ்ணன்; பார்த்தன்றன்னை - அருச்சுனனை.

'பச்யமே யோக மைச்வரம்', 'உத்தம புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத: | யோலோகத்ரய மாவிச்வபி பந்த்யவ்ய்யாச்வர:', தமேவ சாத்யம் புருஷம பாபத்யே', 'ஈச்வரன் ஸர்வபூதாநாம் ஹ்ருதே சேர்ச்சு நதிஷ்தி' | ப்ராமயந் ஸர்வபூதாதி யந்த்ராருடா நிமாயயா' | தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேந பாரத: ததப்ராஸாதாத்

பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்ய ஹசாச்வதம்' என்ற பகவத் கீதை 11, 15, 18 ஆவது அத்யாயங்கள் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரான் சடையிற் றாங்கிய கங்கை யிதுவென்பது.

**தங்கெழி லிமயந் தோன்றிச் சத்திய வுலகம் புக்குப்**
**பங்கயன் சாப மேற்றுப் பாய்புனல் வடிவாய் நின்று**
**சங்கரன் சடைவீழ் கங்கை தனியுமைக் கக்கை யாவன்**
**மங்கல மிலாரக் கங்கை மாலடி வந்தா ளென்பர். (154)**

(அரும் பதவுரை) தங்கு எழில் - அழகு தங்கிய; இமயம் தோன்றி - இமய மலைக்கு மகளாகப்பிறந்து; புக்கு - போய்; புனல்வடிவமாய் மாறிநின்று; அக்கை - மூத்த சகோதரி; மாலடி - விஷ்ணுவின் பாதத்திலிருந்து.

'ஹிமவானுடைய கன்னிகையான கங்காதேவியானவள்' என்ற பாரதம் பீஷ்மம் 119 ஆவது அத்தியாயமும், சிவபாரம்யப் பிரதரிசிநியிலுள்ள கங்கா தரணப் பிரக்யானமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபிரானது சடையிலிருந்து இறங்கிய கங்கையுடன் விஷ்ணு பாதநீர் சேர்ந்திருக்கலாமென்பது.

**வரவொரு குடிலா யென்றும் வாங்கர வென்றும் வேந்தன்**
**பரவின னந்நீர் பாயப் பரனுயர் சிரமீ தேற்றான்**
**விரவிய தந்நீர் தன்னில் விட்டுணு பதநீர் பின்ன**
**ரரனரி பதநீ ரேற்றா னென்றிடு மதனாற் சின்னூல். (155)**

(அரும் பதவுரை) வந்தருள்வாயாக; ஒரு - ஒப்பற்ற; குடிலாய் - கங்கா தேவியே; வாங்கு - வேகத்தைத் தடுத்தருள்வாயாக; அர - சிவபிரானே; வேந்தன் - பகீரத மகாராசன்; பரவினன் - அக்கங்கையையும் பரமசிவனையும் வணங்கித் துதித்தான்; உயர் சிரமீது - பரமபாவனமாயுள்ள சிரசில்; ஏற்றான் வாங்கித் தடுத்தான்; விரவியது - கலந்தது; அதனால் - அப்படிக் கலந்ததாலே; சின்னூல் - சிலநூல்கள்.

## விஷ்ணு பாதநீர் விஷ்ணு தலையிலும் மாவலி தலையிலுமே விழுமென்பது.

**வாமன் மேற்போங் காலை மலரவன் கழுவ வந்நீர்**
**வாமன் காலி னாறே வாமன் றலைமேல் வீழும்**
**வாமன் காற்கீழ்ந் துஞ்சு மாவலி தலைக்கும் போகும்**
**வாமன் காற்கீ ழில்லா மகேசனற் றலைக்கே னேகும். (157)**

(அரும் பதவுரை) மேற்போம் - ஆகாயத்தில் தூக்கப்பட்ட; மலரவன் - பிரமன்; காலினாறே - அந்தத் தூக்கப்பட்ட கால்வழியே யொழுகி; துஞ்சம் - வாமக்கிடக்கிற; போகும் - ஊன்றிய கால்வழியே போய் விழும்; நல் தலைக்கு - பரம பாவனமான சிரசிற்கு; ஏகும் - போய் விழும்.

## உலகிச் சிவோபாசனை மிருத்தற்குப் பூர்வபக்ஷ கூறுங் காரணம் பொருந்தாதென்பது.

**பூதலந் தன்னிற் சில்லோர் புராரியைப் பரமென் றேத்த**
**மாதவன் பிறவி தோறும் வணங்கினன் வரமீந் தன்னோற்**
**கீதரன் பெருமைக் கேது வென்றனை யெவனோ தேராய்**
**வேதமவ் வரனை மூல விண்டுவே தொழுதா னென்றல். (158)**

(அரும் பதவுரை) மாதவன் பூதலந்தன்னில் - ஏத்த அன்னோற்கு வரம் ஈந்து (தன்) பிறவிதோறும் (அன்னோனை) வணங்கினன் என்க. பூதலந்தன்னில் - பூமியில்; புராரியை - சிவபிரானை; மாதவன் - விஷ்ணு; பிறவிதோறும் - அவதாரங்கடோறும்; அன்னோற்கு - அப்புராரிக்கு; ஈது - இப்படி வணங்கினது; எது - காரணம்; எவன் - என்ன காரணத்தால்; தேராய் - அறியாமலிருக்கிறாய்; மூலவிண்டுவே - அவதாரங்களுக்கு முன்னுள்ள விஷ்ணுவே; என்ற; என்றதை.

'தக்ஷிணஸ்யாம் திசிவிஷ்ணு: க்ருத்வைவ மூர்தாஞ்ஜலிம் மாமுபாஸ்தே' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'விஷ்ணுவும் - சிவனது ஸமீபத்தில் ரதந்தரமென்னும் ஸாமத்தைச் சொல்லுகின்றனர்' (இது கிருஷ்ணர் நேரிற் கண்டது) என்ற பாரதம் அநுசாசனம் 45 ஆவது அத்தியாயமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபணியே மேலான தரும மென்பது.

**தருமமே சிவனை நீங்காத் தனிவிடை யாகித் தாங்குந்**
**தருமமே சிவற்கு நீங்காத் தனிக்கொடி யாகி யோங்குந்**
**தருமமா மனைத்து மென்க்ள் சாம்பவி வளர்க்க வீங்குத்**
**தருமமா மாத லாலே சம்புவின் றொண்டே யாங்கும்.** **(159)**

(அரும் பதவுரை) தனி - ஒப்பற்ற; விடை - ரிஷபம்; கொடி - துவஜம்; சாம்பவி - பார்வதிதேவியார்; வீங்கும் - பெருகும்; ஆதலாலே யாங்கும் சம்புவின் தொண்டே தரும் ஆம் என்க. தொண்டு - பணி; யாங்கும் - எவ்விடத்துலும்.

'அறத்தெய்வத மத்திற முற்று நோக்கி', 'நம்பாற் கொல்லேறருவங் கொடுவந்தது போற்றி யென்ன', 'கண்டாமதனைக் கவலாதி யென்றூர்தி யாக்கிக் - கொண்டாம்', 'ஆனேறுயர்த்தருளி', 'சாமகண்டர்தமாணையா லகிலமுந் தழைப்பக் - காமநோக்கி யெண்ணான் கறங் கரிசற வளர்க்கும்', லுளமுறச் சிவனை யெண்ணல் முதல் பலவுளவாமன்றே' என்ற காஞ்சிப் புராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சைவர் வணங்கவேண்டும் ஊர்தி மிதுவென்பது.

**திருமிகு கவிய நீறு திவ்விய கோக்க ளீயு**
**மெருதுய ரரற்கா மூர்தி யென்பதைச் சைவர் சில்லோர்**
**கருதில ரேற்றா னேர்ந்த கருடமா கருவ பங்க**
**சரிதம தோரா ரப்புட் டரிசனந் தவிரா ரென்னே.** **(160)**

(அரும் பதவுரை) கவியம் - பஞ்ச கௌவியம்; நீறு - விபூதி; கோக்கள் - பசுக்கள்; எருது - ரிஷபம்; எருது அரற்கு ஊர்தி ஆம் என்க; ஊர்தி - வாகனம்; கருதிலர் - எண்ணுகின்றிலர்; ஏற்றால் - ரிஷபத்தால்; நேர்ந்த - நிகழ்ந்த; மா - பெரிய; அப்புள் தரிசனம் - அக்கருட தரிசனம்; என்னே - என்ன மடமை; ஏற்றால் நேர்ந்த கருடகர்வ பங்கத்தைக் காஞ்சிப்புராணத்திற் காண்க.

## சேவலாதியன கருடனைக் காட்டிலுந் தாழ்ந்த பிராணிகளல்ல வென்பது.

**கூவியே மச்ச மாதி கொத்தியுண் கருடன் றன்னை**
**யாவலா யுமது கன்னத் தறைந்தணாந் தேத்துஞ் சைவீர்**
**சேவலை மூடி கத்தைச் சிகியினை யாட்டை நாயை**
**நீவிரே னேத்த மாட்டீர் நேரிதோ வுமது சைவம்.** **(161)**

(அரும் பதவுரை) அறைந்து - அடித்து; அணாந்து - ஆகாயத்தைப் பார்த்து; மூடிகத்தை - பெருச்சாளியை; சிகியினை - மயிலை; நேரிதோ - சாஸ்தி ரோக்தமோ; உமது சைவம் - நீர் ஆசரித்து வருவதாகச் சொல்லுஞ் சைவாசாரம்; சேவல் முருகர்

கொடி; மூடிகம விநாயகர் வாகனமுங் கொடியும்; 'மூஷிகத்வஜம்' என்றது கணபத்யுபநிஷத்து; சிகி ஆடு முருகர் வாகனம்; நாய் பைரவர் வாகனம்.

## சீவர்க்கு வினையின் பயனை வினையே நல்காது; சிவபிரானே நல்குவாரென்பது.

**இருவினை பயனை நல்கு மீசனே னென்பா மீசன்**
**மருவிய போது தாரு வனத்தின் ரொழுக்குங் கற்பு**
**மொருவிய வவரை வேள்வி யுதித்தன வவர்முன் மாய்ந்து**
**தருபவ னதனை யார்க்குஞ் சம்புவே யாத லாலே.** (162)

(அரும் பதவுரை) இருவினை - வேள்வி தவம் முதலிய சற்கருமங்கள்; என் - தரவேண்டுவதென்னை? மருவியபோது - பிக்ஷாடனராய் வந்தபோது; தாருவனத்தினர் - தாருசாவனத்து ரிஷிகளும் அவர்தம் பத்தினிமாரும்; ஒருவிய அவரை - அவரை விட்டு விலகின; வேள்வி - அவர்கள் செய்த அபிசாரயாகத்தில்; உதித்தன - தோன்றிய பாம்பு மான் முயல்கள் முதலிய வஸ்துக்கள்; அவர்முன் - அம்முனிவர்களின் கண்முன்னேயே; மாய்ந்து - சிவபிரானால் வலியிழந்தன; தருபவன் - கொடுக்கும் வினைமுதல்; அதனை - அவ்வினைப் பயனை.

## விஷ்ணுபக்தரும் விபூதிதாரணிகளாகவே யிருக்க வேண்டுமென்பது.

**சம்புவை வணங்கி மாலோன் றாணுவே யடியே னுன்னைக்**
**கும்பிடு திறனு நீற்றுக் குறிகளை யெனக்காட் பட்டார்**
**வெம்பவ மகலப் பூண்டு விளங்கிடு திறனு மெங்கட**
**கெம்பர சிவநல் கென்றா னெனேசிவ சின்னச் சீரே.** (163)

(அரும் பதவுரை) தாணு - சிவபிரான்; நீற்றுக்குறிகளை - விபூதியின் உத்துளன திரிபுண்டரங்களை; எனக்கு ஆட்பட்டார் - என்னுடைய பக்தர்கள்; வெம்பவம் - கொடிய பாவங்கள்; பூண்டு - அணிந்து; எனே - எத்துணை அதிசயத்தை யுடையது! சின்னம் - அடையாளம்; சீர் - நன்மை.

'நமஸ்தேஸ்து நமஸ்தேஸ்து த்ஸாமஹம் சரணம்நத: | த்வத் பாதயுகளே சம்போ பக்திரஸ்து ஸதாமம' | பஸ்மதாரண ஸம்பந்நோ மமபக்தோ பவிஷ்யதி', 'பஸ்மருத்ராக்ஷயோர் மாஹாத்ம்யம்' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்தும், 'பஸ்மருத்ராக்ஷகணதர்சநம்' என்ற ருத்ரஹ்ருதயோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## பரமஹம்ஸ ஸந்நியாஸிக்கும் விபூதிதாரணிகளே யென்பது.

**சடபர தர்சம் லர்த்த காருணி தத்தாத் ரேயர்**
**திடரிபு நிதாகர் சீர்த்திச் சிவேதகே துவேதர் வாச**
**ரிடரிலி யாஞ்ஞு வற்க ரிரைவதர் புகண்ட ரின்னோர்**
**படவா வணிவா னீற்றைப் பணிந்திடு பரம கஞ்சர்.** (164)

(அரும் பதவுரை) திடம் - உறுதியுள்ள; சீர்த்தி - மிகுபுகழ்; இடர் இலி - துன்பம் இல்லாதவராகிய; படஅரவு அணிவான் - சிவபிரானுடைய; இடு - அணிந்துகொண்ட; பரம கஞ்சர் - பரமஹம்ஸ ஸந்நியாஸிகளாவர்கள்; அவர்கள் ஜடபாதர்; ஸம்வர்த்தகாருணி; தத்தாத்ரேயர், ரிபு நிதாகர், சுவேதகேது, துர்வாஸர், மாக்ஞுவல்க்கியர், ரைவதகர், புஸாண்டர் என்பவரே.

‘பரமஹம்ஸ நாம ஸம்வர்தகாருணிச்வேதகேது துர்வாஸ ரிபுநிதாக ஜட பரத தத்தாத்ரேய ரைவதக புஸாண்ட ப்ரப்ருதயோ விபூதிதாரணா தேவ முக்தாஸ்யு: ஸ ஏஷ பஸ்மஜ்யோதிரிதிவை யாஜ்ஞுவல்க்ய:’ என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## விபூதி தாரணமின்றிக் காயத்திரியை ஜபித்தல் கூடாதென்பது.

**அந்தம துடைய நீற்றை யன்புட னணியா ராகி**
**மந்திர மாகுங் காயத் திரிமினை மறையோர் பல்லோர்**
**சிந்தனை மிகவுஞ் செய்வர் திருமறைக் குலத்தில் யாங்கள்**
**வந்தன மென்னு மன்னோர் வழக்கினுக் கருத்த முண்டோ.** (165)

(அரும் பதவுரை) அந்தம் - அழகு; மறையோர் - பிராமணருள்; சிந்தனை செய்வர் - செபிப்பர்; வழக்கினுக்கு - சொல்லுக்கு.

‘த்யக்த்வா பஸ்மதாரணம் ந காயத்ரீ ஜபேத்’ என்ற பஸ்மஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## விபூதி நிந்தகன் பிராமணனேயாயினும் புலையனே யாவானென்பது.

**பார்ப்பன ரினிய நீற்றைப் பழியுரைத் தலைவா ராயிற்**
**பார்ப்பன வொழுக்க நீத்த பரமசண் டாள ராவார்**
**பார்ப்பதி பாகன் றந்த பழமறை வார்த்தை மீது**
**பார்ப்பன ரதனா னீற்றைப் பரவிமிட் டுய்த னன்றே.** (166)

(அரும் பதவுரை) பரவி - தொழுது; இட்டு - அணிந்து; உய்தல் - சீவித்தல்.

'ஏ பஸ்மதாரிணம் த்ருஷ்ட்வா நரா: குர்வந்தி தாடநம் தேஷாம் சண்டாள தோ ஜந்ம ப்ரஹ்மந் நூஹ்யம் விபச்சிதா' என்ற ப்ருஹஜ்ஜாபா லோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## பிராமணன் ஏனைய ஸத்கர்மாக்களை யெல்லாம் விட்டாலும் விபூதி தாரணத்தைமாத்திரம் விடுதல் கூடாதென்பது.

**வேதியர் கருமந் தன்னை விட்டலைந் திடினு மந்தப்**
**பாதகந் தன்னைப் போக்கும் பரிமள திவிய பற்ப**
**மாதலின் விதியினாறே யன்னவ ரதனை யென்றுங்**
**காதலும் பயமுங் கொண்டு கடைப்பிடித் தணிக மாதோ.** (167)

(அரும் பதவுரை) பரிமளம் - வாசனை; திவிய - தெய்வத்தன்மை பொருந்திய பற்பம் - விபூதி; விதியினாறே - விதிப்படி; காதல் - பக்தி; கடைப்பிடித்து - மனவுறுதியுடன்.

'த்யக்தவர்ணாச்ரமாசாரோ லுப்த ஸர்வகிரியோபிய: ஸக்ருத்திர்யக் த்ரிபுண்டராங்கதாரணாத் ஸோபி பூஜ்யதே', 'யோ பஸ்மதாரணாம் த்யக்த்வா கர்மகுர்வந்தி மாநவா: । தேஷாம் நாஸ்தி விநிர்மோஷ: ஸம்ஸாராஜ்ஜநம் கோடிபி:' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## விபூதியை நிந்திப்பவன் வேசிமகனாவா னென்பது.

**அனகனுங் கரும வத்தி யக்கனு மான வீசன்**
**றனதருண் மார்க்கஞ் சார்நற் சைவரி னெற்றி மீது**
**தினமவிர் நீற்றைக் கண்டு செவிசுட நிந்தை கூறி**
**வினயமிங் கொழிந்த மாந்தர் வேசிகள் புதல்வ ராவார்.** (168)

(அரும் பதவுரை) அனகன் - பாவமில்லாதவன்; கருமவத்தியக்கன் - கர்மாத்யக்ஷன்; அவிர் - ஒளிசெய்கிற; வினயம் - மரியாதை; இங்கு இவ்வுலகில்.

'ஏஷாங்கோபோ பவேத் ப்ரஹ்மம் லலாடே பஸ்ம தர்சநாத் । தேஷா முத்பத்திஸாங்கர்ய மநுமேயம் விபச்சிதா', 'ஏஷாம்நாஸ்திமுநேச்ரத்தா ச்ரௌதே பஸ்மநிஸர்வதா । கர்பாதாநாதி ஸம்ஸ்காரஸ்தேஷாம் நாஸ்தீதி நிச்சய:' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்தும், 'கர்மாத்யக்ஷேஹம்' என்ற ப்ரஹ்மவித்யோபநிஷத்தும், 'கர்மாத்யக்ஷ:', என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும் கோபாலோத்தரதாபிநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## நெருப்பிட்டுக் கொளுத்தவேண்டுவன இவை யென்பது.

**பரசிவன் றளியில் பாழுர் பசுமமில் பாழ்த்த நெற்றி**
**பரசிவன் பாத பூசை பண்ணிடாப் பாழ்த்த சென்மம்**
**பரசிவன் முதற்றே வென்னாப் பாழ்த்த நூ லிவற்றி லெல்லாம்**
**பரசிவன் றருகல் வேதம் பணித்தது நெருப்பி டென்றே. (170)**

(அரும் பதவுரை) தளி - கோயில்; பசுமம் - விபூதி; முதல் தே - முதற கடவுள்; பணித்தது - கட்டளையிட்டது.

'திக் பஸ்ம ரஹிதம் பாலம் திக் க்ராம மசிவாலயம் திகசிவார்ச்சநம் ஜந்ம திக் வித்யா மசிவாச்ரயாம்' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## ருத்ராக்ஷ மகிமை மீதுவென்பது.

**உருத்திர நாதன் கண்ணி லுதித்துயிர்க் கிறப்புச் சன்ம**
**வருத்தம தகற்றி மின்பம் வழங்குகண் மணியாஞ் சின்ன**
**முருத்திர வக்க சாபா லுபநிடமாதி போற்ற**
**விருத்தலி னின்னோர் மாலை யெதற்கிவண் வேண்டுந் தானே. (171)**

(அரும் பதவுரை) வழங்கு - கொடுக்கிற; கண்மணி - உருத்திராக்ஷம்; இன்னோர் மாலை - வேறுவகையான் மாலைகள்; இவண் - இங்கு.

'ருத்ரஸ்ய நயாநதுத்பந்நா ருத்ராக்ஷா' என்ற ப்ருஹஜ்ஜாபாலோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சிவலிங்கமாவது இதுவென்பது.

**கருவுரு வுயிர்க்குப் போக்கக் கண்ணுத லருளாற் கொண்ட**
**வுருவரு வென்னப் பட்ட வுபயமு மியைந்து நின்ற**
**திருவுரு வாகி யோங்குஞ் சிவலிங்க மாங்கு நின்றே**
**வருமுரு வனைத்து மந்த மங்கல சொரூபற் கம்மா. (172)**

(அரும் பதவுரை) உபயமும் - இரண்டும்; இயைந்து - சேர்ந்து; ஆங்கு நின்றே - அவ்வருவுருவத் திருமேனியிலிருந்தே; உருவனைத்தும் - உருவத் திருமேனிகளெல்லாம்; மங்கல சொரூபற்கு - சிவபிரானுக்கு.

## சிவலிங்கபூசையே க்ஷேமத்தைத் தருமென்பது.

**நாவலர் துதிக்கும் பூத நாதனை விண்டு வாதி**
**தேவரன் றன்பாற் பூசை சிவலிங்கந் தன்னிற் செய்து**
**மேவினர் வாழ்வை யென்று விளம்பிடும் வேதம் பாவர்**
**தாவிலவ் விலிங்கந் தன்னைச் சழக்குரைத் தழிவ ரந்தோ. (173)**

(அரும் பதவுரை) மேவினர் - பெற்றார்; வாழ்வை - தந்தம் ஐசுவரியங்களை; தா இல் - அழிவு இல்லாத; சழக்கு - நிந்தை.

'தவச்ரியே மருதோ மர்ஜயந்தருத்ர யத்தேஜநிம சாருசித்ரம்' என்ற ருக்வேதமும், 'சிவாய நம: சிவலிங்காய நம:' என்ற நாராயணோபநிஷத்தும், 'பிந்துநாத மஹாலிங்கம் சிவசக்தி நிகேதநம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'மாமேவ சிவலிங்க ரூபிணம்', 'சிவலிங்கன் த்ரிஸந்த்ய மப் யர்ச்ய . . ' 'மாமேவஜ்யோதி: ஸ்வரூபம் லிங்கம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'ஜ்யோதிர்லிங்கம் ப்ரூவோர் மத்யே நித்யம் த்யாயேத் ஸதாயதி:' என்ற ப்ரஹ்மலித்யோப நிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவலிங்கத்தைச் சிவனாரின் குறியெனக் கொள்வது குற்றமாகாது; அப்படிக்கொண்டும் விஷ்ணுவாதியோர் அவ்வடிவத்தைப் பூசித்துப் பேறுபெற்றாரென்பது.

**இம்பரி லுடையார் தம்மை யெவரலர் குறிமுன் வீழ்ந்து**
**கும்பிடு மடியார் மாதோர் கூறனைக் குறிமுன் வீழ்ந்தே**
**யம்புய நாபன் கும்பிட் டருளவ னிடத்துப் பெற்றான்**
**சம்புவி னிலிங்க மேன்மை தனக்கள வுரைப்பார் யாரே. (174)**

(அரும் பதவுரை) இம்பர் - இவ்வுலகில்; உரையார் - செல்வர்; குறி - கோசம் அடியார் எவர் என்க; ஒருவருமில்லை யென்றபடி; அம்புயநாபன் - விஷ்ணு.

'மற்றொருவனுடைய லிங்கத்தைத் தேவர்கள் அர்ச்சித்ததாக நாம் கேட்கவில்லை யன்றோ? மகேச்வரரைவிட … வேறு யாருடைய லிங்கமானது எல்லாத் தேவர்களாலும் இப்போதாவது முன்னேயாவது பூஜிக்கப்பட்டிருக்கிறது? … ப்ரம்மாவும் விஷ்ணுவும் நீயும் … யாருடைய லிங்கத்தை எப்போதும் பூஜிக்கிறீரோ அவர் அந்தக் காரணத்தினாலேயே மிகச் சிறந்தவரல்லரோ' என்ற பாரதம் அனுசாசனம் 45 ஆவது அத்தியாயம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சிவாலய தரிசனாதிகள் ஞானிகளுக்கும் ஆவசியக மென்பது.

**அறிவிவ ணிலார்க்கே வேண்டு மாலயம் பூதி யாதி**
**யறிவின ரவற்றைப் போற்ற லவசிய மன்றா மென்ன**
**வறிவுநூ லுரைத்த தென்ப ரறிவிலாச் சைவர் சில்லோ**
**ரறிவின ருளரோ காழி யாண்டகை முதலோர் தம்மின். (175)**

(அரும் பதவுரை) அறிவு - ஞானம்; இவண் - இவ்வுலகில்; அறிவினர் - ஞானிகள்; போற்றல் - ஆசிரமித்தல்; காழி ஆண்டகை ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள்; அவர்களெல்லாங் கோயிலுக்குப் போனார்களே யென்பது கருத்து.

## ஆலய சேவையின் பயனிது வென்பது.

**ஆலய நண்ணி யன்புற் றதிபர மாத்த னென்னு**
**மாலய மூர்த்தி தன்னை வலம்வரின் ஞான மில்லான்**
**சாலவு ஞானி யாவான் றரணியில் ஞான முள்ளான்**
**சீலம தகலா னென்ற றேர்ந்தவன் றனையங் கேத்தே. (176)**

(அரும் பதவுரை) நண்ணி - போய்; அதிப்ரமாத்தன் - பூரண நம்பிக்கைக் குரியவன்; மாலய மூர்த்தி - சிவபிரான்; சிலம் - ஒழுக்கம்; தேர்ந்து - தெரிந்து; அவன்றனை - அச்சிவபிரானை; அங்கு - அவ்வாலயங்களில்; ஏத்து - வணங்குவாயாக.

'நறுமலர்ப் பூவுநீரும் நாடொறும் வணங்கு வார்க்கு - அறிவினைக் கொடுக்குமாரூரப்பனே' என்ற தேவாரமும், 'ஆலயந்தானு மரனெனத் தொழுமே' என்ற சிவஞானபோதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## வேதந் துதிக்குஞ் சில சிவஸ்தலங்களிவை யென்பது.

**வாரண வாசி யாரூர் வண்பிர யாகை கோயில்**
**காரண வுயர்சீ சைலங் கவின்குருக் கேத்தி ரந்தான்**
**றரணி புகழ்கே தாரந் தலமெனத் திகழு மீசற்**
**காரண மவற்றை யேத்து மகமகிழ்ந்த தாத லாலே. (177)**

(அரும் பதவுரை) வாரணவாசி - காசி; ஆரூர் - கமலாலயம்; கோயில் - சிதம்பரம்; கார் அணவு உயர் - மேகத்தைத் தொடுகிற உயர்வையுடைய; கவின் - அழகிய; தாரணி - உலகம்; ஆரணம் - வேதம்; அவற்றை - அக்காசி முதலிய தலங்களை.

'ச்ரீபர்வதம் சிர: ஸ்தாநே கேதாரம் து லலாடகே । வாராணஸீ மஹாப்ரஜ்ஞ ப்ரூவோர்க்ராணஸ்ய மத்யமே ॥ குருக்ஷேத்ரம் குசஸ்தாநே ப்ரயாகம் ஹ்ருத் ஸரோருஹே । சிதம்பரம் து ஹ்ருத்மத்யே ஆதாரே கமலாலயம்' என்ற ஸ்ரீ ஜாபாலதர்சநோபநிஷத்து இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சிவார்ப்பணமாகாத அன்னாதிகளை விலக்கவேண்டு மென்பது.

**அரன்றனக் கருப்பித் துண்ணு மன்னமே யன்ன மாகு**
**மரன்றனக் கருப்பித் துண்ணா வன்னமோ வன்ன மாகா**
**தரன்றனக் கடியர் தாமே யருந்துவ ரன்ன மற்றை**
**யரன்றனக் கடிய ரல்லா ரருத்துவ தியாதோ வம்மா.** **(178)**

(அரும் பதவுரை) 'அஹரஹரப் யர்சய விச்வேச்வரம் லிங்கம் தத்ரருத்ரஸாக்தைரபிஷிச்ய ததேவஸ் நபந பயஸ்த்ரி: பீத்வாமஹா பாதகேப்யோமுச்யதே । நசோகமாப்நோதி । முச்யதே ஸம்ஸார பந்தநாத் । ததநப்யர்ச்ய நாச்நீயாத் பலமந்நமத்யத் வா । யதச் நீயாத்ரேதோ பக்ஷீபவேத்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும், 'அந்தரிச்சந்திதம் ஜநேருத்ரம் பரோம நீஷயா க்ருஹ்ணந்தி ஜிஹ்வயாஸஸம் என்ற ருக்வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபூஜைக்குச் சிவதீக்ஷை முக்கியாங்க மென்பது.

**சம்புவி னருளை நல்குஞ் சைவமார் தீக்கை பெற்றே**
**யம்புவி யதனிற் கண்ண னடலுறு மிராம னென்போர்**
**வெம்பவ மகல முக்கண் விமலனைப் பூசை செய்தா**
**ரும்பரு மடையுந் தீக்கை யொழுங்கினை யுவர்ப்பார் யாரே.** **(179)**

(அரும் பதவுரை) சைவம் ஆர் தீக்கை - சிவ தீக்ஷை; அம்புவியதனில் - உலகில்; அடல் - வலிமை; வெம்பவம் அகல - கொடிய பாவங்கள் விலக; உம்பரும் - தேவரும்; அடையும் - பெறுகிற; தீக்கையொழுங்கினை - தீக்ஷாக்கிரமங்களை; உவர்ப்பார் வெறுப்பார்.

'எட்டாவது நாள் அந்த பிராம்மணரால் சாஸ்திரப்படி நாள் தீக்ஷை செய்விக்கப்பட்டேன்) கிருஷ்ணன் சொன்னது) என்ற பாரதம் அநுசாசனம் 45 ஆவது அத்தியாயமும், 'அருடரு தீக்கை புரிந்தெழுத்தைந்து மளித்தருந் தமிழ்முனி சொல்வான்' என்ற தணிகைப் புராணமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## ஞானிக்கு எம்மதமுஞ் சம்மதமாமென்றல் சைவசமயக் கொள்கை யாகாதென்பது.

**எம்மத பரங்க ளுள்ளு மீசனே மிருந்து நன்மை**
**யம்மத மக்கட் கீவா னவையவன் வயத்த வாகுந்**
**தம்மத ஞான மார்க்க மெனமருண் டொருசார் சைவர்**
**சம்மத மவற்றைப் போற்ற றமக்குமா மென்ப ரந்தோ.** **(180)**

(அரும் பதவுரை) பரங்களுள்ளும் - தெய்வங்களிடத்திலும்; அவை - அத்தெய்வங்கள்; அவண் - அவ்வீசனுக்கு; வயத்தவாகும் - வசப்பட்டவையாகும்; தம்மத - தமது சைவசமயத்து; மருண்டு - மயங்கி; ஒரு சார்சைவர் - சிலசைவர்; தமக்கும் அவற்றைப் போற்றல் சம்மதம் ஆம் என்க; அவற்றை - அத்தெய்வங்களை; அந்தோ - ஆ இஃதென்ன மடமை!

'சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோம்' என்ற தேவாரம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## பத்திமார்க்க மிதுவென்பது.

**சங்கரன் மலர்த்தாட் பத்தி தமக்குமெய் யாமின் வேறு**
**புங்கவர் தமையோர் போதும் போற்றிடார் சைவர் போற்றி**
**னங்கவர் தமையு மீச வரசிவ சம்பு வெடன்ப**
**ரெங்கணுஞ் சம்பு வன்றி மிலையென லுண்மை யன்றோ.** **(181)**

(அரும் பதவுரை) மெய்யாயின் - சத்தியமாயிருக்குமானால்; புங்கவர்தமை - தேவர்களை; போற்றின் - வணங்க நேர்ந்தால்; என்பர் - என்று சைவநாமங்களைச் சொல்லியே போற்றுவர்.

'ஸர்வதோவாத்மகோருத்ர:', 'ஸர்வேதேவா: சிவாத்மகா:' என்ற ருத்ர ஹ்ருதயோபநிஷத்தும், 'சிவோ குரு: சிவோ வேத: சிவோ தேவ: சிவ: ப்ரபு: । சிவோஸ்ம்யஹம்சிவ: ஸர்வம் சிவாதந்யந்ந கிம்சந' என்ற வராகோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## விதி மார்க்கமிது வென்பது.

**அருமறை யபரிச் சின்ன வைசுவ ரியனென் றேத்து**
**மொருபர சிவனை யேனை யும்பரொ டொருங்கு வைத்துக்**
**கருதுவ தகமா மந்தக் கடவுளை யவர்க்கு மேல்வைத்**
**திருசர ணேத்தச் சைவர்க் கிட்டதச் சுருதி யாணை. (182)**

(அரும் பதவுரை) அபரிச்சின்ன ஐசுவரியன் - அளவிடப்படாத செல்வத்தை யுடையவன்; எனை உம்பரொடு ஒருங்கு வைத்து - மற்றைத்தேவர்களோடு சமமாகச் சேரவைத்து; அகம் - பாவம்; அந்தக் கடவுளை; - அச்சிவபிரானை; அவர்க்குமேல் வைத்து - அத்தேவ கூட்டங்களை விட்டு விலக்கி உயரவைத்து; ஆணை - கட்டளை.

'ஏக ஏவ சிவோ நித்யஸ்ததோந்யத் கைலம் ம்ருஷா । தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்ய ஹேயாந் விஷ்ண்வாதிகாந் ஸாராந்' என்ற சரபோபநிஷத்தும், 'மாத்வாருத்ரபிக்ருதாமோ நமோ பிர்மோதுஷ்ட தீவ்ருஷப மாஸஹாதீ' என்ற ருக்வேதமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சில சாத்திரங்களிலுள்ள விஷ்ணுத்கர்ஷமும் சிவாபகர்ஷமும் இன்னின்னாரைப் போய்ச் சேருமென்பது.

**சிவபிரா னுயர்ச்சி யெல்லாஞ் சிவபிரான் றனக்கே யாகு**
**மவமெலா மவன்பே ருள்ளார்க் காஞ்சிவ பெருமான் பாலே**
**தவம தானிறைமால் மேன்மை சருவமுஞ் சாரு மாலி**
**னவமெலா மாற்கே யாகு மவற்றினை யாய்ந்து காணே. (183)**

(அரும் பதவுரை) அவம் - நிந்தை; அவன் பேருள்ளார் - மற்ற உருத்திரர்களிற் சிலர்; தவமதால் நிறைமால் மேன்மை சருவமும் சிவபெருமான் பாலே சாரும் என்க.

'யோபகர்ஷாஹ ரோத்ருஷ்டச் சாம்பவேஷ்வகிலேஷாச, புராணேஷா ஹரேஸ் ஸாக்ஷாந் மூலபூதஸ்ய ஸத்தம, வைஷ்ணவேஷா புராணேஷா யோபகர்ஷஸ்து த்ருச்யதே, ருத்ராம்சஸ்ய ஹரஸ்யாஸ்ய விபூதேரேவ கேவலம், உத்கர்ஷோ ய: பராணேஷா த்ருச்யதே சாம்பவேஷாச, ருத்ரஸ்யா ஸௌஸ்வரூபேண முநேதத்வாத்ம நாபிச, உத்க்ரஷோய: புராணேஷா த்ருச்யதே வைஷ்ணவேஷாச, அஸௌ தத்வாத்மநா விஷ்ணோர் நஸ்வரூபேண ஸ்த்தம' என்ற பராசரபுராணம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## இதுவுமது

**விண்டுவே யயனே யாதி விண்ணவர் பதவி யெல்லா**
**மொண்டொடி யுமையின் கூறா யுயர்ந்திடு மதனால் வேதம்**
**விண்டுவே யயனே யாதி விண்ணவர் தம்மை யேத்து**
**மெண்டகு புகழ்க ளெல்லா மேகுமப் பிராட்டிக் கென்றும்.** **(184)**

(அரும் பதவுரை) விண்டு - விஷ்ணு; கூறாய் - அமிசமாய்.

'ஏஷாவிச்வ மோஹரீ பாசாங்குச தநுர் பாணதரா', 'பாசாங்குசதராம்', 'விச்வமாதா' என்ற தேவ்யுபநிஷத்தும், 'ராமாபிராமாம் - பாசாங்குசதநுர் பாண தராம்' என்ற ராமரஹஸ்யோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இதுவுமது

**சிற்சில நூல்கள் மாலைச் சிவபிரான் றுதித்தா னென்ற**
**சொற்களை வழங்க லென்னோ வெனினவன் றுரிய னல்லன்**
**பொற்புறு விதியின் மாலின் புத்திரனாகித் தாணு**
**நற்பெய ரேற்று மூன்றா நாதனின் கூறாய் வந்தோன்.** **(185)**

(அரும் பதவுரை) பொற்புட - அழகு; விதி - பிரமன்; ஏற்று - தாங்கி; மூன்றாம் நாதனின் - திரிமூர்த்திகளுட்பட்ட உருத்திரனுடைய; கூறு - அமிசம்.

'வ்ருஷபத்வஜ வந்த்யாய' என்ற கோபாலபூர்வதாபிநியுபநிஷத்தும், 'ஒரோரிடங்களின் மாயோனுக்கும் பிரமனுக்கும் தாழ்வாக உருத்திரனைக் கூறுவனவெல்லாங் காத்தற்றொழிலும் படைத்தற்றொழிலும் இனிது நடாத்துதற் பொருட்டுச் சக்கரவருத்திரன் கூறாய் அவர்பாற்றோன்றிய சிவலோகிதன் முதலிய அவதார மூர்த்திகளை அவர்க்குப் புதல்வரென்னும் உபசாரமே பற்றிக் கூறியனவாமெனவும் ஓர்ந்துணர்க' என்ற சிவஞான பாஷ்யமும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## மாயா வாதம் அவைதிக மென்பது.

**சத்திய வத்து வொன்றே தானுள தென்னின் வேத**
**முத்தியு மியோகும் வீடு மோக்கமு மாய சொற்க**
**ளத்தம துற்று நிற்றல் யாங்ஙன மாத லாலே**
**நித்திய மறைக்கு வேறாய் நின்றிடு மாயா வாதம்.** **(186)**

(அரும் பதவுரை) முத்தி, வீடு, கோக்கம் - விடுதலை; இச்சொற்கள் உண்மைப் பொருள்பட வேண்டுமானால் முப்பொருள்கள் நித்தமாதல் வேண்டும்.

பக்திக்கும் மலமும் பந்தமும் உயிருள் பந்தத்தை விடுவித்து உயிரை ஆட்கொள்ளுங் கடவுளுமாகிய முப்பொருள்களு மில்லாவிட்டால் முத்தியாதி அப்பதங்கள் பொருளற்றனவாம், யோகம் - கூட்டம்; அதற்கும் அவ்வாறே பொருள் காண்க. பிரமமொன்றே நித்திய மென்பார்க்கு அப்பதங்கள் விருதா கோஷமேயாமென்க. அத்தமதுற்று - அருத்தத்தை யுடையனவாகி; வேறாய் - புறமாகி.

## அகம் பிரமம் என்பதற்குப் பிரமம் இல் பொருளே யென்பது தான் கருத்தென்பது.

**பொய்யினி லனைத்து மெய்யாம் பொய்ப்படு மனைத்து மெய்யி**
**லையுற வேண்டா வென்பா னகம்பிர மத்து வாதி**
**போய்மினி லகமு மெய்யாய்ப் பொய்யென் மெய்யி லாமி**
**னையகோ வகம்பேரற் பொய்யே யாயிடும் பிரமந் தானும். (187)**

(அரும் பதவுரை) பொய்யினில் - வியாவகாரிக தசையில்; மெய் ஆம் - உள்ளன போலத் தோன்றும்; பொய்ப்படும் - இல்லனவாகிவிடும்; மெய்யில் - பாராமார்த்திகதசையில்; அகம் - நான்.

## மாயாவாதமுத்தி நித்திய சுத்தமாகா தென்பது.

**திவ்விய பிரமந் தன்னைச் செப்பரு மாயை வந்து**
**கவ்விய தன்றே யென்று கழறிநீ வீடும் வேட்டா**
**யெவ்வித மந்த மாயை மிருக்குமங் குனையங் கவ்வா**
**தவ்வித முத்தி சுத்த மாகுமோ மாயா வாதீ. (188)**

(அரும் பதவுரை) திவ்விய - சுத்தமான; செப்பருமாயை - அநிர் வசனமான மாயை; கவ்வியது - பீடித்தது; அன்றே - முதன்முதல்; கழறி - சொல்லி; வீடும் - முத்தியும்; வேட்டாய் - விரும்பினாய்; அங்கு - அம்முத்தியில்; உனையும் - உன்னையும்.

## சைவசமயத்திற் கூறப்படுஞ் சுத்தாத்துவித முத்தியே நித்தமென்பது.

**மனமிவ ணிறந்த பேர்க்கு வாழ்வுவை குண்டத் தாகும்**
**புனிதமி லந்த மால்வாழ் புவனமு மிறக்கப் பெற்றோர்**
**தொனிகழ லரன்றாட் சேர்வாஞ் சுத்தவத் துவித மென்னுங்**
**கனிவுறு முத்தி யெய்திக் கறையிலா வின்ப மார்வார். (189)**

(அரும் பதவுரை) இவண் - இவ்வுலகில்; இறந்த பேர்க்கு - ஒடுங்கியவர்களுக்கு; புனிதம் - சுத்தம்; மால்வாழ்புவனம் - வைகுண்டம்; இறக்கப்பெற்றோர் - அழியப்பெற்றவர்கள்; தொனி - சப்திக்கின்ற; கழல் - காலணி; தாள் - திருவடி; அரன் தொனிகழல் தாள் என்க; கனிவு - இனிமை; கரை - அளவு; ஆர்வார் - அனுபவிப்பார்கள்.

'தந்மநோவிலயம் யாதிதத்விஷ்ணோ: பரமம் பதம் | தல்லயாச் சுத்தாத்வைதஸித்திர் பேதாபாவாத்', 'சுத்தாத்வைத ப்ரஹ்மாஹம்', 'சுத்தாத்வைதாஜாட்யம்' என்ற மண்டல ப்ராஹமணோபநிஷத்தும், 'த்வாதச்யாம் ப்ரஹமசாச்வதம் - பரதரம் சுத்தம் வ்யபகம் நிர்மலம் சிவம் - - அதீந்த்ரியம் குணாதீதம் மநோலீநம் - - அநூபமம் சிவம் சாந்தம் - - 'என்ற நாதபிந்தூபநிஷத்தும், 'ந ப்ரஹ்மலோகோ வைகுண்டோ ந கைலாஸோ நசாந்யக:' என்ற தேஜோபிந்தூபநிஷத்தும், 'தந்மநோவிலயம் யாதி தத் விஷ்ணோ: பரமம் பதம்' என்ற தியாநபிந்தூபநிஷத்தும் யோகசிகோபநிஷத்தும், 'பூமாவுத்தாரிதம் ஸர்வம் வைகுண்டம் ஸ்வர்கவாஸிநாம்' என்ற கிருஷ்ணோபநிஷத்தும், 'பகவச் சுத்தாத்வைத பரமாநந்த லக்ஷண பரப்ரஹமண ஸ்தவகதம் விருத்த வைகுண்ட ப்ராஸாத ப்ராகார விமநாத்யநந்தவஸ்துபேத:' என்ற திரிபாத் விபூதி மஹாநாராயணோபநிஷத்தும், 'ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோ பாஸகோ வைகுண்ட புவநம் கமிஷ்யதி' என்ற நாராயணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## மாயாவாதியின் கெடுமிதி மிதுவென்பது.

**அரியா ரியலை யானில் கறிவனென் மாயா வாதி**
**யரியா ரெல்லா நானே யவர்பிற ரில்லை யென்பா**
**னரியா ரெல்லார்க்கு நிந்தை யதனினு மிக்க துண்டோ**
**வரியா ரன்பர் தம்மை யடுத்தவன் கெடுக்கும் பாவி. (190)**

(அரும் பதவுரை) இயல் - சொரூபம்; அவர் - அந்த அரியும் அரனும்; அதனினும் - அப்படிச் சொல்லும் இறுமாப்பைல் காட்டிலும்; அடுத்து - தாமும்

அத்தெயவங்களினடியாரெனச் சொல்லி அத்தெய்வங்களின் மெய்யடியார்களுடன் உறவாடி; அவன் - அம்மாயாவாதி.

## சிவநாமமே முழுமுதற் கடவுளுக்கு ஏற்ற நாமமென்பது.

**ஒருபொரு ளுடைய வாகு முருத்திர னயன்மா லாதி**
**வருபெய ரனைத்து மென்பாய் வழங்குமப் பொருளே தென்னிற்**
**றருகுவை மேலும் பேர்க் டருகிலாய் பொருளை வேதக்**
**கருவுறு சிவப்பேர் தன்னிற் கண்ணியே மவைகட் குண்டோ. (191)**

(அரும் பதவுரை) வழங்கும் - அப்பெயர்களா லழைக்கப்படுகிற; வேதக்குடு - வேதாடுவில்; கண்ணியம் - பெருமை; அவைகட்கு - நீ சொல்லுகிற அந்தப் பெயர்களுக்கு.

## அவ்வுண்மை வேதபுருஷனால் அங்கீகரிக்கப்பட்ட தென்பது.

**ஒன்றுள ததனைச் சொல்வ ருத்தமர் பலவா யென்றா**
**யொன்றுள தென்பா ராரவ் வுத்தமர் தாமே யென்னி**
**னொன்றுள தென்ற றானு மொதுங்குமப் பலவுட் பட்டே**
**யொன்றுள தென்றார் தாமவ்வுள்பொருள் சிவனேயென்றார். (192)**

(அரும் பதவுரை) ஒன்று உளது அதனை உத்தமர் பலவாய்ச் சொல்வர் என்க. 'ஏகம் ஸத் விப்ரா பஸாதா வதந்தி' என்பது அது; உத்தமர் - விப்பிரர், பலவாய்ச் சொன்னவர் விப்பிரர்; ஏகம் ஸத் என்று சொன்னவர் யார்? அவர் அவ்விப்பிரரல்லர்; வேதபுருஷனே.

## பிரமவிஷ்ணுருத்ராதி நாமங்கள் யாண்டும் பரியாயங்களாகா வென்பது.

**மறைமுக லரனே யென்ன மனங்கொள மாட்டாப் பாவ**
**ரிறையர யைன்மா லென்ன விகலுதல் மடமை யெல்லாங்**
**கறையறு சுவாது பூதி காட்டுமொன் றாக வென்றிங்**
**கறைகுவ ரெளியர்க் கிம்மி யனுபவந் தானு மின்றி. (193)**

(அரும் பதவுரை) மறை - வேதம்; முதல் அரனே - அரனே முதற்கடவுள்; என்ன - என்று சொல்லிமிருக்க (அதனை); மனங்கொளமாட்டா - அங்கீகரிக்க வலியற்ற; இறை - கடவுளை; இகலுதல் - வாதித்தல்; கறை - குற்றம்; சுவாநுபூதி - அனுபவஞானம்; எல்லாம் ஒன்று ஆகக் காட்டும் என்க. அறைகுவர் - உபதேசிப்பர்; எளியர்க்கு - அறிவில்லாதவர்களுக்கு; இம்மி - சிறிது.

## சத்தியஞானிக்குத் தெய்வம் சிவபிரானேயென்பது.

**அனுபவ ஞான மாவ தருமறைப் பொருளைக் காண்ட**
**லனுபவ ஞானி யென்பா னவனவன் றன்னை யெந்த**
**வனுபவ மறையோ டேயு மன்னதே மெய்யா மந்த**
**வனுபவ ஞானிக் கென்று மாகுவன் சிவனே தெய்வம்.** **(194)**

(அரும் பதவுரை) அவனவன் - ஒவ்வொருவனும்; அவனவன் தன்னை அனுபவ ஞானியென்பான் என்க; ஏயும் - பொருந்தும்; அன்னதே - அந்த அனுபவ ஞானமே; அந்த அனுபவ ஞானமே; அந்த அனுபவ ஞானிக்கு - அப்படி வேதத்தோடு பொருந்திய அனுபவத்தையுடைய ஞானிக்கு.

## வைதிக சைவசமயத்துக்குப் பிரபலபிரமாணசாத்திரங்களிவையென்பது.

**ஈரிரு மறைக ளாய விருக்கெசுர் சாமா தர்வஞ்**
**சீரிய விருபத் தெட்டுச் சிவகாம மிவற்றை மீச**
**னாரிய மொழியிற் றந்தான் சுருக்கமொ டகல மாகச்**
**சேரிவை தாமே சைவத் திவ்விய பிரமா ணங்காண்.** **(195)**

(அரும் பதவுரை) ஈர் இரு - நான்கு; அகலம் - விரிவு; சேர் இவைதாமே - தம்முள் இயைந்து ஒரே பொருள் படுகின்ற இந்த வேதாகமங்களே; காண் - காண்பாயாக.

'ருக்யஜயஸ் ஸாமாதர்வாங்கிரஸோஹம்' என்ற அதர்வசிரோபநிஷத்தும், 'வேதைரநேகை ரஹமேவவேத்யோ வேதாந்த க்ருத் வேதவிதேயசாஹம், என்ற கைவல்யோபநிஷத்தும் (இவ்விரண்டு வாக்கியங்களும் சிவன் சொல்)' 'ஸர்வாகம மய: சிவ:', 'ஸர்வாகமாந்தார்த்த விசேஷவேத்யம்' । - - சிவம், என்ற நாரதபரிவர்ஜகோபநிஷத்தும், 'ஸர்வாகமாந்தார்த்த விபாவிதோஸி" 'ஸகலாகமகோசர:' 'ஸர்வ வேதாந்த ஸித்தாந்தம்' என்ற தேஜோபிந்நூபநிஷத்தும், 'சிவ: சைவாகமஸ்தாநாம் என்ற அந்நபூர்ணோபநிஷத்தும், 'ஸர்வ வேதாந்த ஸிந்தாந்த ஸாரம்' என்ற கடருத்ரோபநிஷத்தும், ஸித்தாந்தச்ரவணம்' என்ற ஸ்ரீஜாபாலதர்சநோபநிஷத்தும் வராஹோபநிஷத்தும், 'ஆரியமா யறம்பொருளோடின்பம் வீடெல்லா மறைந்துயிர்கட் கறிவு செயலளிப்பது நூல்', 'வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள்' என்ற சித்தியாரும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## வேத சிவாகம சம்பந்த மிது வென்பது.

**ஆகம சுருதி நூல்கட் கரன்றனிக் கருத்த னாவ**
**னாகம சுருதி நூல்க ளரன்புக ழொன்றே**
**மாகம சுருதி நூல்க ளருத்தமே மூலம் போலா**
**மாகம சுருதி நூல்க ளாதலிற் சமமாங் காணே.** **(196)**

(அரும் பதவுரை) சுருதி - வேதம்; புகழ் - பரத்துவம்; ஆதலின் ஆகம சுருதி நூல்கள் சமம் ஆம் காணே என்க.

## வேதங்களுக்குப் பொருள் கொள்ளு முறைகளுட் சில இவையென்பது.

**பிரமமா ரென்று வேதம் பிரசினை யெடுத்துக் கொண்டு**
**பிரமமா சிவனே யென்னும் பிரபல சுருதி யஃதாம்**
**பிரமமா ரென்று வேதம் பிரசினை யெடாமல் மாலே**
**பிரமனே பிரம மென்று பேசுமற் றதுவே கௌணம்.** **(197)**

(அரும் பதவுரை) பிரசினை - வினா; மா சிவன் - பெரிய சிவன்; பிரபல - முக்கிய; அஃது பிரபல சுருதி ஆம் என்க; அஃது - அவ்வாறு வினவிக் கொண்டு விவகரிக்கும் வேதபாகம்; அது - அவ்வாறு வினவிக்கொள்ளாமல் தோத்திரம்போற் பேசும் வேதபாகம்; கௌணம் - அருத்தவாதம்.

சுவேதாசுவதரம் அதர்வசிகை காலாக்நிருத்ரம் ஸர்வஸாரம் நிராலம்பம் சரபம் பாசுபதப்ரஹ்மம் ஜாபால முதலிய வுபநிஷத்துக்கள் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இதுவுமது.

**மெய்யுறு புராணந் தன்னை விட்டுரை செய்யின் வேத**
**மையகோ வென்று நையு மக்கதை பதினெட் டுள்ளு**
**மையிரு நூல்க ளீசற் காம்பிற பிறர்க்கா மென்னி**
**னையமி லவன்றன் மேன்மை யருத்தமம் மறையி லன்றோ.** **(198)**

(அரும் பதவுரை) நையும் - வருந்தும்; கதை - புராணம்; ஐயிருநூல்கள் - பத்துப் புராணங்கள்; பிற - மற்றை எட்டுப் புராணஙக்ள்; பிறர்க்கு - பிரமா விஷ்ணு முதலிய மற்றைத் தேவர்களுக்கு; ஆம் - உரியனவாம்; ஐயம் - சந்தேகம்; அவன்றன் - அந்த ஈசனுடைய; அருத்தம் - பாதி (க்குமேல்), பொருள்.

'இதிஹாஸத்தினாலும் புராணத்தினாலும் வேதத்தை விளக்கிக் கொள்ளவேண்டும். வேதமானது அற்பஞானியைக் கண்டு அவன் தன்னை மோசம் செய்வானென்று பயப்படுகின்றது' என்ற பாரதம் ஆதி 1 ஆவது அத்தியாயமும், 'இதிஹாஸ புராணப்யாம் வேதம் ஸமுபப்ஹ்மேயத்' என்றதும், 'புராணேஷ்வஷ்டாதஸா" என்ற ராமரஹஸ்யோபநிஷத்தும், 'புராணச்ரவணபூர்வலகம்' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும், இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## இதுவுமது

**உயர்மறை சிவனே தேனென்றுரைப்பதைச் சகியாரன்னோன்**
**பெயர்களை யோக மாக்கிப் பேசுவ ரயன்மா லாதி**
**மயர்வுறு மமரர்க் கேற்றி மற்றவர்க் குரிய வான**
**பெயர்களை யவற்கவ் வாறு பேசுவ தரிய தாமோ.** **(199)**

(அரும் பதவுரை) சகியார் ஆக்கி ஏற்றிப் பேசுவர் என்க; அன்னோன் - அச்சிவபிரானுடைய; மயர்வு - மயக்கம்; அவர்க்கு - அந்த அவன் மால் முதலிய மற்றைத் தேவர்களுக்கு, அவற்கு - அச்சிவபிரானுக்கு; அவ்வாறு - அப்படியே யோகமாக்கி ஏற்றி; அரியதாமோ - கஷ்டமாகுமோ; இல்லை யென்றபடி; ஒருவர்பெயரை மற்றவர்க்கேற்றிப் பேசினால் வேதத்திற் கடவுள் நிச்சயம் பெறமுடியாதென்பது கருத்து.

## இதுவுமது

**ஒத்திசை தெய்வப் பேர்கள் யோகமென் றுரைக்கி னந்நூ**
**னாத்திக மாத றிண்ணம் நலந்தரு முரூடி யென்னி**
**னாத்திக மாகு மிவ்வா றாய்பவர்க் கரனே யந்தச்**
**சாத்திர தெய்வ மென்ற சாத்தியம் விளங்கு மன்றே.** **(200)**

(அரும் பதவுரை) ஒத்து - வேதம்; இசை - பிரஹ்தாபிக்கிற; தெய்வப் பேர்கள் - தெய்வங்களின் பெயர்களை; ஆய்பவர்க்கு - ஆராய்ச்சி செய்பவர்களுக்கு; அந்தச் சாத்திரதெய்வம் - அந்தச் சுருதிகளின் பிரதிபாத்யனான தெய்வம்.

## வேதங்களோடு இயைபுடையன காமிகாதி சிவாகமங்களேயா மென்பது.

**வைதிக மாகும் பாசு பதமென வகையொன் றுண்டு**
**வைதிக மல்லாப் பாசு பதமென மற்றொன் றுண்டு**
**வைதிக மிருபா னெண்ணூல் வாதுள மவற்றி னந்தம்**
**வைதிக மல்லா நூலாம் வாமபர சுபதந் தானே.** **(201)**

(அரும் பதவுரை) வைதிகம் - வேதசம்பந்தம்; வகையொன்று - ஒரு வகை; மற்றொன்று - இன்னொரு வகை; இருபான் எண் நூல் - இருபத்தெட்டுச் சிவாகமங்களும்; வாதுளம் - அப்பெயர்கொண்ட சிவகாமம்; அவற்றின் - அவ்விருபத்தெட்டின்; அந்தம் - கடைசி; காமிகம் என்பது அவற்றின் முதலாகமம்.

' ---- கூறியது வேதப்பொருளொடு மாறுகொளக் கூறும் பாசுபதம் பாஞ்சராத்திரம் முதலிய புறச்சமயங்களையேயாம்; வேதப்பொருளையே விரித்துக் கூறப்புகுந்த வேதசாரமாகிய சித்தாந்த சைவாகமங்களை அன்றென உணர்க' என்ற சிவஞான பாஷ்யம் இச்செய்யுட்குப் பிரமாணம்.

## சைவனாவான் வடமொழியையுங் கற்றல் அவசியமென்பது.

**வடமொழி யதனில் மல்கும் வான்சிவ நூற்க டாமே**
**மிடமிகு பரத கண்ட மெங்கணு மோம்புஞ் சைவந்**
**திடமுற வதனை முற்றுந் தெரிந்திட வேண்டி னென்றும்**
**வடசொலை மதித்துச் சைவன் வளம்பெறப் பயில வேண்டும்.** **(202)**

(அரும் பதவுரை) மல்கும் - நிறைந்துள்ள; வான் - உயர்ந்த; சிவநூற் கடாமே - சைவசாத்திரங்களே; மிகு - விசாலமான; எங்கணும் - எங்கும்; ஓம்பும் - வளர்த்துப் பாதுகாக்கும்; திடம் - உறுதி; அதனை அச்சைவத்தை; வளம்பெற - செவ்வையாக; பயில - கற்க.

## இதுவுமது

**வடமொழி பயிலார் சைவம் வளர்த்திடு மாண்மை யற்றார்**
**வடமொழி பயிலார் சைவம் வளர்த்ததை யெவரே கண்டார்**
**வடமொழி தன்னை வைது மதிப்பழிந் தலைய வேண்டா**
**வடமொழி பயின்று சைவ வான்பயிர் வளர்த்த னன்றே.** **(203)**

(அரும் பதவுரை) ஆண்மை - பௌருஷம்; அற்றார் - இல்லாதவராவார்; வைது - நிந்தித்து.

## இதுவுமது

**அவமுறு மசைவர் சில்லோ ராரியம் பயின்றாங் குள்ள**
**சிவமலி கலைக டம்பாற் செருகலுந் திரிவுஞ் செய்தாற்**
**றவறிவ ணார்பாற் சைவா சாத்திர நட்டம் யார்க்குக்**
**கவலையு மானந் தானுங் கழிந்தவோ வுனைவிட் டந்தோ.** **(204)**

(அரும் பதவுரை) அவம் உறும் - பிறப்பு வீணாகிற; ஆரியம் - வடமொழி; ஆங்கு - அம்மொழியில்; சிவமலிகலைகடம்பால் - சைவசாத்திரங்களில்; செருகல் - தம் கருத்துக்கும் மதத்துக்கும் ஏற்பக் கற்பனாவாக்கியங்களை நுழைத்தல்; திரிவு - இருக்கும் வாக்கியங்களை அவ்வாறே புரட்டல்; இவண் - இத்தமிழ்நாட்டில்; ஆர்பால் - யாரிடம் (உண்டு); சாத்திரநட்டம் - வடமொழிச் சைவநூற்கள் நம்பிக்கையை மிழப்பதோடு அவற்றையே பெரும்பாலும் தமக்குப் பிரமாணமாகவும் மூலமாகவுங் கொண்டுள்ள பல தமிழ்ச் சைவநூற்களும் நம்பிக்கையை மிழக்கும்; அப்படி உண்டாகும் இருமொழிச் சைவசாத்திர நட்டங்களும்; வடமொழிச் சைவசாத்திரப் பயிற்சியற்ற தமிழர்சைவனால் தமிழ்ச் சைவ நூற்களும் சரியான பரிபாலனத்தைப் பெறா வென்பதுங் காண்க.

## இதுவுமது

**பாரத மெங்கு முள்ள பன்மொழிச் சைவ ரோடுஞ்**
**சீரிய தமிழ்ச் சைவர் சினேகமுற் றுவக்க வேண்டு**
**மாரிய ஞான மொன்றே யதற்குறு சகாய மாகும்**
**நேரல ரதற்கு நிந்தை நிகழ்த்தியப் பயனை கொல்வார்.** **(205)**

(அரும் பதவுரை) பாரதம் - பாரதநாடு; ஆரியஞானம் - சம்ஸ்கிருதபாஷா ஞானம்; நேரலர் - சைவசமயத்துக்கு விரோதிகள்; கொல்வார் - கெடுப்பார்.

## இதுவுமது

**வண்டமிழ் வளர்க்க யாங்கள் வந்தன மெனச்சில சைவர்**
**வண்டமிழ் வளர்ப்பார் போன்று வைதிக சைவந் தாழ்த்தார்**
**வண்டமிழ் வளர்ப்பார் போன்று வைதிக சைவந் தாழ்ந்தால்**
**வண்டமிழ் வளர்ப்ப தெங்கே வளர்க்கினு மதிப்பார் யாரே.** **(206)**

(அரும் பதவுரை) தமிழ் - தமிழை; என - என்று சொல்லிக்கொண்டு; வளர்ப்பார்போன்று - வளர்ப்பாவர்போலச் சில சுவடிகளை எழுதி அவற்றில்; சைவம் - சைவசமயத்தை; தாழ்த்தார் - உருக்குலைத்து இழிவு படுத்தினார்; மதிப்பார் என்பதற்கு அவ்வளர்ப்பையும் அத்தமிழையும் என்பன செயப்படு பொருள்கள்.

## இதுவுமது

**அரனரி நாம மெல்லா மாரிய மறைக்க ணின்றே**
**பரவிய தென்சொல் லாதிப் பன்மொழி நூற்க ளுள்ளும்**
**பரமனை யந்த நூலிற் பார்த்தலே கடவுட் டேர்வா**
**மானிலை யரியு மில்லை யந்த நூ றனைவிட் டிட்டால். (207)**

(அரும் பதவுரை) ஆரிய மறை - இருக்காதி வேதங்கள்; பரவிய விரிந்தன; பல்மொழி - பல பாஷைகளிலுமுள்ள; பரமனை - சிவபிரானை; அந்தநூலில் - அந்த இருக்காதி வேதங்களில்; பார்த்தலே - ஆராய்வதே; கடவுள் தேர்வு ஆம் - பரத்துவநிச்ச்யமாகும்; அரன் இலை அரியும் இல்லை - அரன் அரிமுதலிய தெய்வ நாமங்களின் பிரஸ்தாபமே உலகிற் கிடையாது.

## தமிழ் மொழியினுஞ் சைவசமயமே போற்றற் பாலதென்பது.

**சைவமே யுண்மை மார்க்கஞ் சைவமே யறிவு மார்க்கஞ்**
**சைவமே மின்ப மார்க்கஞ் சைவமே யன்பு மார்க்கஞ்**
**சைவமே பழைய மார்க்கத் தமிழ்முதற் பிறவே நச்சிச்**
**சைவமா சமயந் தன்னை தவிர்ந்திடிற் றமிழ கெட்டாய். (208)**

(அரும் பதவுரை) பழைய - சனாதனமான; பிற - மற்றவைகளை; நச்சி - அபிமானித்து; மா - பெரிய; தவிர்ந்திடில் - விட்டு; விலகினால்; தமிழ் - தமிழ்ச் சைவனே! கெட்டாய் - நீ கெடுவது திண்ணம்.

## சைவ சமயாபிவிருத்தி செய்யுமுறை மிது வென்பது.

**வைதிக மல்லா மார்க்கர் மறைகளே வாய்மை யென்றும்**
**வைதிக மார்க்கத் துள்ளார் வான்சிவ சமய மொன்றே**
**வைதிக சிரேட்ட மென்று மனங்கொளப் புகட்ட றானே**
**வைதிக சைவந் தன்னை வளர்த்திட லாகுங் கண்டாய். (209)**

(அரும் பதவுரை) வைதிகமல்லாமார்க்கர் - புறச்சமயிகள்; வைதிக மார்க்கத் துள்ளார் - அகச்சமயிகள்; சிரேட்டம் - உயர்வு; மனங்கொளப் புகட்டல் தானே - மனதிற் பதியும்படி உபதேசித்தலே.

## சைவ சமய சார மீது வென்பது.

**பதியுடன் பசுவும் பாச பதார்த்தமு மூன்று நித்தம்**
**பதிசிவன் பசுவே சீவன் பாசமோ பசுவின் பந்தம்**
**பதிபசுத் தனக்குப் பாசம் பரற்றியே பசுவை மீற்றிற்**
**பதியெனுந் தானே யாக்கிப் பாலனம் புரிவன் கண்டாய்.** **(210)**

(அரும் பதவுரை) பதார்த்தம் - பொருள்; நித்தம் - அழியாதவை; பந்தம் - கட்டு; பசுத்தனக்கு - பசுவுக்கு; பாற்றி - விலக்கி; ஈற்றில் - முத்தியில்; பாலனபுரிவன் - ஆண்டு கொள்வான்.

'அநீசச்சாத்மா', 'ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீசா நீசாவஜாஹ்யேகா - அநந்தச்சாத்மா - அக்ஷரம் ஹர: க்ஷராத் மாநா வீசதே தேவ ஏக:' என்ற நாரதபரிவ்ராஜகோபநிஷத்தும் சுவேதாசுவதரோபநிஷத்தும், 'நித்யோ நித்யா நாம்' என்ற சுவேதாசுவதரோபநிஷத்தும், 'பாசபத்தஸ்ததாஜீவ: பாசமுக்த: ஸதாசிவ:' என்ற ஸ்கந்தோபநிஷத்தும், 'பாசம் பரம பந்தநம்', 'மலம் ஹைஜம்ப்யலம்' என்ற மஹோபநிஷத்தும், 'பசுபாசவிமோசகம் புருஷம் க்ருஷணபிங்கள மூர்த்வரேதம் விரூபாக்ஷம்' என்ற பஸ்மஜாபாலோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## சிவபூஜையொன்றே சிறந்த இன்பமென்பது.

**அழுகுறு முடலே யோம்பி யவனியின் வாழ்வே நம்பிப்**
**பொழுதினை யொழித்து மாந்தர் புகலிட மறியா ரானார்**
**விழுமிய சிவனே யென்று மெய்ப்பொரு ளெனத்தேர்ந் தன்னான்**
**செழுமல ரடியிற் பூசை செய்வதே சிறந்த வின்பம்.** **(211)**

(அரும் பதவுரை) ஒம்பி - வளர்த்துப் பாதுகாத்து; அவனியின் வாழ்வு - இவ்வுலகவாழ்க்கையை; புகலிடம் - லக்ஷியம்; விழுமிய தேவதேவனாகிய; என்றும் - எப்போதும்; அன்னான் - அச்சிவபிரானின்.

'தசத்வாரபுரம் தேஹம்' என்ற யோகசிகோபநிஷத்தும், 'ஸர்வமிதம் சிவ ஏவ விஜா நீஹி' என்ற திரிசிகிப்ராஹ்மணோபநிஷத்தும் இச்செய்யுட்குப் பிரமாணங்கள்.

## பிறவியின் கொடுமை மிது வென்பது.

**கருவினுட் படராய் போற்றி கருவினை யுடையாய் போற்றி**
**கருவினைத் தருவாய் போற்றி கருவினற் றுணைவா போற்றி**
**கருவினைத் துடைப்பாய் போற்றி கருவினைத் தராதாய் போற்றி**
**கருவினேற் கபய நல்குங் கண்ணுதால் போற்றி போற்றி.** **(212)**

(அரும் பதவுரை) படராய் - புகாதவனே! கருவினை உடையாய் - அகிலாண்டங்களும் வெளிப்படுமுன் தங்கியிருப்பதற்கான ஆதாரத்தை யுடையவனே! கருவினைத்தருவாய் - கருப்ப வாசத்தை உயிர்களுக்கு விணையறிந்து கொடுப்பவனே! கருவில் - கருக்குழியில்; நல்துணைவா - உயிர்களுக்குக் கெடாத சகாயனே! துடைப்பாய் - நீக்குபவனே! தராதாய் - முத்தர்களுக்கு அவர்கள் விரும்பினாலுங் கொடாதவனே! கருவினேற்கு - கருப்பவாசம் இன்னும் நீங்கப்பெறாத பாவியேனுக்கு; அபயம் - அஞ்சலென்ற கரதலத்தை; நல்கும் - காட்டுகிற; கண்ணுதால் - சிவபிரானே!

## சிவபிரான் அளவுக்கடங்காப் புகழுடையா ரென்பது.

**ஆற்றறு மணல்க ளெண்ணி யகல்வெளி நீட்டி யாழி**
**தோற்றுநீர் முகந்து சைலந் தூக்கியா ரளக்க வல்லார்**
**பாற்றிரு நீற்று மேனிப் பரசிவன் சீரு மற்றே**
**சாற்றினன் சிலவே மீண்டுத் தாலிபு லாகம் பற்றி.** **(213)**

(அரும் பதவுரை) வெளி - ஆகாயம்; ஆழி - கடல்; முகந்து - மொண்டு; சைவம் - மலை; பால் - வெண்மையான; சீரும் - பரத்துவமும்; அற்றே - அவ்வாறு அளக்கவெண்ணாத; சாற்றினன் - சொன்னேன்; ஈண்டு - இந்நூலில்; தாலிபுலாகம்பற்றி - ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தல் என்ற நியாயத்தை அனுசரித்து.

## வாழவேண்டுவன இவை யென்பது.

**சிவமய சுருதி வாழ்க சிவாகமச் செல்வம் வாழ்க**
**சிவமத சின்னம் வாழ்க சிவவெனு நாமம் வாழ்க**
**சிவநெறி வாழ்க சைவத் தென்றமிழ் வடசொல் வாழ்க**
**சிவபத சேவை செய்து செகமெலாம் வாழ்க மாதோ.** **(214)**

(அரும் பதவுரை) சிவமதசின்னம் - விபூதி ருத்திராக்ஷங்கள்; சிவநெறி - சைவ சமயம்; சைவம் - சிவசம்பந்தமுடைய; வடசொல் - சம்ஸ்கிருதம்; சிவபதம் - சிவபிரானுடைய திருவடிகள்; சேவை - பணி.

திருச்சிற்றம்பலம்

விநாயக வணக்கம் ஆசிரிய வணக்கம் உள்பட மொத்தம் இருநூற்றுப் பதினைந்து செய்யுட்களாலாகிய சிவபரத்துவ நிச்சயம் என்னும் இந்நூல் அரும்பதவுடை பிரமாணங்களுடன் முற்றிற்று.

*ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.*
*ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க.*

**சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை**.